உ

சிவமயம்



# அமரர் வைத்தியலிங்கம் பேரம்பலம்

## அவர்களின்


# நினைவு மலர்

**13.07.2020**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



சரவணையைப் பிறப்பிடமாகவும்

கொக்குவில் தலையாழியை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# திரு. வைத்தியலிங்கம் பேரம்பலம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவுமலர்

13.07.2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்




அன்பு வழி நின்று அறம் பேணி
அணையாத தீபமாக
பண்பும் பாசமும் பரிணமிக்க
எம்மையெல்லாம் வழி நடாத்தி
அன்புத் தந்தையாய் நல் ஆசானாய்,
சமூக சேவையாளனாய் சிறந்ததோர்
இல்லத்தலைவனாய் இயற்கை வளம் பேணி
இல்லத்தை சோலையாக்கி இன்புற்று
நிறை வாழ்வு வாழ்ந்து
ஈசன் கழலடி சேர்ந்த எம்
அன்புத் தெய்வம்
வைத்தியலிங்கம் பேரம்பலம் அவர்கட்கு
13.07.2020இல் நல்லூரான் பாதம் பணிந்து
இறைஞ்சி இந்நூலைச்
சமர்ப்பணம் செய்கிறோம்.

**பழைய தபாற்கந்தோர் வீதி,**
**தலையாழி, கொக்குவில்.**

**இங்ஙனம்,**
**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர் வைத்தியலிங்கம் பேரம்பலம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 13.05.1925 | 13.06.2020 |

சார்வரி வருட வைகாசித் திங்கள் தன்னில்
அபரபட்ச அட்டமி திதியதனில் - புகழ்பூத்த
ஆசான் வைத்தியலிங்கம் பேரம்பலம் அவனி நீத்து
சேர்ந்தனன் சிவன்பாதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரப் பாடல்கள்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக்கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும்பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை .

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலரான்
நோக்குண்டாம் மேனி நுடங்காது..
பூக்கொண்டு துப்பார் திருமேனி
தும்பிக்கையான் பாதம் தப்பாமற் சார்வார் தமக்கு.

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன் கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியேநீ யெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றுந்தா

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான் விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாரம்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடையசுடலைப்பொடிபூசி என் உள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்த அருள் செய்த
பீடுடையபிர மாபுரம்மேவிய பெம்மானிவ னன்றே.

பிடியதன் உரு உமை கொள மிகுகரி அது
வடிவொடு தனது அடி வழிபடுமவர் இடர்
கடி கணபதி வர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில் வலிவலம் உறை இறையே

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகனால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவா யாவதும் இதுவே.

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி
சனிபாம்பி ரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

வேதம் ஓதி வெண்ணூல் பூண்டு வெள்ளை எருதேறிப்
பூதம் சூழப் பொலிய வருவார் புலியின் உரி தோலார்
நாதா எனவும் நக்கா எனவும் நம்பா என நின்று
பாதம் தொழுவார் பாவம் தீர்ப்பார் பழன நகராரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புறு சிந்தையராகி அடியவர்
நன்புறு நல்லூர்ப் பெருமண மேவிநின்
றின்புறு மெந்தையிணையடி யேத்துவார்
துன்புறு வாரல்லர் தொண்டு செய்வாரே

காதலாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.

புழுவாய்ப்பிறக்கினும் புண்ணியாவுன்னடி யென்மனத்தே
வழுவாதிருக்க வரந்தரவேண்டு மிவ்வைகத்தே
தொழுவார்க்கிரங்கி யிருந்தருள் செய்பாதிரிப்புலியூர்ச்
செழுநீர்ப்புனற் கங்கைசெஞ்சடைமேல் வைத்தநீ வண்ணனே

விருது குன்றமா மேருவி நாணர
வாவனல் எரிஅம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின்
றுறைபதி யெந்நாளும்
கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ்
பொழிலணி மாதோட்டம்
கருத நின்றகே தீச்சரங் கைதொழக்
கடுவினை யடையாவே.

இடரினுந் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை யாளுமா
றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள்
ஆவடு துறையரனே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்ற னாமம் பயின்றே னுனதருளால்
திருவாய்ப் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீபா திரிப்புலி யூரரனே.

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே

கூற்றாயின வாறுவி லக்ககிலீர்
    கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேஇர வும்பகலும்
    பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
    குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன்அதி கைக்கெடில
    வீரட்டா னத்துறை அம்மானே.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே.

அப்பன்நீ அம்மைநீ ஐய னும்நீ
    அன்புடை மாமனும் மாமி யும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொரு ளும்நீ
    ஒருகுலமும் சுற்றமும் ஓரூரும் நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்று வாய்நீ
    துணையாயென் நெஞ்சந் துறப்பிப் பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத் து(ம்)நீ
    இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போன் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய வெடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே.

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கல மரனஞ் சாடுதல்
கோவினுக் கருங் கலங் கோட்டமில்லது
நாவினுக் கருங்கல நமச்சி வாயவே

ஆலந்தான் உகந்து அமுது செய்தானை
ஆதியை அமரர் தொழுதேத்தும்
சீலந்தான் பெரிதும் உடையானை
சிந்திப்பார் அவர் சிந்தையுள்ளானை
ஏலவார் குழலாள் உமை நங்கை
என்றும் ஏத்திவழிபடப் பெற்ற
காலகாலனை கம்பன் எம்மானைக்
காணக்கண் அடியேன் பெற்றவாறே

பித்தாபிறை சூடீபெருமானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
அத்தாஉனக் காளாய்இனி அல்லேனென லாமே.

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நத்தார்படை ஞானன்பசு ஏறிந்நனை கவுழ்வாய்
மத்தம்மத யானைஉரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே.

நீள நினைந்தடி யேனுமை நித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மட வாளவள் வாடி வருந்தாமே
கோளிலி எம்பெரு மான்குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவை அட்டித் தரப்பணியே.

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் கடியேன்

## திருவாசகம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட
அத்தன்எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தஆ ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டத் தக்கது அறிவோய் நீ,
வேண்ட முழுவதும் தருவோய் நீ,
வேண்டும் அயன், மால்க்கு அரியோய் நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்!
வேண்டி நீ யாது அருள் செய்தாய்,
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில்,
அதுவும் உன் தன் விருப்பு அன்றே!

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னைஆட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன்றருள் புரியாயே.

ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கு
அன்பிலை என்புருகிப்
பாடுகின்றிலை பதைப்பதும் செய்கிலை
பணிகிலை பாதமலர்
சூடுகின்றிலை சூட்டுகின்றதும் இலை
துணைஇலி பிணநெஞ்சே
தேடுகின்றிலை தெருவுதோறு அலைகிலை
செய்வதொன்று அறியேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கி,
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து, புறம்புறம் திரிந்த
செல்வமே! சிவபெருமானே!
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்!
எங்கெழுந்தருளுவது இனியே?

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே !
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே !
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே !
சித்தத்துள் தித்திக்கும் தேனே !
அளிவளர் உள்ளத்(து) ஆனந்தக் கனியே !
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடைஎம் அற்புதக் கூத்தா
அம்பொன்செய் அம்பலத் தரசே
ஏறணி கொடிஎம் ஈசனே உன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகநா யகனை இமையவர்க்(கு) அரசை
என்னுயிர்க்(கு) அமுதினை எதிரில்
போகநா யகனைப் புயல்வணற்(கு) அருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநா யகனை அன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற் றேன்பெற்ற
தார்பெறு வார்உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே

மன்னுக தில்லை வளர்கநம்
பக்தர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்

கற்பனை கடந்த சோதி கருணையே யுருவ மாகி
அற்புதக் கோல நீடி யருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலிர் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

## திருப்புகழ்

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசல மமர்ந்த பெருமாளே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற் குமரேசா
கறையானை கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

ஆறிரு தடந்தோள் வாழ்க
ஆறுமுகம் வாழ்க - வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க
குக்குடம் வாழ்க - செவ்வேள்
ஏறிய மஞ்சை வாழ்க
யானைதன் அணங்கும் வாழ்க
மாறில்லா வள்ளி வாழ்க
வாழ்க சீர் அடியார் எல்லாம்.

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

நீலங்கொள் மேகத்தின் மயில்மீதே
நீவந்த வாழ்வைக்கண் டதனாலே
மால்கொண்ட பேதைக்குன் மணநாறும்
மார்தங்கு தாரைத்தந் தருள்வாயே
வேல்கொண்டு வேலைப்பண் டெறிவோனே
வீரங்கொள் சூரர்க்குங் குலகாலா
நாலந்த வேதத்தின் பொருளோனே
நானென்று மார்தட்டும் பெருமாளே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்து

கல்லாப் பிழையும், கருதாப் பிழையும், கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும், நின்னஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையும், துதியாப் பிழையும், தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியேகம்பனே.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான் மறை அறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக வுலக மெல்லாம்.......

## திருநீற்றுப் பதிகம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான் திருநீறே.

வேதத்தில் உள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதம் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையில் உள்ளது நீறு
சீதப் புனல் வயல் சூழ்ந்த திருவாலவாயான் திருநீறே

முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சத்தியம் ஆவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருஆலவாயான் திருநீறே

காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க்கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணம் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணம் தருவது நீறு திருஆலவாயான் திருநீறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூச இனியது நீறு புண்ணியம் ஆவது நீறு
பேச இனியது நீறு பெரும் தவத்தோர்களுக்கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தமதாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவாலவாயான் திருநீறே

அருத்தம் ஆவது நீறு அவலம் அறுப்பது நீறு
வருத்தம் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு
பொருத்தம் ஆவது நீறு புண்ணியர் பூசும் வெண்நீறு
திருத் தகு மாளிகை சூழ்ந்த திரு ஆலவாயான் திருநீறே.

எயிலது அட்டது நீறு இருமைக்கும் உள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தால வாயான் திருநீறே.!

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவணம் ஆவது நீறு பாவம் அறுப்பது நீறு
தராவணம் ஆவது நீறு தத்துவம் ஆவது நீறு
அராவணங்கும் திருமேனி ஆலவாயான் திருநீறே

மாலொடு அயன் அறியாத வண்ணமும் உள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏல உடம்பிடர் தீர்க்கும் இன்பம் தருவது நீறு
ஆலமதுண்ட மிடற்றெம் ஆலவாயான் திருநீறே

குண்டிகைக் கையர்களோடு சாக்கியர் கூட்டமும் கூட,
கண் திகைப்பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்திசைப்பட்ட பொருளார் ஏத்தும் தகையது நீறு
அண்டத்தவர் பணிந்து ஏத்தும் ஆலவாயான் திருநீறே.

ஆற்றல் அடல் விடை ஏறும் ஆலவாயான் திருநீற்றைப்
போற்றி, புகலி நிலாவும் பூசுரன் ஞானசம்பந்தன்,
தேற்றி, தென்னன் உடல் உற்ற தீப்பிணி ஆயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் அகவல்



சீதக் களபச்செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விழங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியுந்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதனீன்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாஹன
இப்பொழுதென்னை யாட்கொளவேண்டி
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் மறுத்து
திருந்திய முதயைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் னுளந்தனிற்புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவடி வைத்துத் திரமிது பொருளென
வாடாவகைதான் மகிழ்ந்தெனக்கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டாவுபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தினையறிவித்து
திருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒதுமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்து
கடையிற் சுழிமுனை கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவி லுணர்த்தி
குண்டலி யதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தனியக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூட்சமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்முக மாக இனிதெனக் கருளி
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்தித்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கிய எந்தன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக்கு ஒன்றிட மென்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்திஎன் செவியின்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்து அருள்வழி காட்டி
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டி
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்தி
கூடுமெய்த் தொண்டர் குழத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்து
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

(விநாயகர் அகவல் முற்றிற்று)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் கவசம்



வளர்சிகையைப் பராபரமாய் வயங்கு
விநாயகர் காக்க வாய்ந்த சென்னி
அளவுபடா அதிகசவுந் தரதேக
மகோற்கடர்தாம் அமர்ந்து காக்க
விளரறநெற் றியை என்றும் விளங்கிய
காசிபர்காக்க புருவந் தம்மைத்
தளர்வில் மாகோ தரர்காக்க
தடவிழிகள் பாலசந் திரனார் காக்க !!
(உதடு, நாக்கு, முகவாய்க்கட்டை, வாக்கு, பல், காது, மூக்கு காக்க)

கவின்வளரும் அதரம் கசமுகர் காக்க
காலங்கணக் கிரீடர் காக்க
நவில்சிபுகம் கிரிசைகார் காக்க
நனிவாக்கைவிநா யகபுதாம் காக்க
அவிர்நகை மின் முகர் காக்க
அள் எழிற் செஞ் செவிபாச பாணி காக்க
தவிர்தலுரு திளங் கொடிபோல் வளர்மணி
நாசியைச் சிந்தி தார்த்தர் காக்க !!
(முகம், கழுத்து, இணையான தோள்கள், உள்ளம், வயிறு காக்க)

காமருபூ முகந்தன்னைக் குணேசர்
நனி காக்ககளக் கணேசர் காக்க
வாமமுறும் இருதோளும் வயங்குகந்த
பூர்வசர் தாம்மகிழ்ந்து காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏமமுறு மணிமுலை விக்கின விநாசன் காக்க
இதயந் தன்னைத் தோமகலுங் கணநாதர் காக்க
அகட்டினைத் துலங்கே ரம்பர் காக்க !!

பக்கங்கள், தொண்டை காக்க:
பக்கம் இரண் டையுந்தரா தரர்காக்க
பிருட்டத்தைப் பாவம் நீக்கும்
விக்கினகரன் காக்க விளங்கிலிங்கம்
வியாளபூ டணர்தாம் காக்க
தக்ககுய்யந் தன்னைவக் கிரதுண்டர் காக்க
சகனத்தை அல்லல் உக்கண பன் காக்க
ஊருவை மங் களமூர்த்தி உவந்து காக்க
(முழங்கால்கள், இருகால்கள், இருகைகள், முன்கைகள் காக்க)

தாள்முழந்தாள் மகாபுத்தி காக்க
இரு பதம்ஏக தந்தர் காக்க
வாழ்கரம் க்ஷிப்பிரப் பிரசாதனர் காக்க
முன்கையை வணங்கு வார்நோய்
ஆழ்தரச்செய் ஆசாபூரகர் காக்க
விரல்பதும அத்தர் காக்க
கேழ்கிளரும் நகங்கள்விநா யகர் காக்க
கிழக்கினிற் புத்தீசர் காக்க !!

திக்குகள் அனைத்திலிருந்தும் காக்க:
அக்னியில் சித்தீசர் காக்க
உமா புத்திரர்தென் திசைகாக்க
மிக்கநிரு தியிற்கணே சுரர் காக்க
விக்கினவர்த்தனர்மேற் கென்னுந்
திக்கதனிற் காக்க
வாயுவிற் கசகர் ணன்காக்க
திகழ்உ தீசி தக்கநிதி பன்காக்க
வடகிழக்கில் ஈசநந் தனரே காக்க !!
(பகல், இரவு முதலிய காலங்களில் பிற தொல்லைகளிலிருந்தும் காக்க)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகதந்தர் பகர்முழுதும் காக்க
இர வினும்சுந்தி இரண்டன் மாட்டும்
சையின் விக் கினகிருது காக்க
இராக் கதர்பூதம் உருவேதாளம்
மோகினிபேய் இவையாதி உயிர்திரத்தால்
வருந்துயரம் முடிவிலாத
வேகமுறு பிணிபலவும் விலக்குபு
பாசாங்குசர்தாம் விரைந்துகாக்க !!
(மானம். புகழ் முதலியவற்றையும் உற்றார். உறவினரையும் காக்க)

மதிஞானம் தவந்தரன ம்மானம் ஒளி
புகழ்குலம் வண்சசரீரம் முற்றும்
பதிவான தனம்தானியம் கிருதம்
மனைவி மைந்தர் பயில்நட் பாதிக்
கதியாவும் கலந்து சர்வா யுதர்காக்க
காமர்பவுத் திரர் முன் னான
விதியாரும் சுற்றமெல்லாம் மயூரேசர்
எஞ்ஞான்றும் விரும்பிக் காக்க !!
படிப்போர் நோயற்றவராய் வாழ்வார்:

வென்றி சீவிதம் கபிலர் காக்க
கரி யாதியெல்லாம் விகடர் காக்க
என்றிவ்வா றிதுதனை முக்காலமும்
ஓதிடினும் பால் இடையூறொன்றும்
ஒன்றுறா முனிவரவர்காள் அறிமின்கள்
யாரொருவர் ஓதினாலும்
மன்ற ஆங் கவர்தேகம் பிணியற வச்
சிரதேக மாகி மன்னும் !!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்



திருச்சிற்றம்பலம்

தொல்லையிரும் பிறவிச் சூழுந்தளை நீங்கி
அல்ல லறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னுந் தேன்.

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க!
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க

வேகம் கெடுத்தாண்ட வேந்தனடிவெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க!
கரம் குவிவார் உண்மகிழுங் கோன் கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க!

ஈசன் அடி போற்றி எந்தை அடி போற்றி
தேசன் அடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம்தேவன் அடி போற்றி
ஆராத இன்பம் அருளு மலை போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கி
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழில் ஆர்கழல் இறைஞ்சி
விண் நிறைந்து மண் நிறைந்து மிக்காய் விளங்கு ஒளியாய்
எண் இறந்து எல்லை இலாதானே நின் பெரும்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றென்றறியேன்

புல்ஆகி பூடு ஆகி புழு வாய் மரம் ஆகி
பல் விருகம் ஆகி பறவை யாய் பாம்பு ஆகி
கல்லாய் மனிதர் ராய் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவர் ஆய் தேவர் ஆய்
செல்லா அ நின்ற இத்தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்தி ளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே!

வெய்யாய் தணியாய் இயமான நாம் விமலா
பொய் யாயின எல்லாம் போய கல வந்து அருளி
மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமாளே
அஞ்ஞானந்தன்னை அகல்விக்கும் நல் அறிவே

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே!
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே!
கறந்த தபால்கன்னலொடு நெய் கலந்தால் போலச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்து அடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓரைந்து உடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங் கயிற்றால் கட்டி
புறம் தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி
மலம் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந் துள்ளுருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம் தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்!

தாயிற் சிறந்த தயா வான தத்துவனே!
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச் சுடரே!
தேசனே தேனாரமுதே சிவபுரனே!
பாசமாம் பற்று அறுத்து பாரிக்கும் ஆரியனே!
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்

பேராது நின்ற பெருங் கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெருமானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என்னாரியுராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன் இருளே தோன்றாப் பெருமையனே!
ஆதியனே அந்தம் நடு ஆகி அல்லானெ
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே!
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார்தங்கருத்தின்
நோக்கு அரிய நோக்கே நுணுக்கு அரிய நுண் உணர்வே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கும் வரவும் புணர்வு இல்லாப்புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண் பரிய பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உன்னார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்து இருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்து வினைப் பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நடம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பள்ளியெழுச்சி

போற்றிஎன் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்து பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோஞ்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாய்எனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே

அருணன்இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழவெழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணலங் கண்ணாந்
திரள்நிரை அறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லேபள்ளி எழுந்தருளாயே

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரனை ஒளியொளி உதயத்
தொருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தருளாயே

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தருளாயே

பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரி யாய் எங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே

பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுந் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றார்அணங் கின்மண வாளா
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய்உல குக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தருளாயே

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மே இந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தாள்என் னேயென்னே
ஈதேஎந் தோழி பரிசேலோ ரெம்பாவாய்.

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய்.

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன்ஆ னந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய்.

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய்.

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய்.

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கும்

ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்.
அன்னே இவையுஞ் சிலவோ பலவமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய்.

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழிஈ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய்.

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எம்கணவ ராவார் அவர்உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய்.

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவன்ஊர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடீ செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய்.

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடுந்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன்இவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தம் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய்.
பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருள்ஆ மாபாடிச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தம்ஆ மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய்.

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.
முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவணமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்.

செங்கண வன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்என்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகல்எங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்.

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றிஎல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிங்காஷ்டகம்



ப்ரம்ம முராரி ஸ/ரார்சித லிங்கம்
நிர்மல பாஷித சோபித லிங்கம்
ஜன்மஜ துக்க விநாசக லிங்கம்
தத்ப்ரணமாமி சதா சிவ லிங்கம்.

தேவ முனி ப்ரவரார்சித லிங்கம்
காமதஹன கருணாகர லிங்கம்
ராவண தர்ப வினாஷக லிங்கம்
தத்ப்ரணமாமி சதா சிவ லிங்கம்.

சர்வ சுகந்த சுலேபித லிங்கம்
புத்தி விவார்தன காரண லிங்கம்
சித்த சுராசுர வந்தித லிங்கம்
தத்ப்ரணமாமி சதா சிவ லிங்கம்.

கனக மஹாமணி பூஷித லிங்கம்
பனிபதி வேஷ்டித சோபித லிங்கம்
தக்ஷ ஸ/யக்ன வினாஷன லிங்கம்
தத்ப்ரணமாமி சதா சிவ லிங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குங்கும சந்தன லேபித லிங்கம்
பங்கஜ ஹாரசு சோபித லிங்கம்
சஞ்சித பாப விநாஷன லிங்கம்
தத்ப்ரணமாமி சதா சிவ லிங்கம்.

தேவ கணார்ச்சித சேவித லிங்கம்
பாவயிற் பக்தி பீரேவச லிங்கம்
தினகர கோடி ப்ரபாகர லிங்கம்
தத்ப்ரணமாமி சதா சிவ லிங்கம்.

அஷ்ட தளோபரி வேஷ்டித லிங்கம்
சர்வ ஸமுத்பவ காரண லிங்கம்
அஷ்ட தரித்ர விநாஷன லிங்கம்
தத்ப்ரணமாமி சதா சிவ லிங்கம்.

சுரகுரு ஸ/ரவர பூஜித லிங்கம்
ஸ/ரவன புஷ்ப சதார்சித லிங்கம்
பரம பரம் பரமாத்மக லிங்கம்
தத்ப்ரணமாமி சதா சிவ லிங்கம்.

லிங்காஷ்டகம் இதம் புண்யம்
யஹ் படேத் சிவ சன்னிதௌ
சிவலோக மவாப்னோதி
சிவேன சஹ மோததே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரஸ்வதி தோத்திரம்

தனம் தரும் கல்வி தரும் ஒரு நாளும் தளர்வு அறியா
மனம் தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
க்னம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்,
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்
கொள்ளை யின்பம் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ள தாம்பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின் றொளிர்வாள்
கள்ள முற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசக்த் துட்பொரு ளாவாள். (வெள்ளைத்)

மாதர் தீங்குரற் பாட்டில் இருப்பாள்,
மக்கள் பேசும் மழலையில் உள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியின் நாவை இருப்பிடங் கொண்டாள்
கோத கன்ற தொழிலுடைத் தாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈதனைத்தின் எழிலிடை யுற்றாள்
இன்ப மேவடி வாகிடப் பெற்றாள். (வெள்ளைத்)

வஞ்ச மற்ற தொழில்புரிந் துண்டு
வாழும் மாந்தர் குலதெய்வ மாவாள்
வெஞ்ச மர்க்குயி ராகிய கொல்லர்
வித்தை யோர்ந்திடு சிற்பியர்,தச்சர்,
மிஞ்ச நற்பொருள் வாணிகஞ் செய்வோர்,
வீர மன்னர்பின் வேதியர் யாரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஞ்ச மென்று வணங்கிடுந் தெய்வம்
தரணி மீதறி வாகிய தெய்வம். (வெள்ளைத்)

தெய்வம் யாவும் உணர்ந்திடுந் தெய்வம்,
தீமைகாட்டி விலக்கிடுந் தெய்வம்
உய்வ மென்ற கருத்துடை யோர்கள்
உயிரி னுக்குயி ராகிய தெய்வம்
செய்வ மென்றொரு செய்கை யெடுப்போர்
செம்மை நாடிப் பணிந்திடு தெய்வம்
கைவ ருந்தி உழைப்பவர் தெய்வம்
கவிஞர் தெய்வம், கடவுளர் தெய்வம் (வெள்ளைத்)

செந்த மிழ்மணி நாட்டிடை யுள்ளீர்!
சேர்ந்தித் தேவை வணங்குவம் வாரீர்!
வந்த னம்இவட் கேசெய்வ தென்றால்
வாழி யஃதிங் கெளிதன்று கண்டீர்!
மந்தி ரத்தை முணுமுணுத் தேட்டை
வரிசை யாக அடுக்கி அதன்மேல்
சந்த னத்தை மலரை இடுவோர்
சாத்திரம் இவள் பூசனை யன்றாம். (வெள்ளைத்)

வீடு தோறும் கலையின் விளக்கம்,
வீதி தோறும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலும் உள்ளவ வூர்கள்
நகர்க ளெங்கும் பலபல பள்ளி
தேடு கல்வியி லாததொ ஷரூரைத்
தீயி னுக்கிரை யாக மடுத்தல்
கேடு தீர்க்கும் அமுதமென் அனனை
கேண்மை கொள்ள வழியிவை கண்டீர். (வெள்ளைத்)

ஊணர் தேசம் யவனர்தந் தேசம்
உதய ஞாயிற் றொளிபெறு நாடு
சேண கன் றதோர் சிற்றடிச் சீனம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வப் பார சிகப்பழந் தேசம்
தோண லத்த துருக்கம் மிசிரம்
சூழ்க டற்கப் புறத்தினில் இன்னும்
காணும் பற்பல நாட்டிடை யெல்லாம்
கல்வித் தேவின் ஒளிமிகுந்தோங்க. (வெள்ளைத்)

ஞானம் என்பதோர் சொல்லின் பொருளாம்
நல்ல பாரத நாட்டை வந்தீர்!
ஊனம் இன்று பெரிதிழைக் கின்றீர்!
ஓங்கு கல்வி யுழைப்பை மறந்தீர்!
மான மற்று விலங்குக ளொப்ப
மண்ணில் வாழ்வதை வாழ்வென லாமோ?
போன தற்கு வருந்துதல் வேண்டா
புன்மை தீர்ப்ப முயலுவம் வாரீர்! (வெள்ளைத்)

இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்
அனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆல யம்பதி னாயிரம் நாட்டல்.

பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்.
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல் (வெள்ளைத்)

நிதிமி குத்தவர் பொற்குவை தாரீர்!
நிதிகு றைந்தவர் காசுகள் தாரீர்!
அதுவு மற்றவர் வாய்ச்சொல் அருளீர்!
ஆண்மை யாளர் உழைப்பினை நல்கீர்!
மதுரத் தேமொழி மாதர்க ளெல்லாம்
வாணி பூசைக் குரியன பேசீர்!
எதுவும் நல்கியிங் வ்வகை யானும்
இப்பெருந் தொழில நாட்டுவம் வாரீர்! (வெள்ளைத்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லிமாலை



வெண்டா மரைக்கன்றி நின் பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொ
லோசக மேழு மளித்து
துண்டா னுறங்க வொழித்தான்பித்
தாகவுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகலகலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகலகலாவல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகலகலாவல்லியே.
பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்த நல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலுங் வெங் காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந்தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமை கொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகலகலாவல்லியே.

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண்டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன் போற்
கண்கண்ட தெய்வமுளதோ
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# ஸ்ரீ கந்தர் சஷ்டி கவசம்

## திருப்பரங்குன்றுறைத் திருமகன்

## முதலாவது கவசம்



### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்(து)ஓங்கும்
நிட்டையும் கைகூடும், நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

### காப்பு

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

### நூல்

திருப்பரங் குன்றுறை தீரனே குகனே
மருப்பிலாப் பொருளே வள்ளி மனோகரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுக்குத் துறையுறை குமரனே அரனே
இருக்குள் குருபரா ஏரகப் பொருளே
வையா புரியில் மகிழ்ந்துவாழ் பவனே
ஒய்யார மயில்மேல் உகந்தாய் நமோ நமோ
ஐயா குமரா அருளே நமோ நமோ
மெய்யாய் விளங்கும் வேலா நமோ நமோ
பழநியங் கிரிவாழ் பகவா நமோ நமோ
மழுவுடைய முதல்வன் மதலாய் நமோ நமோ
விராலி மலையுறை விமலா நமோ நமோ
மராமரம் துளைத்தோன் மருகா நமோ நமோ
சூரசம்காரத் துரையே நமோ நமோ
வீரவே லேந்தும் வேளே நமோ நமோ
பன்னிரு கரமுடைப் பரமா நமோ நமோ
கண்களீ ராறுடைக் கந்தா நமோ நமோ
கோழிக் கொடியுடைக் கோவே நமோ நமோ
ஆழிசூழ் செந்தில் அமர்ந்தாய் நமோ நமோ
சசச சசச ஓம் ரீம்
ரரர ரரர ரீம் ரீம்
வவவ வவவ வா ஹோம்
ணணண ணணண வாம் ஹோம்
பபப பபப சாம் சூம்
வவவ வவவ களம் ஓம்
லல லிலி லுலு நாட்டிய அட்சரம்
கக கக கக கந்தனே வருக
இக இக இக ஈசனே வருக
தக தக தக சற்குரு வருக
பக பக பக பரந்தாமா வருக
வருக வருகவென் வள்ளலே வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருக வருகநிஷ் களங்கனே வருக
தாயென நின்னிரு தாள்பணிந் தேன்எனைச்
சேயெனைக் காத்தருள் திவ்யமா முகனே
அல்லும் பகலும் அனுதினமும் என்னை
எல்லிலும் இருட்டிலும் எரிபகல் படுக்கை
வல்ல விடங்கள் வராமல் தடுத்து
நல்ல மனதுடன் ஞான குருஉனை
வணங்கித் துதிக்க மகிழ்ந்து நீ வரங்கள்
இணங்கியே அருள்வாய் இறைவா எப்போதும்
கந்தா கடம்பா கார்த்தி கேயா
நந்தன் மருகா நாரணி சேயே
எண்ணிலாக் கிரியில் இருந்து வளர்ந்தனை
தண்ணளி அளிக்கும் சாமி நாதா
சிவகிரி கையிலை திருப்பதி வேளூர்
தவக்கதிர் காமம் சார்திரு வேரகம்
கண்ணுள் மணிபோல் கருதிடும் வயலூர்
விண்ணவர் ஏத்தும் விராலி மலைமுதல்
தன்னிக ரில்லாத் தலங்களைக் கொண்டு
சந்நிதி யாய்வளர் சரவண பவனே
அகத்திய முனிவனுக்(கு) அன்புடன் தமிழைச்
செகத்தோர் அறியச் செப்பிய கோவே
சித்துகள் ஆம் சிதம்பர சக்கரம்
நர்த்தனம் புரியும் நாற்பத்தெண் கோணம்
வித்தாய் நின்ற மெய்ப்பொரு ளோனே!
உத்தம குணத்தாய் உம்பர்கள் ஏறே
வெற்றிக் கொடியுடை வேளே போற்றி
பக்திசெய் தேவர் பயனே போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தம் மகிழ்ந்திடச் செய்தவா போற்றி
அத்தன் அரியயன் அம்பிகை லட்சுமி
வாணியுடனே வரையுமாக் கலைகளும்
தானே நானென்று சண்முக மாகத்
தாரணி யுள்ளோர் சகலரும் போற்றப்
பூரண கிருபை புரிபவா போற்றி
பூதலத் துள்ள புண்ணிய தீர்த்தங்கள்
ஓதமார் கடல்சூழ் ஒளிர்புவி கிரிகளில்
எண்ணிலாத் தலங்கள் இனிதெழுந் தருள்வாய்
பண்ணும் நிஷ்டைகள் பலபல வெல்லாம்
கள்ளம் அபசாரம் கர்த்தனே எல்லாம்
எள்ளினுள் எண்ணெய்போல் எழிலுடைய உன்னை அல்லும் பகலும் ஆசா ரத்துடன்
சல்லாப மாய்உனைத் தானுறச் செய்தால்
எல்லா வல்லமை இமைப்பினில் அருளி
பல்லா யிரநூல் பகர்ந்தருள் வாயே
செந்தில் நகர்உறை தெய்வானை வள்ளி
சந்ததம் மகிழும் தயாபர குகனே !
சரணம் சரணம் சரவண பவஓம்
அரன்மகிழ் புதல்வா ஆறுமுகா சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# ஸ்ரீ கந்தர் சஷ்டி கவசம்

## செந்தில் மேவும் சரவணன்

## இரண்டாவது கவசம்



சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டிற் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக!
வருக! வருக! மயிலோன் வருக!
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக! வருக!
வாசவன் மருகா வருக வருக!
நேசக் குறமகள் நினைவோன் வருக!
ஆறுமுகம் படைத்த ஐயா வருக!
நீறிடும் வேலவன் நித்தம் வருக!
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக!
சரவண பவனார் சடுதியில் வருக!
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விணப சரஹண வீரா நமோ நம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக! வருக!
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக!
என்னை யாளு மிளையோன் கையிற்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக!
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் றீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக!
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலங்கு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பிற்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கிற் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனிற் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திருவடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியாற் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டு கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்க தாக்கத் தடையறத் தாக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்லபூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழுக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓது மஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டி யுருட்டு கைகால் முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறைக் கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா விருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் ஆடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரக்ஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்களன் வறுமைகள் நீங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவ நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையிற் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றார் ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை அதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கந்தர் சஷ்டி கவசம்

## பழநிப் பதிவாழ் அப்பன்

## மூன்றாவது கவசம்



திருவா வினன்குடி சிறக்கும் முருகா
குருபரா குமரா குழந்தைவே லாயுதா
சரவணா சண்முகா சதாசிவன் பாலா
இரவலர் தயாபரா ஏழைபங் காளா
பரமேசு வரிக்குப் பாலா தயாபரா
வரமெனக்(கு) அருள்வாய் வாமனன் மருகா
இரண்டாயிரம் வெள்ளம் யோகம் படைத்தவா
திரண்டா ருகமனம் தீர்க்கம் படைத்தவா
இலட்சத் திருநான்கு நற்றம்பி மாருடன்
பட்சத் துடனே பராசக்தி வேலதாய்
வீர வாகு மிகுதள கர்த்தனாய்
சூரசம் காரா துஷ்டநிஷ் டூரா
கயிலாய மேவும் கனகசிம் மாசனா
மயிலேறும் சேவகா வள்ளி மனோகரா
அகத்திய மாமுனிக்(கு) அருந்தமிழ் உரைத்தவா
சுகத்திரு முருகாற் றுப்படை சொல்லிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நக்கீரன் நற்றமிழ் நலமென வினவிக்
கைக்கீழ் வைக்கும் கனகமிசைக் குதவா
திருவரு ணகிரி திருப்புகழ் பாட
இரும்புகழ் நாவில் எழுதிப் புகழ்ந்தவா
ஆயிரத் தெட்டாம் அருள்சிவ தலத்தில்
பாயிரம் தோத்திரம் பாடப் புகழ்ந்தவா
எண்ணா யிரம்சமண் எதிர்கழு வேற்றி
விண்ணோர் குமாரன் வியாதியைத் தீர்த்தவா
குருவாம் பிரமனைக் கொடுஞ்சிறை வைத்து
உறுபொருள் வேதம் உரைத்தாய் சிவனுடன்
சுருதிமெய் யோகம் சொல்லிய (து) ஒருமுகம்
அருள்பெறு மயில்மீ (து) அமர்ந்த (து) ஒருமுகம்
வள்ளிதெய் வானையை மருவிய (து) ஒருமுகம்
தெள்ளுநான் முகன்போல் சிருஷ்டிப்ப (து)
ஒருமுகம் சூரனை வேலால் துணித்த (து) ஒருமுகம்
ஆரணம் ஓதும் அருள்மறை யடியார்
தானவர் வேண்டுவ தருவ(து) ஒருமுகம்
ஞான முதல்வர்க்கு நற்பிள்ளை பழநி
திருப்பரங் கிரிவாழ் தேவா நமோநம
பொருட் செந்தில் அம்பதி புரப்பாய் நமோநம
ஏரகம் தனில்வாழ் இறைவா நமோநம
கூரகம் ஆவினன் குடியாய் நமோநம
சர்வசங் கரிக்குத் தனயா நமோநம
உறுசோலை மலைமேல் உகந்தாய் நமோநம
எல்லாக் கிரிக்கும் இறைவா நமோநம
சல்லாப மாகச் சண்முகத் துடனே
எல்லாத் தலமும் இனிதெழுந் தருளி
உல்லா சத்துறும் ஓங்கார வடிவே
மூலவட்டத்தில் முளைத்தெழும் சோதியை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வ முக்கோணத் தந்தமுச் சக்தியை
வேலா யுதமுடன் விளங்கிடும் குகனைச்
சீலமார் வயலூர்ச் சேந்தனைத் தேவனை
கைலாச மேருவா காசத்திற் கண்டு
பைலாம் பூமியும் பங்கய பார்வதி
மேலும் பகலும் விண்ணுரு வேத்தி
நாற்கோ ணத்தில் நளினமாய் அர்ச்சனை
கங்கை யீசன் கருதிய நீர்புரை
செங்கண்மால் திருவும் சேர்ந்துசெய் அர்ச்சனை
அக்கினி நடுவே அமர்ந்த ருத்திரன்
முக்கோண வட்டம் முதல்வாயு ருத்திரி
வாய்அறு கோணம் மகேசுரன் மகேசுவரி
ஐயும் கருநெல்லி வெண்சாரை தன்மேல்
ஆகாச வட்டத்(து) அமர்ந்த சதாசிவன்
பாகமாம் வெண்மைப் பராசக்தி கங்கை
தந்திர அர்ச்சனை தலைமேற் கொண்டு
மந்திர மூலத்தில் வாசியைக் கட்டி
அக்கினிக் குதிரை ஆகாசத் தேவி
மிக்கமாய்க் கருநெல்லி வெண்சாரை உண்பவர்
பாகமாய் ரதமும் பகல்வழி யாவர்
சாகா வகையும் தன்னை அறிந்து
ஐந்து சீவனுடன் ஐயஞ்சு கல்பமும்
விந்தை உமைசிவன் மேன்மையும் காட்டி
சந்திர சூரியர் தம்முடன் அக்கினி
அந்தி ரனைக்கண்(டு) அறிந்தே யிடமாய்ச்
சிந்தையுள் ஏற்றுச் சிவசம்பு தன்னை
மந்திர அர்ச்சனை வாசிவா என்று
தேறுமுகம் சென்னி சிவகிரி மீதில்
ஆறு முகமாய் அகத்துள்ளே நின்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசல் ஒன்பதையும் வளமுடன் வைத்து
யோசனை ஐங்கரன் உடன்விளை யாடி
மேலைக் கருநெல்லி வெண்சாறை உண்டு
வாலைக் குழந்தை வடிவையும் காட்டி
நரைதிரை மாற்றி நாலையும் காட்டி
உரைசிவ யோகம் உபதேசம் செப்பி
மனத்தில் பிரியா வங்கண மாக
நினைத்தபடி என் நெஞ்சத் திருந்து
அதிசயம் என்றுன் அடியார்க்(கு) இரங்கி
மதியருள் வேலும் மயிலுடன் வந்து
நானே நீயெனும் லட்சணத் துடனே
தேனே என்னுளம் சிவகிரி எனவே
ஆறா தாரத் (து) ஆறு முகமும்
மாறா திருக்கும் வடிவையும் காட்டிக்
கனவிலும் நனவிலும் கண்டுனைத் துதிக்கத்
தனதென வந்து தயவுடன் இரங்கிச்
சங்கொடு சக்கரம் சண்முக தெரிசனம்
எங்கு நினைத்தாலும் என்முன் னேவந்து
அஷ்டாவ தானம் அறிவுடன் சொல்லத்
தட்டாத வாக்கும் சர்வா பரணமும்
இலக்கணம் இலக்கியம் இசையறிந் துரைக்கத்
துலக்கிய காவியம் சொற்பிர பந்தம்
எழுத்துச் சொற்பொருள் யாப்பலங் காரம்
வழுத்தும் என் நாவில் வந்தினி திருந்தே
அமுத வாக்குடன் அடியார்க்கும் வாக்கும்
சமுசார சாரமும் தானே நிசமென
வச்சிரம் சரீரம் மந்திர வசீகரம்
அட்சரம் யாவும் அடியேனுக் (கு) உதவி
வல்லமை யோகம் வசீகர சக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல உன் பாதமும் நாடிய பொருளும்
சகலகலை ஞானமும் தானெனக் கருளி
செகதல வசீகரம் திருவருள் செய்து
வந்த கலிபிணி வல்வினை மாற்றி
இந்திரன் தோகை எழில்மயில் ஏறிக்
கிட்டவே வந்து கிருபை பாலிக்க
அட்டதுட் டமுடன் அநேக மூர்க்கமாய்
துட்டதே வதையும் துட்டப் பிசாசும்
வெட்டுண்ட பேயும் விரிசடைப் பூதமும்
வேதாளம் கூளி விடும்பில்லி வஞ்சனை
பேதாளம் துன்பப் பிசாசுகள் நடுநடுங்க
பதைபதைத் தஞ்சிடப் பாசத்தாற் கட்டி
உதைத்து மிதித்தங்(கு) உருட்டி நொருக்கிச்
சூலத்தாற் குத்தித் தூளுதூளுருவி
வேலா யுதத்தால் வீசிப் பருகி
மழுவிட் டேவி வடவாக் கினிபோல்
தழுவி அக்கினியாத் தானே எரித்துச்
சிதம்பர சக்கரம் தேவி சக்கரம்
மதம்பெறும் காளி வல்ல சக்கரம்
மதியணி சம்பு சதாசிவ சக்கரம்
பதிகர்ம வீர பத்திரன் சக்கரம்
திருவை குண்டம் திருமால் சக்கரம்
அருள்பெருந் திகிரி அக்கினிச் சக்கரம்
சண்முக சக்கரம் தண்டா யுதத்தால்
விம்ம அடிக்கும் எல்லாச் சக்கரமும்
ஏக ரூபமாய் என்முனே நின்று
வாகனத் துடன்என் மனத்துள் இருந்து
தம்பனம் மோகனம் தயவாம் வசீகரம்
இம்பமா கருடணம் மேவுமுச் சாடனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வம்பதாம் பேதுனம் வலிதரும் ஆரணம்
உம்பர்கள் ஏத்தும் உயிர்வித் வேடணம்
தந்திர மந்திரம் தருமணி அட்சரம்
உந்தன் விபூதி யுடனே சபித்து
கந்தனின் தோத்திரம் கவசமாய்க் காக்க
எந்தன் மனத்துள் ஏதுவேண் டியதும்
தந்துரட் சித்தருள் தயாபரா சரணம்
சந்ததம் எனக்கருள் சண்முகா சரணம்
சரணம் சரணம் சட்கோண இறைவா
சரணம் சரணம் சத்துரு சம்காரா
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# ஸ்ரீ கந்தர் சஷ்டி கவசம்

## திருவேரம் வாழ் தேவன்

## நான்காவது கவசம்



ஓமெனும் பிரணவம் உரைத்திடச் சிவனார்
காமுற உதித்த கனமறைப் பொருளே
ஓங்கார மாக உதயத் தெழுந்தே
ஆங்கார மான அரக்கர் குலத்தை
வேரறக் களைந்த வேலவா போற்றி
தேராச் சூரரைத் துண்டதுண் டங்களாய்
வேலா யுதத்தால் வீசி அறுத்த
பாலா போற்றி பழநியின் கோவே
நான்கு மறைகள் நாடியே தேடும்
மான்மரு கோனே வள்ளி மணாளனே
நானெனும் ஆண்மை நண்ணிடா(து) என்னை
காண நீ வந்து காப்பதுன் கடனே
காளி கூளி கங்காளி ஓங்காரி
சூலி கபாலி துர்க்கை யேமாளி
போற்றும் முதல்வா புனித குமார
சித்தர்கள் போற்றும் தேசிகா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏகாட் சரமாய்" எங்கும் தானாகி
வாகாய் நின்ற மறைமுதற் பொருளே
"துவியட் சரத்தால்" தொல்லுல(கு) எல்லாம்
அதிசய மாக அமைத்தவா போற்றி
"திரியட் சரத்தால்" சிவனயன் மாலும்
விரிபா ருலகில் மேன்மையுற் றவனே
"சதுரட் சரத்தால்" சாற்றுநல் யோகம்
மதுரமாய் அளிக்கும் மயில்வா கனனே
"பஞ்சாட் சரத்தால்" பரமன் உருவத்தால்
தஞ்சமென் றோரைத் தழைத்திடச் செய்தென்
நெஞ்சகத்(து) இருக்கும் நித்தனே சரணம்
அஞ்சலி செய்த அமரரைக் காக்கும்
ஆறு கோணமாய் ஆறெழுத் தாகி
ஆறு சிரமும் அழகிய முகமும்
ஆறிரு செவியும் அகன்ற மார்பும்
ஆறிரு கண்ணும் அற்புத வடிவும்
சரவணை வந்த சடாட்சரப் பொருளே
அரனயன் வாழ்த்தும் அப்பனே கந்தா
கரங்கள்பன் னிரண்டிற் கதிரும் ஆயுதத்தால்
தரங்குலைத்(து) ஓடத் தாரகா சுரன் முதல்
வேரறச் சூர்க்குலம் முடித்து மகிழ்ந்தோய்
சீர்திருச் செந்தூர்த் தேவசே னாதிப
அஷ்ட குலாசலம் யாவையும் ஆகி
இஷ்டசித் திகளருள் ஈசன் புதல்வா
துட்டசம் கார சுப்பிர மண்யா
மட்டிலா வடிவே வையாபுரித் துரையே
எண்கோ ணத்துள் இயங்கிய நாரணன்
கண்கொளாக் காட்சி காட்டிய சடாட்சர
சைவம் வைணவம் சமரச மாக
தெய்வமாய் விளங்கும் சரவண பவனே
சரியை கிரியை சார்ந்தநல் யோகம்
இரவலர்க்(கு) அருளும் ஈசா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதுசெய் திடினும் என்பால் இரங்கிக்
கோதுகள் இல்லாக் குணமெனக் கருளித்
தரிசனம் கண்ட சாதுவோ(டு) உடன்யான்
அருச்சனை செய்ய அனுக்ரகம் அருள்வாய்
பில்லிவல் வினையும் பீனிச மேகம்
வல்ல பூதங்கள் மாயமாய்ப் பறக்க
அல்லலைப் போக்கிநின் அன்பரோ(டு) என்னைச்
சல்லாப மாகச் சகலரும் போற்ற
கண்டு களிப்புறக் கருணை அருள்வாய்
அண்டர் நாயகனே அருமறைப் பொருளே
குட்டிச் சாத்தான் குணமிலா மாடன்
தட்டிலா இருளன் சண்டிவே தாளம்
சண்டமா முனியும் தக்கராக் கதரும்
மண்டை வலியோடு வாதமும் குன்மமும்
சூலைகா மாலை சொக்கலும் சயமும்
மூலரோ கங்கள் முடக்குள் வலிப்பு
தீட்டு முறைகள் தெய்வத சாபம்
குட்டம் சோம்பல் கொடிய வாந்தியும்
கட்டிலாக் கண்ணோய் கண்ணேறு முதலா
வெட்டிக் காயம் வெவ்விடம் அனைத்தும்
உன்னுடைய நாமம் ஓதியே நீறிடக்
கன்னலொன் றதனில் களைந்திடக் கருணை
செய்வதுன் கடனே செந்தில் நாயகனே
தெய்வ நாயகனே தீரனே சரணம்
சரணம் சரணம் சரவண பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# ஸ்ரீ கந்தர் சஷ்டி கவசம்

குன்றுதோறாடும் குமரன்

## ஐந்தாவது கவசம்



கணபதி துணைவா கங்காதரன் புதல்வா
குணவதி உமையாள் குமரா குருபரா
வள்ளி தெய்வானை மருவிய நாயகா
துள்ளி மயிலேறும் சுப்பிர மணியா
அழகொளிப் பிரபை அருள்வடி வேலா
பழநி நகரில் பதியநு கூலா
திருவா வினன்குடி சிறக்கும் முருகா
அருள்சேர் சிவகிரி ஆறு முகவா
சண்முக நதியும் சார்பன்றி மலையும்
பன்முகம் நிறைந்த பழநிக்கு இறைவா
ஆராறு நூற்று அட்டமங் கலமும்
வீரவை யாபுரி விளங்கும் தயாபரா
ஈராறு பழநி எங்கும் தழைக்கப்
பாராறு சண்முகம் பகரும் முதல்வா
ஆறு சிரமும் ஆறு முகமும்
ஆறிரு புயமும் ஆறிரு காதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவம் சிறந்த மகரகுண் டலமும்
தடித்த பிரபைபோல் சார்ந்த சிந்தூரமும்
திருவெண் ணீறணி திருநுதல் அழகும்
கருணை பொழியும் கண்ணான்கு மூன்றும்
குனித்த புருவமும் கூரிய மூக்கும்
கனித்த மதுரித்த கனிவாய் இதழும்
வெண்ணிலாப் பிரபைபோல் விளங்கிய நகையும்
எண்ணிலா அழகாய் இலங்குபல் வரிசையும்
காரிகை உமையாள் களித்தே இனிதெனச்
சீர்தரும் வள்ளி தெய்வநா யகியாள்
பார்த்தழ கென்னப் பரிந்த கபாலமும்
வார்த்த கனகம்போல் வடிவேல் ஒளியும்
முறுக்குமேல் மீசையும் மூர்க்கம் சிறக்க
மறுக்கும் சூரர்மேல் வாதுகள் ஆட
ஈசுவரன் பார்வதி எடுத்து முத்தாடி
ஈசுவரன் வடிவை மிகக்கண் டனுதினம்
கையால் எடுத்துக் கனமார்(பு) அணைத்தே
ஐயா! குமரா! அப்பனே! என்று
மார்பினும் தோளினும் மடியினும் வைத்துக்
கார்த்திகே யாஎனக் கருணையாற் கொஞ்சி
முன்னே கொட்டி முருகா! வருகவென்(று)
அந்நேரம் வட்மிட் டாடி விளையாடித்
தேவியும் சிவனும் திருக்கண் களிகூரக்
கூவிய மயிலேறும் குருபரா வருக
தாவிய தகரேறும் சண்முகா வருக
ஏவிய வேலேந்தும் இறைவா வருக
கூவிய சேவற் கொடியாய் வருக
பாவலர்க் கருள்சிவ பாலனே வருக
அன்பர்க் கருள்புரி ஆறுமுகா வருக
பொன்போல் சரவணைப் புண்ணியா வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகிற் சிவனொளி அய்யனே வருக
களபம் அணியுமென் கந்தனே வருக
மருமலர்க் கடம்பணி மார்பா வருக
மருவுவோர் மலரணி மணியே வருக
கிரிபுர பவனெனும் தேவே வருக
பரிபுர பவனெனும் பவனே வருக
சிவகிரி வாழ்தெய்வ சிகாமணி வருக
காலில் தண்டை கலீர் கலீரென
சேலிற் சதங்கை சிலம்பு கலீரென
இடும்பனை மிதித்ததோர் இலங்கிய பாதமும்
அடும்பல வினைகளை அகற்றிய பாதமும்
சிவகிரி மீதினில் திருநிறைக் கொலுவும்
நவகிரி அரைமேல் இரத்தினப் பிரபையும்
தங்கரை ஞாணும் சாதிரை மாமணி
பொங்குமாந் தளிர்சேர் பொற்பீதாம் பரமும்
சந்திர காந்தச் சரிகைத் தொங்கலும்
மந்திர வாளும் வாங்கிச் சுரிகையும்
அருணோ தயம்போல் அவிர்வன் கச்சையும்
ஒருகோடி சூரியன் உதித்த பிரபைபோல்
கருணையால் அன்பரைக் காத்திடும் அழகும்
இருகோடி சந்திரன் எழிலொட்டியாணமும்
ஆயிரம் பணாமுடி அணியுமா பரணமும்
வாயில்நன் மொழியாய் வழங்கிய சொல்லும்
நாபிக் கமலமும் நவரோம பந்தியும்
மார்பிற் சவ்வாது வாடை குபீரென
புனுகு பரிமளம் பொருந்திய புயமும்
ஒழுகிய சந்தனம் உயர்கத் தூரியும்
வலம்புரிச் சங்கொலி மணியணி மிடறும்
நலம்சேர் உருத்திர அக்க மாலையும்
மாணிக்கம் முத்து மரகதம் நீலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணிவை டூரியம் அணிவைரம் பச்சை
பவளகோ மேதகம் பதித்தவச் ராங்கியும்
நவமணிப் பிரபைபோல் நாற்கோடி சூரியன்
அருணோ தயமெனச் சிவந்த மேனியும்
கருணை பொழியும் கடாட்சவீட் சணமும்
கவசம் தரித்தருள் காரண வடிவும்
நவவீரர் தம்முடன் நற்காட்சியான
ஒருகை வேலாயுதம் ஒருகை சூலாயுதம்
ஒருகை நிறைசங்கு ஒருகை சக்ராயுதம்
ஒரு கை நிறைவில்லு ஒருகை நிறையம்பு
ஒருகை மந்திரவாள் ஒருகை மாமழு
ஒருகை மேற்குடை ஒருகை தண்டாயுதம்
ஒருகை சந்திராயுதம் ஒருகை வல்லாயுதம்
அங்கையிற் பிடித்த ஆயுதம் அளவிலாப்
பங்கயக் கமலப் பன்னிரு தோளும்
முருக்கம் சிறக்கும் முருகா சரவணை
இருக்கும் குருபரா ஏழைபங் காளா
வானவர் முனிவர் மகிழ்ந்து கொண்டாடத்
தானவர் அடியவர் சகலரும் பணியப்
பத்திர காளி பரிவது செய்யச்
சக்திகள் எல்லாம் தாண்டவ மாட
அஷ்ட பயிரவர் ஆனந்த மாட
துஷ்டமிகுஞ் சூளிகள் சூழ்திசை காக்க
சப்த ரிஷிகள் சாந்தக மென்னச்
சித்தர்கள் நின்று சிவசிவா என்னத்
தும்புரு நாரதர் சூரிய சந்திரர்
கும்பமா முனியும் குளிர்ந்ததா ரகையும்
அயன்மால் உருத்திரன் அஷ்ட கணங்கள்
நயமுடன் நின்று நாவால் துதிக்க
அஷ்ட லட்சுமி அம்பிகை பார்வதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டழுகன் என்று கண்டுனை வாழ்த்த
இடும்பா யுதன்நின் இணையடி பணிய
ஆடும் தேவகன்னி ஆரத்தி எடுக்க
தேவ கணங்கள் செயசெய என்ன
ஏவற் கணங்கள் இந்திரர் போற்ற
கந்தருவர் பாடிக் கவரிகள் வீசிச்
சார்ந்தனம் என்னச் சார்வரும் அநேக
பூதம் அடி பணிந் தேத்த வேதாளம்
பாதத்தில் வீழ்ந்து பணிந்துகொண் டாட
அரகர என்றடியார் ஆலவட்டம் பிடிக்க
குருபரன் என்றன்பர் கொண்டாடி நிற்க
குடையும் சேவலின் கொடியும் சூழ
இடைவிடா மல்உன் ஏவலர் போற்றச்
சிவனடியார்கள் திருப்பாத மேந்த
நவமெனும் நால்வரை ஏற்ற சரமண்டலம்
உருத்திர வீணை நாதசுர மேளம்
தித்திமி என்று தேவர்கள் ஆடச்
சங்கீத மேளம் தாளம் துலங்க
மங்கள மாக வைபவம் இலங்க
தேவ முரசடிக்கத் தினமேள வாத்தியம்
சேவற் கொடியும் சிறப்புடன் இலங்க
நந்திகே சுவரன் மீது ஏறிய நயமும்
வந்தனம் செய்ய வானவர் முனிவர்
எங்கள் பார்வதியும் ஈசனும் முன்வர
ஐங்கரன் முன்வர ஆறுமா முகவன்
வீர மயிலேறி வெற்றிவேல் எடுத்துச்
சூரன்மேல் ஏவத் துடித்தவன் மடியச்
சிங்கமுகா சுரன் சிரமது உருளத்
துங்கக் கயமுகன் சூரனும் மாழ
அடலற்ற குலத்தை அறுத்துச் சயித்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடவேலாயுதம் வீசிக் கொக்கரித்துத்
தம்பமெனும் சயத் தம்பம் நாட்டி
அன்பர்கள் தம்மை அனுதினம் காத்துத்
திருப்பரங்குன்றம் சீர்ப்பதி செந்தூர்
திருவாவி னன்குடி திருவேரகமும்
துய்ய பழநிச் சுப்பிர மணியன்
மெய்யாய் விளங்கும் விராலி மலைமுதல்
அண்ணா மலையும் அருள்மேவு கயிலை
கண்ணிய மாவூற்றுக் கழுகுமா மலையும்
முன்னிமை யோர்கள் முனிவர் மனத்திலும்
நன்னய மாய்ப்பணி நண்பர் மனத்திலும்
கதிர்காமம் செங்கோடு கதிர்வேங் கடமும்
பதினாலு லுலகத்தினிலும் பக்தர் மனத்திலும்
எங்கும் தானவனாயிருந் (து) அடியர்தம்
பங்கி லிருந்து பாங்குடன் வாழ்க
கேட்ட வரமும் கிருபைப் படியே
தேட்ட முடன் அருள் சிவகிரி முருகா
நாட்டு சிவயோகம் நாடிய பொருளும்
தாட்டிக மாய்எனக்(கு) அருள் சண்முகனே
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# ஸ்ரீ கந்தர் சஷ்டி கவசம்
## பழமுதிர் சோலைப் பண்டிதன்
## ஆறாவது கவசம்



சங்கரன் மகனே சரவண பவனே
ஐங்கரன் துணைவனே அமரர்தம் கோனே
செங்கண்மால் மருகனே தெய்வானைக் கேள்வனே
பங்கயம் போன்ற பன்னிரு கண்ணனே
பழநிமா மலையுறும் பன்னிரு கரத்தனே
அழகுவேல் ஏந்தும் ஐயனே சரணம்
சரவண பவனே சட்கோணத் துள்ளுறை
அரனருள் சுதனே அய்யனே சரணம்
சயிலொளி பவனே சடாட்சரத் தோனே
மயில்வா கனனே வள்ளலே சரணம்
திரிபுர பவனே தேவசே னாபதி
குறமகள் மகிழும் குமரனே சரணம்
திகழொளி பவனே சேவற் கொடியாய்
நகமா யுதமுடை நாதனே சரணம்
பரிபுர பவனே பன்னிரு கையனே
தருணமிவ் வேளைத் தற்காத் தருளே
சவ்வும் ரவ்வுமாய்த் தானே யாகி
பவ்வும் ணவ்வுமாய் விளங்கிய குகனே
வவ்வும் வவ்வுமாய்ப் பழமுதிர்ச் சோலையில்
தவ்வியே ஆடும் சரவண பவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குஞ்சரி வள்ளியைக் குலாவி மகிழ்வோய்
தஞ்சமென் றுன்னைச் சரணம் அடைந்தேன்
கொஞ்சிய உமையுடன் குழவியாய் சென்றங்(கு)
அஞ்சலி செய்தவள் அமுதமும் உண்டு
கார்த்திகை மாதர் கனமார்(பு) அமுதமும்
பூர்த்தியாய் உண்ட புனிதனே குகனே
நவமைந்தர் சிவனால் நலமுடன் உதிக்கத்
தவமுடைய வீர வாகுவோ(டு) ஒன்பான்
தம்பிமா ராகத் தானையைக் கொண்ட
சம்பிர தாயா சண்முக வேலா
நவவீரர் தம்முடன் நவகோடி வீரரும்
கவனமாய் உருத்திரன் அளித்தே களித்துப்
பேதம் இல்லாமல் பிரமனைக் குருவாய்
ஓதிடச் செய்ய உடன் அவ் வேதனை
ஓமெனும் பிரணவத் துண்மை நீ கேட்கத்
தாமே யோசித்த சதுர்முகன் தன்னை
அமரர்கள் எல்லாம் அதிசயப் படவே
மமதைசேர் அயனை வன்சிறை யிட்டாய்
விமலனும் கேட்டு வேகம தாக
உமையுடன் வந்தினி துவந்து புரிந்து
அயனைச் சிறைவிடென்(று) அன்பாய் உரைக்க
நயமுடன் விடுத்த ஞானபண் டிதனே!
திருமால் அயன்சிவன் சேர்ந்து மூவரும்
கௌரி லட்சுமி கலைமக ளுடனே
அறுவரோர் அம்சமாம் அரக்கரை வெல்ல
ஆறு முகத்துடன் அவதரித் தோனே
சிங்க முகாசூரன் சேர்ந்த கயமுகன்
பங்கமே செய்யும் பானு கோபனும்
சூரனோ டொத்த துட்டர்க ளோடு
கோரமே செய்யும் கொடியராக் கதரை
வேருடன் கெல்லி விண்ணவர் துன்பம்
ஆறிடச் செய்தவ் வமரர்கள் தமக்குச்
சேனா பதியாய்த் தெய்வீக பட்டமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானாய்ப் பெற்ற தாட்டிகப் பெருமானே
திருப்பரங் குன்றம் செந்தூர் முதலாய்ச்
சிறப்புறு பழநித் திருவே ரகமுதல்
எண்ணிலாத் தலங்களில் இருந்தாடும் குகனே
விண்ணவர் ஏத்தும் விநோத பாதனே
அன்பர்கள் துன்பம் அகற்றியாள் பவனே
தஞ்சமென்(று) ஓதினர் சமயம் அறிந்தங்(கு)
இன்பம் கொடுக்கும் ஏழைபங் காளா
கும்பமா முனிக்குக் குரு தேசிகனே
தேன்பொழில் பழநித் தேவ குமார
கண்பார்த்(து) எனையாள் கார்த்திகேயாஎன்
கஷ்ட நிஷ்டூரம் கவலைகள் மாற்றி
அஷ்டலட் சுமிவாழ் அருளெனக்(கு) உதவி
இட்டமாய் என்முன் னிருந்து விளையாடத்
திட்டமாய் எனக்கருள் செய்வாய் குகனே
அருண கிரிதனக்(கு) அருளிய தமிழ்போல்
கருணையால் எனக்குக் கடாட்சித் தருள்வாய்
தேவ ராயன் செப்பிய கவசம்
பூவல யத்தோர் புகழ்ந்து கொண்டாட
சஷ்டி கவசம் தான்செபிப் போரைச்
சிஷ்டராய்க் காத்தருள் சிவகிரி வேலா
வந்தென் நாவில் மகிழ்வுடன் இருந்து
சந்தத் தமிழ்திறம் தந்தருள் வோனே
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் தமிழ்தரும் அரனே
சரணம் சரணம் சங்கரன் சுதனே
சரணம் சரணம் சண்முகா சரணம்.

கந்தர் சஷ்டி கவசம் முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயப்பன் பாடல்கள்



இருமுடி தாங்கி ஒரு மனதாகி
குருவெனவே வந்தோம்
இருவினைத் தீர்க்கும் எமனையும்
வெல்லும் திருவடியைக் காண வந்தோம்

பள்ளிக் கட்டு சபரிமலைக்கு
கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை
ஸ்வாமியே ஐயப்போ
ஸ்வாமி சரணம் ஐயப்ப சரணம்!

நெய் அபிஷேகம் ஸ்வாமிக்கே
கற்பூர தீபம் ஸ்வாமிக்கே
ஐயப்பன் மார்களும் கூடி கொண்டு
ஐயனை நாடி சென்றிடுவார்
சபரி மலைக்கு சென்றிடுவார்
ஸ்வாமியே ஐயப்போ
ஐயப்போ ஸ்வாமியே!

கார்த்திகை மாதம் மாலை அணிந்து
நேர்த்தியாகவே விரதம் இருந்து
பார்த்த சாரதியின் மைந்தனே
உனைப் பார்க்க வேண்டியே தவம் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்த சாரதியின் மைந்தனே
உனைப் பார்க்க வேண்டியே தவம் இருந்து
இருமுடி எடுத்து எரிமேலி வந்து
ஒரு மனதாகிப் பேட்டைத் துள்ளி
அருமை நண்பராம் வாவரை
தொழுது ஐயனின் அருள் மலை ஏறிடுவார்
ஸ்வாமியே ஐயப்போ
ஐயப்போ ஸ்வாமியே!

அழுதை ஏற்றம் ஏறும் போது ஹரிஹரன்
மகனை துதித்து செல்வார்
வழி காட்டிடவே வந்திடுவார்
ஐயன் வன்புலி ஏறி வந்திடுவார்
கரிமலை ஏற்றம் கடினம் கடினம்
கருணை கடலும் துணை வருவார்
கரிமலை இறக்கம் வந்த உடனே
திருநதி பம்பையை கண்டிடுவார்
ஸ்வாமியே ஐயப்போ
ஐயப்போ ஸ்வாமியே!

கங்கை நதிப் போல் புண்ணிய
நதியாம் பம்பையில் நீராடி
சங்கரன் மகனை கும்பிடுவார்
சஞ்சலமின்றி ஏறிடுவார்
நீலிமலை ஏற்றம் சிவ பாலனும் ஏற்றிடுவார்
காலமெல்லாம் நமக்கே அருட்
காவலனாய் இருப்பார்

தேக பலம் தா பாத பலம் தா
தேக பலம் தா பாத பலம் தா
தேக பலம் தா என்றால் அவரும்
தேகத்தை தந்திடுவார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத பலம் தா என்றால் அவரும்
பாதத்தை தந்திடுவார்
நல்ல பாதையைக் காட்டிடுவார்
ஸ்வாமியே ஐயப்போ
ஐயப்போ ஸ்வாமியே!

சபரி பீடமே வந்திடுவார் சபரி
அன்னையை பணிந்திடுவார்
சரங்குத்தி ஆளில் கன்னி மார்களும்
சரத்தினைப் போட்டு வணங்கிடுவார்
சபரி மலைதனில் நெருங்கிடுவார்
பதினெட்டு படி மீது ஏறிடுவார்
கதியென்று அவனை சரணடைவார்
மதி முகம் கண்டே மயங்கிடுவார்
ஐயனைத் துதிக்கையிலே
தன்னையே மறந்திடுவார்

பள்ளிக் கட்டு சபரிமலைக்கு
கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை
ஸ்வாமியே ஐயப்போ
ஐயப்போ ஸ்வாமியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 108 சரண கோஷங்கள்

ஓம் கன்னிமூல கணபதியே சரணம் ஐயப்பா
ஓம் காந்தமலை ஜோதியே சரணம் ஐயப்பா
ஓம் ஹரிஹர சுதனே சரணம் ஐயப்பா
ஓம் அன்னதானப் பிரபுவே சரணம் ஐயப்பா
ஓம் ஆறுமுகன் சோதரனே சரணம் ஐயப்பா
ஓம் ஆபத்தில் காப்போனே சரணம் ஐயப்பா
ஓம் இன்தமிழ்ச் சுவையே சரணம் ஐயப்பா
ஓம் இச்சை தவிர்ப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் ஈசனின் திருமகளே சரணம் ஐயப்பா
ஓம் உண்மைப் பரம்பொருளே சரணம் ஐயப்பா

ஓம் உலகாளும் காவலனே சரணம் ஐயப்பா
ஓம் ஊமைக்கருள் புரிந்தவனே சரணம் ஐயப்பா
ஓம் ஊழ்வினை அழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் எளியோர்க்கு அருள்பவனே சரணம் ஐயப்பா
ஓம் எங்கள் குல தெய்வமே சரணம் ஐயப்பா
ஓம் ஏழைப் பங்காளனே சரணம் ஐயப்பா
ஓம் ஏகாந்த மூர்த்தியே சரணம் ஐயப்பா
ஓம் ஐங்கரன் தம்பியே சரணம் ஐயப்பா
ஓம் ஐயமெல்லாம் தீர்ப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் ஒப்பில்லாத் திருமணியே சரணம் ஐயப்பா

ஓம் ஒளிரும் திருவிளக்கே சரணம் ஐயப்பா
ஓம் ஓங்காரப் பரம்பொருளே சரணம் ஐயப்பா
ஓம் ஓதும் மறைபொருளே சரணம் ஐயப்பா
ஓம் ஒளடதங்கள் அருள்பவனே சரணம் ஐயப்பா
ஓம் சௌபாக்கியம் அளிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் கலியுக வரதனே சரணம் ஐயப்பா
ஓம் சபரிமலை சாஸ்தாவே சரணம் ஐயப்பா
ஓம் சிவன்மால் திருமகனே சரணம் ஐயப்பா
ஓம் சைவ வைணவ ஐக்கியமே சரணம் ஐயப்பா
ஓம் அச்சங்கோயில் அரசே சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஆரியங்காவு ஐயாவே சரணம் ஐயப்பா
ஓம் குளத்துப்புழை பாலனே சரணம் ஐயப்பா
ஓம் பொன்னம்பல வாசனே சரணம் ஐயப்பா
ஓம் வில்லாளி வீரனே சரணம் ஐயப்பா
ஓம் வீரமணிகண்டனே சரணம் ஐயப்பா
ஓம் உத்திரத்தில் உதித்தவனே சரணம் ஐயப்பா
ஓம் உத்தமனே சத்தியனே சரணம் ஐயப்பா
ஓம் பம்பையில் பிறந்தவனே சரணம் ஐயப்பா
ஓம் பந்தள மாமணியே சரணம் ஐயப்பா
ஓம் சகலகலை வல்லோனே சரணம் ஐயப்பா

ஓம் சாந்தம் நிறை மெய்ப்பொருளே சரணம் ஐயப்பா
ஓம் குருமகனின் குறை தீர்த்தவனே சரணம் ஐயப்பா
ஓம் குருதட்சினை அளித்தவனே சரணம் ஐயப்பா
ஓம் புலிப்பாலைக் கொணர்ந்தவனே சரணம் ஐயப்பா
ஓம் வன்புலி வாகனனே சரணம் ஐயப்பா
ஓம் தாயின் நோய் தீர்த்தவனே சரணம் ஐயப்பா
ஓம் குருவின் குருவே சரணம் ஐயப்பா
ஓம் வாபரின் தோழனே சரணம் ஐயப்பா
ஓம் துளசிமணி மார்பனே சரணம் ஐயப்பா
ஓம் தூயவுள்ளம் அளிப்பவனே சரணம் ஐயப்பா

ஓம் இரு முடிப்பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் எரிமேலி தர்மசாஸ்தாவே சரணம் ஐயப்பா
ஓம் நித்ய பிரம்மச்சாரியே சரணம் ஐயப்பா
ஓம் நீலவஸ்திர தாரியே சரணம் ஐயப்பா
ஓம் பேட்டை துள்ளும் பேரருளே சரணம் ஐயப்பா
ஓம் பெரும்ஆணவத்தை அழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் சாஸ்தாவின் நந்தவனமே சரணம் ஐயப்பா
ஓம் சாந்தி தரும் பேரருளே சரணம் ஐயப்பா

ஓம் பேஷரூர்த்தோடு தரிசனமே சரணம் ஐயப்பா
ஓம் சாஸ்தாவின் நந்தவனமே சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சாந்தி தரும் பேரருளே சரணம் ஐயப்பா
ஓம் பேஷரூர்த்தோடு தரிசனமே சரணம் ஐயப்பா
ஓம் பேதமையை ஒழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் காளைகட்டி நிலையமே சரணம் ஐயப்பா
ஓம் அதிர்வேட்டுப் பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் அழுதைமலை ஏற்றமே சரணம் ஐயப்பா
ஓம் ஆனந்தமிகு பஜனை பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் கல்லிடும் குன்றமே சரணம் ஐயப்பா

ஓம் உடும்பாறைக் கோட்டையே சரணம் ஐயப்பா
ஓம் இஞ்சிப்பாறைக் கோட்டையே சரணம் ஐயப்பா
ஓம் கரியிலந் தோடே சரணம் ஐயப்பா
ஓம் கரிமலை ஏற்றமே சரணம் ஐயப்பா
ஓம் கரிமலை இறக்கமே சரணம் ஐயப்பா
ஓம் பெரியானை வட்டமே சரணம் ஐயப்பா
ஓம் சிறியானை வட்டமே சரணம் ஐயப்பா
ஓம் பம்பா நதித் தீர்த்தமே சரணம் ஐயப்பா
ஓம் பாவமெல்லாம் அழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் திரிவேணி சங்கமே சரணம் ஐயப்பா

ஓம் திருராமர் பாதமே சரணம் ஐயப்பா
ஓம் சக்தி பூஜை கொண்டவனே சரணம் ஐயப்பா
ஓம் சபரிக்கு அருள் செய்தவளே சரணம் ஐயப்பா
ஓம் தீபஜோதித் திருஒளியே சரணம் ஐயப்பா
ஓம் தீராத நோய் தீர்ப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் பம்பா விளக்கே சரணம் ஐயப்பா
ஓம் பலவினைகள் ஒழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் தென்புலத்தார் வழிபாடே சரணம் ஐயப்பா
ஓம் திருப்பம்பையின் புண்ணியமே சரணம் ஐயப்பா
ஓம் நீலிமலை ஏற்றமே சரணம் ஐயப்பா

ஓம் நிறைவுள்ளம் தருபவனே சரணம் ஐயப்பா
ஓம் அப்பாச்சி மேடே சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் இப்பாச்சி குழியே சரணம் ஐயப்பா
ஓம் சபரி பீடமே சரணம் ஐயப்பா
ஓம் சரங்குத்தி ஆலே சரணம் ஐயப்பா
ஓம் உரல்குழி தீர்த்தமே சரணம் ஐயப்பா
ஓம் கருப்பண்ணசாமியே சரணம் ஐயப்பா
ஓம் கடுத்த சாமியே சரணம் ஐயப்பா
ஓம் பதினெட்டாம் படியே சரணம் ஐயப்பா
ஓம் பகவானின் சந்நிதியே சரணம் ஐயப்பா

ஓம் பரவசப் பேருணர்வே சரணம் ஐயப்பா
ஓம் பசுவின் நெய்யபிஷேகமே சரணம் ஐயப்பா
ஓம் கற்பூரப் பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் நாகராசப் பிரபுவே சரணம் ஐயப்பா
ஓம் மாளிகைப் புரத்தம்மனே சரணம் ஐயப்பா
ஓம் மஞ்சமாதா திருவருளே சரணம் ஐயப்பா
ஓம் அக்கினி குண்டமே சரணம் ஐயப்பா
ஓம் அலங்காரப் பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் பஸ்மக் குளமே சரணம் ஐயப்பா
ஓம் சற்குரு நாதனே சரணம் ஐயப்பா

ஓம் மகர ஜோதியே சரணம் ஐயப்பா
ஓம் மங்கள மூர்த்தியே சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கிருஸ்ணன் பாடல்கள்



திருப்பாற்கடலில் பள்ளி கொண்டாயே ஸ்ரீமன் நாராயணா - அங்கு
திருமகள் துணையில் அமைதி கொண்டாயே ஸ்ரீமன் நாராயணா
(திருப்பாற்கடலில் பள்ளி கொண்டாயே)

உலகினைப் பாய் போல் கொண்டவன் நீயே ஸ்ரீமன் நாராயணா - அன்று
உரலுடன் நடந்த கண்ணனும் நீயே ஸ்ரீமன் நாராயணா
இரணியன் அகந்தை அழித்தவன் நீயே ஸ்ரீமன் நாராயணா - அன்று
இந்திர வில்லை முறித்தவன் நீயே ஸ்ரீமன் நாராயணா
(திருப்பாற்கடலில் பள்ளி கொண்டாயே)

கொடியவள் மகிஷி கொலை புரிந்தாளே அறியாயோ நீயே - அவள்
கொடுமையை ஒழிக்க மறந்து விட்டாயோ ஸ்ரீமன் நாராயணா
தேவர்கள் உந்தன் குழந்தைகள் அன்றோ மறந்தாயோ நீயே - உன்
தெய்வ முனிவரைக் காப்பதற்கென்றே வருவாயோ நீயே
(திருப்பாற்கடலில் பள்ளி கொண்டாயே)

தோளில் அந்தச் சாரங்கம் எடுத்து வர வேண்டும் நீயே
கணை தொடுத்திட வேண்டும் அரக்கியின் வாழ்வை அழித்திடுவாய் நீயே
அனந்த சயனத்தில் பள்ளி எழுந்து வாராய் திருமாலே - உன்
அன்பரை எல்லாம் துன்பத்தில் இருந்து காப்பாய் பெருமாளே
(திருப்பாற்கடலில் பள்ளி கொண்டாயே)

ரதங்கள் படைகளென எழுந்து எழுந்து இன்று வீறுடன் வாருங்கள்
நாராயணன் என்னும் தலைவனின் துணையால் போர்க்களம் வாருங்கள்
வானம் இடிபடவும் பூமி பொடிபடவும் வேல் கொண்டு வாருங்கள் - இனி
வருவது வரட்டும் முடிவினைப் பார்ப்போம் தேவர்கள் வாருங்கள்
ஸ்ரீமன் நாராயணா ஸ்ரீபதி ஜெகன்னாதா வருவாய்
திருமாலே - துணை தருவாய் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப்ச்சை மா மலை போல் மேனி பவள வாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே ஆயர் தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான் போய் இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்க மா நகர் உளானே.

ஊரிலேன் காணியில்லை உறவு மற்றொருவர் இல்லை
பாரில் நின் பாதமூலம் பற்றிலேன் பரமமூர்த்தி
காரொளி வண்ணனே கண்ணனே கதறுகின்றேன்
ஆருளர் களைகண் அம்மா அரங்கமாநகருளானே
கங்கையில் புனிதமாய காவேரி நடுவுபட்டு
பொங்கு நீர் பரந்து பாயும் பூம்பொழில் அரங்கம் தன்னுள்
எங்கள் மால் இறைவன் ஈசன் கிடந்ததோர் கிடக்கை கண்டு
எங்ஙனம் மறந்து வாழ்வேன் ஏழையேன் ஏழையேனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ஆஞ்சநேயர் கவசம்



சிரஞ்சீவி அனுமன் என் சிரசினை காக்க
ஸ்ரீராம பக்தன் என் சீர் சடை காக்க
நெறி மேவி நின்றவன்-என் நெற்றியை காக்க
புவியினில் நீண்டவன்-என் புருவங்கள் காக்க
இமயத்தில் நிற்பவன்-என் இமைகளைக் காக்க
சமயத்தில் வந்தெனை சடுதியாய் காக்க
வீரத்தின் வீரன்-என் விழிகளை காக்க
வீசிடும் காற்றோன்-என் விழி மூடி காக்க
நாரணப் பிரியன்-என் நாசியை காக்க
காரணப் பொருளே- என் காலமே காக்க
முழுஞானம் கொண்டவன்-என் மூக்கினை காக்க
முன்நின்ற வானரன்-என் வாயினை காக்க
வெற்றிலை பிரியன்-என் வெற்றியை காக்க
பற்றியே வந்தெனை பற்றுடன் காக்க
பல் நலம் கொண்டவன்-என் பற்களைக் காக்க
நல் மனம் கொண்டவன்-என் நாவினைக் காக்க
நாடியே வந்தவன்-என் நாடியை காக்க
தேடியே வந்தென்னை தேவனே காக்க
கரிமலை கடந்தவன்-என் கன்னங்கள் காக்க
கடுகதியில் வந்தென் கழுத்தினை காக்க
கையிலையின் வாசன்-என் கைகால்கள் காக்க
கதிரொளியாய் வந்து கருணையாய்க் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லன செய்பவன்-என் நகங்களைக் காக்க
அல்லனதீர்ப்பவன்-என் அகம் தனை காக்க
நெடு மேனியானவன்-என் நெஞ்சினைக் காக்க
சுடுமேனி யாய் வந்த சூட்சுமம் காக்க
இடுக்கண் களைபவன்-என் இடுப்பினை காக்க
இரு கண்ணின் மணிகளை இருட்டிலும் காக்க
தோழமை கொண்டவன்-என் தோழ்களை காக்க
தோன்றிய புகழவன்-என் தோலினைக் காக்க
குரங்கினத் தலைவன்-என் குறியினைக் காக்க
குருவாகி வந்து-என் குருதியை காக்க
திசையெலாம் திரிந்தவன்-என் தசையினை காக்க
விசையெனப் பாய்ந்து-என் செவிகளை காக்க
நடுவாகி நின்று என் முதுகினை காக்க
நவின்றிடும் தேவன் என் நரம்புகள் காக்க
ஒன்பது வாசலை ஒப்பிலா காக்க
புண்படா வண்ணமே புவனமே காக்க
இளமையும் முதுமையும் இனியவா காக்க
இரவிலும் பகலிலும் என்றும் நீ காக்க
உலகத்தின் நாயகன்-என் உயிரினைக் காக்க
கலகத்தில் இருந்தென்னை கதி தந்து காக்க
நிலையற்ற வாழ்வினில் நிமலனார் காக்க
சிலையற் இருந்தென்னை சீலனார் காக்க
இராமனின் பக்தன் என் இதயத்தை காக்க
சுக்ரீவன் தோழன் என் சுவாசத்தை காக்க
உடல் உள்ளம் என்றுமே உறுதியாய் காக்க
கடல்தாண்டி வந்தவன்-என் குடல்களைக் காக்க
வளமிக்க வாழ்வினை வளத்துடன் காக்க
வாழையடி வாழையாய் வாழ்திடக் காக்க
எம்மை எந்நாளும்- உன் நிழலினில் காக்க
இம்மையிலும் மறுமையிலும் ஈடிலா காக்க
நோய் நொடிகள் வாராமல் நொடியினில் காக்க
தாய் மடியில் தவழ்ந்தயென் மேனியை காக்க
நவகோளின் தோசங்கள் நீக்கி நீ காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவக்கோலம் கொண்டவன் தரணியை காக்க
தீராத நோய்களைத் தீர்த்து நீ காக்க
வாராத செல்வங்கள் வந்திடக் காக்க
ஈரேழு புவனத்து உறவுகள் காக்க
பாராளும் மன்னர்கள் நட்புகொள் காக்க
பஞ்ச பூதங்கள் எனை பகைக்காது காக்க
வஞ்சங்கள் இல்லாது மனம் தனை காக்க
பில்லி பேய் சூன்யங்கள் அணுகாது காக்க
பிள்ளை என்றன்பாய் பிரியமாய் காக்க
அரக்கர்கள் பூதங்கள் அண்டாமல் காக்க
இரக்கமறு மாந்தர்கள் பகைஇன்றி காக்க
சிறை சென்று வாடாமல் சீருடன் காக்க
மறையெலாம் போற்றும்-உன் பொன்னடிகள் காக்க
இல்லாமை நீக்கி எனை இறைவா நீ காக்க
நில்லாத பசி எனை அண்டாது காக்க
கடன் தொல்லை தீர்த்தெனை கருணையே காக்க
கலியுகக் கொடுமைகள் கழிந்திடக் காக்க
செய்தொழில் கருமங்கள் செய்வதை காக்க
மெய் வருந்தாமல்-எனை மேன்மையாய்க் காக்க
புலத்திலும் நிலத்திலும் புகழனார் காக்க
தலத்திலே வந்து உன் தனையனை காக்க
கொடுவிச யந்துக்கள் கொட்டாது காக்க
கொடுமைகொள் நுண்ணுயிர் வாட்டாது காக்க
வானமும் வையமும் வளம் பெறக் காக்க
தானமும் தர்மமும் தழைத்திடக் காக்க
நல்லோர்கள் உறவுகள் நலிவின்றி காக்க
வல்லோரும் எனை கண்டு வணங்கிட காக்க
கனவிலும் நனவிலும் கருத்துடன் காக்க
-உன் நினைவுகள் நீங்காது நிலைபெறக் காக்க
மானத்தில் பங்கங்கள் நேராது காக்க
ஊனத்தில் துவண்டிங்கு வாடாது காக்க
நீள்ஆயுள் நிறைசெல்வம் தந்தெனை காக்க
வால் கொண்ட மணியினால் வந்தென்னை காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணத்தின் வாசலில் மாருதி காக்க
சரணத்தை தந்தெனை மரணத்தில் காக்க
பிறவிப் பிணியதை தீர்த்து நீ காக்க
பிறவாமை தந்தெனை பிரியாமல் காக்க
முனிவரும் தேவரும் எனக் அருள்
செய்யபனிதரும் திங்களின் மூலனே காக்க
இனிவருங் காலங்கள் இனித்திட காக்க
பிணிவருந்தாமல் என் துணிவினை காக்க
பார்க்க நீ பார்க்கபாவங்கள் போக்க
தீர்க்க நீ தீர்க்க தீ வினைகள் தீர்க்க
வார்க்க நீ வார்க்க-உன் அருளினை வார்க்க
காக்க நீ காக்க உன்கதி தந்து காக்க
ஆஞ்சநேயனே காக்க வாயுதேவனே காக்க
வீர அனுமனே காக்கராம பக்தனே காக்க-
ஸ்ரீராம பக்தனே காக்க
தினமும் ,இயன்ற போதெல்லாம் அனுமனின்
எளிய கவசத்தை படித்து பயன் பெறுங்கள்.
ஸ்ரீ ராமபக்தஅனுமனுக்கு நித்யம் ஜெயமங்களம் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தி நாமாவளி

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்

(ஓம் சக்தி)

சுந்தர வதனி சுகுண மனோஹகரி
மந்தகாச முகமதி வதனி
சந்தன குங்கும அலங்காரமுடனே
தந்திடுவாய் உந்தன் தரிசனமே

(ஓம் சக்தி)

நந்தி தேவருடன் முனிவரும் பணிய
ஆனந்த முடனே வந்திடுவாய்
வந்தனை செய்து மாயன் அயனுடன்
வகையாய் உன் புகழ் பாடிடவே

(ஓம் சக்தி)

தங்கச் சிலம்பு சலசலவென்றிட
தாண்டவமாடித் தனயன் மகிழ்ந்திட
பொங்கும் ஆனந்தமுடன் புவிமேல் விளங்கும்
மங்கள நாயகி மகிழ்வாய் வருவாய்

(ஓம் சக்தி)

வேதங்கள் உன்னை வேண்டி பாடிட
விரும்பிச் சரஸ்வதி வீணை வாசித்திட
ஸதானந்தமான ஜோதீஸ்வஷரூபி
ராஜ ராஜேஸ்வரி சரணம் சரணம்

(ஓம் சக்தி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துர்க்கா துதி

சிங்கத்திலே வந்திடுவாய் துர்க்கை தாயே
எங்கள் தீ வினைகள் தீர்த்திடுவாய் துர்க்கை தாயே
சங்கரனின் பங்கிருப்பாய் துர்க்கை தாயே
எங்கள் சஞ்சலங்கள் தீர்த்திடுவாய் துர்க்கை தாயே

வாளா மகிடன் தலை துர்க்கை தாயே - நீ
வாளால் துணிந்து வென்றாய் துர்க்கை தாயே
நீளாழி மாயனுக்குத் துர்க்கை தாயே - நீ
நிறைவான சோதரியே துர்க்கை தாயே

செவ்வான மேனியளே துர்க்கை தாயே - நீ
தேச விளக்காகி நிற்பாய் துர்க்கை தாயே
ஒவ்வாத கொடியவரை துர்க்கை தாயே - நீ
ஒடுக்கியருள் செய்திடுவாய் துர்க்கை தாயே

கமல முகத்தழகி துர்க்கை தாயே - திருக்
காலில் சிலம்பழகி துர்க்கை தாயே
நமசிவாய நடனி துர்க்கை தாயே
சிவஞான சுமங்கலியே துர்க்கை தாயே

எமக்கருள் செய்திடுவாய் துர்க்கை தாயே
வரும் எம்பயம் தீர்த்திடுவாய் துர்க்கை தாயே
தமக்கும் பாவம் தீர்க்கும் துர்க்கை தாயே
உன் துணையடி தந்திடம்மா துர்க்கை தாயே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வு பெற்ற ஆசிரியர் அமரர் திரு வைத்தியலிங்கம் பேரம்பலம்

அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

திரு மூலநாயனாரினால் தெய்வப்பூமி எனப் போற்றப்பட்ட ஈழவளநாட்டின் வடபால் அமைந்துள்ள "லைடன்" தீவின் மையமாக அமைந்தது சரவணைக்கிராமம். வடக்கே கர்ணன் தோட்ட கந்தசாமி கோவிலையும், மேற்கே கதிர்வேலாயுத சுவாமி கோவிலையும், தெற்கே மாரியம்மன் ஆலயத்தையும், கிழக்கே முருகமூர்த்தி கோவிலையும் கொண்டமைந்தது.

நீர்வளமும், நிலவளமும் நிறைந்த புகழ் பூத்த சரவணைக்கிராமத்தில் வைத்தியலிங்கம் அன்னபூரணி தம்பதியினருக்கு மூத்த புதல்வனாக 1925ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி திரு பேரம்பலம் அவர்கள் இப் பூமியில் அவதரித்தார்.

இவருடன் கூடப்பிறந்தவர்கள் குமாரசிங்கம், குலசேகரம் (விசயம்), இராசசேகரம் (பொன்னுத்துரை), கனகரத்தினம், கேதாரநாதன் ( துரை), என அழைக்கப்படும் ஐந்து ஆண் சகோதரர்களும் நடேஸ்வரி (தேவி) என்று அழைக்கப்படும் ஒரு பெண் சகோதரியுமாவார்.

அமரர் தனது பள்ளிக்கூட வாழ்க்கையை சரவணை நாகேஸ்வரி வித்தியாலயத்தில் ஆரம்பித்துத் தனது பத்தாம் வகுப்பு வரை அங்கேயே படித்து GCE O/L இலும் சிறப்புத் தேர்ச்சி பெற்றார். தனது தம்பிமாருடனும், தனது தாய்தந்தையருடனும் களித்திருக்கையில் எதிர்பாராத விதமாக தன் பெற்ற தாயார் அன்னபூரணியை தன் இளம் வயதிலே இழக்க நேரிட்டது. இருப்பினும் தந்தையார் திரு. வைத்தியலிங்கம் அவர்கள் தன் தாய் தந்தையரினதும் (அமரர் அவரின் பெத்தாச்சி, பெத்தப்பா), தன் மூத்தமாமனாரதும் (மூத்தம்மான்) அறிவுரையின் படி தன் மனையாள் அன்னபூரணியின் தங்கையான பார்வதிப்பிள்ளை ( கற்கண்டு) அவர்களை மறுமணம் செய்து கொண்டார். சிறிய தாயார் பார்வதிப்பிள்ளை அவர்களும் தன் தமக்கை அன்னபூரணியின் மூத்த மகனான அமரர் பேரம்பலம் அவர்களின் மேல் கொண்ட அளவு கடந்த பாசத்தாலும் அவரின் மற்றைய குழந்தைகள் மேல் கொண்ட அன்பாலும் தன் தமக்கை குழந்தைகளுக்குத் தாயாகும் பொறுப்பை மனமுவந்து ஏற்றுக் கொண்டார். அதில் ஆச்சரியம் என்னவென்றால் அமரர் பேரம்பலம் அவர்கள் தன் தாயாரை அவர் தாயின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கை (கற்கண்டாச்சி) அழைப்பது போல் "அக்கா" என்று அழைத்து வர அவர் தம்பிமாரும் அவ்வாறே அவர் இருக்கும் போதே அழைத்து வந்தார்களாம். பின்னர் இறை சித்தத்தால் அன்னபூரணி அவர்களின் தங்கையவர்களே எல்லோருக்கும் அம்மாவானார். அம்மா கற்கண்டாச்சியும் தன் அக்காவின் பிள்ளைகளையும் தன் பிள்ளைகளையும் (கேதாரநாதன், தேவி) தன் பிள்ளைகளாகவே அளவுகடந்த பாசத்துடன் தன் வாழ்நாள் முழுவதும் வளர்த்து வந்தார்.

அமரரின் தந்தையார் குடும்பம் பரம்பரை பரம்பரையாக வேளாண்மைக்கே அந்நாளில் பெயர் போன குடும்பம் இதனால் அமரர் அவர்களும் தன் தந்தையிடம் இருந்து வேளாண்மை நுட்பங்களைக் கற்றுக் கொண்டதில் வேளாண்மையைத் தமது வாழ்விற்கு எப்போதும் துணையாய் வைத்திருந்ததும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இவர் தன் தாயார் பார்வதிப்பிள்ளையவர்களுடனும் தந்தையாருடனும் தன் சகோதரர்களுடனும் தன் பள்ளிப்பருவத்தைக் களித்திருக்கையில் தன் இருபதுகளில் தந்தையார் வைத்தியலிங்கம் அவர்களையும் இழக்க நேரிட்டது. இருந்தாலும் கற்கண்டாச்சியின் மனத்துணிவாலும், அமரர் தன் தன்னம்பிக்கையாலும் தன் தம்பிமாருக்கும் தன் தங்கைக்கும் கடமையுணர்ந்து ஒரு நல்வழிகாட்டும் பொறுப்புள்ள தந்தையாகவும் , தமையனாகவும் தன்னை உருவாக்கிக் கொண்டார்.

இவரது சாதனைகள் பலவாகும். தன் நண்பர்களுடன் சேர்ந்து சரவணை சேவா மன்றத்தினை உருவாக்கினார். அங்கு ஒரு வாசிகசாலையையும் உருவாக்கி கரம் விளையாடவும், கைப்பந்துவிளையாடவும் இடம் அமைத்துக் கொடுத்தார். தன் நண்பர்களுடன் சேர்ந்து அரசுமானியம் பெற்று பல கிணறுகளை தன்னூர் சரவணையில் உருவாக்கினார்.

பொறுப்புள்ள கிராமசபைத் தலைவரைத் தேர்ந்தெடுத்ததில் மிகப் பெரிய பங்கு வகித்தார். இப்படி தன் இளவயதிலே வீட்டைப் பொறுப்போடு வழிநடாத்தும் தமையனும் தந்தையுமானதோடு தன் நண்பர்களையும் சேர்த்துத் தன் ஊரையும் முன்னேற்றப் பாடுபட்டார். இந்த இளவயதில் இருந்தே நேரத்தைப் பொன்னாக்கித் தான் பிறந்தது பெற்றதாய்க்கும், பிறந்த பொன்நாட்டிற்கும் சேவை செய்யவே என்பதை தெள்ளத் தெளிவாக உணர்ந்து கொண்டார். இவரின் தெய்வ நம்பிக்கையும், தமிழ்மேல், தன் நாட்டின் மேல் கொண்ட அளப்பரிய பற்றும் இவரை வாழும் வகையறிந்து வாழ வைத்தது. தற்துணிவு, விடாமுயற்சி, மனிதநேயம், சுறுசுறுப்பான நல் உழைப்பு, சுகாதாரமான வாழ்வு, தன் தாய் தந்தை உடன்பிறப்புக்கள் மேல் கொண்ட அபரிமிதமான அன்பு, நேர்மைத்திறன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றிற்கும் மேலாக இறைபக்தி இவரை நற்பண்புகள் கொண்ட உதாரண புருஷனாக்கியது. கணக்காளர் பத்மநாதனும், பண்டிதர் திரு. குமரையா, பண்டிதர் திரு கணபதிப்பிள்ளை, ஆசிரியர்கள், திரு. தெய்வேந்திரம்பிள்ளை, திரு. அருளானந்தசிவம், திரு. இலிங்கப்பிள்ளை ஆகியோர் அமரரது அந்நாளைய நண்பர்களாவார்கள். இது நல்லதொரு நட்புக்கு உதாரணமாகும்.

அமரர் அவர்கள் தன் தந்தையாரின் இழப்பின் பின் அதிகரித்த குடும்பப் பொறுப்புக்களால் தன் GCE O/L சிறப்புச் சித்தியின் பின் சில காலம் விவசாயத் தொழிலிலேயே தன்னை முழுமையாக அர்ப்பணித்து தன் சகோதரர்களின் மேன்மைக்காக தன் அம்மா கற்கண்டாச்சியுடன் சேர்ந்து உழைத்தார். இதன் பின் தன் தாயாரின் இளைய தங்கையான அம்பிகை (குஞ்சாச்சி) இராமநாதன் கல்லூரியில் தன் ஆசிரியர் பயிற்சி முடித்து இரத்தினபுரிக்கு ஆசிரியர் நியமனம் பெற அவரிற்குத் துணையாகச் சில வருடங்கள் இரத்தினபுரியில் வாழ்ந்தார். அங்கு அவர் தன் காலத்தைப் பொன்னாக்கி தன் மேற்படிப்பை முடித்து ஆசிரியர் பத்திரம் பெற்றார். இவர் ஆசிரியப் பணியும் மலையகத்தில்தான் முதலில் ஆரம்பமானது. பின் இவரது குஞ்சாச்சி, அம்பிகை ஆசிரியர் இடம்மாற்றம் பெற்று வேலணை வித்தியாசாலைக்கு வர தானும் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை சென்று பயிற்றப்பட்ட தமிழாசிரியரானார். பலாலி ஆசிரியர் பயிற்சிக்காலத்தில் கால் பந்தாட்டக்குழுத் தலைவராகவும், சாரணிய இயக்க அங்கத்தவராகவும் இருந்ததோடு பல கலை இலக்கிய நிகழ்ச்சிகளில் பங்கு பற்றி வெற்றி பெற்றதாகவும் அவர் சான்றிதழ்கள் கூறுகின்றன.

பின்னர் 1954ஆம் ஆண்டு தைதிங்களில் சரவணையில் வாழ்ந்து கொண்டிருந்த சிதம்பரப்பிள்ளை, சிவக்கொழுந்து தம்பதியரின் இளைய மகளான பாக்கியலட்சுமி அவர்களை பெரியோர்கள் ஆசியுடன் காதல் திருமணம் செய்து கொண்டார். பாக்கியலட்சுமி அவர்களும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பட்டம் பெற்ற ஒரு பயிற்றப்பட்ட தமிழாசிரியர் ஆவார். இவர் பின் நாட்களில் ஓர் உன்னதமான தமிழாசிரியராகப் போற்றப்பட்டார்.

ஆசிரியர் பாக்கியலட்சுமி அவர்களின் தந்தையார் சிதம்பரபிள்ளை ஒரு கொடைவள்ளல். சரவணை மக்களால் அவர் இரண்டாம் உலகப் போரில் தருணம் அறிந்து செய்த பெரும் தியாகங்களினால் "அள்ளிவிட்டான்" என்று வாஞ்சையோடு அழைக்கப்பட்டார்.

ஆசிரியர் பாக்கியலெட்சுமி அவர்களுக்கு ஆசிரியர் தெய்வேந்திரம் பிள்ளை என்ற மூத்த தமையனாரும், பராசக்தி என்ற தமக்கையாரும் இருந்தார்கள். இவரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமையனாரும் அமரரின் நண்பனுமான ஆசிரியர் தெய்வேந்திரம் பிள்ளை அவர்கள் தன் 54ஆவது வயதில் (1975இல்) இறைபதம் அடைந்தார். அவர் மனைவி ஆசிரியர் இரத்தினபூபதி அவர்களும் பிள்ளைகளும் தமக்கையார் பராசக்தி பிள்ளைகளும் அவுஸ்ரேலியா, கனடா, இலண்டனுமாக சிறப்பாக வாழ்கின்றார்கள்.

அமரர். திரு. பேரம்பலம் அவர்கள் தன் திருமணத்தின் பின் தன் தம்பியார் கேதாரநாதன் அவர்களின் செயல்திறன் அறிந்து இந்தியா அனுப்பி அவரை ஒரு வேதியல் சிறப்புப் பட்டதாரியாக உருவாக்கினார். அவர் இப்போது வேலணை மத்திய கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார். இவரது பாரியார் திருமதி. கே. சுந்தராம்பாள் அவர்களும் வேலணை மத்திய கல்லூரியில் தான் ஆசிரியப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார்.

அமரரின் தம்பிமார் பிள்ளைகளும் தங்கை தேவியும் கனடா, இலண்டன், நோர்வே பிரான்சிலுமாக நன்றே வாழ்கின்றார்கள்.

**தொடர் சேவையும் மணவாழ்க்கையும்**

**"அன்பும் அறனும் உடைத்தாயின்**
**இல் வாழ்க்கை பண்பும் பயனும் அது."**

என்ற வள்ளுவர் கோட்பாட்டுக்கமைய ஆசிரியர் பேரம்பலம், பாக்கியலட்சுமி அவர்களின் இல்வாழ்க்கை மலரும் மணமும் போல மன மொத்த அன்பும் அறனும் கலந்த வாழ்க்கையாய்த் திகழ்ந்தது. இந் நல்லறவாழ்வின் பயனாக அவர்கள் ஆறு ஆண் குழந்தைகளையும் நான்கு பெண் குழந்தைகளையும் தம் தவப்பயனால் பெற்றார்கள். தமிழ்மேல் உள்ள காதலினால் அன்பழகன்(அன்பு), சந்திரிகா(பாப்பா), அறிவழகன்(அரசன்), வேணுகா(மலர்), அருளழகன்(அருள்), அம்பிகா(திரு), மதியழகன்(ஆனந்தன்), சசிலேகா(சசி), மணியழகன்(மணி), மெய்யழகன்(அழகன்) என தம்பிள்ளைகளுக்குப் பெயரிட்டு அவர்களை அன்போடும், கண்டிப்போடும், அறிவுபுகட்டி, அரவணைத்து, நற்பண்புகளோடும், இறைநம்பிக்கையோடும் வளர்த்தார்கள். கூடவே தம் ஆசிரியப் பணிகளையும் அர்ப்பணிப்புடனும் மிகச் சிரத்தையுடனும் செய்தார்கள்.

**" இளமையில் கல்வி சிலையில் எழுத்து"**

அத்திவாரம் நன்றாய் போடப்பட்டால் தான் கட்டடம் உறுதியாய் இருக்கும் என்ற கோட்பாடுகளுக்கமைய அமரர் பேரம்பலம் ஆசிரியர்களின் மாணவர்கள் தம் ஆரம்பக் கல்வி செவ்வனே போடப்பட்டதால் இன்று பல்சார் வல்லுனர்களாகவும், நல்ல மானிடர்களாகவும் உலகெங்கும் வாழ்வாங்கு வாழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கின்றார்கள். ஒரு நல்ல மாணவர் சமுதாயத்தை உருவாக்கிய சிறப்பு அமரர். திரு. வைத்தியலிங்கம் பேரம்பலம் அவர்களிற்கும் திருமதி. பாக்கியலட்சுமி பேரம்பலம் அவர்களுக்கும் அவர்கள் இப்புவியில் பிறந்ததற்கான அடையாளமாகின்றது.

அமரர் அவர்கள் யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை, வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயம்,யா /சன்மார்க்க போதனா ஆங்கில வித்தியாசாலை, யா/ கொக்குவில் நாமகள் வித்தியாலயம், கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை ஆகியவற்றில் தம் ஆசிரியப் பணியைச் செவ்வனே ஆற்றி 1980 இல் தனது 55ஆவது வயதில் தம் ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வெடுத்துக் கொண்டார். தம் ஆசிரியப் பணிக்காலத்தில் பாடசாலை முடிய தம் வீட்டுத்தோட்டத்தில் விவசாயம் செய்தவர். ஓய்வு பெற்றதும் முழுநேர விவசாயி ஆனார்.

அமரரின் பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஆசிரியர்களான தம் பெற்றோரின் வழிநடத்தலில் பல்துறைவல்லுனர்களாகி இறைபக்தியும் நற்பண்பும் பரோபகாரமும் கொண்ட சிறந்த பிரஜைகளாய் யாழ்ப்பாணத்தில் இருவரும் மற்றைய பிள்ளைகள் அவுஸ்ரேலியா, கனடா, இலண்டனிலும் சிறப்பாக வாழ்கின்றனர்.

அமரர் பேரம்பலம் அவர்கள் தம் பிள்ளைகளை வளர்க்கும் காலத்தில் தன் குடும்பம் பெரிதாகவிருந்த போதும் அவ்வப் போது தனது மனைவியாரின் மூத்த சகோதரியின் பிள்ளைகளையும், தன் மைத்துனர் தெய்வேந்திரம் பிள்ளை அவர்களின் பிள்ளைகளையும், தன் சினேகிதர் பிள்ளைகள், தன் பிள்ளைகளின் நண்பர்கள், தன் தம்பிமார் பிள்ளைகளையும் அவர்களின் படிப்பு நலன் கருதி காலத்திற்குக் காலம் தன் அரவணைப்பில் வளர்த்து வந்தார்.

பெரிய குடும்பம் அவருக்கு ஒரு போதும் சுமையாய் இருந்தது இல்லை. தான் தன் பாடசாலை நேரங்களில் மிகச் சிரத்தையாக தன் மாணவர்களிற்கு போதிப்பார். அவரது வகுப்பு மாணவர்கட்கு மிகவும் ஆர்வமானதாயும் இலகுவானதாயும் இருக்கும்.

**குடும்பச் சிறப்பு**

**"தக்கார் தகவிலர் என்பது**
**அவரவர் எச்சத்தால் காணப்படும்"**

என்ற வள்ளுவர் வாக்கிற்கமைய அமரர் திரு. திருமதி. வை. பேரம்பலம் ஆசிரியத் தம்பதிகளின் ஒரு மித்த தூய சேவைக்கு பிரதியுபகாரமாக அவர்களது பிள்ளைகளின் வாழ்கை மிளிர்கின்றது. அவர்களின் மூத்தமகன் அன்பழகன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை, யாழ் இந்துக் கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி, யாழ் தொழில்நுட்பக் கல்லூரியின் மாணவர். இவர் தொழில்நுட்ப கல்லூரியில் கணக்கியலில் தேர்ச்சி பெற்று 1976இல் கொழும்பு வைத்தியசாலைகளுக்கான நிதிப்பிரிவில் தனது வேலையை ஆரம்பித்து யாழ் கச்சேரியில் தொடர்ந்ததோடு யாழ் பல்கலைக்கழகத்தில் வர்த்தகமானிப் பட்டத்தையும் பெற்று 1981 இல் இருந்து யாழ் வர்த்தக வங்கியில் (கொமர்ஷல் வங்கி) பணி புரிந்தார். இவர் நெடுங்கேணியைச் சேர்ந்த அமரர்களாகிய அதிபரும், ஆசிரியர்களுமான திரு. பொன் சந்திரசேகரி திரு. செல்லாச்சி அவர்களினதும் மூத்த புதல்வி தமிழரசியைத் திருமணம் செய்தார். தமிழரசி யாழ் பல்கலைக்கழக கலைப்பட்டதாரியும், உதவி விரிவுரையாளரும் முன்னை நாள் யாழ் பல்கலைக்கழக உதவி விடுதி தலைவியுமாவார். இவர்கள் மூன்று பிள்ளைகளுடன் இலண்டனில் நலமே வாழ்கின்றார்கள்.

அமரரின் சிரேஷ்ட புத்திரி சந்திரிகா யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை, யாழ் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவியாவர். பின் யாழ் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானமாணிப் பட்டத்தைப் பெற்று பின்னர் கிளிநொச்சி மகா வித்தியாலத்தில் நான்கு ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றினார். இவர் ஏழாலையைச் சேர்ந்த அமரர்களான ஆசிரியர்கள் திரு. க. வைரமுத்து, உமையம்மா தம்பதிகளின் ஏக புத்திரனான பரந்தாமன் பௌதீகவியல் பட்டதாரி அவர்களைத் திருமணம் செய்து நைஜீரியாவிற்குப் புலம்பெயர்ந்து தற்போது மூன்று பிள்ளைகளுடன் கனடாவில் இனிதே வாழ்ந்து வருகின்றார்கள்.

அமரர் அவர்களின் இரண்டாவது புத்திரன் அறிவழகன் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை, யாழ் இந்துக் கல்லூரி மாணவன் ஆவார். பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியலாளரான இவர் 1986 இல் யாழ் பிரபல வர்த்தகர் திரு. S. K. செல்லையா, திருமதி செ. புவனேஸ்வரி அவர்களின் ஏக புத்திரியான கருணைஈஸ்வரி அம்பிகையை மணம் புரிந்து தற்போது அவுஸ்ரேலியாவில் மூன்று பிள்ளைககளுடனும், இரு மருமக்களுடனும் இனிதே வாழ்ந்து வருகின்றார்கள்.

அமரரின் இரண்டாவது புத்திரி வேணுகா யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை, யாழ் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவி ஆவார். இவர் யாழ் பல்கலைக்கழகத்தில் 1985இல் விஞ்ஞானமாணிப் பட்டம் பெற்றார்.

இவர் மன்னார் வங்காலை St. Anne's மகாவித்தியாலத்தில் முதல் ஆசிரியர் நியமனம் பெற்று தொடர்ந்து மன்னார் எருக்கலம்பிட்டி, மத்திய மகா வித்தியாலயம், St xavires Boys' College ஆகியவற்றில் ஆசிரியாகக் கடமையாற்றினார். பின்னர் இடமாற்றம் பெற்று மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மெமோறியல் ஆகிய பாடசாலைகளில் ஆசிரியப் பணியைத் தொடர்ந்தும் பின்னர் அதிபராக மாற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்து சங்கானை சிவப்பிரகாச வித்தியா சாலை, மானிப்பாய் மெமோறியல், இராமநாதன் மகளீர் கல்லூரி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை ஆகியவற்றில் தலை சிறந்த அதிபராக கல்விப் பணியாற்றித் தற்போது ஓய்வு பெற்றுள்ளார்.

இவர் அமரர்களாகிய திரு. இ.நாகலிங்கம், திருமதி நா. சின்னம்மா அவர்களின் கனிஸ்ட புத்திரனான திரு. சண்முகரத்தினம் (தொழில்நுட்பவியலாளர், சீமெந்துத் தொழிற்சாலை), தலைவர் (சைவமகாசபை) அவர்களைத் திருமணம் செய்து மாதுளா என்ற தங்கள் செல்வ மகளுடன் யாழ் கொக்குவிலில் வசித்து வருகின்றார்கள்.

அமரரின் மூன்றாவது புத்திரன் அருளழகன் யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை, யாழ். இந்துக் கல்லூரி, யாழ். மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவன். யாழ் பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவப் பட்டம் பெற்றார். 1992இல் காலஞ்சென்ற திரு. இ. பொன்னுத்துரை குடிசார் பொறியியலாளர் (சீமெந்துத் தொழிற்சாலை) அவர்களதும் காலம் சென்ற லோகாம்பாள் அவர்களினதும் புத்திரியான சாந்தநாயகியைத் திருமணம் செய்து கனடாவில் மூன்று பிள்ளைச் செல்வங்களுடன் இனிதே வாழ்ந்து வருகின்றார்கள்.

அமரரின் மூன்றாவது புத்திரியான Dr. அம்பிகா யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை, யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை ஆகியவற்றின் மாணவி ஆவார். யாழ். பல்கலைக்கழகத்தில் 1994இல் வைத்தியகலாநிதிப் பட்டம் பெற்றார். இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் வைத்தியகலாநிதியாகக் கடமையைத் தொடங்கி தற்போது சங்கானைப் பிரதேச வைத்தியசாலையிலும், கோப்பாய் பிரதேச வைத்தியசாலையிலும் வைத்திய கலாநிதியாகக் கடமையாற்றுகின்றார். இவர் 1996 இல் சித்தங்கேணியைச் சேர்ந்த அமரர் திரு. நாகரத்தினம் அவர்களினதும் திருமதி. நா. சிவபாக்கியசுந்தரம் அவர்களினதும் புத்திரனான வைத்தியகலாநிதி நா. ஸ்ரீஸ்கந்தராஜா (இதய சந்திர சிகிச்சைப் பிரிவு, யாழ். போதனா வைத்தியசாலை) அவர்களைத் திருமணம் செய்து இரண்டு பிள்ளைச் செல்வங்களுடன் யாழ்ப்பாணம் கோயில் வீதியில் இனிதே வாழ்ந்து வருகின்றார்கள்.

அமரர் அவர்களின் நான்காவது புத்திரன் மதியழகன் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும் யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியில் இடைநிலைக்கல்வியையும், யாழ் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் உயர்தரக் கல்வியையும் கற்றார். அக்காலத்தில் ஏற்ப்பட்ட நாட்டுச் சூழ்நிலை காரணமாகக் கல்வியைத் தொடரமுடியாது 1987 இல் இலண்டன் சென்று 1993இல் அமரர். தெய்வேந்திரம்பிள்ளை ஆசிரியரினதும் திருமதி. தெ. இரத்தினபூபதி இளைப்பாறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் அவர்களின் புதல்வியும் தனது மைத்துனியுமான பிரேமகுமாரியை மணம் செய்து மூன்று பிள்ளைகளுடன் இனிதே வாழ்ந்து வருகின்றார்.

அமரரின் கனிஷ்ட புத்திரி சசிலேகா யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை இவரின் ஆரம்பப் பள்ளிக்கூடப் பருவத்தில் யாழ். இந்துக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டு ஆண்கள் கல்லூரியாக மாற்றப்பட்டதால் வழமைக்கு மாறாக யாழ். கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் தன் ஆரம்பக் கல்வியைத் தொடங்கிப் பின் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையிலும் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்திலும் தன் உயர் கல்வியைக் கற்று யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானமானிக் கற்கைநெறியில் 1ஆம் வருடத்தை பூர்த்தி செய்ததுடன் 1994 இல் நாட்டில் ஏற்பட்ட குழப்பமான சூழ்நிலை காரணமாக தன் விஞ்ஞானமாணிப்பட்டத்தைத் தொடர முடியாது அமரர் அவர்களுடன் கனடாவிற்குப் புலம் பெயர்ந்தார். 1996 இல் உறவினரும் ஆசிரியருமான அமரர் திரு. மா. இலிங்கப்பிள்ளை ஆசிரியர்கள் அவர்களதும் திருமதி இ. புவனேஸ்வரி அவர்களினதும் ஏக புத்திரன் சேந்தன் அவர்களை மணம் செய்து கனடாவில் மூன்று பிள்ளைச் செல்வங்களுடன் இனிதே வாழ்ந்த வருகின்றார்கள்.

அமரர் அவர்களினது ஐந்தாவது புத்திரன் மணியழகன் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும் இடைநிலைக் கல்வியை கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் பின் உயர் கல்வியை கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலத்திலும் கற்றார். இவர் நாட்டில் ஏற்ப்பட்ட சூழ்நிலை காரணமாக 1996 இல் இலண்டன் புலம் பெயர்ந்தார். இவர் 2000ஆம் ஆண்டில் திரு.ச.சுந்தரமூர்த்தி அவர்களினதும் திருமதி சு.நாகேஸ்வரி அவர்களினதும் கனிஷ்ட புத்திரியான பாமளாவை திருமணம் செய்து மூன்று பிள்ளைகளுடன் இலண்டனில் இனிதே வாழ்ந்து வருகின்றார்கள்.

அமரர் அவர்களின் கனிஷ்டபுத்திரன் மெய்யழகன் யாழ் இந்து ஆரம்ப பாடசாலையில் ஆரம்ப கல்வியையும், யா / கொக்குவில் இந்துக் கல்லூரியில் இடைநிலைக் கல்வியையும், மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியில் உயர்தரக் கலவியையும் கற்றார். இவர் நாட்டில் ஏற்பட்ட சூழ்நிலை காரணமாக 1994இல் கனடா சென்றார். இவர் 1997 இல் கொக்குவிலைச் சேர்ந்த அமரர்களான ஆனந்தசுந்தரம் (படவரைஞர்) அவர்களினதும் திருமதி ஆ.யோகெஸ்வரி அவர்களினதும் புத்திரியாகிய வேதநாயகியை காதல் திருமணம் செய்து மூன்று பிள்ளைகளுடன் கனடாவில் இன்தே வாழ்ந்து வருகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அமரரின் வெளிநாட்டுப் பயணம்

அமரர் அவர்கள் புலம் பெயர்ந்த தம் மக்களின் விருப்பதிற்கு அமைய தன் மகன் அருளழகன் அனுசரணையில் தம்பாரியார் உடனும் அம்பிகா, சசிலேகா, மெய்யழகன் ஆகிய தன் மூன்று இளைய பிள்ளைகளுடனும் 1994 ஆம் ஆண்டு கார்த்திகையில் கனடா வந்து பின்னர் கனடா வாசியானார். அங்கு தன் பிள்ளைகள், தன் தம்பிமார் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் உற்றார் உறவினர்களுடன் அளவளாவி ஏழு வருடங்கள் மேலைத்தேய வாழ்கைமுறைகள் சுவாத்தியங்களை நேரில் கண்டு அனுபவித்தார். இக் காலங்களில் இலண்டன், ஜேர்மனி,அவுஸ்ரேலியா, இந்தியா, மலேசியா என்று ஆங்காங்கு வாழும் தன் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் , உறவினர்களையும் கண்டுகழிக்க வாய்ப்புக் கிட்டியது.

அமரர் அவர்கள் கனடா நாட்டில் வாழ்ந்து கொண்டு இருந்தாலும் அவர் எண்ணம் முழுக்க எப்போது தான் தாய் நாடு செல்வேன் என்றேயிருந்தது. இடையிடையே தன் மனைவி பாக்கியலட்சுமியுடன் இலங்கை வந்து செல்லவும் தவறவில்லை.

### தாய்நாடு திரும்புதல்

தாய் நாடு திரும்பும் பெருவிருப்பில் இருந்த அமரர் அவர்கள் 2001 இறுதிப் பகுதியில் தனது மனைவியார் சிறிது சுகவீனம் அடையத் தன் தாய் தந்தையரைப் பார்க்க வந்த தன் இரண்டாவது மகன் அறிவழகன் குடும்பத்தின் உதவியுடன் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். தன் மனைவியார் சுகமடைந்ததும் தன் மனைவியுடன் மகள்மார் அதிபர் வேணுகா, Dr. அம்பிகா குடும்பத்துடன் ஆலயங்கள் தோறும் சென்று இயற்கையுடன் மகிழ்ந்திருந்தார்.

பின்னர் 2003 ஆவணியில் அவர் மனைவியார் பாக்கியலட்சுமி அவர்கள் சுகயீனம் உற்று இயற்கை எய்தினார். தன் மனைவியார் மறைவு சிறிது காலம் இவரை பெரிதும் வாட்டிற்று எனினும் தன் மருமக்களான சந்திரா, Dr.ஸ்ரீஸ்கந்தராஜா, பெண்பிள்ளைகளான வேணுகா, அம்பிகா அவர்களின் அன்பான அரவணைப்பினாலும் பேரப்பிள்ளைகளான மாதுளா உமையாள் இராகுலன் அவர்கள் தங்கள் அம்மப்பா மீது காட்டிய மட்டற்ற பாசத்தினாலும் அவர்களுடன் அளவளாவி வாழ்ந்து கொண்டிருந்தார்.

அமரர் அவர்களுக்குத் தன் மக்கள் மட்டுமன்றி மருமக்களும் தன் மக்களாய் அமைந்தது அவர் செய்த தவப் பயனே.

மேலும் அயலவர்களான திரு. வேலாயுதபிள்ளை அவர்களின் மக்களான சூரி, பாலன் அவர்களின் துணையும் சிறிது காலம் இவரது தனிமையை தவிர்க்க உதவியாய் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் 2010 இலும் வெளிநாட்டில் உள்ள தம் பிள்ளைகளின் பெருவிருப்பினால் தன் 85 வயதிலும் கனடா, இலண்டன், அவுஸ்ரேலியா சென்று மீண்டும் தன் பிள்ளைகளுடனும், உறவினர்களுடனும் அளவளாவி தன் சிறிய சுற்றுலாவை முடித்துக் கொண்டு தாய் நாடு திரும்பினார். ஓய்வற்ற உழைப்பு, மிதமான உணவுப் பழக்கவழக்கங்கள், மேற்கொண்ட யோகாசனப் பயிற்ச்சிகள் 85 வயதிலும் இவரது பயணத்தை சாத்தியமாக்கிற்று.

அமரர் அவர்கள் 2005 ஜனவரி இல் தன் மகளும் அதிபருமான வேணுகாவிற்கு ஒரு TVS Motor bike ஐ அவவின் அதிபர் பதவிக்கு உதவியாக இருக்கும் எனவும் License தேவையில்லை எனவும் எண்ணி பரிசளித்திருந்தார். ஆனால் அது உயரமாக இருந்ததால் அதிபர் அவர்கள் தன் தந்தையிடமே திருப்பிக் கொடுக்க சிரித்து விட்டு அதை நானே ஓடுகின்றேன் என்று திரும்பிப் பெற்றுக் கொண்டார். அவர் அந்த TVS Motors bike இல் 2012ஆம் ஆண்டு அவரது 87ஆவது வயதிலும் கோயில்களிற்கும் உறவினர் வீட்டிற்கும் மகள்மார் வீட்டிற்கும் மாறி மாறி பயணித்தார்.

அமரர் அவர்கள் 2003இல் தன் மனைவியார் மறைவின் பின்னர் சில வருடங்கள் தன் மகள் அதிபர் வேணுகா, மருமகன் நா.சண்முகரத்தினம், பேத்தி மாதுளா அவர்களுடன் தன் தலையாழி வீட்டிலும் பின்னர் சில வருடங்கள் அங்குள்ள இளைய மகளான அம்பிகா, மருமகன் ஸ்ரீஸ்கந்தராசா பேரப்பிள்ளைகளான உமையாள், இராகுலன் உடன் Temple Roadஇல் உள்ள அவர்கள் வீட்டிலும் வாழ்ந்து விரும்பிய இடங்களிற்கு TVS இல் சுதந்திரமாகப் போய் தன்னாலான உதவிகளை உறவினர்களுக்கும், ஊரவர்களுக்கும் செய்து வாழலானார்.

இதன் பின்னர் மகளான அதிபர் வேணுகா வீட்டிலேயே தன் இறுதிக் காலம் வரை வாழ்ந்து வரலானார். கடந்த ஒரு வருடங்களாய் தன் 94, 95 வயதுகளில் வயது முதிர்வினால் நன்றாகத் தளர்வடைந்து தனது அன்றாடக் கடமைகளுக்கு உதவி தேவைப்படும் நிலைமைக்கு தள்ளப்பட்டார். இந்தக் காலங்களில் அவரது மகள் வேணுகா மருமகன் சந்திரா (சண்முகரத்தினம்) இருவரும் மிகுந்த பொறுமையோடும் உதவியாளர்களின் துணையோடும் அவருக்கு வேண்டிய கடமைகளைச் செய்தார்கள்.

மகள் வேணுகா தனது வேம்படி மகளிர் பாடசாலை அதிபர் கடமைகளைக் கவனிக்க விடியற் பொழுதினிலேயே கல்லூரி புறப்பட மருமகன் சண்முகரத்தினம் அவர்கள் மிகப் பொறுமையாக அவருக்கு உணவு சமைத்து உணவூட்டி தன் தந்தையாரைக் கவனிப்பது போல் கவனித்தது போற்றுதற்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரரின் மருமகன் சந்திரா ஒரு இறைபக்தியாளர் தன் சரவணை வீட்டுடன் ஒரு வைரவர் கோயிலும் அமைத்து இவர் தாய் தந்தையர் தொழுது வந்ததால் இங்கு கொக்குவிலிலும் வைரவர், தன் கோயில் ஒன்றை அவருக்கு பரிசளித்து தன்னை பூசிக்குமாறு பணித்துள்ளார். அந்தக் கட்டளையை அன்புடனும், வைரவர் தனக்கு அளித்த அன்புப் பரிசு என்றும் எண்ணி அவரே பூசகராகி வைரவரைத் தன்குடும்பத்தவருடன் பூசித்து வருகின்றார்.

அமரர் பேரம்பலம் குடும்பமும் காலம் காலமாய்த் தம் தலையாழி வீட்டுக்கருகில் அமைந்துள்ள ஞானவைரவர் கோயிலையே நம்பிக்கையோடு வழிபட்டு வந்த குடும்பம் அமரரும் அவர் பிள்ளைகளும் ஞானவைரவரைத் தம்மை நாளும் காக்கும் காவல் தெய்வமாய் அவர் மேல் பேர் அன்பும் பக்தியும் கொண்டு தொழுது வந்தார்கள். அந்த ஞானவைரவரே போர்க்காலத்திலும் தம்மைப் பாதுகாத்தார், எனியும் பாதுகாப்பார் என்று நம்பிக்கையோடு மானசீகமாக நன்றி செலுத்தித் தொழுகின்றார்கள்.

அமரர் அவர்கட்கு மருமகன் சந்திரா, மருமகன் Dr. Sri. மகள் அதிபர் வேணுகா, மகள் Dr. அம்பிகா எல்லோருமாகச் சேர்ந்து அமரர் அவர்களின் இருப்பிடத்தை ஒரு Special Nursing Care Unit ஆகவே மாற்றியிருந்தார்கள். அமரருக்குத் தேவையான மருத்துவ தேவையையும் அன்றாடப் பராமரிப்புக்களையும் உதவியாளர்கள் ராணி மகேந்திரன், அவர் மகள் சசி மகேந்திரன் துணையுடன் வீட்டுச்சூழலும், மருத்துவச் சூழலும் ஒன்றே அமைய மிக வாஞ்சையோடு கவனித்து வந்தார்கள். தம் ஐயாவிற்கும் / மாமாவிற்கும் செய்யக் கிடைத்த இப் பணிவிடைகளை ஒரு பாக்கியமாகக் கருதி மிகக் கரிசணையுடன் செய்து வந்தார்கள்.

அமரர் அவர் தம் இளங்காலங்களில் அவரது சீனிமாமாவையும், குடும்ப நண்பர் அதிபர் நவரட்ணம் அவர்களையும் இவர்களது இறுதிக்காலங்களில் தானும் தன் பிள்ளைகளுமாய் தன் வீட்டில் வைத்துப் பராமரித்தது இப்போதும் நினைவிற்குவருகின்றது. மருமகன் Sri உம் அவர் மனைவி அம்பிகாவும் எப்போது வேண்டுமானாலும் அது எந் நேரமாய் இருந்தாலும் தம் பொறுப்பான வைத்தியசாலைப் பணிகளுக்கு மத்தியிலும் தங்கள் உடற்களைப்பையும் பொருட்படுத்தாது தம் மாமாவிற்கும் / அப்பாவிற்கும் மருத்துவ சேவை செய்யவும் தங்கள் பணிவிடைகளைச் செய்யவும் அமரரிடம் அடிக்கடி சென்று வருவார்கள். இது Sri இன் பெருந்தன்மையையும் குடும்பப் பொறுப்பையும் உணர்த்துகின்றது.

அமரரின் புலம்பெயர்ந்த மக்கள் யாவரும் தங்கள் மைத்துனர்களான திரு. சண்முகரத்தினம், திரு. ஸ்ரீ அவர்களுக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரரின் 90ஆவது பிறந்தநாளை (மே. 13. 2015) இரண்டாவது மகன் அறிவழகன், மருமகள் கருணையுடன் அவுஸ்ரேலியாவில் இருந்து இங்கு வருகை தந்து தன் தங்கைமார் வேணுகா, அம்பிகா குடும்பத்தினருடன் உறவினர்களையும் நண்பர்களையும் அழைத்து சகோதரி அம்பிகா வீட்டில் சிறப்பாகக் கொண்டாடினார்கள். அன்று அவரை சிவபூமிக்கும் , திரு. ஆறு. திருமுருகனின் அன்னையார் சரஸ் ரீச்சர் (Mrs. ஆறுமுகம் ஆசிரியர்) வீட்டிற்கும் கூட்டிச் சென்றனர். சரஸ் ரீச்சர் குடும்பத்திற்கும், அமரர் அவர்களுக்கும் அவர் பாரியார் பாக்கியலட்சுமிக்கும் இடையே காலத்தால் அழியாத நட்பு தொடர்ந்து இருந்தது.

வெளிநாடுகளில் உள்ள அமரர் அவர்களின் பிள்ளைகள் தங்கள் தந்தையை பார்க்கும் ஆவலில் அடிக்கடி யாழ்ப்பாணம் வந்து போவார்கள். அவ்வாறே அமரர் அவர்களின் புலம்பெயர்ந்த பிள்ளைகளும் மருமக்கள் ஒவ்வொருவரும் தம் துணைகளுடனும், பேரப்பிள்ளைகளுடனும் தம்குடும்பத்தவர்களுடனும் தனியாகவும் 2018 இறுதியிலும் 2019 இல் வெவ்வேறு நேரங்களிலும் 2 கிழமையோ ஒரு மாதமோ தம் தம் வசதிக்கேற்ப தம் ஐயாவை/ தம் மாமாவை தம் தாய் நாட்டிற்கு வந்து பார்த்து பணிவிடைகள் செய்து திரும்பி இருந்தார்கள். அவரது மூத்த புதல்வன் அன்பழகனும் 2018 இறுதியில் மூன்று மாதங்கள் தன் இளைய மகனுடனும் வந்து அமரர் அவர்களைப் பார்த்து, முடிந்த பராமரிப்புக்களையும் செய்து திரும்பியிருந்தார்கள். பின்னர் ஒக்டோபர் 2019 மட்டில் அமரரின் மூத்தமகள் சந்திரிகாவும் மருமகன் பராவும், மகள் உமாவுடனும் அமரரைப் பார்த்து திரும்பிய சில வாரங்களின் பின் திடீரென முற்றிலும் கதைக்க முடியாமலும் உணவு உட்கொள்ள முடியாமலும் ஏற்பட்டது. அப்போது மருமகனும் டாக்டருமான Sri அவர்களினால் 6-7 மாதங்களாய் குழாய் மூலம் (N.G.Tube) திரவ ஆகாரம் மட்டும் கொடுக்கப்பட்டது. இது அமரரின் இறுதிக்காலமாக இருக்கலாம் என்பதை உணர்ந்த மகள் சசி மீண்டும் அவரைப் பார்க்க தாய் நாடு வந்து மன ஆறுதலுக்கு பார்த்துச் சென்றார். அதன் பின்னர் மகன் அருளழகனும் (தாய் நாடு சென்று) இங்கு வந்து அமரர் அவர்களைப் பார்த்து அவரின் முழு உடல் உழைப்பினால் உருவாக்கப்பட்ட தலையாழி வீட்டினையும் அவரின் இறுதி நிகழ்வுக்கு வந்து எல்லாரும் சிறப்பாக்க வேண்டும் என்று எண்ணி வீட்டில் பல திருத்தங்களை தனது சகோதரிகளுடனும், மைத்துனர்களுடனும் சேர்ந்து செய்து தை மாதம் 10ஆம் திகதி 2020 மீண்டும் கனடா சென்றார்.

அமரரது 95ஆவது பிறந்த தினத்தை (05.13.2020) அவரின் மூத்த மகனின் விருப்பதிற்கு ஏற்ப கணிணித் தொழில்நுட்பத்தினூடாக (Zoom) எல்லாப் பிள்ளைகளும் ஒரு மித்துப் பார்த்துக் கொண்டாடினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரரின் இறுதி நாட்களில் அவர் கடுமையாகச் சுகவீனமுற்ற போது யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு வைத்தியநிபுணர் குமணன் தலைமையில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

அவரின் மருமகன் திரு சண்முகரட்ணம் அவர்களும் மருமகன் ஸ்ரீஸ்கந்தராஜாவும், மகள் அம்பிகாவும் அமரரைப் பார்த்து விடை பெற்று சென்று சற்று நேரத்தில் இறைவன் சித்தப்படி (06.13.2020) அன்று மாலை 3.45 மணியளவில் தன் மகள் வேணுகாவும் அவர் பேர்த்தி மாதுளாவும் அருகில் இருக்க அவர் உயிர் அமைதியாக ஸ்ரீதட்சணாமூர்த்தி பாதங்களில் கலந்தது. இதனால் வெளிநாடுகளில் உள்ள பிள்ளைகள் ஒவ்வொருவரும் தங்களது தந்தையார் மறைவிற்கு (Covid 19) காரணமாய் நேரே சமூகமளிக்க முடியாத மனக்கவலை வாட்டினாலும் தாம் இறுதிக்காலத்தில் அவரை உயிரோடு பார்க்க முடிந்ததையிட்டு சிறிது ஆறுதல் படுகின்றார்கள்.

வெளிநாட்டிலிருக்கும் அமரரின் பிள்கைள் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள முடியாத வேளையிலும் மருமகன் சண்முகரத்தினமும் மருமகன் ஸ்ரீஸ்கந்தராசாவும் இறுதிக் கிரியைகளில் சிறப்பாக மகள்மார் வேணுகா, அம்பிகா, அவர்களது பிள்ளைகள் மற்றும் உறவினர், நண்பர்கள் உதவியுடனும் பங்கு பற்றுதலுடனும் நடாத்தியதோடு மருமகன் சந்திரா அவர்கள் மகன் ஸ்தானத்தில் அந்திமக் கடமைகளை நிறைவேற்றியது அமரர் அவர்கள் செய்த பெரும் புண்ணியமே ஆகும்.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்**
**வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படுவார்"**

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் கல்வி கற்பித்த காலங்களில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் அவர்கள் 2010 ஆண்டு கனடா வருகையை நிறைவு செய்து தாயகம் திரும்பும் போது விமான நிலையத்தில்



சரவணை சேவா மன்ற உறுப்பினர்கள் – 1962ல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்கள் இருவரும் 1995 **March** 4ஆம் திகதி
நயக்கரா நீர்வீழ்ச்சியருகே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அமரர்கள் இருவரும் 1995 March 4ஆம் திகதி
நயக்கரா நீர்வீழ்ச்சியருகே




அமரர் அவர்கள் தனது மனைவி சுகவீனமுற்ற நிலையில் அவரைப் பராமரிக்கும் பொறுப்பை பிள்ளைகளிடம் விட்டு சிரமப்படுத்தக் கூடாது என்ற மனப்பாங்கில் மீண்டும் கனடாவிலிருந்து 2002 இல் தாய்நாடு அழைத்துச்சென்ற போது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐயாவின் 90ஆவது பிறந்தநாள் மகன் அறிவழகனும்
மகள்களான வேனுகா மற்றும் அம்பிகா



அமரரது 90வது பிறந்த தினத்தன்று
எடுக்கப்பட்ட படம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**செஞ்சொற்செல்வர்.ஆறு.திருமுருகன்** அவர்கள்
**(தலைவர்.ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை)**
**(தலைவர்.சிவபூமி அறக்கட்டளை, இலங்கை)**
**இளைப்பாறிய அதிபர்,ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.சுன்னாகம்.**
**பேரவை உறுப்பினர்.யாழ் பல்கலைக் கழகம்.**

## பிரார்த்தனையுரை

1967 முதல் எங்கள் குடும்பத்தோடு மிகவும் அன்பாகப் பழகியவர்கள் அமரர் பேரம்பலம் ஆசிரியர் குடும்பம். எனது தாய், தந்தை யாழ் இந்துக் கல்லூரி ஆரம்பப் பாடசாலையில் ஆசிரியர்களாகப் பணியாற்றிய காலத்தில் பேரம்பலம் ஆசிரியர் தம்பதிகள் ஒன்றாகக் கடமையாற்றினார்கள். அன்று ஏற்பட்ட உறவு இன்றுவரை தொடர்கின்றது. இரு குடும்பமும் நெருக்கமாகப் பழகியதால் நாம் பேரம்பலம் மாமா, மாமி என்று உரிமையோடு கொண்டாடுவோம். குடும்ப நன்மை தீமைகளைப் பரிமாறி வாழ்ந்த உறவை மறக்க முடியாது. நான் பேரம்பலம் மாமியிடம் படித்தவன். நான்காம் ஆண்டில் மேடை ஏற்றி என்னை அவர் பாராட்டியமையை மறக்க முடியாது. அமரர் பேரம்பலம் மாமா அவர்கள் தற்துணிவு மிக்கவர். கடின உழைப்பாளி. ஒரு நிமிடமும் வீண் பொழுது போக்காதவர். தனது வீட்டு வளவை சோலைவனமாக மாற்றியவர். தன் பிள்ளைகளின் கல்வியில் மிகுந்த அக்கறை காட்டியவர். பிள்ளைகள் அனைவரும் பட்டம் பெற்று உயர் நிலையில் வாழ்வதற்கு அயராது உழைத்தவர். தன் பிள்ளைகளின் உயர்வு கண்டு ஆனந்தமடைந்தவர். தனது மகள் வேணுகா அக்கா வேம்படி மகளிர் கல்லூரி அதிபராக உயர்ந்த போது அவர் அச்சிறப்பைக்கண்டு பூரிப்படைந்தார். அவரது மகள் திரு, மருமகன் ஸ்ரீ இருவரும் மருத்துவர்கள். மிகக்கவனமாக மாமாவைப் பார்த்தார்கள். அவர் குறை ஏதுமின்றி நிறைவாக வாழ்ந்து இறை அழைப்பையேற்றுச் சென்றுவிட்டார். இறுதி வைபவத்தில் கற்ற சமூகம் நிறைவாக வந்து வழியனுப்பி வைத்தார்கள். அன்னாரின் பிரிவால் துயரப்படும் குடும்பத்தவர்களுக்கு ஆறுதல் கூறி, அவரின் ஆத்மா சாந்தி பெற இறைவனை மன்றாடி அமைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்புச் சகோதரி**

**அங்கயற்கண்ணி குமாரசாமி**

எமது அன்புக்குரிய சகோதரர் திரு. வைத்தியலிங்கம் பேரம்பலம் அவர்களின் மறைவு அவரின் குடும்பத்துக்கு ஒரு பெரும் இழப்பாகும். அவரின் குடும்பத்துக்கு மட்டுமல்லாது என்போன்ற உறவினர், நண்பர்கள், அறிந்தவர்கள், தெரிந்தவர் பழகியவர் என அனைவருக்குமே பெரிய இழப்பாகும். அது காலத்தின் கட்டாயமென்றாலும் இறுதிநேரத்தில் அவரின் வெளிநாட்டு பிள்ளைகளோ, நெருங்கிய உறவினர்களோ ஒருதரம் பார்க்கக் கிடைக்காதது தான் பெரும் சோகமாய் முடிந்தது. அதுவும் எப்பவோ முடிந்த காரியமே.

அமரர் அண்ணன் பேரம்பலம் அவர்களையும் குடும்பத்தினரையும் கடந்த 50 வருடங்களுக்கும் மேலாக நான் அறிவேன்.

எனது அடுத்த கிராமம் தான் அவருடையது எனினும், எனது சகோதரி ஒருவர் இவரின் கிருகலட்சுமி பாக்கியலட்சுமியின் அண்ணனை மணஞ் செய்த காரணத்தால் தான் எனக்கு உறவினரும் ஆனார்கள்.

அன்று தொடங்கிய எங்கள் உறவு பின்னர் எனது மைத்துனி படிப்பித்துக் கொண்டிருந்த யாழ் இந்து ஆரம்ப பாடசாலைக்கு நானும் மாற்றமாக வந்ததிலிருந்து புதுப்பிக்கப்பட்டது. அங்கு ஒன்றாக வேலை செய்த 16 வருடங்களும் மிக அன்னியோன்னியமாகப் பழகியதிலிருந்து எங்கள் நட்பு நெருங்கிய நட்பாக மாறியது. அன்றிலிருந்து எமது இரு குடும்பங்களும், பிள்ளைகளும் மிக நெருக்கமாகவும், பாசமாகவும் பழகி வந்தோம்.

அமரர்கள் திரு திருமதி பேரம்பலம் இருவரும் காதல் மணமாக, திருமண வாழ்க்கைகளை ஒரு எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்டினார். அதன் விளைவால் 10 செல்வங்களைப் பெற்றெடுத்தனர். அவர்களை அருமையாக வளர்த்து சகல கல்வியையும் படிப்பித்து பட்டதாரிகளாக்கி நல்ல நல்ல உயர்ந்த பதவிகளை வகிக்க வைத்திருக்கின்றனர். இருவருமே தாம் ஏற்றுக்கொண்ட ஆசிரியத் தொழிலை தத்தம் மூச்சாகக் கருதி சேவை புரிந்தனர். திறமையான, நேர்மையான வழிகாட்டிகளாகத் திகழ்ந்தவர்கள்.

இவர்களிடம் கல்வி பயின்ற மாணவர்களில் பெரும்பாலோனோர் இன்று உலக நாடுகள் பலவற்றிலும் பெரும் பெரும் பதவிகள் வகித்து வாழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கின்றார்கள், அந்தப் புண்ணிய பலனால் தானோ இவர்களது பிள்ளைகளும் தாய் நாட்டில் இருவர் சேவை செய்ய மற்றைய அனைவரும் உலகின் பல நாடுகளில் (இலண்டன், கனடா, அவுஸ்ரேலியா என) அடுத்தவர் போற்ற வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் எல்லோரும் திருமணம் செய்து குழந்தைகளைப் பெற்றெடுத்து சீரோடும், சிறப்போடும் பெற்றோரும், மற்றோரும் மகிழ வாழ்கின்றார்கள்.

பெற்றோர்கள் இருவரும் தம் பணிகளிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் ஒவ்வொரு நாடாக பிள்ளைகளிடம் போய் அவர்களோடும் பேரப்பிள்ளைகளோடும் சந்தோஷமாக இருந்து பேரப்பிள்ளைகளோடு சீராடி ஈற்றில் தாய் நாடு திரும்பி அங்கிருக்கும் 2 பிள்ளைகளுடனும் தம் கடைசிக் காலத்தை மகிழ்வுடன் கழித்து திருப்தியாய் வாழ்ந்து முடிந்த மகிழ்வு மனைவியைப் பூவோடும், பொட்டோடும் முதலில் அனுப்பிய நிறைவுடன், இப்போ அவரும் அவவுடன் இறைவன் திருவடியை அடைந்து விட்டார்.

இனி அவர்களை நினைத்து வருந்துவது தேவையற்றது. இருவரும் இறைவன் பாதத்தில் நலம் பெற அந்த இறைவனை வேண்டுவோமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எப்.எக்ஸ்.அன்ரன்** அவர்கள்
**கோட்டக் கல்விப் பணிப்பாளர்,**
**நல்லூர்க் கல்விக் கோட்டம்**
**யாழ்ப்பாணம்**

# நினைவுகள் வாழட்டும்

பேரம்பலம் மாஸ்ரர் என்றதும் நேர்த்தியாக வாரி விடப்பட்ட கேசம், வெள்ளை அரைக்கை ஷேட், அதே நிறத்தில் வரிந்து கட்டப்பட்ட வேஷ்டி, அன்பும் - கண்டிப்பும் கலந்த முகபாவம், இடைக்கிடையே உதிர்க்கும் நகைச்சுவை, கடைசி மாணவனும் கற்பிக்கப்படுவதை சரியாக விளங்கிக் கொள்ளும் வரையில் விடாப்பிடியான போராட்ட குணம், தன் உணவையும் மாணவருடன் பகிர்ந்து கொள்ளும் கருணை, ஒழுங்கீனத்தை சகித்துக் கொள்ளாத சுபாவம்........ என்று அவரிடம் கற்ற மாணவர்கள் நினைவுக்குறிப்புக்களை அடுக்கிக்கொண்டே செல்வார்கள்.

அமரர் வைத்தியலிங்கம் பேரம்பலம் அவர்கள் சைவமும், தமிழும் தழைத்தோங்கிய சரவணையூரிலே உதித்தவர். தன் பிறந்தவூருக்கு பெருமை சேர்க்கும் நல்லாசானாக யாழ் மண்ணிலே கோலூன்றியவர். குறிப்பாக வைத்தீஸ்வரா கல்லூரி, யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை, கொக்குவில் இந்துக் கல்லூரி (ஆரம்பப்பிரிவு), கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம் ஆகிய கல்விச்சாலைகளில் அர்ப்பணிப்போடு அரும்பணி நல்கியவர் -ஆற்றல் மிக்க மாணவர்களை உருவாக்கியவர்.

அன்னாரும் அவர் தம் பாரியார் அமரர் பாக்கியலட்சுமி அம்மையாரும் இணைந்து நல்லூர் கோட்டப் பாடசாலைகளில் எண்ணற்ற மாணவர்களுக்கு ஆரம்பக்கல்வியில் சிறந்த அடித்தளமிட்டமை வரலாற்றுப் பதிவாகும். கடமையைக் கண்ணெனப் போற்றிய அமரர் பேரம்பலம் அவர்கள் அநாவசியமாக லீவுகள் பெற்றதேயில்லை. அதே போல் தன் பிள்ளைகளும் லீவுகள் பெறுவதை அனுமதிப்பதேயில்லை. இத்தகைய ஆசிரியத்தின் நல்லிலக்கணமாகத் திகழ்ந்த அமரரின் இழப்பு எம் சமுகத்திலே நிகழ்ந்த பேரிழப்பு என்பதில் ஐயமேயில்லை.

பேரம்பலம் மாஸ்ரருடனான என் அறிமுகம் காலம் பிந்தியது. முதுமையிலும், நோயிலும் அவர் வாடிய காலத்திலேயே அவரைச் சந்தித்தேன். ஆயினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகைய நேரத்திலும் அவர் பிறர் மீது வைத்துள்ள அக்கறை, விடயங்களைத் துல்லியமாகக் கணிக்கும் திறன் போன்றவை என்னை ஆச்சரியப்பட வைத்தன. அவரது குணநலன்கள் அவரது பிள்ளைகளிலும் எதிரொலித்ததைக் கண்டு அதிசயிக்கின்றேன். ஒரு மரத்தின் தன்மையை அதன் கனிகளைக் கொண்டே அறியலாம். அது போல் அவர் பிள்ளைகளிடம் காணப்படும் அறிவாற்றல், ஆளுமை, எளிமை, பிறர்சினேகம், ஜீவகாருண்யம் போன்றன அவரின் பண்புகளே என்பதில் மறுகருத்து இருக்கமுடியது.

அவரது பிள்ளைகள் வைத்தியர்களாக, கல்விச் சேவையாளர்களாக, இன்னும் பல்வேறு துறைகளில் உயர்நிலைகளில் சேவையாற்றுவது பேரம்பலம் மாஸ்ரரின் சேவைக்குக் கிடைத்த இறைவனின் அங்கீகாரமாகவே கருதுகின்றேன்.

பேரம்பலம் மாஸ்ரர் இயற்கையை நேசித்தவர். அவரது கொக்குவில் தலையாழி வளவு அதற்கு நல்ல உதாரணம் . விசாலமான அந்த வளவிலே நிற்கும் போது நகரத்தினுள் நிற்கும் உணர்வே வராது, அது ஒரு பசுமை நிறை சோலையாக கிராமத்துணர்வுகளையே தரும். அது அவரது கடின உடலுழைப்பிற்கு ஆதாரம். புவியிலே வாழும் மானிடருக்கு அவர் வாழ்வும், பணியும் நல்லுதாரணமாகும். மாணவர்களையும், இயற்கையையும் நிறைவாக நேசித்த ஆசிரிய ஜோதி பேரம்பலம் அவர்களுக்கு நல்லூர்க் கல்விக் கோட்டம் சார்பாக என் நன்றியும், அஞ்சலியும் உரித்தாகுக. அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு என் ஆழ்ந்த அனுதாபங்களைச் சமர்ப்பிக்கின்றேன். பேரம்பலம் ஆசிரியரின் நினைவுகள் என்றும் வாழட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பேராசிரியர். ம. இரகுநாதன்,**
**தலைவர், தமிழ்த்துறை, கலைப்பீடம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

# நெஞ்சுக்கு நெருக்கமானவர்

1980 களின் ஆரம்பத்தில் தலையாழிக் கிராமத்திற்கு நான் அறிமுகமான போது அங்கு எனக்குக் கிடைத்த புதிய நண்பன் அருள். அவன் பல்கலைக்கழக நுழைவுக்காகப் படித்துக்கொண்டிருந்தவன். நான் பல்கலைக்கழகத்தில் முதலாம் வருட மாணவனாக இணைந்திருந்தவன். இருவரும் ஒரே வீட்டில் தங்கியிருந்ததால் ஏற்பட்ட நட்புறவு மிக விரைவிலேயே குடும்ப உறவாக மாறியிருந்தது. அந்த நிலையில் தான் அருளின் தகப்பனான பேரம்பலம் மாஸ்டரும் எனக்கு அறிமுகமானவர்.

எனக்கு அறிமுகமான போது அவர் ஓய்வு பெற்ற ஆசிரியர். பல்கலைக்கழகம் முதல் பாடசாலை வரை படித்துக்கொண்டிருக்கின்ற பத்துப் பிள்ளைகளின் தந்தை, சாதாரண ஆசிரியர் ஒருவரால் இவ்வாறான பெரிய குடும்பமொன்றை எப்படிக் காப்பாற்ற முடிந்தது என்பதை, இன்று நினைத்துப் பார்க்கும்போது ஆச்சரியமாகவே இருக்கின்றது. தலையாழியில் அவர் குடியிருந்த வளவு விவசாயத்திற்கேற்ற பாரிய நிலப்பரப்பு. அவரின் ஓய்வு நாட்கள் அந்த நிலப்பரப்பை பண்படுத்திச் சோலையாக்குவதற்கே பயன்பட்டது என்பதை நான் நேரில் கண்டுகளித்தவன்.

கால ஓட்டத்தில் மாணவப் பருவங்கள் மாறி ஒவ்வொருவரும் தனித்தனிக் குடும்பங்களில் கட்டுண்டபோது நாட்டிலும் யுத்தச்சூழல் தீவிரமாகிக் கொண்டிருந்தது. பலர் ஊரை, உறவுகளை விட்டுப் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வெற்று மனிதர்களாக மாறியிருந்தனர். அந்த நிலை பேரம்பலம் மாஸ்டரின் குடும்பத்திற்கு மட்டும் விதிவிலக்காகிவிடவில்லை. பிள்ளைகள் பலரும் புலம்பெயர்ந்தார்கள். பிள்ளைகளின் வேண்டுகோளைப் புறக்கணிக்க முடியாமல் பேரம்பலம் மாஸ்டரும் புலம்பெயர்ந்தார். அவர் தனது உதிரம் சொரிந்து வளம்படுத்திய நிலம் வெறுமையாகிப்போனது. தென்னைகளும், தேக்கு மரங்களும், ஈரப்பலாவும் இன்னும் பலவும் சோலைகளாய் நின்றாலும் ஆளில்லா வீட்டிற்கு அழகெதற்கு என்று அழுது புலம்பி நிற்க பேரம்பலம் மாஸ்டர் மீண்டும் யாழ்ப்பாணம் வந்தார். உயிரைக்காக்க ஊரை, உறவுகளை, உடைமைகளைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறந்து பலரும் ஓடி ஒழித்த நாட்களில் அவர் ஊருக்கே திரும்பிவந்தார். தடுத்தவர்களுக்கு அவர் கூறிய பதில் "அங்கை சண்டை நடக்குது நான் இஞ்சை நிக்கட்டோ" என்பதுதான். இது வேடிக்கையான பேச்சுத்தான். வயதும் உடல்நிலையும் அவருக்கு ஓய்வின் தேவையை உணர்த்தினாலும் மண்மீது கொண்ட பற்று அவரை இங்கே வரவழைத்தது. அவரின் அந்த வார்த்தைகள் எனக்கு அவர் மீதிருந்த மதிப்பைபலமடங்கு உயரச்செய்தது. ஒரு நல்லாசிரியரின் சமூக நோக்கு அது என்பதை நான் புரிந்துகொண்டேன்.

ஆசிரியன் சமுதாயத்தை உருவாக்கப் பாடுபடுபவன், பல ஆயிரக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய ஒரு ஆசிரியனின் வாழ்க்கை என்றைக்கும் அழிந்துபோகாது. வாழையடி வாழையாக அது தொடர்ந்துகொண்டே செல்லும். இவரிடம் படித்தவர்கள் இன்று சமூகத்தில் நல்ல நிலையில் இருக்கின்றார்கள். பிறர் பிள்ளை தலை தடவியவரின் பிள்ளைகள் பொறியியலாளர்களாக, வைத்தியர்களாக, கணக்காளர்களாக, விஞ்ஞானப் பட்டதாரிகளாக என்று சமூகத்தில் கல்வியால் உயர்ந்து நன்மதிப்புடன் வாழ்கின்றார்கள். அவரின் பேர் சொல்ல இதைவிட வேறென்ன வேண்டும்.

பேரம்பலம் மாஸ்டர் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்தவர். மரணமில்லாப் பெருவாழ்வு மானிடர்க்கு வாய்ப்பதில்லை என்பதை அறிந்திருந்தாலும் வாழையடி வாழையாக இந்த மண்ணில் அவரின் நாமம் என்றும் நிலைத்து நிற்கும் என்பதால், அவருக்கு வாய்த்ததும் மரணமில்லாப் பெருவாழ்வே என்று மனதை ஆற்றிக்கொள்வோமாக.

நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுனீத்ரா சூரியராஜா,**
**யாழ். வேம்படி மகளிர் கல்லூரி**
**பதில் அதிபர்**

எமது பாடசாலையின் ஓய்வு நிலை அதிபர் திருமதி. வேணுகா சண்முகரட்ணம் அவர்களின் தந்தையார் அமரர் வைத்தியலிங்கம் பேரம்பலம் அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றேன். அமரர் வைத்தியலிங்கம் பேரம்பலம் அவர்களும் அவர்தம் பாரியார் அமரர் திருமதி பேரம்பலம் அவர்களும் ஒரு காலத்தில் சிறந்த ஆசிரியர்களாகக் கடமையாற்றி பல பாடசாலைகளில் கல்வி கற்பித்து நாட்டுக்குத் தேவையான நற்பிரஜைகளை உருவாக்கிய பெருமைக்குரியவர்கள். அவர்களின் பத்து புதல்வர்களும் மிகவும் திறமையாக கல்வி கற்று இன்று பெரிய பல பதவிகளில் இருந்து நாட்டுக்கு சேவையாற்றி வருவது கண்கூடு. அந்த வகையில் எனது ஓய்வு நிலை அதிபர் திருமதி வேணுகா சண்முகரட்ணம் அவர்கள் எமது பாடசாலையை ஒரு சிறந்த நிலையை அடையச் செய்து தன்னாலான அர்பணிப்பான சேவையை வழங்கி ஓய்வு பெறுள்ளார். மேலும் எமது ஓய்வுநிலை அதிபரின் தங்கை வைத்திய கலாநிதி திருமதி அம்பிகா ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள் இன்றும் யாழ் மக்களுக்கு தனது வைத்தியத்துறையினூடாக சிறந்த சேவையாற்றி வருகின்றார். மேலும் அமரர் வைத்தியலிங்கம் பேரம்பலம் அவர்களும் தனது ஆரம்பப் பணியை ரம்பொட மகாவித்தியாலத்திலும், மற்றும் யாழ்ப்பாண இந்து ஆரம்ப பாடசாலை, செம்பியர் தெரு சன்மார்க்க வித்தியாலயம், யா/கொக்குவில் நாமகள் விதியாலயம் யா/கொக்குவில் இந்துக் கல்லூரி என பல பாடசாலைகளில் தனது தன்னலமற்ற சேவையை வழங்கி ஓய்வு பெற்று தனது ஓய்வு காலத்திலும் தன்னாலான உதவியை பலருக்கும் செய்து தொண்ணூற்று ஐந்து ஆண்டுகள் வரை வாழ்ந்து தான் பெற்ற பிள்ளைகளுக்குப் பக்க பலமாக இருந்து இறைவனடி சேர்ந்துள்ளார். பூலோகத்தில் பிறந்தவர் யாவரும் ஏதோ ஒரு நாள் இறக்க வேண்டும், இறைவனின் நியதி அதற்கேற்ப (13.06.2020) ஆம் திகதி அவர் இறைவனுக்குள் அமரத்துவம் அடைந்துள்ளார். அவரின் ஆத்மா சாந்தியடைய வேண்டும் என்று எமது பாடசாலை சமூகத்தின் சார்பில் இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்கின்றேன். என்னையும் அவரைப் பற்றிய சிறு வார்த்தைகள் எழுதுமாறு அன்பாகக் கேட்டுக் கொண்ட எமது ஓய்வு நிலை அதிபருக்கு இத்தால் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமதி அன்பரசி கணேசலிங்கம்**
யாழ். வேம்படி மகளிர் கல்லூரி
உப அதிபர்

# நெஞ்சிற்கு நெருங்கியவர்

அமரர் வைத்தியலிங்கம் பேரம்பலம் அவர்கள், எனது தந்தையார் அமரர் தில்லையம்பலம் சிவசாமி அவர்களின் நெருங்கிய உறவினர். அமரர் பேரம்பலம் அவர்களைப் பற்றி எனது தந்தையார் நிறையவே கூறக் கேட்டிருக்கின்றேன். அவரை நான் நேரில் பார்த்தது அவரது மகளான யாழ் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் அதிபர் திருமதி. வேணுகா சண்முகரட்ணம் அவர்களின் பிரியாவிடை நிகழ்வன்றே. அச்சமயம் அமர் அவர்கள் சுகயீனமுற்று இருந்ததால் கதைக்கும் நிலையில் இருக்கவில்லை. அமரரின் வாழ்க்கை முறையினை அவரின் பிள்ளைகளின் வாழ்க்கை முறையை வைத்து நன்கு உணரக் கூடியதாக இருக்கிறது. பெரியோரைக் கனம் பண்ணுதல், சிறியோரோடு அன்புடன் உறவாடுதல், இயலாதவர்களுக்கும், இல்லாதவர்களுக்கும் உதவுதல், சைவசமயச் சடங்குகளையும் கடமைகளையும் நெறி பிறழாது செவ்வனே நிறைவேற்றுதல் போன்ற விழுமியப் பண்புகளைத் தம்மகத்தே கொண்டு ஒழுக்க சீலர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அமரர் அவர்கள் தன் பிள்ளைகளைப் போலவே பிறர் பிள்ளைகளையும் ஆதரவளித்து இருக்க இடம் கொடுத்து உணவளித்திருந்ததை பிறர் கூறக் கேட்டிருக்கிறேன்.

இவ்வாறாக நற்குணங்களோடும் நற்செயல்களோடும் வாழ்ந்த இவர் தனது தொண்ணூற்றைந்தாவது பிறந்த தினத்தைக் கொண்டாடி மகிழ்ந்து அடுத்த மாதம் 13ம் திகதியில் இறைபதம் எய்தினார். ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுகால வாழ்க்கையில் அனைத்துச் செல்வங்களையும் நிறைவாகப் பெற்று நிறைவான வாழ்க்கை வாழ்ந்தார். அவர்களிடம் காணப்பட்ட சேவை மனப்பாங்கு அவர்களின் பிள்ளைகளிடமும் நிறைவாகவே இருந்ததை நாங்கள் கண் கூடாகவே கண்டிருக்கின்றோம்.

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து முந்தியிருப்பச் செயல்" எனும் வள்ளுவர் வாக்குக்கிணங்க பிள்ளைகளை வையத்தில் சிறக்க வைத்த தந்தைக்குப் பிள்ளைகளும் "மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை என் நோற்றான் கொல் எனும் சொல்" எனும் குறளுக்கேற்ப அவருக்கும் புகழையும் பெருமையையும் தேடிக் கொடுத்துள்ளனர். அவரது நீண்ட கால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கைப் பயணத்தில் சந்தோஷமாகவும், நிறைவோடும் வாழ்ந்த இவர் தனது இறுதிக் கால கட்டத்தில் நோய்வாய்ப்பட்டிருந்தார். அந்நிலையில் அவரது இரு புதல்விகள் அவருக்கு அருகில் இருந்து அன்பாகவும் ஆதரவாகவும் வேண்டிய பணிவிடைகளைச் செய்தார்கள். இப்போதும் அவர் செய்த புண்ணியம் என்று தான் சொல்ல வேண்டும்.

**'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்**
**வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்' என்ற**

பொய்யா மொழிப் புலவரின் கூற்றுக்கிணங்க அன்னாரின் மறுமை வாழ்க்கையும் நன்றாக அமையும் என்பது திண்ணம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து நிற்கின்றேன்.

**ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செல்வி கலா நமசிவாயம்**
ஆசிரியர்
யாழ் இந்து மகளிர் கல்லூரி

# எம் நெஞ்சில் நிறைந்தவர்

**"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு"**

என்னும் வள்ளுவன் வாக்கிற்கு அமைய வாழ்ந்த அமரர் வைத்தியலிங்கம் பேரம்பலம் அவர்கள் நிறை வாழ்வு வாழ்ந்து தனது 95 ஆவது வயதில் சிவபதம் அடைந்துள்ளார்.

அன்பு தவழும் முகம், அண்டினோரை ஆதரிக்கும் உள்ளம், உயர்வு தாழ்வு பாராது பிறரை நேசிக்கும் பண்பு, இன்முகத்தோடு மற்றவரைக் கவரும் வசீகரப் பார்வை, கனிவான பேச்சு வாக்கினில் நாணயம் இத்தனையும் ஆயிரம் பிறைகண்ட இவரின் நற்குணங்கள் ஆகும்.

உற்ற துணைவிக்கு உறுதுணையான கணவராக, பெற்ற பிள்ளைகளுக்கு பெருமை சேர்க்கும் தந்தையாக வாழ்ந்த இவரும், இவரது துணைவியும் ஆசிரியப் பணியை ஆண்டவன் பணியாக ஏற்று செயற்பட்டார்கள். அது மாத்திரமன்றி "தந்தை மகற்காற்றும் உதவி அவையத்து முந்தி இருப்பச் செயல்" என்பதற்கிணங்க தம்பிள்ளைகளை அன்போடு அரவணைத்து கல்வியிலே முன்னேற்றி உலகின் பல்வேறு நாடுகளிலும் பணிபுரிய வைத்துள்ளார். அமரர் அவர்கள் எமது சிறிய தந்தையான அமரர் இலிங்கப்பிள்ளை ஆசிரியரின் உற்ற நண்பராக விளங்கியதோடு, நட்பின் அடையாளமாக அவரது மகனை தம் மகளுக்கு மணமுடித்து சம்மந்தியாகவும் ஆக்கிக் கொண்டு எமது உறவுகளைப் பலப்படுத்திக் கொண்டவர். இவர் தனது முதிர்ந்த அனுபவம் ஆற்றல் என்பவற்றினால் பிள்ளைகளுக்கும் பிறருக்கும் நல்லாலோசனைகளை வழங்கி சமூகநலச் செயற்பாடுகள் பலவற்றை முன்னெடுத்துள்ளார். ஓய்வு காலத்தில் தம் பிள்ளைகளின் விருப்பிற்கு இணங்க கனடாவில் சில காலம் வாழ்ந்த போதும் மீண்டும் சொந்த நாட்டில் வந்து வாழ்ந்து இறைபதம் அடைந்தமை அவரது மண்பற்றை பறைசாற்றி நிற்கின்றது. கடந்த சில வருடங்களாக அவர் சுகவீனம் முற்று இருந்த போது அவரது பிள்ளைகள் வெளிநாடுகளில் இருந்து ஒருவர் பின் ஒருவராக வந்து பார்த்து அவரை மகிழ்ச்சிப் படுத்தியமை பொறுப்புள்ள தந்தையாக அவர் திகழ்ந்ததை எமக்கு புடம் போட்டுக் காட்டியது. எனினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகை உலுக்கி வரும் கொரோனா நோயான கோவிட்-19 காரணத்தால் வெளிநாட்டில் உள்ள அவரது பிள்ளைகள் அவரின் இறுதிக் கிரிகைகளில் கலந்து கொள்ள முடியாமற் போனமை மனவேதனையைத் தருகின்றது.

மறைந்தவர்கள் எல்லோரும் விரைவில் மறக்கப்பட்டு விடுகின்றார்கள். ஆனால் அவர்களில் சிலர் மறவாமல் என்றும் நினைத்துப் பார்க்கத் தக்கவர்களாக விளங்குகின்றார்கள். அவ்வரிசையில் அமரர் பேரம்பலம் ஐயா அவர்களும் ஒருவராவார். அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாததொன்றாகும். அன்னாரின் பேரிழப்பால் வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேரி அன்ரி
(M.S.C.Rantnasamy
Rtd.D.D.E, Hatton ZEO)

# வஞ்சகமில்லா வெள்ளை நெஞ்சம் வாழ்க

1971 மார்கழி மாதத்திலிருந்து , ரீச்சர் மாமி , அங்கிள் என்று அன்பாக அழைத்து, பண்புடனும் , பாசத்துடனும், உங்களுடன் பழகிய காலம் சந்தோஷ மான மறக்கமுடியாத காலம். எங்கள் மூத்த மகள், மேரி என அழைத்ததையும் எனது தந்தை விபத்துக்குள்ளாகி , வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த காலத்தில் நீங்களும் உங்கள் குடும்பமும் செய்த அளப்பரிய உதவிகளையும் எண்ணி நன்றி கூறுகின்றேன்.

1976-1978 காலப் பகுதியில், கொக்குவில் நாமகள் வித்தியாசாலையில் சக ஆசிரியராகக் கடமையாற்றும் போது எல்லோருடனும் அன்புடனும், பொறுமையுடனும் பழகி , கண்ணியத்துடன் கடமை புரிந்ததையும் , மாணவர்களை அன்பாக நேசித்ததையும் , என்மட்டில் தந்தைக்குரிய அக்கறை , கரிசனையுடன் செயற்பட்டதையும் எண்ணி மகிழ்கின்றேன். நீதி , நேர்மை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு , உயர் உழைப்பு என்பவற்றை அணிகலன்களாகக் கொண்டு பிள்ளைச்செல்வங்கள் பத்தையும் சகல நற்பண்புகளோடு கூடிய உயர் கல்வி கொடுத்து உருவாக்கியதை உலகறியும்.

உங்களுடைய பிற்காலத்தில் நீங்கள் நிறைவுடனும், திருப்தியுடனும் , சந்தோசமாகப் பல நாடுகளுக்குப் பிள்ளைகளுடன் சென்று வாழ்வை அனுபவித்து விட்டேன் என்று என்னுடன் உரையாடியதை எண்ணி நிம்மதி அடைகின்றேன்.

உங்கள் கடமையை நிறைவேற்றி ரீச்சர் மாமியை சுமங்கலியாக அனுப்பி வைத்து , நீங்கள் இறைவனடி சேர்ந்த அடுத்த நாளே அன்புடன் பழகிய கிச்சி மச்சாளையும் விண்ணுலகிற்கு , இணுவிலிலிருந்து அழைத்து விட்டீர்கள்.

நீங்கள் மூவரும் நித்திய பேரின்ப வீட்டில், முடிவில்லா ஒளி பெற்று சமாதானத்துடன் இளைப்பாற இறைவனை இறைஞ்சுகின்றோம்.

**ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வே.ஞானகாந்தன்**
**யாழ் இந்து ஆரம்ப பாடசாலை (முன்னாள் அதிபர்)**
**கொக்குவில் இந்துக்கல்லூரி**
**(ஓய்வு நிலை அதிபர்)**

## வெற்றி வாழ்க்கையாக வாழ்வியல் படிகளைப் பயன் உறுதியுடன் பற்றிப் பயணித்தவர்.

மண்ணில் பிறந்தவர்கள் எல்லோருக்கும் இறப்பு என்ற முடிவுதான் ஒன்று உண்டு. அந்த முடிவுநாளைக் கடந்தும் வாழுகின்றவர்கள் தான் எமது வாழ்க்கையின் பாடமாக திகழ்கின்றார்கள். அவ்வாறாக மறைந்தும் மறையாத மனிதத்துவத்திற்குள் பொதிந்து கிடப்பேனென விட்டுச்சென்ற விதைகளை ஆராய்ந்து பார்க்கும் போதுதான் மனித வாழ்வின் அர்த்தத்தை எம்மால் புரிந்து கொள்ள முடிகின்றது. அத்தகைய போற்றுதற்குரியவரான மன உறுதியும், திடமும், துணிவும், விடாமுயற்சியும் கொண்டு வெற்றி வாழ்க்கையாக படிக்கட்டுக்களை பயனுறுதியுடன் - பற்றிப் பயணித்தவராக அமரர் வைத்தியலிங்கம் பேரம்பலம் ஆசிரியர்களைக் காண்கின்றேன்.

உள்ளத்து நிலை கால வெள்ளத்திலே கரைந்து கழிந்தாலும், சோதனைச் சூழலில் சுற்றிய வகையில் வேதனை விரிவில் வீழ்ந்து இருந்தாலும் அமரர் அவர்கள் அவற்றை சாதனையாக மாற்றியமைத்து என்றும் எமது இதயத்தில் இடம்பிடித்து வாழ்வியலின் வழிகாட்டியாக பரிணமித்துக் கொண்டு இருக்கின்றார். பற்பல ஞானமும் கருப்பொருளும் மீதுற நற்பெரும் ஒழுக்கமும் சான்றாண்மையும் கடின உழைப்பும், சமூக நோக்கும் வாழ்வியலின் மூலம் உய்தறியச் செய்த உதாரண புருசனாக விளங்கி இருக்கின்றார். பிறந்தார், வாழ்ந்தார். இறந்தார் என்ற கதை முடிப்பில் அலட்சிய வாழ்வு வாழாது இப்படித் தான் வாழ வேண்டும் என்ற இலட்சிய வாழ்வில் கால் பதித்தவர் இவர். மண்ணகத்துதித்த மானிட நிலையினர் ஆயினும் வையகத்திலே வாழ வேண்டிய முறைப்படி வாழ்ந்தவர் ஆதலால் விண்ணகத் துறையும் விழுமிய தெய்வமாகப் போற்றப்படும் தகைமை மிக்கார்.

1925ஆம் ஆண்டுகாலப் பகுதியில் சரவணையில் பிறப்பு எடுத்து பெற்றோர்களினதும் உறவினர்களினதும் வழிகாட்டலில் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியதன் விளைவாக ஆரம்பத்தில் தோட்ட பாடசாலைகளிலும் பின்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவகச்சேரி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலும் ஆசிரியராக சிறந்த முறையில் பணியாற்றி இருக்கின்றார். இவர் தனது சேவைக்கால பணிகளில் தொண்டனாகப் பயணித்த நாட்களை கோடிட்டுக் காட்ட முடியும் யாழ் இந்து ஆரம்ப பாடசாலையில் 1963 - 1967 காலப்பகுதிகளில் ஆசிரியராகக் கடமையாற்றியிருக்கின்றார். அக்காலப்பகுதியில் பாடசாலை கொட்டகையாகவே இருந்து இருக்கின்றது. கொட்டகைகள் காலத்துக்குக் காலம் மேயப்பட வேண்டும். அவ் வேளைகளில் எல்லாம் தானும் ஒரு தொண்டனாக இருந்து அந்த வேலைகளை செய்ததாக வரலாற்று பதிவுகள் காட்டுகின்றன. இன்னொரு சிறப்பு அம்சம் என்னவென்றால் ஒருவரின் வெற்றிக்கு பின்னணியாக ஒரு பெண் இருக்கின்றார் என்பார்கள். இவரின் வெற்றிக்கு பாக்கியம்சமாக பாக்கியலட்சுமி அவர்கள் வாழ்க்கைத் துணையாக வடம்பிடித்து இருக்கின்றார்கள். யா / இந்து ஆரம்ப பாடசாலையில் பேரம்பலம் ஆசிரியையிடம் கற்றுயர்வுற்று நிற்போர் உலகறிய தனது குருநாதரை குறித்து உரைந்து போற்றும் ஊடகச் செய்திகள் எம் செவிகளில் பட்டுத் தெறித்தவண்ணம் உள்ளது, மிகுந்த பொறுமையும் கருணையும் கற்பித்தல் தேர்ச்சியும் மிக்கவராக யாழ் இந்து ஆரம்ப பாடசாலை வரலாற்றுப் பதிவுகள் சித்தரிக்கின்றன. 10 பிள்ளைகளைப் பெற்று குடும்ப வாழ்வில் தாழ்ச்சி இல்லாமலும் கற்பித்தலில் தளர்வில்லாமலும் போராடி சாதித்த தம்பதியர் வாழ்வு யாழ் இந்து ஆரம்ப பாடசாலையுடன் என்னையும் இணைக்கின்றது. பிள்ளைகளும் இப் பாடசாலைகளில் கற்றதன் பண்பால் பாசமிகு தாயின் நினைவாக நம்பிக்கை நிதியம் ஒன்றை ஸ்தாபித்து பணத்தை வைப்பில் இட்டு சிறந்த தகைமையை பெற்ற மாணவர்களிற்கு தங்கப் பதக்கம் வழங்கும் செயற்பாட்டை ஆரம்பித்து வைத்த முன்னோடிகள் தம்பிள்ளைகளின் சிறப்பு அறிந்து பெருமையுறும் வேளையிலும் தளராத முயற்சியும் கடும் பிரியத்தனத்தாலும் விசாலமான பள்ளக்காணியில் மண்ணிட்டு சோலை வளவாக்கிய உடல் உழைப்பும், முயற்சியும் வெற்றிக்கணக்கான பயணங்களாக எமக்குக் கோடிட்டுக் காட்டுகின்றன. ஆமைபோல அடக்கமாக இருந்து சவால்களுக்கு முகம் கொடுத்து வழி நடந்த பண்பாளரின் பிள்ளைகள் வேணுகா சண்முகரட்ணம் யா / வேம்படி மகளிர் கல்லூரி அதிபராகவும், அம்பிகா வைத்திய கலாநிதியாகவும் பணியாற்றிய, பணியாற்றுகின்ற நிலைகளை எண்ணிப் பூரிக்கின்றோம். ஏனையவர்கள் உலகெங்கும் புடைசூழ்ந்து பிரகாசிக்கின்றார்கள். அமரர் அவர்களின் ஆசிரியர் சேவைக்காலத்தின் இறுதிக்காலப்பணி கொக்குவில் இந்துக் கல்லூரியாகவும் அமைந்து இருந்தது. இரு பாடசாலைகளிலும் எனது சேவையும் இருந்தமையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னாரின் குடும்ப உறவுகளில் உள்வாங்கப்பட்டவனாக இருந்துள்ளேன் என நினைத்துப் பார்க்கின்றேன். 1980களில் ஓய்வினைப் பெற்றுக் கொண்டாலும் உடல் உழைப்பு மூலம் தனக்கு என வழியையும் ஆரோக்கியத்தினையும் சேர்த்துக் கொண்டவர். 27 பேரர்களைக் கண்டு பூட்டப் பிள்ளைகளையும் காணக்கூடிய வேளையில் தனது 95வது வயதில் விண்ணகம் தான் தமக்கு நல்ல இடமென யாரது மனமும் நோகாது, வாழ்வியலில் ஒரு நூற்றாண்டு காலத்தை அண்மித்து உலக வாழ்வை நீத்த அன்னாரின் ஆத்மா இறைவனின் பாதார விந்தங்களில் நீக்கமற கலக்க பிரார்த்திப்பதோடு, அன்னாரின் குடும்பத்திற்கும் எமக்கும் தோன்றாத்துணையாய் இருந்து வழி காட்டவும், நாம் எல்லாரும் அவர் விட்டுச் சென்ற எச்சங்களை தொட்டுச் சென்று பெருமை சேர்க்கவும் முயல்வதே அவரது ஆத்மாவிற்கு செய்யும் கடனாகும்.

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இமா. சிவசுப்பிரமணியம்**
ஓய்வுநிலை ஆசிரியர்
ஆனைப்பந்தி

## அஞ்சாமையும் ஆற்றலும் உடைய ஆசான்

அமரர் வைத்தியலிங்கம் பேரம்பலம் ஆசிரியர் அவர்கள் சரவணையைப் பிறப்பிடமாக கொண்டவர். எனது கிட்டிய உறவினர் சரவணை நாகேஸ்வரி வித்தியாசாலையில் கல்வி கற்று பலாலி அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியப் பயிற்சி பெற்று பல பாடசாலைகளில் தனது ஆசிரியத் தொழிலை சிறப்புறச் செய்தவர்.

எங்கள் ஊர் கண்ட சிறந்த பெரியார்களுள் ஒருவராவார். இவருக்கென்று ஒரு கூட்டம் சரவணையில் இருந்தது. ஆசிரியர் இலிங்கபிள்ளை , ஆசிரியர் அருளானந்தசிவம், ஆசிரியர் சிவசாமி, ஆசிரியர் குமரேசையா, ஆசிரியர் இராசையா போன்ற உத்தமர் தம் உறவு கொண்டு வாழ்ந்தவர். கற்பித்தலில் மட்டுமன்றி மாணவர்களின் ஒழுக்கத்தில் மிக மிக கண்டிப்பாக இருந்தவர்.

திருமணத்துக்குப்பின் ஊரைவிட்டு கொக்குவிலில் காணி பெற்று அங்கு தனது குடும்பத்துடன் நிலையாக வாழத் தொடங்கினார். அவர் வாழ்ந்த இடம் தலையாழி. அந்த இடத்தை மெல்ல சோலையாக மாற்றி அங்கு குடும்பத்தாருடன் சிறப்புற வாழ்ந்தவர். கல்லெல்லாம் மண்ணாக்கி மண்ணெல்லாம் மணியாக்கும் கைகள் அவரது கைகள் என்றால் மிகையாகாது.

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் - செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயினார்.

என்ற, பாடலுக்கு இலக்கியமாக வாழ்ந்து காட்டியவர் அமரர் அவர்கள்.

அன்பருக்கு அன்பனாய், நண்பருக்கு நல்ல நண்பனாய், ஆசிரியர்களுக்கு ஆசிரியனாய், தொழில் வழிகாட்டியாய் அதிசிறந்த விவசாயியாய் செல்வ சீமானாக இருந்தும் எளியோருக்கு எளியானாய், நீதிநெறி தவறாதவராய், போலி கௌரவத்தை கனவிலும் நினையாதவராய், உடன் பிறப்புகளுக்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவினர்களுக்கும் உதவுவராய் இன்னும் பற்பல பண்புகள் கொண்ட பூரண மனிதனாக வாழ்ந்தவர் என்பதை நான் நன்கறிவேன்.

தொண்ணூற்றைந்து ஆண்டுகள் வாழ்ந்ததால் ஆயிரம் பிறை கண்ட ஆத்மாவாக விளங்கியவர். தனது தூய்மையான மனம் போல் வெள்ளை வேட்டி, சட்டை, சால்வை அணிந்து செல்லும் காட்சி தனித்துவமானதாகும். பிள்ளைகளின் பெருமையால் பெருமை பெற்று குறையேதுமின்றி வாழ்ந்தவர்.

அஞ்சாமையும், ஆற்றலும் உடைய நல்லாசான் அவர்கள் எம்மையெல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு, தான் மீளாத்துயிலில் ஆழ்ந்துவிட்டார். அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சரவணை கதிர்வேலாயுதனை வேண்டி நிற்கின்றேன்.

அன்னாரின் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் அனைவருக்கும் உறவினர்கள் சார்பில் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஓம் சாந்தி, ஓம் சாந்தி, ஓம் சாந்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுந்தரம்பிள்ளை சிவசந்திரன்
பிரித்தானியா

## அமரர் பெருமைக்குரிய ஆசிரியர் வைத்தியலிங்கம் பேரம்பலம் அவர்களின் மறைவு குறித்து எனது நினைவுகள்

நேற்று வாழ்ந்த எமது அன்பிற்குரிய ஆசிரியர் பேரம்பலம் அவர்கள் இன்று எம்முடன் இல்லை எனும் போது என் மனதில் அவரது குடும்பத்துடன் வாழ்ந்த நாட்கள் அலைமோதுகின்றன. இவ்வேளை திருவள்ளுவர் பெருமான் குறள் எனக்கு நினைவிற்கு வருகிறது.

**" நெருநல் உளன்ஒருவன் இன்று இல்லை என்னும்**
**பெருமை உடைத்து இவ் உலகு" (குறள்-336)**

பெருமை உடைத்து என்று ஏன் கூறினார் திருவள்ளுவர் என்றால் மனிதன் ஒருவன் தான் வாழும் காலத்தில் இன்பத்துடனும் துன்பத்துடனும் பலவற்றைக்கண்டு அவற்றை ஏற்று இல்லறம் நடாத்தி வாழ்ந்த படியால் உலகத்தில் மானுடம் தொடர்கிறது என்ற உண்மை அறியத்தக்கது.

ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபதாம் ஆண்டில் அன்று எனக்கு இருபத்திரண்டு வயது, நான் கணிதம் கற்பிற்கும் ஆசிரியராக இருந்தேன். ஆசிரியர் பேரம்பலம் அவர்கள் பல ஆரோக்கியமான அறிவுரைகளை எனக்கு கூறி என்னை பல வழிகளிலும் ஊக்கிவிப்பார் "முக்கியமாக முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்" என்ற பொன்மொழிகளை என்னுடன் பகிர்ந்து கொள்ளுவார். ஆசிரியர் பேரம்பலம் அவர்களும் ஆசிரியரான துணைவியார் திருமதி பாக்கியலட்சுமி பேரம்பலம் அவர்களும் என்னை தம்மிலும் மேலாக மதித்து அன்புகாட்டி ஆதரித்தார்கள். அவர்களின் அன்பை என்றும் நான் மறக்கவில்லை. இறுதியாக நான் அவர்களது இலண்டன் வருகையின் போது இலண்டன் பாராளுமன்ற முன்றலில் அவரின் மூத்தமகன் அன்பழகனுடன் சந்தித்து யாழ்ப்பாண நிலமைகளைக் கதைத்து அறிந்தேன்.

அவர் தமிழையும் சைவத்தையும் இருகண்களாக போற்றி வாழ்ந்தவர். தமிழர் அரசியல் பற்றி முழுமையாக அறிந்தவர். ஆரம்பத்தில் இருந்தே தந்தை செல்வா அவர்களின் கருத்துக்களினால் ஈர்க்கப்பட்டு எமக்கான பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமைப்போராட்டங்களில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து செயற்பட்டவர். பத்து குழந்தைச் செல்வங்களைப் பெற்று கல்வி அறிவை ஊட்டினார். இன்று அவர்களில் இரு பெண்பிள்ளைகள் யாழ்ப்பாணத்தில் மிகச்சிறப்பாக வாழ்கின்றார்கள். இதில் ஒருவர் தனது பெற்றோரின் கனவுக்கேற்ப மிகச்சிறந்த பாடசாலைகளான வேம்படி மகளிர் கல்லூரியிலும், இராமநாதன் கல்லூரியிலும், அதிபராக கடமையாற்றியதனால் பெற்றோர், சுமை காரணமாக சாதிக்கமுடியாது இருந்த இடைவெளியை நிரப்பியுள்ளார். மற்றயவர் தானும் கணவரும் வைத்தியர்களாக கடந்த 25 ஆண்டுகளாக நாட்டின் தேவை கருதி அங்கிருந்து கடமையாற்றுவதால் பெற்றோர் மனதை மகிழ்வாக வைத்துள்ளார்கள்.

நாட்டின் அரசியல் நிலமை காரணமாக மற்றய பிள்ளைகள் எண்மரும் வெளிநாடு சென்று சிறப்பாக வாழ்ந்து வருகிறார்கள். அதேவேளையில் அவர்கள் பெற்ற பெற்றோரின் வழிகாட்டலால் தாய் நாட்டுக்கும் தாம் வாழும் நாடுகளிலும் தம்மால் இயன்றளவு பொதுப்பணியை ஆற்றுகின்றார்கள். இச்சந்தர்ப்பத்தில் இங்கு தமது பெற்றோரதும், இறைவனதும் ஆசியுடன் அவர்களை சிறப்பாக வாழ்ந்து மேலும் மேலும் இப்பணி செய்ய அவர்களின் ஆசிரியராக இருந்து வாழ்த்துகின்றேன்.

" வானுலகும் மண்ணுலகும் வாழமறைவாழப்
பான்மை தரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்று விழி நால்வாய்
ஆனைமுகனைப் பரவி அஞ்சலி செய்கிற்பாம்"

-உமாபதி சிவ ஆசிரியர்-

உமாபதி சிவ ஆசிரியர் தமிழ் பார் (உலகு) மிசை உலாவ வேண்டும் என விரும்பினார். ஆசிரியர் பேரம்பலம் அவர்களின் பிள்ளைகள் கனடா, பிரித்தானியா, அவுஸ்ரேலியா போன்ற நாடுகளில் தொடர்ந்து சைவத்தையும் தமிழையும் மற்றும் பல தமிழ் உறவுகளுடன் இணைந்து வளர்த்துக் கொண்டு இருக்கின்றனர். தேமதுரத் தமிழோசை உலகெல்லாம் பரவவேண்டும் எனப் பாரதியாரும் விரும்பினார்.

" அன்னையும் பிதாவும் முன் அறிதெய்வம்" என ஒளவையார் பாடினார்.

வையத்துள் வாழ்வாங்கு இல்வாழ்க்கையில் வாழ்ந்த ஆசிரியர் பேரம்பலம் இன்று வானுறையும் தெய்வத்துடன் இணைந்தார்.

அன்னாரின் பிள்ளைகளும் அன்னையையும் பிதாவையும் தெய்வம் போல் மதித்து நினைவு கூறும் இந் நேரத்தில் எல்லாப் பிள்ளைகளும் அமைதியாக வாழ வாழ்த்துகின்றேன்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வே. அம்பிகைபாகன்**
ஓய்வு நிலை கிராம அதிகாரி
கொக்குவில்

# மறப்பதற்கரிய பெரியார்

**"தோன்றில் புகழொடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றில் தோன்றாமை நன்று"**

என்னும் வள்ளுவர் வாக்குக்கமைய தீவகத்தில் புகழ் பூத்த சரவணையம் பதியைப்பிறப்பிடமாகவும் கொக்குவில் தலையாழியை வாழ்விடமாகவும் கொண்ட உயர்திரு. வைத்தியலிங்கம் பேரம்பலம் அவர்கள் 13.06.2020ஆம் திகதியன்று தனது 95 வயதில் இயற்கை யெய்தியதை அறிந்து ஆழ்ந்த கவலையடைந்ததுடன் அனுதாபத்தை முதற்கண் தெரிவித்துக் கொள்கின்றேன். இலுப்பையடி வைரவர் கோவிலடி,சரவணையைச் சேர்ந்த வைத்தியலிங்கம் தம்பதியினருக்கு 13.05.1925ம் திகதி பிறந்த அமரர் பேரம்பலம் அவர்கள் இளமையில் தனது கல்வியை சரவணை நாகேஸ்வரி வித்தியாலயத்தில் கற்று சிறப்புச் சித்தியைப் பெற்றதனைத் தொடர்ந்து ரம்பொட தமிழ் மகா வித்தியாலயத்தில் தனது ஆசிரியப்பணியை ஆரம்பித்து பலாலி ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியில் பயின்று பயிற்றப்பட்ட ஆசிரியராக வெளியேறி மீசாலை வீரசிங்கம் வித்தியாலயம் , யாழ். சன்மார்க்க வித்தியாலயம், யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை, வைத்தீஸ்வரா வித்தியாலயம் ஆகியவற்றில் புனிதமான ஆசிரியராக பணியாற்றி தனது ஐம்பத்தைந்து வயதில் ஓய்வு பெறும் வரை கொக்குவில் இந்துக் கல்லூரியில் கடமையாற்றி மாணவர் மனங்களில் நீங்காத இடம் பிடித்தவர்.

ஆயிரம் பிறைகண்ட அமரர் பேரம்பலம் அவர்கள் தனது வாழ்நாளில் கடமை தவறாத நற்பண்புக்குரியவராக மட்டுமல்லாது சமூக விழுமியங்களுக்கு மதிப்புக்கொடுப்பவராகவும் வாழ்ந்தது மட்டுமல்லாது எவராவது கைநீட்டி குற்றம் காண்பதற்கப்பாற்பட்டவராகவும் வாழ்ந்துகாட்டிய பெருமகன். இத்தகைய நற்பண்புகளைக் கொண்டு வாழ்ந்தமையாலேயே அவரது குடும்ப வாழ்வு குதூகலம் நிறைந்ததாகவிருந்ததை நானறிவேன். யாழ்ப்பாணம் வடக்கு மாநகர எல்லையில் மழைக்காலங்களில் நீர் நிறைந்த பிரதேசமாகவிருந்த தலையாழிக் கிராமத்தினை தமது வாழ்விடமாக்கி அப்பிரதேசங்களுக்கு மண் நிரப்பி ஆரம்பத்தில் கரும்புத்தோட்டம் செய்ததன் பெறுபேறாகவே பின்னாட்களில் பலர் இவ்விடங்களில் குடியிருப்புக்களை அமைத்ததன் காரணமாக தற்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகராக்கப்பண்புகளைக் கொண்டதாக இருப்பதற்கு அமரர் பேரம்பலம் அவர்களே காரணகர்த்தாவாக விளங்கினார் என்றால் மிகையாகாது.

இத்தகைய கௌரவத்திற்குரியவரான அமரர் பேரம்பலம் அவர்களின் குடும்பவாழ்வும் மகிழ்ச்சிகரமாக அமைவதற்கு அவரது வாழ்வு தன்னலமற்ற பிறர் நலன் கொண்டதாக இருந்ததேயாகும். அமரர் பேரம்பலம் அவர்களும் அவரது இல்லத்துணைவியாரும் கல்விப்பாரம்பரியத்தைக் கொண்டவர்களாகவிருந்த நிலையில் ஆறு ஆண் பிள்ளைகளுக்கும் நான்கு பெண் பிள்ளைகளுக்கும் பெற்றோராகியதுடன் அனைவரையும் கல்விப்புலத்தினூடாக மேன்மையுறச்செய்து மனம் மகிழும் வாய்ப்பினைப் பெற்றவர்கள்.

ஆண் பிள்ளைகளும் பெண்பிள்ளைகளில் இருவரும் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகளினால் புலம்பெயர்ந்து சிறப்பாக வாழ்ந்து வரும் நிலையில் இரண்டு பிள்ளைகள் நாட்டில் உயர்ஸ்தானத்தில் வாழ்ந்துவருகின்றனர். திருமதி வேணுகா சண்முகரத்தினம் அவர்கள் இலங்கையில் புகழ் பூத்த கல்லூரியான வேம்படி மகளிர் கல்லூரியில் அதிபராகவிருந்து ஓய்வு பெற்றவர். சகோதரியொருவர் வைத்தியக்கலாநிதியாக பணிபுரிகின்றார். அதற்கும் அப்பால் திருமதி வேணுகாவின் கணவர் சண்முகரத்தினம் அவர்கள் அமரரின் பத்து பிள்ளைகளுடன் பதினோராவது பிள்ளை போல அமரரின் இறுதிக்காலம் மகிழ்வோடு கழிப்பதற்கு பெரிதும் உறுதுணையாகவிருந்துள்ளார்.

அமரர் அவர்கள் ஆசிரிய தொழிலோடு சமூக சேவையில் தன்னை இணைத்துக் கொண்டிருந்தது மட்டுமல்லாது ஆன்மீகத்தில் மிகுந்த பற்றுள்ளம் கொண்டிருந்தவர். பிறந்த ஊரை நேசிக்கும் பண்பினரான அமரர் அவர்கள் தனது பூர்வீக கிராமத்து தெய்வங்களான இலுப்பையடி வைரவர் ஆலயம் மற்றும் கதிர்வேலாயுத சுவாமிகள் ஆலயங்களில் மேம்பாட்டுக்காக தன்னையும் இணைத்துக் கொண்டவர்.

நல்ல உள்ளம் , பரோபகார சிந்தனை மற்றவர்களை மதிக்கும் பண்பு கொண்ட அமரர் நிறைவாழ்வு வாழ்ந்து இயற்கையெய்தினார் எனினும் இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்திருப்பாரானால் இளம் சமூகத்துக்கு தொடர்ந்தும் வழிகாட்டியாகவிருந்திருப்பார். பிறப்பவர் இப்பூமியில் தங்குவதில்லை என்பதற்கிணங்க அமரரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல தலையாழி வைரவரைப் பிரார்த்திப்பதுடன் அவரது இழப்பினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினரை இறைவன் ஆசீர்வதிப்பாராகுக.

**ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**உங்கள் அன்பு மாணவன் "அபயன்"**
**சபாலிங்கம் அபயலிங்கம்**
**பிரித்தானியா**

# நினைவு கூரும் ஓர் மாணவனின் பதிவு.

ஆரம்பக் கல்வி என்பது ஒரு மாணவனை பெருவிருட்சமாக மாற்றும் ஒரு நாற்றுமேடை அதன் பொறுப்பாளர்களே ஆசிரியர்கள். அவர்கள் பணி மகத்தானது ஓய்வு பெறும்வரை அற்பணிப்போடு உழைப்பர். அவர்களிடம் கற்கும் மாணவர்கள் அவர்கள் கண்ணெதிரே சட்டத்தரணிகளாக, நீதிபதியாக, விமானியாக, உயரதிகாரிகளாக பணியாற்றுவதே அவர்களது ஆசிரிய சேவைக்கு கிடைக்கும் பரிசாக கருதலாம்.

அந்த வரிசையில் எனக்குக்கிடைத்த ஆசிரியர்களும் மகத்தானவர்களே. நான் யாழ் இந்து ஆரம்ப தமிழ் கலவன் பாடசாலையில் 1960-1964வரையிலான காலப்பகுதில் ஆரம்பக் கல்வியை கற்றுக்கொண்டிருந்தபோது என்னை மிகவும் விரும்பிய எனது வளர்ச்சியில் அக்கறை கொண்ட ஆசிரியர்கள் பலருள் குறிப்பிடத்தக்கவர்கள் அமரர் திரு. வைத்தியலிங்கம் பேரம்பலம், அமரர் திருமதி பாக்கியலக்சுமி பேரம்பலம் அவர்களுமாவர். எனது வகுப்பாசிரியையாக திருமதி பேரம்பலம் அவர்கள் இருந்த காலத்தில் தனது பிள்ளைகளான அன்பழகன், சந்திரிகா, அறிவழகன் போன்றோரும் கற்றுக்கொண்டிருந்தனர் இளமைப் பருவத்தில் வகுப்பறைகளில் பின்வரிசையில் அமருவது மிகவும் பிடிக்கும். ஆனால் எனது ஆசிரியர் என்றும் அதை அனுமதித்ததில்லை. முதல் வரிசையில் அமர்த்தி மிகவும் திறம்பட பாடங்களை நடாத்துவார்கள். மதிப்பிற்குரிய திரு வைத்தியலிங்கம் பேரம்பலம் அவர்கள் என்னையும் எப்போதும் ஓர்மகனாகவே கருதினார்கள்.

எமக்கிடையேயான உறவானது முன்ஜென்மபந்தமென்றே கூறத் தோன்றுகின்றது. ஆரம்பக் கல்வி கற்கின்ற காலத்தில் உடல் நிலையில் திடமில்லாத மாணவன் அதனால் அடிக்கடி நோய்வாய்ப்பட்டு பாடசாலை செல்லாத பல நாட்களுமுண்டு. இவ்வாறான சூழலில் கல்வியில் நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்தங்கிவிடக் கூடாதெனக்கருதி எனது தந்தையாரின் வேண்டுகோளையும் ஏற்று தங்கள் வீட்டுக்கு அழைத்து கற்றுத்தர ஆரம்பித்தார்கள். அவ்வேளைகளில் எல்லாம் உணவளித்து ஓய்வெடுக்க வைத்து தந்தைபோல் கவனித்து அத்தனை வேலை சுமைக்கு மத்தியிலும் என்னை வீடுவரை அழைத்துவந்து விட்டுச் செல்வார்கள். அன்னார் காட்டிய அன்பு, பாசம், அக்கறை அனைத்தும் இன்றும் என் கண்முன் நிழலாடுகின்றது. ஆசிரியரது குடும்பம் பெரிது தங்களது வருமானத்தில் தங்கள் பிள்ளைகளுக்கு என்ன கிடைக்கின்றனவோ அதேபோல் ஒரு பங்கு எனக்கும் கிடைக்கும். நான் அவர்களிடமிருந்து கற்றுக் கொண்டவை ஏராளம். சில ஆண்டுகளுக்குமுன் எனது ஆசிரியையின் மகள் மிகவும் பிரசித்தி பெற்ற யாழ் வேம்படி மகளிர் கல்லூரிக்கு அதிபராக இருப்பதறிந்து அவரைத்தேடிச் சென்று அன்பு கொண்ட ஆசிரியர்களிடம் நாம் பெற்ற அனுபவங்களைப் பகிரந்து கொண்டது ஒருவகைத் திருப்தியைத் தருகின்றது.

நண்பர் அன்பழகன் சிலசமயம் அபயன் என்று அழைப்பதுண்டு அவ் வேளைகளில் எல்லாம் தனது தந்தையாரின் நினைவுகள் என்னை ஆட்கொள்ளும் என்ன செய்வது காலங்கள் கடந்து வேறுபணிகளில் மூழ்கியதால் நல்வழி காட்டி ஆளாக்கிய நல்லாசிரியர்களுக்கு சிறு துளி உதவியை கூட திருப்பி செலுத்த முடியவில்லையே என்ற குற்ற உணர்வு என்னுள் இன்றுமுண்டு. அவர்களின் மனம்போல் பிள்ளைகள் நன்றாக கற்று உயர்பதவிகள் பெற்று வளமோடு வாழ்கின்றனர். அவர்களுக்கு இவ் இழப்பை தாங்கிக் கொள்ளும் சத்தியை இறைவன் வழங்கட்டும். இத்துயரில் குடும்பத்தினருடன் இணைந்து கொள்கின்றேன்.

**ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திப்போம் ஆழ்ந்த அனுதாபங்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வி.கணேசலிங்கம்.**
அவுஸ்திரேலியா
மாணவர்.

# பெருமைமிகு ஆசான் பேரம்பலப் பெருந்தகை.

**நெருநல் உளன் ஒருவன் இன்று இல்லை என்னும்**
**பெருமை உடைத்து இவ் உலகு.**
-குறள் 336-

மதிப்புக்குரிய ஆசிரியர் திரு. பேரம்பலம் அவர்களிடம் கல்வி கற்றவன் என்ற பெருமை எனக்கும் உண்டு. அவரிடம் கல்வி கற்று உயர்ந்த ஆயிரம் ஆயிரம் மாணவர்களில் நானும் ஒருவன். இடியென வந்த அவர் மறைவுச் செய்தி என்னைக் கலங்க வைத்துவிட்டது. எனது ஆரம்பக் கல்விக்கு உரமிட்டு உறுதியாக்கிய உத்தமர் அவர்.

யா/ சன்மார்க்க போதனா ஆங்கில வித்தியாசாலையில் நான் ஆரம்ப வகுப்பில் கற்றபோது எமது வகுப்பாசிரியராக இருந்தவர் ஆசிரியர் பேரம்பலம் அவர்களே. எமது பாடசாலை மிக வசதி குறைந்த நிலையில் இருந்தது. ஆனால் பேரம்பலம் ஆசிரியர் எமக்குக் கல்விச் செல்வத்தை அள்ளித் தந்து எம்மை உயர்வித்து மகிழ்ந்தார்.

அவரது ஆசிரியத்துவம் புனிதமானது. அது எம்மைப் பெரிதும் கவர்ந்திருந்தது. பிரகாசிக்கும் வெள்ளை உடை அணிந்து மலர்ந்த முகத்துடன் எமது வகுப்பறையுள் அவர் நுழையும் போது எம்மை அறியாமல் எமக்கெல்லாம் புத்துணர்ச்சி தோன்றிவிடும். தொடர்ந்து அவர் கற்பிப்பதில் கவனம் அதிகரித்தது. அத்துடன் கற்றல் நல்ல பயனைத் தந்து நிற்கின்றது.

கற்பித்தலில் அவரது ஆளுமை மலையில் மாணப் பெரியது. சிறு பிள்ளைகளாக இருந்த போது அதனைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் குறைவாக இருந்தாலும், வளர்ந்து எமக்கான வாழ்க்கையில் நாம் காலடி வைத்தபோது அந்த ஆளுமையின் சிறப்பையும் பெருமையையும் எம்மால் முழுமையாக உணர முடிந்தது. கடமை தவறாமை, "முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்" என்பதற்கமைவாக கடும் உழைப்பு, நேரம் தவறாமை, மாணவர் நலனில் அக்கறை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களுள் வாழ்ந்து அவர்களுக்கு வழிகாட்டிய திறன், என்பனவெல்லாம் அவரிடம் நாம் கண்டு உள்வாங்கிக் கொண்டவை. தற்போதும் அவை எமது வாழ்வில் உதவி நிற்கின்றன என்று கூறுவது மிகைப்படும் கூற்றல்ல.

நான் இலங்கை செல்லும் போதெல்லாம் தவறாது ஆசான் பேரம்பலம் பெருந்தகையைச் சந்தித்து ஆசி பெற்றுக்கொள்ளத் தவறுவதில்லை. மேலும் ஒரு தடவை அவர் அவுஸ்திரேலியாவுக்கு வருகைதந்திருந்த போது எனது அழைப்பை ஏற்று எனது இல்லம் வந்து என்னையும் எனது மனைவி, பிள்ளைகளையும் மகிழ்வித்திருந்தார்.

அவர் மறைவு அவரது குடும்பத்தினருக்கு மாத்திரமல்லாது தமிழ்கூறு கல்வியுலகிற்கும் பேரிழப்பே. அவர் பிரிவால் வாடும் குடும்பத்தினர்க்கும் உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அவர் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பரம்பொருளைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

**ஓம் சாந்தி. சாந்தி. சாந்தி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்மந்தி குடும்பத்தினரிற்காக
மகள்
ஞானகி ஸ்ரீரங்கன்
(வைரமுத்து மாஸ்டர் & உமையம்மா
ரீச்சரின் மகள் )

## ஆயிரம் பிறை கண்ட அற்புத மனிதர்

இறைபதம் அடைந்த எமது மாமனார் ( சம்மந்தி ) அவர்களின் நினைவுகளை மீட்டுகின்ற பொழுது கடந்த காலங்கள் பசுமையாக நினைவில் வருகின்றது. ஊரிலே மதிப்போடு வாழ்ந்த பெரியவர் பரந்த அறிவு , நிறைந்த கல்விப்புலம் சார்திறன் , ஒழுக்கம், பண்பு போன்றவற்றால் எல்லோரையும் கவர்ந்திருந்தார். பத்துப்பிள்ளைகளை பெற்ற ஐயாவின் இல்லத்தில், மகிழ்ச்சிக்கும் , கலகலப்பிற்கும் எப்பொழுதுமே பஞ்சம் இருக்காது. சிறந்த ஆசிரியராக இருந்த போதும் விவசாயத்தையும் பிரதான தொழிலாக கொண்டு " உழுதுண்டு வாழ்ந்தார்." என்னுடைய வாழ்வில் இவர் ஒரு மறக்கமுடியாத மனிதர். எனது படிப்பிலும் சரி , வெளிநாட்டு பயணத்திலும் சரி அமரர் அவர்களின் பங்கு அளப்பரியது. இன்றும் அவற்றை நான் நன்றியோடு நோக்குகிறேன். ஒன்பது தசாப்தங்கள் இப்பூவுலகில் வாழ்ந்து, பிள்ளைகள் , பேரப்பிள்ளைகளின் உயர்வு கண்டு மகிழ்ந்தவர். உதவி கோரி வருபவர்களுக்கு இல்லையென்றாது செய்பவர். இத்தகையபெரியவரின் இழப்பு ஈடு செய்ய முடியாத ஒன்று. இருப்பினும் விதியின் கணக்கில் இருந்து எவருமே தப்பிக்க முடியாது நிறைவான வாழ்வு வாழ்ந்து இன்று எம் நினைவாகிப்போய் விட்ட மாமனாரின் ஆத்மா இறைவன் பாதத்தில் சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாசத்துடனும் நேசத்துடனும்**

**முல்லை அமுதன்**

**(மருமகன் ஸ்ரீஸ்கந்தராஜாவின்**

**மைத்துனர்)**

# வாழ்வாங்கு வாழ்ந்த பெரியார்

மனிதனின் வாழ்வைச் செப்பனிட மண்ணும், மண்சார்ந்த சூழலும் இன்றியமையாதது. அந்தச் சூழலே புடம் போடவும் வைக்கும் என்பது உண்மையே நெறிதவறா வாழ்வை மனிதனுக்கு அனுக்கிரகிக்கும் பணி கடவுளிடமிருந்தே கிடைக்கிறது. ஒவ்வொரு மனிதனுக்குமான தெய்வ சங்கல்பம் சரியாக அமையுமாயின் வாழ்வின் தடங்கள் பூக்களால் அர்ச்சிக்கப்பட்டே தீரும். நமது கரங்களில் தரப்பட்ட தீப ஒளியை அணைந்துவிடாமல் அடுத்த தலைமுறைக்கு அர்ப்பணிப்புடன் கையளிக்கின்ற ஆத்மார்த்த உணர்வு வாய்க்கப்பெறுகிறதோ அல்லது ஆசீர்வதிக்கப்படுகிறதோ அங்குதான் வாழ்வதற்கான அல்லது வாழ்ந்ததிற்கான நிறைவான அர்த்தத்தை நாம் பெற்றவராவோம். இங்கு தன் வாழ்க்கையின் முழுமையை நிறைவாய், அர்த்தங்கள் நிறைந்ததாய் பயணித்தவர் அமரர் பேரம்பலம் அவர்கள் எனில் மிகையாகாது. யாழ்ப்பாணம் சரவணையை பிறப்பிடமாகக் கொண்ட அமரர்களான வைத்தியலிங்கம், அன்னபூரணி தம்பதிகளுக்கு சிரேஸ்ட மகனாகப் 13.05.1925 இல் பிறந்தார். இவர் தன் கல்வியை சரவணை நாகேஸ்வரி வித்தியாலயத்திலும், யாழ் இந்துக் கல்லூரியிலும் கற்றார்.

பெற்றோர்களிடமிருந்தும், வாழ்வியல் சூழல்களிடமிருந்தும் தன் இளவயது வாழ்வைச் செப்பனிடவும் செப்பனிட்ட வாழ்வை எதிர்காலம் நோக்கிய பயணத்தை நேர்ப்படுத்தவும் தயார்படுத்திக்கொண்டார். மேலும் இளமையில் கற்ற கல்வியும் கல்விச்சாலைகளும் கல்வியைப் புகட்டிய ஆசான்களும் இன்னும் நெறிப்படுத்திக்கொள்ள உதவின நேர்மையாகவும், பிறருக்கு உதவும் நல்லெண்ணமும் மனதுள்வளர அதற்கொப்பாக ஆசிரியத் தொழிலைத் தேர்ந்தெடுத்தார். தனக்குச் சரியெனப்பட்டதை நேர்படப் பேசும் ஆற்றலால் மாணவர்களைத் தயார்படுத்தலிலும் சிறந்த நெறியாளராகத் தேர்ந்தார்.

இவர் அமரர்களான சிதம்பரப்பிள்ளை , சிவக்கொழுந்து தம்பதியரின் மகளான பாக்கியலட்சுமி அவர்களைத் திருமணம் செய்தார். இவரின் மனைவியும் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியை என்பதும் குறிப்பிடத்தக்கது. அன்பும் பண்பும் நிறைந்த மனைவியுடனான இல்லற வாழ்வினை யாழ் வண்ணார் பண்ணையில் தொடங்கி, பின்பு தலையாழி, கொக்குவிலை நிரந்தரவதிவிடமாக்கி தொடர்ந்தார். வெறுந்தரையாக இருந்த தலையாழிக் காணியை ஓய்வு நேரத்தில் பிள்ளைகளின் துணையுடண் வளம் நிறைந்த விளைநிலமாக்கினார்.

மாணவர்களுக்கு அன்புடனும், கண்டிப்புடனும் எதிர்காலத்திற்கான சிறந்த மாணவர்களை உருவாகும் பணியில் அவருக்கு நிகர் அவரே எனும்படியாக ஆசிரியப்பணியில் சிறந்து விளங்கினார். இலங்கையிலும், புலம்பெயர் நாடுகளிலும் இவரால் உருவாக்கப்பட்ட மாணவர்கள் பலர் கல்வியில் தேர்ச்சியுடனும், சிறந்த தொழில்வாய்ப்புக்களைப் பெற்றவர்களாகவும் வாழ்வது இவரின் அர்ப்பணிப்புடனான ஆசிரியப்பணியாலேயே என்பதில் ஆச்சரியமில்லை . இவர் பலாலி ஆசிரியப்பயிற்சிக் கலாசாலையில் பயின்றார். நாட்டின் பல பாகங்களிலும் கடமையாற்றினார். அவற்றுள் ஹறக்கமக் கந்தை அமெரிக்க தமிழ்க்கலவன் பாடசாலை(பொறக்கங்க்), இறம்பொட அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, யாழ்/மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயம், யாழ்/சேணியதெரு ஆங்கில வித்தியாசாலை, யாழ்/இந்துக் கல்லூரி ஆரம்பப்பாடசாலை, யாழ்/வைத்தீஸ்வரா வித்தியாலயம், யாழ்/சேணியதெரு சன்மார்க்க மகாவித்தியாலயம், கொக்குவில் நாமகள் வித்தியாலயம், கொக்குவில் சி.சி. தமிழ்ப்பாடசாலை, கொக்குவில் இந்து பாடசாலைகள் முக்கியமானவைகளாகும்.

வாழ்க்கை ஒரு முள்படுக்கையல்ல என்பது ஆன்றோர் வாக்கு இதனை உணர்ந்தே தன் வாழ்வின் தடங்களைப் பதித்தவர்.

மண் மீதான பற்று அதிகம் நிறைந்தவர்.இனங்களுக்கிடையேயான முரண்பாடு, யுத்தம், இடப்பெயர்வு, வாழ்வுக்கான ஓட்டத்தில் கனடாவிற்குப் புலம் பெயர்ந்தார்.

கனடாவின் வதிவிட உரிமை கிடைத்தும் தன் வாழ்வின் நிறைவுப் பகுதியை தன் தாய்நிலத்திலேயே கழிக்கவேண்டும் என்பதால் மனைவியுடன் தாயகத்தில் தங்கிக்கொண்டார். எவ்வளவுதான் வசதிகள், வாய்ப்புக்கள் கிடைக்கபெறினும் தாயகச் சுகமே தனி என்பது போலவே தன் வாழ்வை கட்டமைத்துக் கொண்டார்.பிள்ளைகளைப் போலவே தன் பேரப்பிள்ளைகளுடன் அன்புடனும், வாஞ்சையுடனும் நடந்துகொண்டார்.

மாணவர்களை தன் பிள்ளைகள் போலவே அணுகிவந்தார். பிள்ளைகளையும் கல்வியாளர்களாகவும், நிறைந்த வாழ்க்கையை அவர்களுக்கு வழங்கியும் சிறப்புச் செய்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்" என்பர். இவரின் பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும் மருத்துவர்களாகவும், பொறியியலாளர்களாகவும்,அதிபராகவும் சமூக அந்தஸ்தில் உயரிய இடத்தில் இருக்கின்றபடியால் இயல்பாகவே தெய்வ அனுக்கிரகம் கிடைக்கப்பெற்றவர்கள் என்றே சொல்லத் தோன்றுகிறது. எல்லாவற்றிற்கும் அமரர் வைத்தியலிங்கம், பேரம்பலம் அவர்களின் ஒழுங்கமைக்கப்பட்ட வாழ்வியல் முறைகளும், கடவுள் பக்தியும் காரணம் என்றால் மிகையில்லை.

**"அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு."**

எவனிடம் தன்னளவில் பிடிவாதமும், கோபமும்,ஆத்ம பலமும் இருக்குமாயின் அவன் நல்ல நெறிமுறைகளைப் பேணுபவன் என்று சொல்லிக்கொள்ளலாம். வாழ்வின் மீதான பிடிப்பும், தன்னம்பிக்கையும் ஒருசேர அமையுமாயின் நிறைகுடமாகத் தன் வாழ்வை நிறைவுசெய்துகொள்ளமுடியும். இங்கு இவரும் அப்படியே நீண்ட நாள் வாழ்ந்து தன் வாழ்வை 13.06.2020 இல் பூரணமாக பூர்த்திசெய்தமை போற்றுதற்குரியது.

முகங்கோணாது முகமறியாதவர் எனினும் முகம் சுழிக்காது நட்பை வெளிப்படுத்தும் பண்பாடுள்ளவர் சில நேரங்கள் வாழ்வோட்டத்தில் பிள்ளைகளின் மீதான நெருக்கம் அதிகமில்லாத பொழுதுகள் வாய்த்திருக்கலாம். மாறாக, பேரப்பிள்ளைகளுடன் குதூகலமாய், கொஞ்சி விளையாடும் ஓய்வு பெற்றவராகவும் மனநிறைவைப் பெற்றிருந்தார்.பாகுபாடற்ற பாசத்தை அனைவர் மீதும் செலுத்தியதால் பிரியத்துக்குரியவராகிறார்.

இன்று நம்மிடையே நினைவுகளே எஞ்சி நிற்கின்றன கண்ணீருடன் வாழ்வாங்கு வாழ்ந்த பாசத்தின் காவலனின் கனவுகளை ஏற்றிப் போற்றுவோம் என்பதே அவருக்காக நாம் செய்யும் பணியுமாகும்.

**ஆத்மா சாந்தியடைவதாகட்டும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அமரர் 2010 இல் அவுஸ்ரேலியா விஜயம் செய்தபோது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லார்க்கும் இனிய எங்கள் பேரம்பலம் மாமா

எமது அப்பாவின் உறவினராக மட்டுமன்றி உற்ற நண்பனாகவும் சிறுவயது முதல் தங்கள் இறுதிக் காலம் வரை எமது குடும்பத்துடன் மிகவும் அன்புடன் பழகிய ஒருவரை நாம் இழந்து நிற்கின்றோம் அப்பா உங்களை "மச்சான்" என்றும் மாமியை "அக்கா" என்றும் அழைப்பது எமக்கு இன்றும் நினைவில் இருக்கின்றது

எம் எல்லோர்க்கும் நினைவு தெரிந்த காலம் முதல் நீங்களும் மாமியும் வேலணையிலுள்ள எமது வீட்டிற்கு வந்து பஸ்ஏறி யாழ்ப்பாணம் வருவது பசுமையான நினைவுகளாக இன்றும் உள்ளது

நாம் இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் வந்து உங்களது பிள்ளைகளும் நாமும் அதே அன்புடனும் புரிந்துணர்வுடனும் இன்று வரை பழகிவருவது தங்களதும் எமது அப்பாவினதும் அன்பு தொடர்வதை உணர்கிறோம். அது மட்டுமல்லாது எமது பிள்ளைகளுக்கும் நீங்கள் ஒரு அன்பான தாத்தாவாக இறுதி வரை பழகி அவர்களது நிகழ்வுகளிலும் பங்குபற்றி அரவணைத்ததை எமது குழந்தைகளும் அன்புடன் நினைவுகூர்கிறார்கள்.

மேலும் எமது உறவு வலுப்பெற நீங்களும் எமது அப்பாவும் நினைந்து எமது சகோதரனையும் தங்களது மகளையும் இனணத்து வைத்து பரம்பரை பரம்பரையாக எமது உறவு தொடரவழிவகுத்தீர்கள். இதனால் தங்களது நினைவு என்றும் அழியாது, அம்மா இப்பவும் சொல்லுவா பேரம்பலம்மாமாவுக்கும் எங்களுக்கும் உள்ள உறவு பழைய ஊற்று என்று.

**மாமாவின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.**

**சம்மந்தி**
**இலிங்கப்பிள்ளை குடும்பம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓங்கி ஒலித்த குரல் ஓய்வுற்றதோ

புகழ் பூத்த பொன் நாட்டின்
சரவணையூர் மண்ணில் தோன்றிய
பேரறிஞ்ஞர் பேரம்பலம்
பார் போற்ற வாழ்ந்தார்
பரந்த குணச் செம்மல்
அறம் உயர் நின்று ஆசான் பதவியை
அலங்கரித்த மதிநுதலாளன்
மங்களமான மணவாழ்கை தனில்
நெறிமுறை தவறாத நிறைமனமுடையோன்
குழந்தைகளோடு குழாவி மகிழ்ந்து
பெரியவர்களாக்கிப் பேரின்பம் அடைந்து
கண்ணியவனாகக் கடமைகள் முடித்து
புன்னகையுடன் உறவுகளை நேசிக்கும்
உயர் குணத்தோன்
ஆன்மீக வழியில் அல்லும் பகலும் அயராது சென்று
முருகனின் திருப்பாதம் முழு மனத்தோடு தொழும்
பித்தனாகிப் பின்னே சென்றோன்
உலக வாழ்கையில் புத்தனாகி
பேரம்பரலத்தில் பேரானந்தம் பெற்று
மீண்டும் பிறவா நிலை தனை அடைந்து
ஆத்மா சாந்தியுடன் அமைதியாகி
ஐயநின் பாதத்தை அலங்கரிக்கும் மலராயிருக்க
விழிநீர் சொரிந்து அஞ்சலி செய்கின்றோம்
அன்பெனும் பிணைப்பில் அருந்துயரில்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
வேலணை வங்களாவடி முருகப் பெருமானை
வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

**சம்மந்தி**
**சுந்தரமூர்த்தி குடும்பம்**
**பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் நினைவுகளோடு.........

எமது தந்தையாரின் மறைவுக்குப் பின் எங்கள் நெருங்கிய பிதாவழி உறவினர் என்று எங்களுடன் பழக, அண்ணன் என்று அழைக்க, அன்பாக நடக்க வந்தவர் பெரியண்ணன். உடன் பிறவா சகோதரர் என்றாலும் எங்கள் நினைவு தெரிந்த நாள் முதலாக அன்புடன் நாம் அழைக்கும் பெரியண்ணா! பாசம் என்ற பதத்துடன் எம்மை தங்கைகளாக நினைத்து இன்முகத்தோடும் எம் இல்லம் என்றும் வருவீர்கள் எம்மை அரவணைத்துப் புத்திமதிகள் சொல்வதை நாம் மறவோம்.

நாங்கள் வளர்ந்த பின்பும் எமது நன்மை தீமைகள் அனைத்திற்கும் குடும்பமாய் வந்து சிறப்பித்துச் செல்வீர்கள்.தங்கள் நினைவாற்றல் மறையும் வரைக்கும் தங்கை என்று சொல்லி ஆச்சியின் இல்லம் என்று சுகதுக்கங்களையும் பகிர்ந்து கொள்ளும் நீங்கள் தேவையான தருணத்தில் அவாவுக்கு ஆறுதலையும் வேண்டிய ஆலோசனைகளையும் புத்திமதிகளையும் கூறுவீர்கள். அவை என்றும் மறக்க முடியாதவை.

உங்கள் அந்த அழகு வதனம் அன்பான அரவணைப்பு கபடமற்ற புன்னகை பண்பான பேச்சு, பரிவும் பாசமும் எங்கள் மூவரின் மனத்திரையில் என்றும் நினைவிருக்கும். உடல் அழிந்தாலும் புகழ் அழியாது

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்**

**தெய்வத்துள் வைக்கப்படும்"**

**என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டி நிற்போம்.**

**உடன் பிறவாச் சகோதரிகள்**
**அனந்தலெட்சுமி (ஆச்சி)**
**பத்மாவதி (ராசாத்தி)**
**மகாலட்சுமி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SARAVANAI SEVA MANTRAM - CANADA

சரவணை சேவா மன்றம்

11 Malborough Road, MARKHAM, ON. L6B 0E9

(A Registered Non-Profit Organization Reg 1603453)

வேலவன் துணை

July 03, 2020

## சேவை மிக்க உத்தமத்தூண்

எங்கள் சரவணை சேவா மன்றம் சுமார் 62 வருடங்களுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்டது . சங்க்தின் ஆரம்பகால அங்கத்தவர்களில் ஒருவரும் கனடாவிலும் பின்னர் கொக்குவிலிலும் வாழ்ந்து அண்மையில் இறைபதம் அடைந்த பேரம்பலம் ஆசிரியர் எமது சங்கத்தின் ஆரம்பகால அங்கத்தவர் மட்டுமல்லாது எங்கள் சங்கத்தின் முக்கிய தூணாக விளங்கி வந்தவர்.

சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம் 1922ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு அப்போது S.S.C. வரை வகுப்புக்கள் நடந்து வந்தன. அப்பரீட்சையில் சித்தியடைந்து ஆசிரியப்பணியில் சேர்ந்து பெரும்பணியாற்றியவர்களில் பேரம்பலம் ஆசிரியரும் ஒருவராவர்.

கனடா நாட்டை விட்டு தாய்நாட்டுக்கு செல்வதற்குமுன்னர் எங்கள் அம்மாவை வந்து பார்த்து அம்மாவிடம் பிரியாவிடை பெற்றுச்சென்றார். எனது மைத்துனர் பேரம்பலம் மச்சான் 2019ம் ஆண்டு பங்குனி மாதம் எங்கள் குடும்பம் அன்னாரை அவர் இல்லத்தில் சந்தித்துவந்தது எங்கள் மனதிற்கு ஆறுதலாக இருக்கின்றது.

பேரம்பலம் ஆசிரியர் ஆற்றிய சேவைகளையும் அவரின் குணாதிசயங்களையும் எழுதினால் ஒருசில வரிகளில் எழுதி முடிக்க முடியாது. அன்னாரின் பிரிவு முதலில் அவரது குடும்பத்தை மட்டுமல்ல சரவணை, கொக்குவில் மக்களைப்பொறுத்த வரையில் பேரிழப்பாகும். அன்னாரின் வழியில் அவர் விட்டுச் சென்ற பணிகளை தொடர்ந்து செய்வதே அவருக்கு நாம் செய்யும் நன்றிக்கடனாகும்.

அன்னாரின் ஆத்மா, எம் குலதெய்வம் சரவணை - தேவபுரம் ஸ்ரீகதிர் வேலாயுதசுவாமியின் பாதங்களில் சாந்தி பெற எல்லாம் வல்ல வேலவனின் பாதம் பணிகின்றேன்.

**இங்ஙனம்**

**சீ. சண்முகராஜன்**

**தலைவர்**

**சரவணை சேவா மன்றம், கனடா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மைத்துனர் வவாவின் மனைவி மஞ்சுவுடனும் அவரின் தாயாருடன் அமரர் அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு பேரம்பலம் ஆசிரியர் பற்றிய ஓர் சில நினைவுகள்

எனக்கு 1980 ஆண்டில்தான் திரு பேரம்பலம் ஆசிரியருடரான பழக்கம் ஏற்பட்டது. பேரம்பலம் மாஸ்ரர் என்று தான் அவரை அன்பாக அழைப்போம். உண்மையில் அவரது மூத்த மகன் அன்பழகன் 1978இல் இருந்தே எனது நண்பராவார். நாங்கள் இருவரும் யாழ் கச்சேரியில் ஒன்றாக அப்போது வேலை செய்தோம்.

இருந்த போதும் 1980 இல் எமது திருமணத்திற்கு முக்கியமாக இருந்து பேசி முடித்து வைத்தவர்கள் பேரம்பலம் மாஸ்ரரும் அவர்களது பாரியார் திருமதி பாக்கியலட்சுமி பேரம்பலம் அவர்களும் தான். இவர்கள் இருவரும் எனது மனைவி மணியின் மைத்துனர்,மைத்துணியாவர். இவர்களின் சிநேகிதனான எனது மைத்துனர் திரு அருளம்பலம் ஆசிரியர் மூலமாக எமது திருமணத்தை தங்கள் வீட்டு திருமணம் போல நடாத்தி வைத்ததை என்றும் நன்றியுடன் நினைவுகூறுகின்றோம். இன்று நாங்கள் பிள்ளைகள் பேரப்பிள்ளைகளுடன் சந்தோசமாக இருப்பதற்கு அவர்களின் பணியே முக்கிய காரணமாகும்.

இதன்பிற்பாடு மாஸ்ரர் மனைவி பிள்ளைகள் சரவணைக்கு வந்தால் எங்கள் வீட்டிற்கு வந்து போவார்கள். நாங்களும் அவர்களின் தலையாழி வீட்டிற்கு சென்று வருவோம். இவர்கள் ஆசிரியத் தம்பதிகளாக இருந்ததாலோ என்னவோ மிகுந்த அன்புடனும் பண்புடனும் பழகுவார்கள்.

இந்த தலையாழி வளவில் நாங்கள் கண்டகாட்சிகள் மிகவும் ஆச்சரியப்பட வைக்கும். மாஸ்ரர் அவர்கள் பல வேளைகளில் ஒரு விவசாயி போன்று வேர்த்துக் கொட்ட பல வேலைகளைச் செய்து கொண்டிருப்பார். அவரின் அயராத உழைப்பினால் அந்த வளவு ஒரு சோலையாக மா, பலா, வாழை, கரும்பு, மரக்கறித்தோட்டம் எனப் பசுமையாக இருக்கும்.

அவர்கள் தங்கள் பிள்ளைகளையும் தமது கடின உழைப்பால் அன்புடனும் ,பண்புடனும், நல்ல கல்வி அறிவூட்டி வளர்த்ததனை நாம் எம் கண்ணூ டாகப் பார்த்தோம். அது மாத்திரமல்லாது அவர்கள் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும், ஊரவர்களுக்கும் என பல உதவிகளையும் செய்ததுடன் நல்ல சமுதாய வழிகாட்டியாக வாழ்ந்தார்கள். "தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் அறியப்படும்" என்பது போல இன்று அவர்களின் பிள்ளைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரப்பிள்ளைகளும் பல துறைகளிலும் அன்புடனும் பண்புடனும் அவர்கள் வழியில் வாழ்ந்து வருகின்றார்கள்.

தம்பதிகள் இருவரும் தாம் கஸ்ரப்பட்ட அளவிற்கு தமது பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுடன் வெளிநாட்டிற்கும் வந்து நிறை வாழ்வு வாழ்ந்தனர் என்றால் மிகையாகாது. மாஸ்ரர் அவர்களை நாங்கள் ஒவ்வொரு முறையும் இலங்கைக்கு போகும் போது போயப்பார்ப்போம் அவரின் மகள் மலரும் மருமகன் சந்திரா அவர்களும் மிகக் கவனமாக அவரைப் பார்த்து வந்தார்கள்.இது அவர் செய்த புண்ணியம் என்று தான் சொல்லவேண்டும்'அவர் செய்த நற்பண்புகள் அவரை இறைவன் நிறை வாழ்வு வாழ வைத்து தனது திருவடியில் சேர்த்துள்ளார் என்றே சொல்லலாம்.

அவரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிராத்திப்பதுடன் அவரது பிரிவில் துயருறும் குடும்பத்தினர் ஆறுதலடையவும் ஆண்டவனை வேண்டுகின்றோம்.

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி**

**உங்கள் அன்பின் நினைவுகளுடன்**
**திரு திருமதி முருகையா + மணி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் அன்பிற்குரிய மச்சான்

பேரம்பல மச்சான் என்று அன்புடன் அழைக்கும் எமது மச்சான் அவர்கள் இவ்வுலகை விட்டுப் பிரிந்துவிட்டார். இருந்தாலும் எமது உறவுகள் உள்ளத்தில் நிறைந்து நிலைத்து நிற்பார்.

அவரின் ஆத்மா சாந்தி பெற எனது முதல் வேண்டுதல், ஒரே ஊரில் பிறந்தோம். உற்றார் உறவுகளுடன் வளர்ந்தோம். மச்சான் என்றாலே உங்கள் அன்பு, பண்பு, அறிவுரை, அழகான புன்னகை, கடின உழைப்பு அத்தனையும் கண்முன்னே வந்து போகிறது. நான் ஒவ்வொரு முறையும் விடுமுறையில் குவைத்தில் இருந்து ஊருக்கு வருடந்தோறும் பலமுறைகள் வந்தாலும் உங்களைப்பார்க்காமல் திரும்புவதில்லை அது உண்மையில் நான் செய்த புண்ணியமே.

காலமாற்றத்தால் வெவ்வேறு ஊர்களில் நாம் வாழ்ந்தாலும் சொந்த ஊர் என்றதும் ஊரின் மீதும், உறவுகள் மீதும் நீங்கள் காட்டும் அக்கறை அளவிடற்கரியது.

சரவணைக்கிராம மக்கள் மனதில் உங்கள் நினைவுகள் என்றும் நிறைந்து நிலைத்து நிற்கும். எமக்கு எல்லாம் அன்புகாட்டி, அரவணைத்து நின்ற நீங்கள் ஓர் பெரிய பலம் என்றால் மிகையாகாது.

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !**

**அன்புடன்**
**உங்கள் மச்சான் ராசன்**
**( சந்திரசேகரன் )**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் நீங்கா நினைவுகளில் பெரியண்ணா .....

சைவமும் தமிழும் சேர்ந்து மணம் கமழும் அழகிய ஊராம் சரவணையின் புகழ் பூத்த குடும்பங்களில் ஒன்றான எங்கள் குடும்பம் பற்றிய நிகழ்வுகள் எனக்கும் என் மூன்றாம் வயதிலிருந்து நினைவில் ஓரளவிற்கு தெளிவாக உள்ளன.

பெத்தப்பா , பெத்தாச்சி ( அம்மாவின் பெற்றோர் ) , அப்பு , அம்மா , பெரியண்ணர் , சின்னண்ணர் , ஆசையண்ணர் , சீனியண்ணர் , தங்கை தேவி இவர்களுடன் எங்களுடன் இருந்தவர்கள் சீனி மாமா மற்றும் குஞ்சியாச்சி ( அம்மாவின் சகோதரர்கள் ) மூத்தம்மான் எங்கள் அப்புவின் தங்கையை திருமணம் செய்து தனிக்குடித்தனமாக சரவணையிலேயே இருந்தார். சின்னம்மான் கரம்பனில் மணமுடித்து அங்கேயே இருந்தார். இவர்களைத்தவிர வட்டுக்கோட்டை யாழ்.கல்லூரியில் S.S.C படித்துக் கொண்டிருந்த ஆசையம்மானும் J.S.C படித்துக்கொண்டிருந்த ஆச்சியம்மானும் அற்ப ஆயுளில் இறந்து விட்டார்கள். இவர்களை பெரியண்ணாவுக்கு தெரிந்திருக்கலாம் ஆனால் எனக்குத்தெரியாது. அப்புவின் தம்பிமார்களில் இளையப்பர் ,சீனிவாசகம். திருநாவுக்கரசு இவர்களை எனக்குத் தெரியும் நல்லப்பு என நாம் அழைக்கும் நல்லதம்பி சிங்கப்பூரில் காலமாகிவிட நல்லாச்சியும் இரு பெண்களும் ஊருக்கு வந்த பின்னர் தான் அவர்களை நான் அறிவேன் அவர்களின் மூன்றாவது குழந்தை அவர்களின் தாய்வழிப்பாட்டனுடன் சரவணையில் இருந்ததை முன்பே அறிவேன். மற்றும் சின்னப்பு . சீனியப்பு , குஞ்சியப்பு அவர்களின் பிள்ளைகளையும் அறிவேன்.

இவ்விபரங்களை இத்துடன் நிறுத்தி எங்கள் குடும்பத்திற்கு வருகின்றேன். நான் மூன்றாம் வகுப்பு படிக்கும் பொழுது தான் நானும் தங்கையும் தான் அம்மா பெற்ற பிள்ளைகள் என்பதை அறிந்தேன். ஒவ்வொருவருடமும் அக்காவின் திவசம் என்று அண்ணாமார் நால்வரும் பூணூல் போட்டு நாகலிங்கம் ஐயர் முன் அமர்வார்கள். ஒருமுறை நானும் அமரப்போகின்றேன் என்று அடம்பிடித்த என்னை சின்னண்ணர் தூக்கிக்கொண்டு போய் " நாங்கள் நால்வரும் அம்மாவின் அக்காவின் பிள்ளைகள் அவ இறந்துவிட்டா , உங்கள் தாய் உயிருடன் இருப்பதால் நீ திவசம் செய்யக்கூடாது " என்று கூறினார். அப்ப ஏன் எங்கள் தாயை அம்மா என்றும் உங்கள் தாயை அக்கா என்றும் கூறுகிறீர்கள் என்று கேட்ட எனக்கு, பெரியண்ணரை பின்பற்றி தாமும் அவ்வாறு அழைப்பதாக பதில் வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியண்ணர் என்றால் எங்கள் எல்லோருக்கும் மரியாதை கலந்த பயம். ஆனால் தங்கை தேவிக்கு அவரிடம் பயம் இல்லை. ஆனாலும் நல்லா அடிவாங்கியிருக்கிறான். நானும் ஒரே ஒரு முறை மட்டும் நாவல் பழ ஆசையால் அவரிடம் அடி வாங்கியதும் உண்டு. ஆனாலும் பெரியண்ணர் எங்கள் ஒருவரையும் பிறருக்கு விட்டுக்கொடுக்க மாட்டார்.

பெரியண்ணர் தனது ஆரம்பப்பள்ளிப்படிப்பை சரவணை நாகேஸ்வரி வித்தியாசாலையில் படித்தார். அவரின் பள்ளித் தோழர்கள் கணக்காளர் பத்மநாதன், ஆசிரியர் அருளானந்தசிவம், ஆசிரியர் குமாரையா, பண்டிதர் கணபதிப்பிள்ளை (கூட்டுறவுச்சங்கம் ) , ஆசிரியர் இலிங்கப்பிள்ளை மற்றும் பலர் உள்ளனர். அவர்கள் பள்ளம்புலம், புளியங்கூடல் பொன்ற இடங்களைச் சார்ந்தவர்கள். அவர்கள் பெயர்கள் நினைவில் இல்லை.

குஞ்சியாச்சி இராமநாதன் கல்லூரியில் படித்து ஆசிரியர் பயிற்சியும் முடிந்தபின் இரத்தினபுரியில் ஆசிரியராக நியமனம் பெற்றுச் சென்ற பொழுது பெரியண்ணரும் அங்கு சென்று தனது மேற்படிப்பை முடித்து ஆசிரியர் பத்திரமும் பெற்றார். பின்னர் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் ஆசிரியர் பயிற்சியினை முடித்தார். அக்காலத்தில் தவணை விடுமுறைகளில் வீட்டிற்கு வரும் அண்ணாவிற்கு பெரிய வரவேற்பு காத்திருக்கும் அம்மாவிற்கு என்றும் செல்லப்பிள்ளை பெரியண்ணர் தான் - பெரியதம்பி என்று தான் அவரை அழைப்பார்கள். அண்ணருக்கு இடியப்பம் பிடிக்காது. கெதியாகப் பசிக்கும் என்று அவருக்கு வெங்காயம் , மிளகாய் உருளைக்கிழங்கு, நல்லெண்ணையில் பொரித்து பிட்டைப்பிரட்டி முட்டைப்பொரியலுடன் கொடுப்பார். பெரியண்ணா மேல் அம்மா வைத்திருந்த அளப்பரிய பாசந்தான் ஆசிரியர் ஒருவருக்கு மணம் பேசி வந்த பொழுதும் மூத்தம்மானின் சொற்படி சின்னம்மானின் எதிர்ப்பை மீறி அப்புவை மணம் முடித்தார். அம்மாவிற்கு எல்லாமே பெரியதம்பி தான். தவணை விடுமுறைகளில் எங்களுடன் இலுப்பையடியில் வட்ட ஓட்டம் ( Round race ) , கிளித்தட்டு . வட்டக்கோடு ( சடுகுடு மாதிரியானது ), வார் ஓட்டம் விளையாடும் பெரியண்ணர் தனது நண்பர்களுடன் நாகேஸ்வரி வித்தியாலயத்திற்கு முன்பாக உள்ள வயல்களில் கைப்பந்து விளையாடுவார்.

குஞ்சியாச்சி இடமாற்றம் பெற்று வேலணை அம்மன் கோயிலடியில் இயங்கிய வேலணை வித்தியாசாலையில் கற்பித்தார். இப்பொழுது உள்ளது போல பேரூந்து சேவைகள் அப்பொழுது இல்லாத காரணத்தால் குஞ்சியாச்சியின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணத்திற்காக வாங்கிய ஒற்றை திருக்கை வில் வண்டியும் கறுவல் எருதும் அவவிற்கு பிடிக்காமல் போக பெரியண்ணா ஆசையண்ணாவின் உதவியுடன் சில்லாலையில் இருந்து ஆசனத்திலும் இருபக்கம் சாயுமிடத்தில் மெத்தையுடன் கூடிய திருக்கைவில் வண்டில் வாங்கி வந்தார். அது அவாவிற்கு மிகவும் பிடித்ததாக இருந்தது, சீனியண்ணர் தான் சாரதியாக குஞ்சியாச்சியைக் கூட்டிச் சென்று பாடசாலைக்கு இறக்கி விட்டுத்தான் சரஸ்வதி வித்தியாசாலையில் படித்தார். பற்பல காரணங்களால் தள்ளிப் போய்க்கொண்டிருந்த குஞ்சியாச்சியின் திருமணத்தை நடத்தி அம்பிகைக்கு ஒரு மணவாழ்க்கை அமைத்துக்கொடுக்க முடியவில்லையே என்ற மனக்குறையுடன் எங்கள் அப்புவும் 1949ம் ஆண்டு மாசிமாதம் இவ்வுலகை நீத்தார், அதனால் பெரியண்ணர் விவேகானந்த அச்சுக்கூட நிறுவனங்களில் ஒருவரான செல்வநாயகம் உதவியுடன் வண்.வடமேற்கு விதானையாரை மணம் பேசினார். குஞ்சியாச்சிக்கும் இந்த வரன் பிடித்துப்போக சில நாட்களிலேயே உதறான் வீட்டு மேற்குத்திண்ணையில் பிள்ளையார் பூசையுடன் தாலி கட்டப்பட்டு திருமணம் நடந்தேறியது. இது பெரியண்ணரின் சாதனைகளில் உச்சமானது

அடுத்ததாக ஒரு பெரும் சாதனைக்கும் அவர்தான் ஒரே ஒரு காரணமாவார் S.S.C இரண்டுதரம் எடுத்தும் ஆங்கிலத்தில் 35 புள்ளிகள் எடுக்க முடியாமல் மூன்றாம் முறையாக ஆங்கில பாடம் மட்டும் எழுதிவிட்டு , பரமேஸ்வராக் கல்லூரிக்கு செல்வதை நிறுத்திவிட்டு , 5ம் வகுப்பு தொடக்கம் S.S.C வரை சில மாணவர்களுக்கு வீடு சென்று கற்பித்து வந்த என்னை ஒரு நாள் தேடி வந்த பெரியண்ணர் , நான் ஆங்கிலப்பாடத்தில் சித்தியடைந்ததை தெரிவித்ததுடன் இந்தியா சென்று பட்டப்படிப்பு படிக்க வேண்டும் அதற்கான முயற்சிகளை பார்க்கும் படி தினமும் ஊக்குவித்தமையால் தான் நான் இன்று ஒரு வேதியல் பட்டதாரியாகி ஆசிரியராக ஓய்வு பெற்றேன்.

குடும்பத்திற்கு மட்டுமன்றி பெரியண்ணாவின் முயற்சிகளும் பணிகளும் ஊருக்கும் சமூகத்திற்கும் என விரிந்தவை. இவர் தனது நண்பர்களுடன் இணைந்து சரவணை சனசமூகநிலையம் உருவாக்கினார். அதில் ஒரு பகுதியாக வாசிகசாலையும் இயங்கியது இங்கு கரம் , கைப்பந்து போன்ற விளையாட்டுக்களை அறிமுகப்படுத்தியமை என்பது இவரது முயற்சியே. இன்னும் பாலசுப்பிரமணியம் விதானையாரின் உதவியுடன் சரவணையில் அரச மானியம் பெற்று பல கிணறுகள் வெட்டியமையையும் குறிப்பிடலாம். கிராம சபைத்தேர்தலில் அப்பாசுந்தரத்தை எதிர்த்து ஆசிரியர் நடராசாவிற்கு ஆதரவாக பிரச்சாரம் செய்து அவரை வெற்றிபெற வைத்ததில் பெரும் பங்கு பெரியண்ணாவினது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களில் அப்பாசுந்தரம் எங்களுக்கு சித்தப்பா , ஆசிரியர் நடராசா அம்மான் முறை இதனால் பெரியண்ணரைக்கண்டித்த மூத்தம்மான் மேல் எங்களுக்கெல்லாம் ஒரே ஆத்திரம்.

பெரியண்ணரின் இல்வாழ்க்கையும் அவர் மனத்திற்கினிய மங்கையுடன் ஆரம்பித்து முத்துக்கள் போல பத்து பிள்ளைச்செல்வங்களை தந்தது.

**"தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவைய த்து**
**முந்தி யிருப்பச் செயல்" (குறள் 67)**

**" மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை**
**என்நோற்றான் கொல் எனும் சொல்" (குறள் 70)**

என்ற திருவள்ளுவர் வாக்கிற்கேற்ப தனது பிள்ளைகளை வளர்த்தார். அவர்களும் தம் தந்தைக்கு இப்பிள்ளைகளைப் பெற என்ன தவம் செய்தேன் என எண்ணுமாறு பெயர் பெற்றனர்.

இவ்வாறு நிறைந்த வாழ்வு வாழ்ந்து தில்லைக்கூத்தன் திருவடியடைந்த பெரியண்ணா என்றும் தன் எச்சங்களில் நிறைந்திருப்பார்.

**சீர்மேவும் சரவணையில் கார் கொண்ட மேகங்கள்**
**கார் பொழியும் கழனியெல்லாம் கதிர் பெருகி போரடிக்கும்**
**ஏர் சுமந்த குடும்பத்தில் பெயர் பூத்த பேரம்பலத்தான்**
**ஊர் போற்ற வாழ்ந்த பெரும் பேராளன் சிவமானான்.**

**நின் நினைவுகளுடன்**
**தம்பி துரை**
**(கேதாரநாதன்)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரரின் 93 ஆவது பிறந்ததினத்தன்று அவரது இளைய சகோதரரும் அவர்தம் பாரியாரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பான பெரியண்ணா

நாங்கள் பெரியண்ணா என்று அன்பாக அழைத்த எங்கள் அண்ணர் எனப் பெருமையுடன் கூறிய திரு. வைத்தியலிங்கம் பேரம்பலம் அவர்கள் இன்று எங்கள் இடையே இல்லை. என்றும் அன்புடன் தம்பி என்று என்னை அழைத்து மகிழ்த எங்கள் பெரியண்ணன் இன்று இறைவனடி சேர்ந்து விட்டார். பிறப்பவர் இறப்பது நியதி என்பதை உணர்ந்தாலும், நிறைவான வாழ்கை வாழ்பவர் என்பதை அறிந்தாலும் , அன்பிற்குரியவர்களின் இழப்பு எம் மனதில் பெருந்தாக்கத்தை ஏற்ப்படுத்துகின்றது. எனது எண்ணங்களையும் நினைவுகளையும் பின்னோக்கி இழுக்கின்றது. பெரியண்ணாவின் இழப்பின் பின்னர் இத்தகைய ஒரு மனநிலையில் இருந்தே இதனை எழுதுகின்றேன்.

எனது இளம் வயதில் தந்தையையும் தாயையும் இழந்த எனக்கு பெரியண்ணா அவர்கள் தாயுமாகவும் தந்தையுமாகவும் இருந்து வாழ்கையில் தடுமாறிய போதெல்லாம் தக்க அறிவுரைகளை வழங்கி வழிநடத்தினார் என்றால் அது மிகையாகாது.

பெரியண்ணாவை நினைக்கும் பொழுது என்றும் பெரியண்ணியையும் இணைத்தே நான் நினைப்பது வழக்கம். இவர்களது குடும்ப வாழ்க்கை மிகவும் சிறப்பானது ஒருமித்த கருத்துடையவர்களாக வாழ்ந்து அறிவாற்றல் மிக்க பிள்ளைகளைப் பெற்று வளர்த்த சிறப்பு மனங்கொள்ளத்தக்கது. இவர்களது வாழ்கையில் இருந்து இளவயதில் எனது மனதில் பதிந்த சில விடயங்களை இன்றும் எனது வாழ்கையில் அவர்கள் நினைவுடன் நான் கடைப்பிடிக்கின்றேன்.

பெரியண்ணா சிறந்த ஆசிரியர் மட்டுமல்ல குடும்பப்பற்று, ஊர்ப்பற்று, தமிழ்ப்பற்று, தேசப்பற்று நிறைந்த அன்பான சான்றோர் ஆவார். அவரது பிள்ளைகள் அனைவரையும் அவரைப் போலவே தேசப்பற்றாளர்களாக வளர்த்து கல்வியூட்டி சிறந்த நிலைக்கு ஆளாக்கியுள்ளார். இது பாராட்டத்தக்கது.

பெரியண்ணா அவர்கள் சில ஆண்டுகள் பெரியண்ணியுடன் கனடாவில் உள்ள பிள்ளைகளுடனும், லண்டனில் உள்ள பிள்ளைகளுடனும் அவுஸ்ரேலியாவில் உள்ள மகனுடனும் சிறப்பாக வாழ்ந்து பின்னர் இறுதிக்காலத்தை சொந்த இடத்தில் வாழ வேண்டும் என்ற தணியாத தாகத்தில் யாழ்ப்பாணம் சென்று தனது வீட்டில் மகிழ்ச்சியாக இருந்து காலத்தைக் கழித்து இறைவனடி சேர்ந்தமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோருக்கும் கிடைக்கக் கூடிய நிகழ்வல்ல. அது மனத்திடம் கொண்ட பெரியண்ணா போன்றோருக்கே கிட்டும் பாக்கியமாகும்.

அவரது ஆத்மா தில்லையில் ஆனந்தத் தாண்டவம் புரிகின்ற சிவகாமி அம்பாள் சமேத தில்லை நடராசப் பெருமான் திருவடி நிழலில் இன்புற்றிருக்க அப் பெரும்பாதத் தாமரைகளை வேண்டிக் கொள்கின்றேன்.

**உலகிற்கு சான்றோரானார்**
**எனக்குத் தாயும் தந்தையுமானார்.**

**அருமைத்தம்பி**
**திருநாவுக்கரசு இளமுருகன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் மாமா

நாங்கள் எமது இளம் பருவத்தில் தந்தையை இழந்து, ஆறாத்துயரத்தில் மூழ்கியிருந்த வேளையில் எம்மீது அன்பும் பாசமும் காட்டி அரவணைத்து எமக்கு ஆறுதலாகவும், பாதுகாவலராகவும் இருந்து நல்வழி காட்டிய எங்கள் மாமாவின் இழப்பு எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தியுள்ளது.

அப்பாவை இழந்து நாங்கள் எல்லோரும் யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் வேளையில் எமக்கென்று நிரந்தர வதிவிடமொன்றை அங்கு உருவாக்குவதில் பல வழிகளில் உதவியும் ஒத்தாசையும் வழங்கிய எங்கள் மாமாவின் பங்களிப்புகள் இப்பொழுதும் எங்கள் மனதில் நீங்காமல் இருக்கின்றது.

நாம் எல்லோரும் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசித்து வந்த போதும் நாம் யாழ்ப்பாணம் செல்கின்றபோதெல்லாம் எமது மனதில் கட்டாயம் போய் பார்க்க வேண்டும் என்று எண்ணத்தில் இருந்தவர் எங்கள் மாமா

அதேபோல் மாமாவும் அவுஸ்திரேலியா வந்த போது நம்மோடு கழித்த சில நாட்கள் இப்போதும் எமது மனதில் நிலைத்து நிற்கின்றது

மாமாவின் ஆளுமையும், கம்பீரம் நிறைந்த தோற்றமும், புன்முறுவல் பூத்த முகமும் எப்போதும் எம் எண்ணங்களில் இருந்த படியே இருக்கும்.


அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவதுடன் அவரது பிரிவால் தவிக்கும் பிள்ளைகள். மருமக்கள், பேரப்பிள்ளைகள் உடன் நாமும் சேர்ந்து இத்துயரத்தில் பங்கு கொள்கின்றோம்.

**மருமக்கள்**
**(தெய்வேந்திரம்பிள்ளை குடும்பம்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அமரரின் மைத்துனரும் உற்ற நண்பருமாகிய அமரர் தெய்வேந்திரம்பிள்ளை ஆசிரியரின் பேத்தி அருணியின் பூப்புனித விழா இலண்டனில் நடைபெற்றபோது.




அமரர் சிட்னி அவுஸ்ரேலியாவில் மருமக்களுடனும்
சகோதரி இரத்தினபூபதி தெய்வேந்திரம்பிள்ளையுடனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் 2010இல் மருமகன் Dr. சிதம்பரகுமாரையும் மருமகள் கலாராணியையும் சிட்னி, அவுஸ்ரேலியாவில் சந்தித்த போது.



அமரர் அவர்கள் 2010 ஆம் ஆண்டு September மாதம் Australia சென்றபோது மருமகன் சிவக்குமார் அவர்களுடனும் மகன் அறிவழகன் அவர்களுடனும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினோதாவின் புலம்பல்

என் அன்புக்குஞ்சையா ,

உங்கள் பிரிவால் நாங்கள் இங்கு தவிக்கிறோம்
தந்தையாகவும் , ஆசானாகவும் இருந்து தன் பிள்ளை
போல் வளர்த்தெடுத்த குஞ்சையாவே, இனி இவ்வுலகில்
எனக்கு வழிகாட்ட யாருமின்றித்தவிக்கின்றேன்

அன்பிற்கு இலக்கணமாய் வாழ்ந்த உறவே
ஆதரவு தந்து எம்மை அணைத்த உயிரே
இவ்வுலகில் ஈடு இணை உமக்கு யாருமில்லை
இப்போது அருகில் இல்லை என்று எண்ண இயலவில்லையே...!

உறவு சொல்லி அழைக்க ஆயிரம் உறவு இருந்தும்
குஞ்சையா என்றழைக்கும் மாறா அன்பு தந்தாயே
எல்லோரும் இன்புற்றிருக்க என்றும் எண்ணுவாரே
இப்போது எம்மை தவிக்க விட்டுச் சென்றதேனோ?

இது ஒரு தற்காலிகப்பிரிவு தான்
காலதேவன் அழைக்கும் போது
இறை அருட் கொண்டு எங்கள் பந்தம்
ஆத்மா சங்கமத்தினுள் தொடரும்.

**இ.வினோதா**
**LONDON**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது அன்புக்கும் பெரு மதிப்புக்கும் உரிய குஞ்சையாவே.

இன்றைய நாளில் நன்றி உணர்வோடு தங்கள் ஞாபகங்களைப் பகிர்ந்து கொள்கின்றோம்.

சரவணையிலிருந்து இடமாற்றம் பெற்று யாழ்ப்பாணம் சென்றபோது, தன் பிள்ளைகளைப் போலவே தன் மனைவியின் அக்கா (பராசக்தி பிள்ளைகளையும்) ஆதரித்து கல்வியிலே சிறப்புப் பெற வேண்டும் என்று எங்களையும் அழைத்துச் சென்று, யாழ் இந்துக் கல்லூரியில் படிக்க வைத்தீர்கள்! எமது சிறு பராயத்தில் தந்தையாய். ஆசானாய், அன்புடனும் கண்டிப்புடனும் இருந்து வழி நடத்தினீர்கள்.

சமய நெறிகளிலும் சிவபுராணம் யோகாசனம் போன்றவற்றை படிக்கவும் நீதி, நேர்மை, ஒழுக்கம், கட்டுப்பாடு பற்றி எடுத்துக் கூறி வழிகாட்டியாய் இருந்து ஊக்குவித்தீர்கள்.

கதிர்காமம், கருகம்பானை, கீரிமலை, சரவணை போன்ற இடங்களுக்கு அழைத்துச் சென்றீர்கள்.

இது மட்டுமா தோட்டச் செய்கை, துலாமிதிப்பு விவசாய சம்பந்தமான சகல வேலைகளைப் பற்றித் தெரிந்து கொள்ள வசதியாக இருந்தது கடின உழைப்பு மட்டுமல்லாது அரசியல் சார்பான அறிவுகளையும் அறிந்து கொள்ள வகை செய்தீர்கள்.

ஆசிரியர் குடும்பம் ஆனதால் பாட சம்பந்தமான அறிவுகளையும் பெற்றுக் கொள்ள வசதியாக இருந்தது, தங்களின் மிகச் சிறந்த வழிகாட்டல்களில் வாழும் பாக்கியம் கிடைத்த பெரும், பேறாகக் கருதுகிறேன்.

தங்களோடு வாழ்ந்த பசுமையான நினைவுகள் நெஞ்சில் நீங்காத நிறைவாக இருக்கிறது, அனைவரையும் உங்கள் சொந்த பிள்ளைகள் போல வழிகாட்டி வாழ வைத்த அன்புத் தெய்வமாக நாம் கருதுகின்றோம்.

ஆறாத் துயருடன் எங்கள் கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கை ஆக்குகின்றோம்.

**ஓம் சாந்தி, ஓம் சாந்தி, ஓம் சாந்தி**

**இலட்சுமண பிள்ளை பராசக்தி குடும்பம்.**
**வினோதா, பத்மயோகன், பத்மா, ஸ்ரீதரன், தெய்வேந்திரராசா, கங்கா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்பின்**

**பிறவாமகள் கலா**

ஐயா ,

எத்தனை வருடங்கள் சென்றபின்பும், நான் தலையாழியில் உங்கள் வீட்டில் கழித்த நாட்கள் இன்றும் பசுமையான நினைவுகளாக வந்து போகும். நான் எப்போது வீட்டுக்கு வந்தாலும் உள்ளார்ந்த நேசத்துடன் என்னை வரவேற்கும் உங்கள் புன்னகை தவழும் முகத்தை நினைத்தால் இன்றும் நெகிழ்ச்சியாக இருக்கிறது. பிரதியுபகாரம் பாராமல் மற்றவருக்கு உதவி செய்யும் தன்மையையும், மற்றவர்களுடன் நேசத்துடன் பழகும் மனப்பான்மையினையும் உங்கள் பிள்ளைகளுக்கு ஊட்டி வளர்த்த பெருமை உங்களையே சாரும்.

நான் மருத்துவக் கல்லூரியில் படிக்கும் காலத்தில் என்னுடைய குடும்பத்தைப் பிரிந்திருந்த துன்பம் தெரியாமல் இருந்ததற்கு, என்னுடைய உற்ற சிநேகிதி அம்பிகா மட்டுமல்ல, உங்கள் குடும்பத்திலுள்ள அனைவரும் காட்டிய அன்பே காரணம்

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறேன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறாமகன் ஈசன் குலசேகரத்தின் புலம்பல்

என் பெரியப்பா ( வைத்தியலிங்கம் - பேரம்பலம்) நெஞ்சம் கனத்தவனாய் , கண்ணீர் கொண்டு உங்கள் நினைவுகள் சுமந்தவனாய் என்றும் வாழ்கின்றேன் உங்களைப்பற்றி நான் கூறுவதற்கு இந்தப்பக்கங்கள் போதாது. ஆண்டுகளானாலும் சொல்லி முடியாது

பெரியப்பா நீங்கள் என்னை 2ம் ஆண்டிலிருந்து உங்களுடன் கூட்டிச் சென்றீர்கள். உங்கள் பிள்ளைகள் என் சகோதரர்கள் பத்துப்பேருடன் பதினொரு பிள்ளையாய் என்னையும் - பெரியம்மாவின் அக்காவின் பிள்ளைகள் ஆறு பேரையும் சேர்த்து பதினேழு பேரையும் உங்கள் பிள்ளைகளாக எந்தக்குறையுமின்றி எங்கள் எல்லோர் மனமும் மகிழ நீங்களும் பெரியம்மாவும் பண்பாகவும் பாசத்துடனும் பக்குவமாக வளர்த்தீர்கள் -

பெரியப்பா நீங்கள் கண்டிப்பானவர் தான் ஆனால் மிகவும் பாசமானவர். நீங்கள் ஆசிரியர் மட்டுமல்ல நற்பண்பானவரும் தலைசிறந்த நல் விவசாயியும், உங்களின் நற்பண்பினால் எல்லோர் மனங்களிலும் நிலையானீர்கள்.

என்னை கூட்டிக்கொண்டு வந்த நாள் முதல் என் வாழ்விற்கு நீங்கள் பட்டபாடு நான் மறவேன் கல்விமட்டுமல்ல , விவசாயத்தையும் நன்றாய் கற்றுத்தந்தவர், கற்றுத்தந்த விவசாயமும் இன்றும் என் வாழ்வில் தொடர்ந்தே உள்ளது. கனடாவில் இன்று நான் வாழ்வதற்கு நீங்களும் - பெரியம்மாவும் அமைத்த வழியை என்றும் மறவேன் இது மட்டுமல்ல என் தங்கையின் திருமணத்தை முன்னின்று கன்னிகாதானம் செய்து வைத்து அவர் நல் வாழ்விற்கு வழிசமைத்ததும் நீங்களும் பெரியம்மாவும் தான்.

என் தந்தை, உங்கள் தம்பியின், இறுதிக்கிரியைக்கு இங்கிருந்து நாம் வருமுன்பே வேண்டியவையெல்லாம் செய்ததும் நீங்களும் என் சகோதரர்களும் தான் உங்கள் வளர்ப்பில் இருந்து வளர்ந்தவன் நீங்கள் கனடாவில் வந்து இருந்த நேரத்தில் தான் எல்லையற்ற அன்பு, பாசத்தின் அர்த்தத்தை உங்களில் கண்டேன் நீங்கள் எனக்கு பத்து சகோதரர்களை தந்துள்ளீர்கள். உங்கள் மாமி என்றும் என்னை கூறுவார் "நீ தான்டா பெரியவா பேரம்பலம்" என்று நாங்கள் எல்லோரும் ஒரே குடும்பமாக உங்களினதும் பெரியம்மாவினதும் ஆசியுடன் என்றும் வாழ்வோம்.

பெரியப்பா நீங்கள் பெரியம்மாவிடமும், அப்பாவிடமும், சித்தப்பாவிடமும் சேர்ந்துவிட்டீர்கள். உங்கள் ஆத்மா சாந்திபெற ஸ்கந்த புர முருகனை நானும் என் மனைவி பிள்ளைகளும் வேண்டுகின்றோம்.

**உங்கள் நினைவுகளுடன்**
**பெறாமகன்**
**ஈசன் குலசேகரம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பான பெரியப்பா

வைத்திலிங்கம் குடும்பத்தின் தலைமகன் எங்கள் பெரியப்பா, பெரியப்பா என்றவுடன் அவரது கம்பீரமான நடை, உடை, நேர் கொண்ட பார்வை எனது மனகண்ணில் வருகின்றது. மிகவும் ஆற்றல் மிக்க ஆளுமை நிறைந்த அன்பான, பண்பான, பாசமுள்ள பெரியப்பா. அவரிடம் நாம் கற்றுக்கொள்ள வேண்டியது அவரது விடாமுயற்ச்சியும் அயராத உழைப்பும், பெரியப்பா எங்களுடைய குடும்பத்திற்க்கு எல்லா சந்தர்ப்பத்திலும் பக்கபலமாக இருந்துள்ளார். எங்களுடைய அண்ணாவின் இறுதி நிகழ்வின் போது பண உதவியுடன் மன தைரியத்தையும் தந்து உறுதுணையாக இருந்தவர். வீட்டில் தோட்ட வேலை நடக்கும் போது தனது பிள்ளைகளுடன் வந்து சகல உதவியும் செய்து எங்களுடைய குடும்பத்தின் முன்னேற்றத்திறக்கு முயற்ச்சி கொடுத்தவர். என்னுடைய தம்பி அறிவையும் தனது பத்து பிள்ளைகளுடன் பதினொராவது பிள்ளையாக அரவணைத்து கல்வி கற்பதற்க்கு ஊக்கம் கொடுத்தவர். எங்களுடைய அப்பாவின் பாசமான அண்ணர்.

**"வையத்துள் வாழ் வாங்கு வாழ்பவன்**
**வான்உறையும் தெயவத்துள் வைக்கப்படும்"**

**பெரியப்பா உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிராத்திக்கின்றோம்**

**பெறாமகன்**
**பகீரதன் - பொன்னுத்துரை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிமரேஸ் சங்கிலித் தாக்கம்
## *(polymerase chain reaction (PCR)*

twenty twenty வருடமானது பல எதிர்பார்ப்புக்களுடன் உதயமாகியது இருப்பினும் கூட்டல்கள் கழித்தல்களாகியது. சிலரின் பெருக்கல்கள் பிரித்தல்களாகியது. இத்தருணத்தில் எல்லாத் தரப்பினரதும் காயத்திரி மந்திரமாக உள்ளவை கொரோனா கோவிட் - 19, PCR- சுயதனிமைப்படுத்தல், முகக்கவசம் அணிதல், மற்றும் சமூக இடைவெளி பேணல் போன்றனவாகும். ஆகவே PCR பற்றிய எளிமையான விளக்கம் ஒன்றை இங்கு பதிவு செய்கின்றேன்.

கொரோனா என்பது மனிதனில் சுவாச நோயை ஏற்படுத்தக் கூடிய RNA வைரசு ஒன்றாகும். இந் நோயானது இருமல், தும்மல், உமிழ்நீர் மற்றும் மூக்கிலிருந்து வெளியேறும் திரவம் போன்றவற்றால் பரவக்கூடியது.

COVID 19 என்பதன் விரிவான விளக்கமாவது

CO - Corona

Vi - Virus

D - Disease

19 - Formerly this

disease was referred to as ' 2019' novel coronavirus

Question

What is the testing procedure for corona virus disease 2019 (Covid 19)

Answer

Conduct all testing for Several Acute Respiratory SyndromeCorona virus 2 (SARs - Caov - 2) in consatation with a heath care providor.

அந்த வகையில் Covid 19 வைரசின் தன்மையை யதார்த்தமாக DNA க்குப் பதிலாக ஒரு சிறிய RNA துண்டைக் கொண்டிருப்பதனால் PCR test இல் மேலதிக மூலப்பொருளாக Reverse Trans criptase நொதியம் சேர்க்கப்பட வேண்டும். இந் நொதியமானது RNA ஐ DNA ஆக மாற்றும் PCR பொறியில் மூலப் பொருள்களை குழாய் ஒன்றில் வைத்து வெப்பநிலைகளைத் தன்னியக்கமாக மாற்றுவதனால் சில மணித்தியாலங்களில் Positive / Negative பெறுபேற்றை வாசித்துக் கொள்ள முடியும்.

PCR என்பது உயிர் உள்ள கலங்களில் நடைபெறும் DNA பின்புறமடிதலை ( DNA Replication) ஒத்த செயன்முறையொன்றாகும். ஆனால் இது invitro முறையில் ( செயற்கையாக ஆய்வுகூடமொன்றில் மேற்கொள்ளப்படும் முறை) செய்யப்படுகின்றது. இங்கு சில DNA துண்டை படித்தகடாக வைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லாயிரக்கணக்கான பிரதிகள் பெற்றுக்கொள்ளப்படும். இதனால் PCR பொறியில் இணைக்கப்பட்டுள்ள கணனி உணர்திறனடைவதனால் வாசிப்புக் ( REadings) கிடைக்கின்றது. கண்ணாடிக் குழாயில் DNA படித்தகடு primer நான்கு வகையான Deoxyribonucleotides (DATP, DGTP, DTTP, and DCTP) tag DEna Polymerase மற்றும் Mg2+ என்பன மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படுகின்றன.

இங்கு மூலப் பொருட்கள் வெப்பவட்டங்களுக்கு உள்ளாகும். ஒவ்வொரு வெப்பவட்டமும் denaturation (இயற்ளையகற்றல்) anneling (காச்சிப்பதனிடல்) மற்றும் Extension (நீளங்) தன்னியக்கமாக மாற்றும் ஆற்றலுள்ளவை. போதியளவு நேரம் வழங்கப்படும் போது DNA படித்தகட்டின் நிரப்புகின்ற பிரதியொன்று பூர்த்தி செய்யப்படும்.

முதலாம் வெப்பவட்டத்தின் இறுதியில் ஒவ்வொரு பட்டிகையினதும் ஒரு பிரதி பெறப்படும். எனினும் இலக்கு DNA தொடரியின் தேவையான பிரதியை விட நீளமான பிரதியே முதலில் கிடைக்கும்.

ஒரு சோடி PCR வட்டத்தின் பின்னர் இலக்கு DNA இன் சரியான பிரதியொன்று தொகுக்கப்பட்டிருக்கும். அதன் பின்னர் இலக்கு DNA இன் பிரதிகள் அடுக்குக்குறிக்குரிய (exponential manner) முறையில் ஒவ்வொரு வட்டத்தின் முடிவிலும் தொகுக்கப்படும் வகைக்குரிய PCR ஒன்று 35-40 வெப்ப வட்டங்களைக் கொண்ட இறுதியில் விருப்புக்குரிய DNA தொடரியின் மில்லியன் கணக்காண பிரதிகள் DNA மூலக்கூறின் ஒரு தனித்த படித்தகட்டில் இருந்து தோற்றுவிக்கப்படும். PCR பொறி ஒன்றில் வெப்பவட்டங்கள் PCR மீண்டும் மீண்டும் தன்னியக்கம் நடைபெறும். PCR கலவை PCR குழாய்களில் தயார் செய்யப்பட்டு PCR பொறியிலுள்ள well இனுள் புகுத்தப்படும். PCR மிகத் திருத்தமான DNA பிரதிகளை கூடுதலான எண்ணிக்கையில் பெற்றுக்கொள்ளும் விரைவான முறையொன்றாகும்.

இக் கட்டுரையை எமது பாசமிகு பெரியப்பாவுக்காக சமர்ப்பிக்கின்றேன். திருவாளர் வைத்தியலிங்கம் பேரம்பலம் சிறந்த ஆசிரியர் மட்டுமல்ல அவர் ஒரு வாழ்நாள் சாதனையாளராகும்.

அன்னாரின் மதிப்பிற்குரிய தம்பி தவம்" (அமரர் பரநிருபசிங்கம் பரம்சோதி - உள்ளூராட்சி ஆனையாளர் - வடக்கு, கிழக்கு மாகாணம்) குடும்பத்தினர் சார்பாக

**மனோகரி மயூரன்**

**41/4,3rd Lane**

**Champion Road, Kokuvil East.**

**0777 143340**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயாவின் பிரிவுத் துயர்

எனது மாமா காலம் சென்ற பேரம்பலம் ஆசிரியருடன் பல காலம் யாழ்ப்பாணத்திலும் கனடாவிலும் பழக சந்தர்ப்பங்கள் கிடைத்தன. மாமாவிற்கு எனது கிராமமான ஏழாலை நன்றாக பிடிக்கும். காரணம் ஏழாலை ஒரு விவசாயக்கிராமம். அவரைப்போன்று பல பயிற்றப் பட்ட ஆசிரியர்கள் இளைப்பாறியபின்னர் சிறு விவசாயம் செய்வார்கள். எனது அப்பா காலம் சென்ற வைரமுத்து ஆசிரியரும். எனது ஒன்று விட்ட அண்ணா காலம் சென்ற இராசரத்தினம் ஆசிரியரும், மாமாவின் உற்ற நண்பர்கள். மாமா கொக்குவிலில் விவசாயம் செய்வது போன்று அப்பாவும் இராசண்ணையும் ஏழாலையில் சிறு விவசாயம் செய்தார்கள். அவர்கள் ஒருவரை யொருவர் சந்திக்கும் போது விவசாயம் பற்றியும். தங்கள் பாடசாலை அனுபவங்கள் பற்றியும் கதைத்துக் கொள்வார்கள். மூவரும் தமிழ் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள். மலையக பாடசாலைகள். சிங்கள கிராமப் பாடசாலைகளில் கனகாலம்படிப்பித்தார்கள். அந்த அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுவார்கள் நாங்கள் கேட்டு மகிழ்வோம்.

நான் மாமா உடன் பல பொது விடயங்களைப் கதைப்பேன். நம்நாட்டு அரசியல். உலக அரசியல். பொருளாதாரம், சரித்திரம். பூமிசாஸ்திரம், சமயம். விளையாட்டு. விஞ்ஞானம் எல்லாவற்றையும் கதைப்போம். சகல விடயங்களையும் அவருடன்கதைக்கலாம். தூய தமிழ்கதைப்பார். பயிற்றப்பட்ட ஆசிரியருக்குடைய விளக்கமான தெளிவான தமிழ் கதைப்பார். அவரது தூய வெள்ளைவேட்டியும், நீண்ட கை சேட்டும். சால்வையும்நிமிர்ந்த நடையும் புன்சிரிப்பும் யாரையும் கவர்ந்து விடும். அவரது கடுமையான உழைப்பால் தலையாழியில் கரும்புத்தோட்டம் உண்டாக்கினார். அது ஒரு பெரிய சாதனை நாங்கள் முதன் முறையாக கரும்புத் தோட்டம் கண்டது தலையாழியில்தான்.

அவரது பழக்கங்களை நாங்களும் கற்றுக் கொண்டால் பல நன்மைகள் உண்டு .கடும் உழைப்பு , நேர்மை, விடாமுயற்சி என்பன அவரது சில சிறப்பு அம்சங்கள். உடற்பயிற்சி செய்வதில் தவறமாட்டார். சாப்பாட்டிலும் கடும் ஒழுக்கம் கடைப்பிடிப்பார். கண்டதையும் சாப்பிடமாட்டார், கண்ட நேரத்தில் சாப்பிடமாட்டார் இந்த உலகத்தில் கடவுள் கருணையால் நல்ல வாழ்கை வாழ்ந்து விட்டு இறைவனடி சேர்ந்து விட்டார். அவரது ஆத்மா சாந்தியடைய வேண்டி நிற்கின்றோம்.

**மூத்த மருமகன்**
**பரந்தாமன் குடும்பம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்திறன் மிக்க மாமா (வை.பேரம்பலம் ஆசிரியர் நினைவாக)

அமரர் வைத்தியலிங்கம் பேரம்பலம் அவர்கள் வாழ்க்கை உன்னதமானது. அனைவராலும் தெய்வமாக போற்றக் கூடியவர். அன்னார் சரவணையில் பிறந்து நாகேஸ்வரி வித்தியாலயத்தில் கல்வி பயின்றவர்.

கல்வி கற்கும் போதே மிகுந்த இறை பக்தி நல்லொழுக்கமும் உடையவராக இருந்து பாடசாலை அதிபரினால் பாராட்டுப் பெற்றவர். கற்கும் காலத்தில் சிறுவயதில் இருந்தே விவசாயத்தில் கூடிய முயற்சி எடுத்து செய்து வந்துள்ளார்.

இவர் பாடசாலைக் காலத்தில் துலாவில் தண்ணீர் இறைத்துக்கொண்டு தோட்டத்தில் வேலை செய்யும் சமயம், அதிபர் மருதனார் பாடசாலைக்கு செல்வதைக் கண்டவுடன் தான் பாடசாலைக்கு ஓடிச் செல்வதாகவும் இவரை கண்டதும், அதிபர் தோட்டத்தில் வேலை செய்துவிட்டு வருவது எனக்கு தெரியும். இருந்தாலும் கல்வியில் கவனமாக ஊக்கம் எடுக்கும் படி அன்புடன் கூறுவதாக எம்முடன் பகிர்ந்து கொண்டார்.

அன்னார் ஆசிரியர் பயிற்சி கலாசாலை பரீட்சையில் சித்தி அடைந்து பலாலி ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி பெற்று சிறந்த ஆசிரியர் ஆனார். இவர் பல பாடசாலையில் மாணவர்களின் முன்னேற்றத்துக்காக அரும்பாடுபட்டு கற்பித்தவர் என அறிகிறேன்.

இவரிடம் கல்வி கற்ற மாணவர்கள் பலர் உயர் பதவி நிலைகளில் உள்ளதை அவதானிக்க முடிகிறது. இவர் தனது 55 வது வயதில் கொக்குவில் இந்து பிரதம பாடசாலையில் ஆசிரியர் பணியை நிறைவு செய்துள்ளார். அன்னார் சிறுவயதில் தாயாரை இழந்து சிறிய தாயாரோடு வாழ்ந்த காலத்தில் சகோதரர்களை முன்னேற்றுவதற்காக பல முயற்சிகளை எடுத்தார்.

இவர் 1954 இல் தனது உறவினரான சிதம்பரப்பிள்ளை பாக்கியலட்சுமியை மணம் முடித்து 10 பிள்ளைகளை பெற்று நல்வழிப்படுத்தி சிறப்புடன் வாழ்ந்தார். தனது பிள்ளைகள் மட்டுமன்றி பெறாமக்கள், மருமக்கள் ஆகியோரின் முன்னேற்றத்திற்கும் தன்னாலான உதவிகளைச் செய்து உயர்வடைய செய்தவர். மேலும் உறவினர் அல்லாத தம் குடும்ப நண்பர்களையும் தனது வீட்டில் வைத்து பல்கலைகழகத்தில் உயர் படிப்பிற்கு உதவியவர். எங்கள் குடும்பம் சிறு வயதில் இருந்தே, அவரின் குடும்பத்துடன் நெருங்கிய உறவை பேணி வந்துள்ளோம். இவர் திருமணத்திற்கு பின் யாழ்ப்பாணத்தில் வந்து வாழ்ந்த சமயம் எனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவும் சகோதரர்களும் இவர்களுடன் நெருங்கிய தொடர்பை பேணி வந்தது குறிப்பிட தக்கது. மேலும் அன்னார் எமது சொந்த சகோதரர் போல் எமது வீட்டின் நன்மை தீமைகளில் கலந்து கொள்பவர். எமது மருமகன் ராகுலன் யாழ் இந்து ஆரம்பப்பாடசாலையில் கற்பதற்கு வழிகாட்டி, நான் எனது அம்மாவுடனும் ராகுலனுடனும் யாழ்பாணம், கொக்குவிலில் வசித்து கல்வி கற்க வழிகாட்டினார்.

எமது சிறு வயதில் எமது தந்தையை இழந்ததால் இவர் எமது குடும்பத்துடன் மிகுந்த அக்கறையும் அன்பும் கொண்டவராக எமது வளர்ச்சியில் பங்களிப்பு செய்து வந்தார் நான் இவரை என் அண்ணன் என்று அழைத்து வந்தேன். 1987 இல் எனது தாயாரை இழந்ததால் நான் கொக்குவிலில் தனியாக வசித்து வந்தேன். என்னுடன் சிலகாலம் மருமகன் யாழ் இந்து கல்லூரியில் கற்றபோது எனது இரண்டாவது தமக்கையாரும் அவரும் என்னுடன் இருந்தார்கள். பின்பு அவர்கள் வெளிநாடு சென்றமையால் நான் தனித்து இருந்தேன்.

இந்த நேரத்தில் 1993 இல் அன்னார் என்னை தன் இரண்டாம் மகளுக்கு பெரியோர்களின் ஆசிர்வாதத்துடனும் ஆலோசனையுடனும் அவரது இல்லத்தில் கிடுகு பந்தல் அமைத்து திருமணத்தை விமரிசையாக நிறைவேற்றி வைத்தமை இன்றும் என் நினைவில் உள்ளது.

எமது திருமணத்தின் பின் அருள் அழகன் (3 வது மகன்) அழைப்பின் காரணமாக தன் குடும்பத்தினருடன் கனடா சென்று அங்கு மூத்த மகளுடன் வசித்து வந்ததுடன் தனது ஏனைய பிள்ளைகளுக்கும் படிப்படியாக திருமணத்தை நிறைவேற்றி வைத்து தனது கடமையை செவ்வனே ஆற்றி மகிழ்ந்தார்.

அவரது 3வது மகள் அம்பிகாவை கனடா சென்று 6 மாதத்தில் அவரது விருப்பின் பேரில் இங்கு வந்து தனது மருத்துவ உள்ளக பயிற்சி நிறைவு செய்து வைத்தியராக சொந்த மண்ணில் சேவையாற்ற அனுமதித்தார். இதன் காரணமாக அவரது நோய்க்காலத்தில் அவரது 3 வது மகளும் அவரது துணைவர் ஸ்ரீஸ்கந்தராசாவும் அவருக்கு தேவையான வைத்திய உதவிகளை எனது வீட்டில் வழங்கி வந்தனர்.

தனது இறுதி மகளுக்கு தன் நண்பரும் உறவினருமான இலிங்கப்பிள்ளை ஆசிரியரின் மகன் சேந்தனை ஜெர்மனில் திருமணம் செய்து மகிழ்ந்தார். பின் சேந்தன் தன் குடும்பத்துடன் கனடாவிற்கு வந்து அங்கு வாழும் போது அவர்களுடன் வசித்து வந்தார். இக் காலத்தில் பல பேரக்குழந்தைகளைக் கண்டு அவர்களது வளர்ச்சியிலும் கல்வியிலும் பங்கேற்று அவர்களை பாடசாலைக்கு அழைத்து சென்று ஒத்தாசை வழங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2000 ஆம் ஆண்டில் யாழ் வந்து சிலகாலம் எம்முடன் தங்கி மகிழ்ந்து மீழவும் கனடா சென்றார். 2001 இல் எனது மாமா மாமி தங்கள் மண்ணில் எம்முடன் வசிக்க வேண்டும் என்ற பெரு விருப்பில் அசைவ உணவை விட்டு சைவ உணவுக்கு மாறி எம்முடன் வசித்தனர்.

இவர்கள் தம்பதிகளாக கனடா, அவுஸ்ரேலியா, ஜேர்மன், இந்தியா, மலேசியா பேன்ற நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு உலகம் சுற்றிய தம்பதிகள் என்ற பெயர் பெற்ற பெருமைக்குரியவர்கள்.

வெளிநாடு சென்ற சமையம் எம் மீது கொண்ட அன்பினாலும் நம்பிக்கையாலும் தனது மூத்த மகளிற்கு சீதனம் வழங்கிய காணியை விலத்தி மீதிக்காணியை எமது பெயரில் வழங்கினார், ஏனைய பிள்ளைகளுக்கு தேவைப்படும் போது அவர்களுக்கு காணியை பிரித்து வழங்குமாறு எனக்கு பணித்தார். 2017 இல் ஏனைய பெண் பிள்ளைகளுக்கும் ஐயா கையொப்பமும் இடப்பட்டு எழுதிவழங்கினேன்.

மாமா தனது முதிர் வயதில் மோட்டார் சைக்கிள் ஓடுதலில் பெரு விருப்புக்கொண்டு ஓடினார், தான் நட்ட மரங்களில் மாங்காய், ஈரப்பலா, ஜம்பு என்பன காய்க்கும் போது ஏறிப்பிடுங்கி எங்களுக்கு வழங்குவதை மறக்க முடியாது. அவர் ஒரு சில வருடங்கள் வயது முதிர்வின் காரணமாக அமைதியாக வீட்டில் வசித்தார். இச் சமயத்தில் நானும் எனது மனைவியும் மகளும் அவருக்கு தேவையான உதவிகளை வழங்கினோம். நான் சிறு வயதில் அப்பாவை இழந்தமையால் எனது அப்பாவை பார்ப்பது போல் நினைத்து மாமாவை பராமரித்து வந்தேன். கடந்த 2 வருடங்களுக்கு மேல் அவருக்கு உதவியாக ஒருவரை நியமித்து கூடிய கவனம் செலுத்தி பார்க்க முடிந்தது. இக் காலத்தில் அவரின் பிள்ளைகள் மாறி மாறி வெளிநாடுகளில் இருந்து வருகை தந்து மாமாவை பார்வையிட்டு சென்றமையும் மூத்த மகன் அன்பழகன் தனது 2 வது மகனுடன் 2018 இல் வருகை தந்து 3 மாதங்கள் வீட்டில் தங்கியிருந்து மாமாவை பராமரித்ததில் திருப்தியடைந்தார். பின்னர் மூத்தமகள் பாப்பாவும் மருமகன் பராவும் மகள் உமாவுடன் 2019 இல் பார்த்து சென்றனர். 2019இல் 2வது மகன் அறிவழகன் அவரது மனைவி, மகன் மருமகளுடன் வருகை தந்து மாமாவிடம் ஆசீர்வாதம் பெற்று மகிழ்வுடன் சென்றனர். 2019 நவம்பரில் கடைசி மகள் சசி ஒரு மாதம் வீட்டில் தங்கி இருந்து அவரை சிறப்பாக பராமரித்தும் உதவிக்கு நின்ற பிள்ளை ராணிக்கு முதியவரை பராமரிக்கும் பயிற்சியையும் சிறப்பாக வழங்கி சென்றிருந்தார். அதன் பின்னர் கடைசியாக 3 வது மகன் அருளழகன் வருகை தந்து மாமாவை பார்த்து சென்றதுடன் ஒரு மாதம் வீட்டில் தங்கியிருந்து தலையாழி காணியை துப்பரவு செய்து தென்னை நாற்றுக்களை நட்டு மகிழ்வுடன் இவ் வருடம் தை கனடா திரும்பினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமா நான் தமிழ் மொழி மூல அச்சகர் பயிற்சி பெறும் போது தானும் பயிற்சி வகுப்பில் கலந்து கொன்டு பயிற்சி புத்தகங்களையும் வாங்கிச் சென்றமை இந்த வயதிலும் அவரது ஆர்வத்தை பறை சாற்றுவதாக அமைந்தது. இவர் தனது முதுமைக்காலத்திலும் புத்தகம் வாசித்தல் பத்திரிகை பார்த்தல், தொலைக்காட்சி பார்த்தல் என்பவற்றில் தனது நேரத்தை செலவழித்து வந்தார். அவர் இறப்பின் இறுதிக் கிழமையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு வைத்தியர்களால் மிகுந்த அக்கறையுடன் சிகிச்சை வழங்கப்பட்ட நிலையில் 13.06.2020 இல் எனது மனைவி, மகள் முன்னிலையில் அமைதியாக இறையடி சேர்ந்தார்.

காலத்தின் சூழ்நிலையால் அவரது இறுதிச்சடங்கில் சகல பிள்ளைகளும் கலந்து கொள்ள வேண்டும் என்ற ஆதங்கத்தில் இருந்தும் கோவிட் 19 காரணமாக வெளிநாட்டில் இருப்பவர் எவரும் கலந்து கொள்ள முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. இதனால் நானே முன்னின்று மாமாவின் இறுதிக்கடமைகளை எனது சகலன் ஸ்ரீஸ்கந்தராஜா வின் உதவியுடனும் சிறப்பாக நிறைவேற்றினேன். இதனை வெளிநாட்டில் வசித்து வந்த மைத்துனர் மைத்துனிகள் கணனி தொழில்நுட்பத்தின் ஊடாக நேரடியாக பார்வையிட்டும் மனக்கவலைகளை மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டும் ஆறுதல் அடைந்தனர். இது அன்னாரின் ஆத்மாவிற்கு சாந்தியை நிச்சயமாக ஏற்படுத்தும் என நம்புகின்றேன். அன்னார் சிவனடி சேர்ந்து எம் அனைவர்க்கும் ஆசி வழங்குவாராக,

**"மேன்மைகொள் சைவ நீதி**
**விளங்குக உலகமெல்லாம்"**

**அன்புள்ள,**
**மருமகன்**
**நா.சண்முகரத்தினம் (சந்திரா)**
**தலைவர் அகில இலங்கை சைவ மகா சபை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு மாமா

என் அப்பாவுடன் சிறுவயதில் உங்கள் வீட்டுக்கு வரும் போதே உங்களை எனக்குத் தெரியும். நீங்கள் அப்பாவின் உற்ற நண்பன், மச்சான் என்று தான் அழைப்பார். அவர்களின் உறவு ஆரம்பம் தொட்டு இறுதி வரை உறுதியானதாக இருந்தது.

அதனால் தான் பின்பு 1994 இல் எனக்கும் சசிக்கும் திருமணநிச்சயம் நடந்தது. பின் 1996 இல் ஆவணியில் எங்களின் திருமணத்தை மாமா நீங்களும், மாமி, மணி எல்லோரும் ஜேர்மனி வந்து சிறப்பாக நடத்தி வைத்தீர்கள். பின்பு 1997 இல் கனடா வந்து மாமா மாமி உடன் ஒரே வீட்டில் 4 வருடங்கள் வாழ்ந்தோம். நான் ஆறாம் வகுப்பில் இருந்து வீட்டிற்கு வெளியில் வாழ்ந்தமையால் என் அப்பா அம்மா உடன் ஒன்றாக வாழ்ந்த காலம் குறைவு. அதனால் மாமா மாமி உடன் சேர்ந்து வாழ்ந்தது அப்பா அம்மாவுடன் வாழ்ந்தது போல மகிழ்ச்சியாக இருந்தது. மாமாவை ஐயா என்றுதான் அழைப்பேன். அதனால் அவரும் நானும் தந்தை மகன் உறவு மாதிரி வாழ்ந்து வந்தோம்.

**மாமாவின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.**

**அன்புடன் மருமகன்**
**இலிங்கப்பிள்ளை சேந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அன்பின் ஐயாவின் நினைவுகள் ..................



எனது பெற்றோரின் பத்து செல்லக் குழந்தைகளில் என்னை மூத்தபிள்ளையாக இறைவன் படைத்தான். இதனை நான் எனது பெற்றோரும் இறைவனும் இணைந்து அளித்த வரம் என்பேன்.

எனது பெற்றோர்கள் இருவரும் சிறப்புப் பயிற்சி பெற்ற தமிழ் ஆசிரியர்களாக பணிசெய்தார்கள். இதனால் திறம்படக் கல்வி பயிலும் வாய்ப்பு எனக்கும் எனது சகோதரர்களுக்கும் கிடைத்தது, நாம் முற்பிறப்பில் செய்த தவம் எனலாம். மிகுந்த கடவுள் பக்தியுடனும் அதீத அக்கறையுடனும் எம்மை எமது பெற்றோர் மிகவும் கவனமாக வளர்த்து உயர் கல்வி ஊட்டி ஆளாக்கினார்கள். இதே போல் அக்கறையுடன் உரிய காலத்தில் திருமணங்களை செய்து தந்து தமது பேரப்பிள்ளைகளுடன் நிறைந்து வாழ்வதனைக் கண்டார்கள். இவர்களில் எண்மர் நாட்டின் அரசியல் நிலமைகளால் புலம் பெயர்ந்து வாழ்ந்து வரும் நிலையில் அனைவரையும் தாம் சென்று பார்க்கவும் கனடாவில் சில காலம் வாழ்ந்து நாடு திரும்பவும் எனது இரண்டாவது தம்பி அருளின் முயற்சியால் சாத்தியமாக்கினார்கள்.

இவ்வாறு பல நிறைவுகளை இருவரும் கண்டு மகிழ்ந்து 2001 இல் நாடு திரும்பி கொக்குவிலில் தமது வீட்டில் எனது இரண்டாவது தங்கை மலரின் குடும்பத்தினருடன் மூன்றாவது தங்கை திரு குடும்பத்தின் அன்பையும் பெற்று மனநிறைவுடன் வாழ்ந்தார்கள். கவலைக்குரிய விதமாக எம்மில் எட்டுக் குடும்பங்கள் அவர்களோடு இருக்க முடியவில்லை. இவ்வாறு ஒரு நிலைமை வருமென எனது பெற்றோர் ஆரம்பகாலத்தில் எம்மைப் பெற்று வளர்த்தபோது எதிர்பாத்து இருக்க மாட்டார்கள். அதேவேளை மறுபுறத்தில் நாம் வசதியாக வெளிநாடுகளிலும் இருவர் நாட்டிலும் வாழ்வதால் அதனை அவர்கள் நேரில் பார்க்கக் கிடைத்த போது மகிழ்ச்சியும் கொண்டார்கள். நாட்டு நிலைமையால் அதனை ஏற்று அமைதியும் அடைந்தார்கள்.

அம்மாவும் ஐயாவும் 2001 இல் நாடு திரும்பிய பின், ஐயா அம்மாவை இரண்டு வருடங்களில் இழக்க நேர்ந்ததை எதிர்பார்த்து இருக்க மாட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த பேர் இழப்பை அவர் தனது இரு அன்பு நிறைந்த பெண் பிள்ளைகளான மலரினதும் திருவினதும் உதவிக்கு மேலாக இவர்களது துணைவர்கள் சந்திரா, சிறி இருவரதும் அக்கறை காரணமாக ஓரளவு மறந்து வாழ்ந்தார். இதனுடன் அவர்களது பிள்ளைகளான மாதுளா, உமையாள், ராகுலன் மூவரையும் அரவணைத்து மகிழ்ந்தார்கள்.

அன்புக்குரிய அம்மா 2003 ஆவணியில் எம்மை விட்டுப் பிரிந்தபோது வெளியில் இருந்த பிள்ளைகளில் ஏழு பேரும் அம்மாவின் இறுதிப் பயணத்தில் நாட்டுக்குச் சென்று கடமை செய்து ஆறுதல் அடைந்தோம். எமது தங்கை சசி தனது துணைவரான சேந்தன் பங்குபற்றியதால் ஆறுதல் அடைந்தார்.

இன்று ஏற்பட்ட உலகை உலுக்கும் கொரோனா நோய்க்காலத்தில் எமது ஆருயிர்த் தந்தை 13.06.2020 இல் பிரிந்த போது போக்குவரத்து இன்மையால் நாம் எவரும் கலந்துகொள்ள முடியவில்லை. எமது அன்பு ஐயாவின் இழப்பு எங்கள் அனைவரையும் பெரும் சோகத்தில் ஆழ்த்தியது. எமது தங்கையர் இருவரும் தமது குடும்பத்தினர்கள், உற்றார், உறவினர், நண்பர்களுடன் மறு தினமே மிகவும் சிறப்பாக ஐயாவின் இறுதிச் சடங்குகளைச் நிறைவு செய்தார்கள். இந்நிகழ்வை நாம் காணொலியில் பார்த்து எமது இறுதி வணக்கத்தை தெரிவிக்க முடிந்தமை மிகுந்த ஆறுதலைத் தந்தது.

நான் எனது பெற்றோருக்கு மூத்த ஆண் பிள்ளையாகப் பிறந்ததனால் எனது தந்தையின் இறுதிக் கடன்களை சிறப்பாக செய்வதற்குக் கடவுள் அருள் தருவார் என்று நம்பி வாழ்ந்துவந்தேன். எனது ஐயாவின் கடமையை செய்ய நான் செல்வதற்கு எக்காலத்திலும் தயாராகவே இருந்தேன். எனது ஐயாவின் விருப்பம் இது. அவர் தனது தந்தைக்கும் தாய்க்கும் பல தசாப்தங்களாக செய்துவந்த அன்பும் பக்தியும் நிறைந்த பிதிர்க்கடன்கள் பற்றிப் பலமுறை எனக்கு விளக்கியுள்ளார். துரதிர்ஷ்டவசமாக உலகில் எங்கிருந்தும் விமானங்கள் இலங்கையில் இறங்கத் தடை இடம்பெற்ற காலமாக ஐயாவின் இறுதிநாள் அமைந்துவிட்டது. இதனால் எனக்கு மட்டும் அல்ல வெளி நாடுகளில் வாழும் எனது எல்லாச் சகோதரங்களுக்கும் இத் துர்ப்பாக்கியம் ஏற்பட்டுவிட்டது.

மூத்த மைந்தனான எனது கடமைகளை, எமது தங்கை மலரின் கணவரான மைத்துனர் சண்முகரத்தினம் அவர்கள் சிவன் அருள் பெற்ற சிவத்தொண்டராக இருந்து அனைத்துக் கிரியைகளிலும் சிறப்பாகப் பங்கேற்று நிறைவு செய்தது எனது ஐயா செய்த புண்ணியம் ஆகும். இவருடன் எமது தங்கை திருவின் கணவர் சிறியும் இணைந்து தனது பங்கை நிறைவு செய்தார். இதனை எண்ணி நாம் அனைவரும் ஆறுதல் அடைவதுடன் அவர்களுக்கு எம் அனைவரினதும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் ஐயாவின் இறுதி நிகழ்வை சிறப்பாக நிறைவேற்றிய அன்புக்குரிய உறவுகளுக்கும் நண்பர்களுக்கும் வருகை தந்து பங்கு கொண்ட கல்விச்சமூகத்திற்கும், வைத்தியசமூகத்திற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஐயாவின் வைத்தியத்தில் மிகுந்த கரிசனையுடன் பொறுப்பேற்று வைத்தியம் செய்த வைத்திய நிபுணர் குமணன் அவர்களுக்கும் அவரது குழுவினருக்கும் எனது நன்றியைப் பதிவு செய்வதில் ஆறுதல் கொள்கின்றேன்.

## ஐயாவும் நாமும்

ஆரம்பத்தில் எனது ஐயா எனக்கு தனித்தும் பின் காலம் செல்ல எனது தங்கை பாப்பாவுடனும் தம்பி அரசனுடனும் இணைத்து கல்வியைப் புகட்டினார். இவ்வாறு எமது பெற்றோரின் வளர்ப்பில் வீட்டிலும் ஆரம்பக் கல்வியைக் கற்கக் கிடைத்த நாட்கள் மறக்க முடியாதவை.

தமிழ் மக்களுக்கான சோதனைக்காலம் தொடங்கி வேதனைகளைத்தர வேகங்கொண்ட போது 1958 ஆம் ஆண்டில் இருந்தே ஐயா என்னைத் தன்னுடன் அரசியல் கூட்டங்களிற்கும், சத்தியாக்கிரகத்திற்கும் அழைத்துச் சென்றதும், இதனைத் தொடர்ந்து 1965 ஆம் ஆண்டில் இருந்து என்னைத் தனித்து அனுப்பிவைப்பதுடன் பின்னஎனது ஞாபகசக்தியைப் பரிசோதிக்கவும் தவறுவதில்லை. இது எனக்குச் சிறந்த அனுபவத்தை அளித்ததுடன் எனது இனப்பற்றை வளர்க்க உதவியது.

எனது கல்வியில் ஐயாவின் விடாமுயற்சியும் ஒத்துழைப்பும் தொடர்ந்து கிடைத்தமையால் இளவயதில் கல்வியில் கவனம் குறைவாக இருந்தபோதும் அம்மாவின் வேண்டுகோளை ஏற்று அதிக அக்கறை கொண்டு அதி விரைவில் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்தேன். பொறுமை இழக்காத எனது ஐயாவின் ஒத்துழைப்பும் எனக்குக் கல்வியில் கிடைத்த அரிய சந்தர்ப்பங்களினாலும் நான் குறுகிய காலத்தில் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் இரண்டு ஆண்டு கணக்கியல் தேர்ச்சி பயிற்ச்சியுடன், வணிகத்தில் பல்கலைக்கழக அனுமதியும் பெற்று கொழும்பு பல்கலைக்கழகத்திற்குத் தேர்வானேன்.

இளவயதில் நான் விட்ட அரிய சந்தர்ப்பங்களையும் தவறுகளையும் தவிர்த்து பல்கலைக்கழக கல்வியைத் தொடர நான் இருந்த போது எனது தந்தையின் விருப்புக்கு ஏற்ப எனக்குக் கிடைத்த அரச உத்தியோகத்தை ஏற்று 1976 இல் கொழும்பிற்குச் சென்று கொழும்பு வைத்திய சாலையின் நிதிப்பிரிவில் கடமையாற்றிக் கொண்டு கொழும்பு பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பையும் ஆரம்பித்தேன். 1977 ஆடியில் இனக்கலவரம் ஏற்பட்டபோது எந்த விதத்திலும் பாதிக்கப்படாமல் கடவுள் துணையுடன் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுது எனது வேலையையும் பல்கலைக்கழகத்தையும் மாற்றிக் கொண்டு யாழ்ப்பாணம் வரும் படியும் அது எல்லா விதத்திலும் குடும்பத்திற்கு ஆறுதல் அளிக்குமென்றும் ஐயா கேட்டதற்கு இணங்கி அன்று மிகவும் சவாலாக இருந்த இரண்டு இடமாற்றங்களையும் பெற்று எனது கல்வியை யாழ். பல்கலைக்கழகத்திலும் எனது சேவையை யாழ் கச்சேரியிலும் மாற்றிக்கொண்டேன். இது எனது கல்வியைத் தொடர்வதுடன் வீட்டின் நிதித்தேவையில் பங்கேற்பதற்கும் உதவியது. இது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது. 1981 இல் பல்கலைக்கழக இறுதியாண்டில் இருந்த போது, நான் யாழ் வர்த்தக வங்கியில் பணிபுரிய ஆரம்பித்தேன். இத்துடன் மனநிறைவைத் தருகின்ற பகுதிநேர ஆசிரியர் சேவையையையும் தொடர்ந்தேன். இதனால் ஐயாவின் விருப்பப்படி வீட்டுத் தேவைகளில் அதிக பங்கேற்க முடிந்ததுடன், சமுதாயத்திற்கும் உதவிசெய்ய முடிந்தது. ஐயா என்னிடம் எதிர்பார்த்த பொறுப்புகள் காரணமாக எனது தனிப்பட்ட வாழ்க்கையை என்னால் சில வருடங்களுக்குப் பிற்போட நேர்ந்தது.

## சுற்றுப் பயணங்களும் ஆலய தரிசனங்களும்.

எமது ஐயாவின் அரவணைப்பில் நாம் சிறியவர்களாக இருந்தபோது இலங்கையில் பல இடங்களுக்கும் அவர்களது வருடாந்த இலவச ரயில் பயணச்சீட்டுகளின் வசதியுடன் சென்று வருவோம். வருடத்தில் இவர்களுக்குரிய மூன்று பயணச்சீட்டுக்களில் குறைந்தது இரண்டையேனும் உபயோகிக்கத் தவறியதில்லை. நாம் பெரியவர்களாகும் வரை எனது சகோதரர்களுடன், ஐயா எங்களை பௌர்ணமி, தைப்பொங்கல் விழாக்களின் போது மாட்டுச்சவாரி, விளையாட்டுப் போட்டி போன்றவற்றிற்கும், கீரிமலைக்கும் தவறாது அழைத்துச் சென்றது இன்றும் இனிய நினைவில் உள்ளது. இவற்றை விட யாழ்ப்பாணத்தில் உள்ள ஆலயங்களின் திருவிழாக்கள், சிறப்பாக நல்லூர் திருவிழா நயினாதீவுத் திருவிழா மருதடித்தேர், அருகில் உள்ள பல ஆலயங்களிற்கும் பக்தியுடன் அழைத்துச் சென்று இறைவழிபாட்டில் ஈடுபடுத்துவார். எனது நினைவில், நான் சிறியவனாக இருந்த போது நல்லூர் திருவிழாவிற்கு ஐயா, அம்மாவுடன் செல்வதும் அவர் எம்மில் மூவரை தோளில் தூக்கி சுவாமி வலம் வரும் போது காட்டுவதும் இன்றும் இன்பநினைவாக உள்ளது. நாட்டு நிலைமை 1970 இலிருந்து மிகவும் மோசமாகியதால், எமது இளைய சகோதரர்கள் இந்த அரிய வாய்ப்பைப் பெற முடியவில்லை என்பது கவலை தருகின்றது.

அம்மா எமக்காக வைக்கும் நேர்த்திக்கடன்களை நிறைவு செய்ய, ஐயா மண்கும்பான் பிள்ளையார், தில்லை அம்பலப்பிள்ளையார் உட்பட பல கோவில்களுக்கு அழைத்துச் சென்று பொங்கல் செய்து வணக்கம் செலுத்துவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப கால வழக்கம். இவ்வாறு பல ஆலய வழிபாடுகள் செய்துதான் எம்மை ஐயாவும் அம்மாவும் ஆளாக்கியதுடன் பலபிரச்சனைகளிலும் இருந்து விலத்திப் பாதுகாத்தார்கள்.

எனது ஐயா, அம்மாவின் உதவியுடன் இணைந்து புரிந்த உறவினர்களுக்கும், உற்றநண்பர்களுக்குமான அக்கறை நிறைந்த உதவிகள் பல. இதனை எல்லாம் தமது விருப்பத்திற்குரிய கடமைகளாக ஏற்று நிறைவேற்றினார். எனது ஐயாவின அயராத உழைப்பும் அவரது உயரிய நற்பண்புகளும் மறக்கமுடியாதவை. கடவுள் அவருக்கு எல்லாத் திறன்களையும் அள்ளி வழங்கி மனிதரில் மானிக்கமாக வாழவைத்தார்.

ஐயாவும் எங்களுடன் வாராந்தம் இறைபக்தியோடு பஜனைகளைச் செய்விப்பது, சனிக்கிழமைகளில் எண்ணை தேய்த்து முழுக்காட்டுவது போன்றவற்றை எப்போதும் தவறியதில்லை. எம்மை நற் பழக்கங்களுடன் சமூக ஆர்வலர்களாகவும் இனப்பற்றாளர்களாகவும் வளர்த்தார்.

இளம்வயதில்இருந்தேநானும்எனதுசகோதரங்களும்வீட்டுப்பொறுப்புக்களை அவரரவர் வசதிக்கேற்ப அம்மாவிற்கும் ஐயாவிற்கும் செய்து ஒத்துழைப்பது வழக்கம். இப் பொறுப்பினை பிள்ளைகள் அனைவரும் ஒற்றுமையாக செய்யத் தவறியதில்லை.

ஐயாவுடன் நாம் இருக்கும் காணியில் 1972-1973 காலங்களில் மரங்களை வெட்டுதல், வேலி அடைத்தல், கிணறு வெட்டுதல், வரம்பு கட்டுதல், தோட்டம் செய்தல் போன்ற வேலைகளில் நானும் எனது தம்பி அரசனும் ஈடுபட்ட நாட்கள் என்றும் மறக்க முடியாதவை. இக்காலத்தில் ஐயாவின் ஊர் நண்பர்களான ஆறுமுகம், கந்தசாமி அவர்களுடன் எமது சீனி ஐயாவின் மாானார் ஆன பொன்னம்பலம் அப்பாவும் இணைந்து பணி புரிந்தார்கள்.

எனது ஐயாவும் அரசனும் கடுமையான வேலைகளைப் பொறுப்பாகச் செய்வார்கள். நான் தோட்ட வேலைகளில் கிருமிநாசினி தெளித்தல், அவற்றைப் பாதுகாத்தல் போன்றவற்றிலும் இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகியன விவசாயத்துக்கு வழங்கிய கடனைப் பெற்று நிதி உதவிகளைச் செய்வதிலும் பொறுப்பாகச் செயற்பட்டேன். எமது ஐயாவுடனான எங்கள் வாழ்வும் அவரின் வழிநடத்தலிலான எமது செயற்பாடுகளும் எமது குடும்ப முன்னேற்றத்திற்கு மிகவும் வலுவூட்டியது.

அக்காலத்தில்அம்மா தனது ஆசிரியப்பணியுடன் வீட்டின்சகலவேலைகளிலும் பங்காற்றியதுடன் குடும்பத்தின் நிதிப் பொறுப்புக்களையும் திறம்பட நிர்வகித்து ஐயாவிற்கு உதவினார். நான் சிறு வயதில் இருந்தே அம்மாவின் நிதி நிர்வாகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூத்த மகன் அன்பழகன் தனது மகன் மயிலோவுடன் இலங்கை சென்று 2018 இல் அமரரைச் சந்தித்தபோது.



1999 இல் அமரர் இலண்டன் சென்றபோது மூத்த மகன் அன்பழகன் குடும்பத்தினருடன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்து செயற்பட்டேன். எனது மனைவி தமிழரசியை நான் அறிந்த காலம் முதல், எங்கள் குடும்ப முன்னேற்றத்திலும் ஐயா அம்மாவினது நலனிலும் எனது பணியைத் தொடர எனது மனைவியின் பங்களிப்பு மிகவும் உதவியாக இருந்தது. ஐயாவின் இறுதிக் கிரியைகளில் நேரில் பங்குபற்றமுடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்ட போதிலும் எனக்கேயுரிய அவரிற்கான காலத்தின் கடமைகளை நிறைவேற்றுவதில் எனது மனைவி அக்கறையுள்ளவராக உள்ளார்.

ஐயாவினதும் அம்மாவினதும் கடும் முயற்சியினால் எங்களில் ஏழுபேர் பல்கலைகழகக் கல்வியை கற்றபோது, எமது மூன்று இளைய சகோதரர்கள் நாட்டுநிலைமை காரணமாக பல்கலைக்கழகம் வரையான கல்வியைத் தொடராது புலம் பெயர நேர்ந்தது. இவர்கள் ஐயாவின் நுண்ணறிவை இயல்பாகவே பெற்று தாம் வாழும் நாடுகளில் தரமாக வளர்ந்து உயர்ந்து வாழ்கின்றார்கள் என்பது எமது ஐயாவின் சாதனை என்றே இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

எம்மை விட்டு இன்று உடலால் ஐயா மறைந்து இருந்தாலும் எம் உயிர் உள்ளவரை அனைவர் உள்ளத்திலும் ஒளியாக உள்ளிருந்து பிரகாசித்து கடவுள் அருள்படி காரியங்கள் கைகூட உறுதுணையாய் இருப்பார்.

எம் ஐயாவின் வழி நடத்தலில் எம்மால் ஆன சமூகப்பணிகளையும் செய்யப் பழகிக்கொண்ட நாம் தொடர்ந்தும் குடும்பப் பொறுப்புகளுடன் அவற்றையும் கண்ணியமாக செய்து நிறைவாக வாழ்ந்து ஐயாவினதும் அம்மாவினதும் நினைவுடன் இருக்க இறைவன் அருள் புரிவாராக.

**அன்பு மகன்**

**பேரம்பலம் அன்பழகன் (அன்பு)**

**30.06.2020**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் ஐயா
# மூத்த மகள் சந்திரிகா
# (பாப்பா) வின் நினைவலைகள்

என் ஐயா ஒரு பொறுப்பான குடும்பத் தலைவன் என் அம்மா மீதும், தன் பிள்ளைகள் ஒவ்வொருவர் மீதும் அதிகமான அன்பு கொண்டவர் இறைபக்தி மிகுந்தவர் (அம்மாவும் கூட) ஐயா தன்னை சிவபெருமானின் ஓர் செல்வப்பிள்ளை என்று கூறிக் கொள்வார். நல்லை முருகனிடத்திலும், கொண்டலடிப்பிள்ளையாரிடத்திலும், வண்ணை வைத்தீஸ்வரணிடத்திலும் அபார நம்பிக்கையுடையவர்.

இவர் செயல்வீரர், தன்நலமற்றவர், நேர்மையாளன், தன்னாலான உதவிகளை யாருக்கும் செய்யத் தயங்காதவர். ஒரு நாளும் சோம்பிப் படுத்ததை நாம் யாரும் பார்த்தறியோம். எப்போதும் சுறுசுறுப்பாயிருந்ததால் நோய் நொடி இவரை அண்டியதில்லை சாப்பாடும் குறித்த நேரத்தில் அளவோடுதான் சாப்பிடுவார்.

ஒரு திறமை மிக்க ஆசிரியர் மாணவர்களை அன்புடனும், கண்டிக்க வேண்டிய நேரத்தில் கண்டித்தும் வழிநடத்துவார். பிள்ளைகள் நாமும் இவர் மாணவர்களே.

பாடசாலை முடிய வீட்டுக்கு நேரே வருவார் ஒரு தேநீர் மட்டும் அருந்தி விட்டு நம் வீட்டுத்தோட்டத்திற்குப் போய்விடுவார்.இவரின் அயராத உழைப்பினாலும் அண்ணன் தம்பிமாரின் உதவியினாலும் கட்டாந்தரையான எமது தலையாழி வளவு கரும்புத்தோட்டமாயிற்று. தென்னை, மா, பலா, கொய்யா, ஈரப்பா, மல்லிகை, குறோட்டன், திருவாத்தி, செவ்வரத்தை, யூகலிப்றஸ், எனப் பல பயன் தரும் மரங்களும், பூமரங்களும் கொண்ட ஒரு சோலையாயிற்று.

எப்போதும் எம் ஐயா வீட்டில் ஓர் பசுமாடு வளர்ப்பார். ஆடுகள், கோழியும் வளர்த்துள்ளோம். நாம் பால் வெளியில் வேண்டியறியோம். யாராவது அயலவர்கள், வயது போனவர்கள் பால் கேட்டால் அவ்வப்போது கொடுத்துக் கொள்ளவும் ஐயா தயங்கவில்லை. நாம் தைப்பொங்கலுடன் மாட்டுப் பொங்கலையும் பல தடவைகள் பொங்கி மகிழ்ந்துள்ளோம்.

நாம் பெரிய குடும்பம். அம்மா, ஐயா இருவருமே ஆசிரியரிகள் இதனால் நாம் சிறியவர்ளாயிருந்த போதும் படிக்கும் காலத்திலும் வீட்டில் எப்போதும் உதவிக்கு யாராவது இருப்பார்கள். இவர்கள் யாவரையும் நம்வீட்டு அங்கத்தவர்களாகவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா, ஐயா இருவரும் பராமரித்துக்கொள்வர் தன் தோட்டத்திற்கு அவ்வப்போது உதவி செய்யும் சரவணையைச் சேர்ந்த ஆறுமுகம் அண்ணன், கந்தசாமி அண்ணன் இவர்களையும் மெத்த மரியாதையுடன் நடத்திக் கொள்வார். மனித நேயம் மிக்கவர் என் ஐயா.

ஐயா தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுத்தேர்ந்தவர். ஒரு பால பண்டிதர் பண்டிதராக வேண்டும் என்ற விருப்பம் இருந்தும் பொறுப்புக்கள் அதிகமிருந்ததால் அதையீட்டமுடியவில்லை நாம் முதல் நால்வர் மட்டும் அறிவு புகட்டும் பருவத்தில் இருந்தபோது எமக்கு கம்பராமாயணக் கதைகள், மகாாரதக்கதைகள், சமயகுரவர்கள் சரித்திரம், சிலப்பதிகாரம் இவற்றைத் தொடர்கதையாக இரவில் கூறுவார், மெத்த அழகாக விமர்சிப்பார் நாம் எப்போது மிகுதிக் கதைகளைக்கேட்போம் என்று ஒரு தொடர் நாவலை வாசித்து இடையில் நிறுத்தியது போல் அங்கலாய்போம் இராமர் காட்டுக்குப் போனது, மாயமானைத் துரத்திப்போனது, சீதை அசோகவனத்தில் சிறைவைக்கப்பட்டது, பாரதபோரில் பல கட்டங்கள், கண்ணகி நியாம் கேட்க தன் ஒரு காற்சிலம்புடன் சென்றது இப்படியாகப் பல கட்டங்கள் இன்றும் என் மனத்தில் பசுமையாயுள்ளது. இதுபோல் எமக்கு எண்கணித பாடம் நடத்துவார். வட்டிவீதம், சரக்கு முதல், வேலையும் நேரமும் இப்படி எதுவானாலும் மிக இலகுவாக சொல்லித் தருவார்.

இன்றும் எனக்கு அவர் சொன்ன தேவாரப் பதிக விளக்கங்கள் கீதம் இனிய குயிலே தொண்டர் ஐந்து களிறுமடக்கி, செல்வ நெடுமாமடம், குனித்த புருவமும், தலையே நீ வணங்காய் இன்னும் பல என செவியில் தித்திப்பாயுள்ளது. நானும், என் சகோதர்களும் என் ஐயா அம்மாவிற்கு பிள்ளைகளாய் வந்ததிற்கு மிகவும் கொடுத்து வைத்துள்ளோம் எனப் பெருமைப்படுகின்றோம். இறைவனுக்கு மனமார நன்றி கூறுகின்றோம்.

ஐயா எந்தச் செயலைச் செய்தாலும் அதில் ஒரு நேர்த்தியிருக்கும் அழகிருக்கும் அந்நாளில் பாடப் புத்தகங்கள், கொப்பிகளிற்கு மிக அழகாக உறைபோட்டு, label உம் ஒட்டித்தருவார்.

ஐயாவும் அம்மாவும் என்னை 4ம் வகுப்பிற்கு யாழ் இந்து ஆரம்பப் பாடசாலையில் இருந்து வேம்படி மகளீர் கல்லூரிக்கு சேர்த்தார்கள். அவ்வருடம் எனது 8 வது பிறந்தநாளிற்கு முதல் நாளிரவு சைக்கிளில் கூட்டிச்சென்று pink colour இல் ஒரு "Ready Made" சட்டை அழகான பூக்கள், வண்ணத்துப் பூச்சிகளுடன் வேண்டித் தந்து அடுத்தநாள் ஆசிரியர்கட்கும், பிள்ளைகளுக்கும் காரில் வருபவர்கட்கும் வேறு வேறாக chocalate தந்து என்னை பள்ளிக்கூடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்பி வைத்தார். காரில் வருபவர்களுக்கானதை என் சட்டை பொக்கற்றில் வைத்துவிட்டிருந்தார். நான் ஒவ்வொரு வகுப்பு வகுப்பாய்ச் சென்று ஒவ்வொரு ஆசிரியர்மார்கட்கும் சொக்கிலேட் ஐ நீட்டிய போது ஒவ்வொரு ஆசிரியர்மாரும் என் சட்டையைத் தொட்டுப் பார்த்து யார் வேண்டித் தந்தது மெத்த அழகாயிருக்கிறது என்று பாரட்டி பொக்கற்றில் உள்ள சொக்கிலேட் ஐயாருக்கு என்றும் கேட்டார்கள். அந்த சட்டை ஓர் அழகான "Party frock" இன்றும் என் ஞாபகத்திலுள்ளது.

இன்னும் ஐயாவைப் பற்றிய இனிய நினைவுகள் பல. ஒருமுறை மஸ்கேலியாவிற்கு எங்களுடன் பல ஆண்டுகள் உதவிக்கு நின்ற லலிதா அக்காவை அவவின் திருமணத்திற்கு கூட்டிச் சென்றோம். அங்கு ஆறு ஒன்றில் குளித்த போது அம்மாவும், நானும் சிறு தம்பியாரும் ஒருபக்கத்திலும், அண்ணனும் ஐயாவும் மறுபக்கத்திலும் நின்றோம் எனக்கு ஐயா, அண்ணன் நிற்கும் பக்கத்திற்குப் போகும் ஆசை வந்தது ஐயாவிடம் சொல்லிவிட்டு ஒரு குன்றில் தாவி ஏறி அருகிலுள்ள மறுகுன்றில் தாவி அங்கு போவது இலகுபோல் தோன்றிற்று.

ஐயா, அண்ணன் பார்த்துக்கொண்டிருக்க மறுகுன்றை கடக்க முயன்ற போது எப்படியோ வழுக்கி எதிர்ப்பக்கத்தில் உள்ள நீர் பாயும் ஆழமான குழிக்குள் விழுந்துவிட்டேன். ஐயா உடனே பாயும் நீருக்குள் பாய்ந்து அண்ணனுடன் சேர்ந்து என்னைத் தூக்கிவிட்டார். அவர் ஒரு நீச்சல் வீரருமாவார். எங்கள் எல்லோருக்கும் ஒல்லி கட்டி நம் வீட்டுக் கிணற்றிலேயே நீச்சல் பழக்கினார். 1986ல் எனக்குத் திருமணமாகி என் கணவர் பரந்தாமன் அவர்களோடு நைஜீரியா புறப்பட்டபோது ஐயா யாழ் நகருக்கு வந்து எங்களை பஸ் ஏற்றி வைத்து என்னை உச்சிமோர்ந்து வழியனுப்பிவைத்தது என்னால் மறக்கமுடியாது.

ஐயா நீங்கள் ஒரு மாமனிதர் பெரிய குடும்பப் பொறுப்புக்களுடனும், உதவி தேவைப்படும் உங்கள் உறவுகளுக்கு, அயலவர்கட்கு, நண்பர்கட்கு அவ்வப்போது சரீர உதவி, பண உதவி, ஆலோசனைகள் எதுவானாலும் வழங்கத் தயங்கவில்லை. ஐயா உங்கள் இருபதுகளில் இருந்தே குஞ்சாச்சி - விதானையப்பா, ஆச்சிமாமி, தவச்சித்தப்பா, மணி அன்ரி - முருகையா சித்தப்பா, இளமுருகன் சித்தப்பா - சிவநிதிச்சித்தி இப்படிப் பல உறவுகளின் திருமணத்தை ஒப்பேற்றிவைத்தீர்கள் அதனால் தான் உங்கள் பத்துப் பிள்ளைகளின் திருமண வாழ்வைக் கண்டு களித்து உங்கள் பேரப்பிள்ளைகளுடனும் அளவளாவி மகிழ்ந்தீர்கள்.

ஐயா நீங்கள் அழகாக உரித்துப் பகிரும் தோடம்பழச் சுளைகட்கும், மாம்பழத்துண்டு, அப்பிள் துண்டு, பலாப்பழச்சுளை இவற்றின் சுவைக்கு எதுவுமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடாகா. உங்கள் கோப்பையில் இருந்து அன்புடன் பரிமாறும் முள்ளெடுத்த மீன்சதைகள், நண்டுச் சதைகள் இவற்றையும் நாம் மறக்கவில்லை. என் பத்தாம் வகுப்பிலும், பள்ளிக்கூடம் ஏற்றிப்போகும் கார் வீட்டின் முன் நிற்க நான் தலையிழுத்துக் கொண்டிருக்கும் போது சாப்பிடாமல் ஓடிவிடுவேன் என்பதற்காய் நீங்களே எனக்கு குழைத்து ஊட்டி விடுவீர்களே. இன்னும் எத்தனை நினைவுகள் ஐயா அழகாய் அரிந்து தரும் பொன்னாங்காணி, வல்லாரை, மீன், இறைச்சி வகைகளை வெட்டித் துப்பரவாக்கிக் கழுவி அப்படியே பொரிக்கவும், கறிவைக்கவும் தரும் பக்குவம் எவரிடம் பார்ப்போம்.

ஐயா சொரியும் எண்ணங்களைச் சுருக்க நினைக்கின்றேன் முடியவில்லை. உங்கள் மூத்த மருமகன் பராவின் அம்மா, அப்பாவான வைரமுத்து மாஸ்ரர் உமையம்மா ரீச்சர், ஜானகி மச்சான், அன்னம் மச்சாள், ராசண்ணை (இராசரத்தினம் மாஸ்ரர்) இவர்களுடன் கொண்ட உண்மை அன்பையும் நட்பையும் ஏழாலை இன்றும் வியந்து கூறும். எனது மாமா மாமியருடன் மட்டுமல்ல உங்கள் எல்லாச் சம்மந்திமார் மேலும் நீங்கள் கொண்ட அன்பு, பாசம், மதிப்பு உன்னதமானது.

உங்கள் பத்துப் பிள்ளைகளுடனும் அவ்வப்போது பெரியம்மா பிள்ளைகள், மாமா மாமி பிள்ளைகள், ஆசை ஐயா, சீனி ஐயா பிள்ளைகள் இன்னும் பல உறவினர் பிள்ளைகளை அவர்களின் படிப்பு நலன் கருதி நீங்களே விரும்பிக் கூப்பிட்டு எங்களுடன் வாழ வழி செய்து ஒரு கூட்டு வாழ்க்கையை எமக்கு கற்றுத் தந்தீர்கள் அவை மறக்க முடியாத பொற்காலம். ஐயா (1994 Nov - 2001 Dec) வரை அருளின் Sponser இல் அம்மா, திரு, சசி, அழகனுடன் கனடா வந்து ஏழு ஆண்டுகள் உங்கள் பிள்ளைகளுடனும், பேரப்பிள்ளைகளுடனும் அளவளாவி மகிழ்ந்தீர்கள்.

நீங்கள் எங்களுடன் கனடாவில் வாழ்ந்த காலம் எமக்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும். நீங்கள் அம்மாவுடனும் சசி, சேந்தனுடனும் 1010 இலும், நாங்கள் 914 இலும் அதே தொடர்மாடிக் கட்டடத்தில் இருந்தோம். இதனால் எங்கள் பிள்ளைகளான உமா, பிரணவன், பார்த்திபன் தங்கள் அம்மப்பா பாடசாலைக்குச் கூட்டிச் சென்று கூட்டிவரும் பாக்கியம் பெற்றார்கள். சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் கிழமைக்கு ஒரு தடவை அருள், அழகன் குடும்பம், நமது குடும்பம், சேந்தன் குடும்பம் சசியின் கையால் சமைத்த அறுசுவை உணவு உண்ணும் பாக்கியமும் பெற்றோம். மேலும் 2003 இல் அம்மாவின் மறைவிற்குப் பின் தளர்ந்து போனாலும் 2010 இல் உங்கள் 85 வயதிலும் எங்கள் எல்லோர் வேண்டுதலையும் செவிசாய்த்து England, Canada, Australia வந்து மீண்டும் எங்களையும், மாமா மாமி குடும்பத்தவர்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவினர்களையும் பார்த்து அளவளாவிச் சென்றீர்கள். இவை எல்லாம் நாங்கள் எல்லோரும் செய்த பாக்கியம்.

ஐயா 2019 September இலும் நானும் என் கணவர் பரந்தாமனும் மகள் உமாவுடன் உங்களைப் பார்க்க வந்திருந்தோம். "அல்சைமர்" வியாதியின் பாதிப்பு அதிகமாக இருந்த போதிலும் "சொற்றுணை வேதியன்" "வேத மோதி" தேவார வரிகளைத் தொடங்கியதும் நீங்கள் சிறு சிறு உதவிகளுடன் பாடி முடித்தீர்கள். சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் கூட ஆர்வமாய் மருமகனுடன் சிறு சம்பாசனை செய்தீர்கள். சாப்பாடு குழைத்துத் தீத்தினேன். Ensure Tea பருகினீர்கள் மிகவும் மனத்திற்கு ஆறுதலாக உள்ளது.

ஐயா நீங்களும் அம்மாவும் எங்கள் எல்லோரையும் இறைபக்தியுள்ள வர்களாயும், நற்பண்புள்ளவர்களாயும் வளர்த்துள்ளீர்கள். அது உங்கள் சந்ததியைத் தொடர்ந்து வழிநடாத்தும். இன்னும் எங்கள் தலையாழி வைரவர் எப்போதும் போல என்றும் எமக்கு உறுதுணையாய் இருப்பார்.

ஐயா நீங்கள் எப்போதும் உங்களைச் சிவனின் செல்லப் பிள்ளை என்பீர்கள். ஓம் ஐயா நீங்கள் அந்த ஆடல் வல்லான் சிவனின் செல்லப்பிள்ளை மட்டுமன்றி உங்களைப் பன்றிக்குட்டிகளுக்குப் பால் கொடுக்க வந்த அந்த எல்லாம் வல்ல அந்த சிவனாகவே நான் பார்த்துப் பரவசம் அடைந்து பல நாட்கள் ஆகி விட்டது.

ஐயா நீங்கள் நிறைவான வாழ்வு வாழ்ந்து இவ்வுலகை நீர்த்து அமைதியாகப் புறப்பட்டு விட்டீர்கள். உங்கள் ஆத்மா சாந்தியடைந்து சிவனுடன் கலந்து விடப் பிரார்த்திக்கின்றோம்.

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்**
**வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்.**

**அன்பு மகள்**
**பாப்பா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்கள் இருவரும் பேரன் பாத்தீபனின் 3 ஆவது பிறந்ததினத்தை சிறப்பாக கொண்டாடியபோது.



20.08.2010 அன்று அமரர் அவர்களின் மூத்த மருமகனின் 60 ஆவது பிறந்ததினம் கனடாவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பரன் பர்த்தீபன் உடன் 2010 ஆம் ஆண்டு August மாதம் பேரனுக்கு தானே வேட்டி உடுத்தி கோயிலுக்கு சென்ற பூரிப்பில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐயா - எங்கள் மனங்களில் என்றும் வாழ்வீர்கள்

எங்களது ஐயா, இளைப்பாறிய ஆசிரியர், அமரர் திரு வைத்தியலிங்கம் பேரம்பலம் அவர்கள் முழுமையான வாழ்வை வாழ்ந்து, முதுமையெய்தி தனது தொண்ணூற்றைந்தாவது வயதையும் கடந்து இறைபதம் எய்தியிருக்கிறார் என்றால் மிகையாகாது.

அவரின் பத்துப் பிள்ளைகளில் நான் மூன்றாவது பிள்ளையாகவும் இரண்டாவது மகனாகவும் பிறப்பதற்கு முற்பிறவியில் ஏதோ நல்லகாரியங்களைச் செய்திருக்க வேண்டும் என்றே கருதுகின்றேன்

ஐயாவும், அம்மாவும் ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களாக இருந்தமையால் நாங்கள் எல்லோரும் மிகவும் முக்கியமான ஆரம்பக் கல்வியையும், நல்ல பழக்க வழக்கங்களையும் இளம் வயதில் இருந்தே பள்ளியிலும், வீட்டிலுமாகப் பெற்றுக் கொண்டோம். அவர்களின் எதிர்பார்ப்புக்கள் சற்றே அதிகமாக இருந்ததினாலும் நான் எனது இளமைக்காலத்தில் குளப்படியாக இருந்ததினாலும் இருவரிடமும் நல்ல அடி வேண்டியிருக்கின்றேன். ஐயா ஒரு கடமை வீரன் என்றே சொல்வேன் பாடசாலைகளில் தனது கடமையை திறம்பட செய்வது மட்டுமல்ல வீட்டிற்கு வந்ததும் ஒரு நேரம் கூட ஓய்வு எடுக்காது வீட்டுத் தோட்டத்தில் வேலை செய்து எங்களுக்குத் தேவையான மரக்கறிகள் எல்லாவற்றையும் எமது தோட்டத்தில் இருந்து பெற்றுக்கொள்வார்.

நான் சிறுபிள்ளையாக இருக்கும்போது படுத்திருக்கும் ஐயா மீது ஏறி விளையாடியதையும், நித்திரைக்குப் போகமுன் அவர் பக்கத்தில் படுத்திருந்து மகாபாரதம், இராமாயணம் இரண்டையும் சிறு சிறு கதைகளாக சொல்வதைக் கேட்ட ஞாபகங்களையும் மீட்டுப் பார்க்கின்றேன். ஐயா, தேவாரங்களை மிகவும் அழுத்தம் திருத்தமாக உச்சரித்தே பாடம் படிப்பிப்பார். அவரது ஆலய வழிபாட்டு முறைகள் மிகவும் ஆகம விதிகளுக்கு அமைவாகவே இருக்கும். உதாரணத்திற்கு கோயிலை வலம் வரும்போது மூன்று முறை வலம் வரவேண்டும், ஒரு முறை வலம்வருவது பாவம் என்பார், ஆண்கள் அட்டாங்க நமஸ்காரம் செய்யும்போது தலையை இரண்டு பக்கங்களும் திருப்பி காதுகளும் தரையில்பட வணங்க வேண்டும் என்பார்.

ஐயா எங்களில் வைத்திருந்த அன்பு அளப்பரியது என்றாலும், அவர் எங்களை கடுமையாகத் தண்டிப்பதற்கும் தயங்கமாட்டார். ஒரு நாள் அவரிடம் அடி வேண்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு பின்னர் சற்று நேரத்தில் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த ஐயாவை, ஐயா! என்று கூப்பிட்டுக்கொண்டு போனபோது, அவர் சொன்னார், நான் உன்னைப் போட்டு சற்றுநேரத்திற்கு முன்னர் அடித்தேன் எனினும் நீ அவற்றை மறந்துவிட்டு ஐயா என்று கூப்பிட்டுக் கொண்டு வாறியே, இதுதான் அப்பா பிள்ளை உறவு என்றார். இதனை இப்போது நினைத்தாலும் ஐயாவிடம் வாங்கிய அடிகள் அனைத்தையும் மறந்து அவர் அன்பிற்காக அழ வேண்டும் போல் இருக்கும்.

ஐயா, அம்மாவைக் காதலித்துக் கல்யாணம் செய்யவிருந்ததால் அம்மாவின் பிள்ளைப் பங்குகளை அவவின் அக்கா, எங்கள் பெரியம்மாவிற்கு சீதனமாக எழுதிக் கொடுக்கவைத்து அதன் பின்னர் அம்மாவைத் திருமணம் செய்து கொண்டது ஐயாவின் பரவுபகாரத்தினை விளக்குகிறது. ஐயாவும், அம்மாவும் எப்போதும் வறியவர்களுக்கும், வாழ்க்கையில் சிரமப்பட்டுக்கொண்டு இருக்கும் சொந்தக்காரர்களுக்கும் தமது வாழ்க்கையில் உள்ள சிரமங்களையெல்லாம் பெரிதாக அலட்டிக் கொள்ளாது தம்மால் முடிந்த உதவிகளைச் செய்வார்கள். அவர்களின் வளர்ப்பில் வளர்ந்த பிள்ளைகள் நாங்கள் எல்லோரும் தமக்கு இயன்றவரை மற்றவர்களுக்கும் உதவிவருவதை அறியும் போது எங்களை ஐயாவும் அம்மாவும் சிறந்த குடிமக்களாக வளர்த்திருக்கிறார்கள் என்று பெருமை கொள்ளாது இருக்க முடிவதில்லை.

நாங்கள் பல வாடகை வீடுகளில் வண்ணார்பண்ணையில், ஐயனார் கோவிலடியில், கலட்டியில், தலையாழியில் என்று வசித்துவிட்டு 70 பதுகளின் ஆரம்பத்தில் தலையாழியில் எமது சொந்த வீட்டிலும் அதனுடன் கூடிய ஒரு ஏக்கர் காணியிலும் குடியமர்ந்தோம். இந்தக் காணியில் ஐயாவும் நாங்களுமாக நெல்லு முதல் கொண்டு எல்லா விதமான பயிர்களையும் பயிர்செய்து எமது குடும்பத்தின் தேவைகளையும் அதற்கு மேலாக விளைவதை அயலவர்களுக்கும், சிறிய அளவில் திருநெல்வேலி சந்தையிலும் விற்று ஒரு சிறு சம்பாத்தியத்தையும் வாழ்கைக்காக ஏற்படுத்திக் கொண்டோம்.

எமது வளவில் வீட்டுக்கும், தோட்டத் தேவைக்குமாக பெரிய கிணறு கட்டிய வருடத்தில், பல அயலில் உள்ள இளைஞர்கள், எங்கள் தம்பிமார், தங்கைமார் எல்லோரும் நீந்தப் பழகியதும், மற்றும் நண்பர்களுடன் மரவெள்ளிக் கிழங்கை மரத்துடன் பிடுங்கி பனை ஓலையில் நெருப்பு எரித்து சுட்ட கிழங்கை கட்டைச் சம்பலுடன் சந்தோசமாக உண்டு களித்த காலங்களை ஐயாவை ஒட்டி ஞாபகப்படுத்துகின்றேன். ஐயா, அவரது தோட்டம் செய்யும் முயற்சியில் எங்களை ஈடுபடுத்தி, விளையாட்டுக்களில் வீணாக நேரத்தினை விரையம் செய்யாமல் ஆரோக்கியமான முறையில் எங்களை வளர்த்திருக்கிறார் என்று நினைக்கும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயாவின் திட்டமிடல் திறனும் மிகவும் வலிமையானது என்று தெரிய வருகிறது.

மொத்தத்தில் ஐயா தனது எல்லாப் பிள்ளைகளையும் சிறப்பாக வாழ்க்கையில் வழிநடத்தி எல்லோருக்கும் திருமணங்களையும் செய்து வைத்து நிறைந்த பேரச் செல்வங்களையும் கண்டு மகிழ்ந்து ஒரு நிறைவான வாழ்க்கையை வாழ்ந்து இறைவனடி சேர்ந்திருக்கிறார். ஐயாவின் ஆத்மா என்றும் அமைதியுடன் இருக்க எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.

எனது மனைவி கருணை தன்னுடன் ஐயா எப்போதும் தனது மகள் போலவே பழகி வந்தார் என்றும், தானும் ஐயாவை தகப்பன் போலவே கருதினார் என்றும் கூறி, இந்த மடலில் தனது மனக்கிடக்கையையும் வெளிப்படுத்தும்படி கேட்டுக்கொள்கிறார்.

ஐயா, நீங்கள் எங்களை வழிநடத்திய முறைகளையும், எங்கள் எல்லோரையும் சிறப்பாக வளர்க்க உழைத்த உங்கள் கடின உழைப்பையும், என்றுமே மறக்கமாட்டோம். நீங்கள் எங்கள் மனதிற்குள் என்றும் வாழ்ந்துகொண்டே இருப்பீர்கள்.

**உங்கள் அன்பு மகன்**
**அறிவழகன் (அரசன்) மற்றும் மருமகள் கருணை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் அவர்கள் தனது 2 ஆவது மகனையும் மருமகளையும் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து அவுஸ்திரேலியாவுக்கு வழியனுப்பிய போது (19.08.1989)



அமரர்கள் 15 ஜனவரி 2000 மாவது ஆண்டில்
Glen Waverley, Victoria இல் தைப்பொங்கல் தினத்தன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐயாவின் 90 ஆவது பிறந்ததினத்தன்று யாழ்ப்பாணம் கோவில் வீதியில் உள்ள மகள் அம்பிகாவின் வீட்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளின் நெஞ்சகலா நினைவுகள்

**"தந்தை மகற்காற்றும் உதவி அவையத்து**
**முந்தி இருப்ப செயல்"**

இக் குறள் படி வாழ்ந்து காட்டிய எமது அன்புத் தந்தை வைத்தியலிங்கம் பேரம்பலம் அவர்கள் 13.06.2020 இல் தெய்வமாக மாறி எம்மை விட்டு பிரிந்தார்.

சரவணையில் பிறந்து, வளர்ந்து, சரவணை நாகேஸ்வரியில் படித்து சரவணையில் பிறந்த பாக்கியலட்சுமி சிதம்பரப்பிள்ளை அவர்களை காதலித்து திருமணம் செய்ததால் இருவரும் எமக்கு தெய்வங்களாக அம்மா அப்பாவாக விளங்கினார்கள். இவர் எங்களில் ஆறு ஆண் சகோதர்ரகளையும், நான்கு சகோதரிகளையும் தாங்கள் செய்த தவத்தின் பலனாக பெற்றெடுத்தனர். இருவரும் ஆசிரியர்களாக சிறந்த சேவையை ஆற்றி தம் பிள்ளைச் செல்வங்களை உயர்நிலை அடையவும், நற்பண்பு, நல்ல பழக்கமுள்ள, நற்பிரஜைகளாவதற்கு பட்ட கஸ்டங்கள், துன்பங்கள், துயரங்கள், தியாகங்கள் சொல்லில் வடிக்க முடியாதவை.

எனது சிறுவயதிலிருந்து இவர் ஆசிரியராக பாடசாலை செல்லும் போது அவதானித்த வெள்ளை வேட்டி, நசனல் என்பவற்றுடன் செல்வது மனக்கண் முன் அழியாது நிலைத்துள்ளது. அவரின் வெள்ளை உடை போன்று அவரின் உள்ளமும் எல்லோரையும் கவரக்கூடிய வெள்ளை உள்ளமாக இருந்தது என்றால் மிகையாகாது.

இவர் தனது ஆசிரியர் சேவை காலத்திலேயே மாலையில் பாடசாலை முடிந்து வந்தால் உணவருந்தி விட்டு இருளும் வரை தோட்டத்தில் தான் வேலை செய்வார். தனது ஆண் பிள்ளைகளின் உதவியுடன் மின்சாரம் அற்ற வேளைகளிலும் துலா மிதித்து மரங்களுக்கு தண்ணீர் ஊற்றியது மனதை விட்டு அகலவில்லை. எமது காணியில் ஆரம்பகாலத்தில் நெல் விதைத்து நாற்பதிற்கு மேற்பட்ட புசல் நெல் கூட ஓரிரு வருடங்களில் அறுவடை செய்தார். எங்களது குடும்பத்தை வளர்க்க, தனக்கு முதுசமாக கிடைத்த சரவணையூர்க் காணிகளை ஒவ்வொன்றாக விற்று, யாழ்ப்பாணத்தில் சிவப்பிரகாச வீதியில் மூன்று பரப்பு கொள்வனவு செய்தார். பின்னர் தனது பத்துப் பிள்ளைகளும் ஒன்றாக ஒரே இடத்தில் வாழ வேண்டும் என்ற ஒரே நோக்கில் சிவப்பிரகாச வீதியில் உள்ள காணியை விற்று தலையாழியில் பெரிய காணியை கொள்வனவு செய்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது பள்ளமாகவும் நாவல், கொய்யா மரம் நிறைந்த பற்றைக்காடாகவும் இருந்ததை தற்போதைய நிலையில் உள்ள மா, தென்னை, பலா மரம் நிறைந்த சோலையாக மாற்றி எமக்கு வழங்கினார்.

சிறுபருவத்தில் எங்கள் எல்லோருக்கும் கல்வியில் ஆக்கமும் ஊக்கமும் தந்து உயர்நிலை அடைய வழிகாட்டியவர். எங்களை இந்த நிலைக்கு ஆளாக்க அவரினதும் அம்மாவினதும் பங்களிப்பும் ஊக்குவிப்பும் துணையானது.

பெண் பிள்ளைகள் யாவரும் கல்வி கற்பதற்காக யாழ் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் சேர்த்து கல்வி கற்பித்தனர்.

சகோதரர்கள் அனைவரும் ஒற்றுமையாகவும், ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்தும், உதவி செய்தும், வீட்டு வேலைகளில் அனைவரும் பங்கேற்றும், ஆண் பிள்ளைகள் ஐயாவுடன் தோட்ட வேலைகளில் ஈடுபட்டும், பெண் பிள்ளைகள் வீட்டில் சமையல் செய்து அனைவருக்கும் உணவு பரிமாறி பசியாற்றி தன்னிறைவுடன் வாழவும் சிறு பராயத்தில் இருந்தே வழிப்படுத்தப்பட்டார்கள்.

ஐயா அன்புடனும் அரவணைப்புடனும் எம்மை வளர்ப்பினும் அவரின் ஒரு சொல் அல்லது பார்வை நாம் பிழை விடும் போது கண்டிக்கப் போதியதாகவும் இருந்தது. பயம் கலந்த அன்பு என்றும் அவர்பால் எமக்கு இருக்கத் தவறவில்லை.

எட்டாம் ஆண்டில் கற்கும் போது கதிரையில் இருந்து நித்திரை தூங்கிக் கொண்டு புத்தகம் படிப்பது போல் பாசாங்கு பண்ணிய போது அவர் தான் சாப்பிட்டு விட்டு கை கழுவ கொண்டு வந்த செம்பு தண்ணீர் கொண்டு முகத்தில் ஊற்றி எழும்பிப் போய் படு என கண்டித்தார். அது என்றும் எனது மனதில் இழையோடும்.

சரவணை விட்டு யாழ் வந்து வாடகை வீடுகள் மாறி மாறி 10 ஆவதாக தற்காலிகமாக தலையாழியில் உள்ள பெரிய காணியில் குடியேறினோம். இக் காணிக்கு பின்னர் மண் போட்டு நிரப்பி உழுது வருடம் வருடம் நீர் தேங்கும் நிலை மாற்றியமைக்கபட்டதுடன் 1976ம் ஆண்டு பிற்பகுதியில் இருந்து 1993 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் இக் காணியில் கரும்பு தோட்ட பயிற் செய்கை செய்து கரும்பு தோட்ட மாஸ்டர் என்ற பெயரையும் பெற்றார். நல்லூர் கந்தசாமி ஆலய திருவிழாவில் வாங்கிய கரும்பை எனது அண்ணன் அறிவழகன் விளையாட்டாக நட்ட போது அது செழித்து வளர்ந்ததை கண்டு இவர் கரும்பு தோட்ட செய்கையில் ஆர்வம் காட்டினார்.

க.பொ.த உயர் தரம் கற்று பரீட்சையை முடித்து பல்கலைக்கழக தெரிவிற்கு பேராதனைக்கு விவசாய பீடத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட சமயம் அதற்கு அவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமதிக்கவில்லை, மறுமுறை எடுத்து சிறந்த பெறுபேறு பெற்று வைத்தியராக வர வேண்டும் என விரும்பினார். இருந்தாலும் மீளவும் பரீட்சையில் சிறந்த பேறுபேறு கிடைத்தும் விதி வசத்தால் 79 ஆம் ஆண்டு இரண்டு பரீட்சைகள் (புதியது, பழையது) காரணமாக மருத்துவ துறை கிடைக்காது உயிரியல் விஞ்ஞான துறையே கற்க நேர்ந்தது.

பின் 24 வயதில் ஆசிரிய நியமனம் கிடைத்து மன்னாரிற்கு சென்ற சமயம், அழைத்துச்சென்று முதல் நாள் வங்காலை St Anne's மகா வித்தியாலயத்தில் அதிபரிடம் என்னை ஒப்படைத்து விட்டு மீதி வழிகாட்டுதலையும், தங்குவதற்கான இடவசதியையும், தாங்களே செய்யுங்கள் என கூறிவிட்டு உடனே வீடு திரும்பினார்.

பின்னர் நான் அதிபர் பரீட்சையில் சித்தியெய்தி தெரிவு செய்யப்பட்ட சமயம் நான் அதிபராக வர விரும்பாத நிலையில், தான் பிள்ளைகளை பார்க்க வேண்டும் என்பதால் இப்பதவியை தேடவில்லை என கூறி பிற்காலத்தில் கவலைப்படாமல் இருக்க வந்த பதவியை ஏற்றுக்கொள்ளும் படி வற்புறுத்தி அதிபராக செயற்பட வைத்தவர்.

யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் பிரதி அதிபராக இருந்த காலத்தில் எனது உறவினரான திரு. நாகலிங்கம் சண்முகரத்தினம் அவர்களை வாழ்க்கைத் துணையாக இணைத்து 1.5.1993 இல் திருமணம் செய்து வைத்ததுடன், தனது காணிகளையும் எங்கள் மீது கொண்ட நம்பிக்கையால் எமக்கு எழுதி வைத்து விட்டு, கனடாவில் இருந்த எனது தம்பி அருளழகன் அனுசருணை (Sponser) மூலம் அம்பிகா, சசிலேகா, மெய்யழகன் ஆகியோருடன் கனடாவிற்கு சென்று வந்தனர். அங்கு ஏனைய சகோதரர்களுக்கு திருமணம் செய்து வைத்ததுடன் அங்கு, பெற்றோர்கள் 7 வருடங்கள் வாழ்ந்து கடமையை நிறைவேற்றி தமது மண்ணிற்கு வந்து பிற்காலம் எம்முடன் மகிழ்ச்சியாக தமது இல்லத்தில் வசித்து வந்தனர்.

20.8.2003 இல் அம்மாவின் மறைவின் பின்னர் என்னுடனும் எனது சகோதரி அம்பிகாவின் குடும்பத்தினரு டனும் மாறி மாறி வசித்து வந்தார்.

நான் மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் கடமை ஏற்று 3 மாதத்தில் சுயவிருப்பின் பேரில் இட மாற்றம் பெற்று மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு சென்று கடமை ஆற்றினேன். 1.2.2005 இல் மீளவும் மானிப்பாய் மெமோறியல் இல் அதிபராக நியமிக்க பட்டு கடமை ஏற்ற அன்றைய தினம் எனது ஐயா எனக்கென ஒரு TVS மோட்டார் சைக்கிள் வாங்கி கொண்டுவந்து நல்லூர்க்கு சென்று வழிபாடு செய்து விட்டு வீட்டிற்கு கொண்டு வந்து விட்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் பாடசாலை விட்டு வந்ததும் அந்த மோட்டார் சைக்கிளை காட்டி இனிமேல் இந்த மோட்டார் சைக்கிளில் போய் வா, இதற்கு License தேவையில்லை என கூறினார். அவரின் செயல் எனக்கு வியப்பை ஏற்படுத்தியது. நானும் அதை எடுத்து ஓடினேன். இருந்தாலும் அதை ஓட எனக்கு உயரமான சைக்கிளாக உணர்ந்ததால் கஸ்டம் என கூறினேன். அதற்கு அவர் சிரித்து விட்டு அப்ப விடு நான் ஓடுறன் என தனது 80 ஆவது வயதில் முதல் முதலில் மோட்டார் சைக்கிள் ஓட தொடங்கி அதில் தான் நினைத்த இடம் எல்லாம் 7 / 8 வருடமாக பயணித்து சந்தோஷமாக இருந்தார் என்றால் அவரின் தற்துணிவு, ஆளுமை பற்றி கூற வேண்டியதில்லை

2010 இல் வெளிநாடுகளில் இருக்கும் பிள்ளைகளின் அழைப்பால் மீளவும் பெறாமகன் இந்திரனின் உதவியுடன் வெளிநாடு சென்றவர் கனடா, அவுஸ்திரேலியா சென்றுவிட்டு 3 மாதங்களில் இங்கு வந்து தனது வாழ்வை தொடர வேண்டும் என்ற பெரு விருப்பில் மீளவும் நாடு திரும்பினார்.

இக் காலத்தில் என்னை வேம்படி மகளிர் கல்லூரிக்கு அதிபராக வர வழிப்படுத்திய பெருமையும் இவரையே சாரும்.

நாட்டில் ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக 2005 இல் கரும்பு தோட்டத்தை முற்றாக அழித்து கைவிடும் நிலை ஏற்பட்டது. இத் தோட்டத்தில் இருந்து நல்லூர், சந்நிதி திருவிழாக்காலங்களிலும், தைப்பொங்கல், வருடப்பிறப்பு, நவராத்திரி போன்ற இந்துக்களின் விசேட தினங்களில் வியாபாரிகள் கொள்வனவு செய்து விற்பதன் மூலம் சந்தைப்படுத்த பட்டது. கரும்பு வெட்டி வாகனங்களில் ஏற்றி செல்வதை பார்த்து அக்காலங்களில் நாம் அனைவரும் மகிழ்வடைந்தோம். ஐயாவின் கரும்பு தோட்டத்தை 1993 ஆம் ஆண்டிலிருந்து 2005 வரை (தந்தையார் கனடா சென்ற காலத்தில்) அழியாது எனது துணைவனார் பேணி வந்ததும் குறிப்பிட தக்கது.

எம்மோடு மட்டுமின்றி எமது ஐயா தனது 10 பிள்ளைகளுடன் காலத்திற்கு காலம் அவரவர் தேவைகளுக்கேற்ப பெரியம்மாவின் பிள்ளைகள், மாமாவின் பிள்ளைகள் தவச்சித்தப்பாவின் பிள்ளைகள், ஆசை ஐயாவின் பிள்ளை (ஈசன்), சீனி ஐயாவின் பிள்ளைகள், எங்கள் குடும்ப சகோதரர்களின் நண்பர்கள் போன்றோரை எங்களுடன் வீட்டில் தங்கி கற்பதற்கான வசதிகளை ஏற்படுத்தி உள்ளார். மேலும் எங்கள் குடும்ப அங்கத்தவர்களின் நண்பர்கள் உயர்தரவகுப்பு, பல்கலைக்கழக கல்வி கற்கும் தறுவாயில் எங்களுடன் இருந்து கல்வி கற்க வசதி செய்தார்.

எமது கடைசி தங்கை சசிலேகாவின் சிநேகிதி (சின்ன சசி) தன் பல்கலைக்கழக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் எம்மோடு இருந்து கற்றவர், அவர் தற்போது ஜேர்மனியில் இருக்கிறார். அவர் ஐயா நோய்வாய்ப்பட்ட செய்தி கேட்டு, தான் அவரிற்கு எதாவது செய்ய வேண்டும் என்ற உணர்வில் நாம் மறுத்தும் வலுக்கட்டாயமாக கடந்த இரு மாதங்களுக்கு முதல் கொரோனா நோய் காலத்திலாவது தான் உதவி செய்ய வேண்டும் என்ற ஆதங்கத்தில் குறித்த தொகை பணத்தை அனுப்பினார். அவருக்கு இறுதிக்காலத்தில் தேவையான "Ensure மா" வை அவர் அன்பாக வழங்கிய பணத்தில் கொள்வனவு செய்து ஐயாவுக்கு வழங்கினோம். அவர் மற்றவர்கள் மேல் வைத்த அதீத அன்பும் அக்கறைக்கும் ஓர் எடுத்துக்காட்டாக இது அமைந்துள்ளது.

அம்மாவும் ஐயாவும் ஒரே ராசியில் பிறந்தவர்கள் ஆகையால் எவ்வளவு கஸ்டம், துன்பம், சண்டை, சச்சரவு வந்தாலும் அதனை மறந்து ஒற்றுமையாகவும் சிறந்த பெற்றார்க்கான எடுத்துக்காட்டாகவும் வாழ்ந்து வந்தனர்.

இதற்கு சான்றாக ஒரே திதியில் இறந்தும் உள்ளனர். எமது தந்தையார் மிகவும் அழகானவராகவும், வசீகரத்தோற்றமும் உடையவர், இனிமையாக பேசுபவர், மிகுந்த இரசனையுடையவர். அவர் நாம் வெளிக்கிட்டு வெளியில் செல்லும் போது பாத்து ரசித்து உடையின் நிறம் தனக்கு பிடித்திருந்தால் உடனே கூறுவார். இல்லாவிடில் இதனை மாற்றி வேறு உடை அணிந்து செல்லுமாறு கூறுவார். முகத்தை பார்த்து எமது எண்ணங்களை தெளிவாக புரிந்து கொள்ளுவார். மிகுந்த ரசனை உடைய பாடல், நடனம் என்பவற்றை ரசித்து கேட்கும், பார்க்கும் பழக்கம் உடையவர். மிகுந்த இறைபக்தி உடையவர்,

நாம் சிறு பிள்ளைகளாக இருந்த காலத்தில் நல்லூர் திருவிழா நாட்களில் மணி ஐயர் அவர்களின் கதா பிரசங்கத்தை கேட்பதற்காக தவறாது அழைத்து செல்வார். இதன் காரணமாக நாம் அனைவரும் இறை பக்தி உடையவராக நற் பிரஜைகளாக உருவாக்கபட்டத்தை இட்டு பெருமை அடைகின்றோம். மேலும் எம் அனைவரையும் படிப்பதற்கு ஊக்குவித்து சிறந்த நிலையை அடைய செய்து இல்லற வாழ்க்கையையும் அமைத்து பல பேரப்பிள்ளைகளை கண்டு கழித்தவர், பேரப்பிள்ளைகளின் உயர்விலும் மிகுந்த அக்கறை உடையவராக திகழ்ந்தார். எனது மகள் மாதுளாவிக்கு 5 வயது நிரம்பிய நிலையில் கனடாவில் இருந்து வந்து இங்குள்ள பேரப்பிள்ளைகள் மூவரையும் சந்தித்தார்.

இறக்கும் வரை அவர்கள் மீது மிகுந்த பற்று உள்ளவராகவும் அவர்களின் வளச்சியிலும் அதிக அக்கறை செலுத்தி ஊக்கிவிப்பவராகவும் இருந்தார். எனது ஓய்வின் பின் அவரின் இறுதி காலங்களில் ஆறு ஏழு மாதங்கள் யாருடனும் உரையாட முடியாத நிலையிலும் திரவ உணவுடன் மட்டும் இருந்த நிலைமை எம் அனைவர்க்கும் மிகவும் மன வேதனையாக கழிக்க வேண்டி ஏற்பட்டது. இதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்த இறைவன் அவரை 13.06.2020 இல் யாழ் போதனா வைத்தியசாலையில் நானும் எனது மகளும் அருகில் நிற்க இறைவனது பாதார விந்தங்களில் சேர்த்துக் கொண்டார்.

அவர் பூரணமான வாழ்க்கையை மன நிறைவுடன் வாழ்ந்தமையால் 2015 ஆம் ஆண்டில் அண்ணன் அறிவழகன் அவரை பார்வையிட வந்த சமயத்திலும், நாம் 90வது வயது பிறந்த தினத்தை சகோதரி அம்பிகா வீட்டிலும், 13.05.2020 இல் மூத்த மகனின் விருப்புக்கு ஏற்ப 95வது வயது பிறந்த தினத்தை எமது இல்லத்தில் கொண்டாடி மகிழ்ந்தோம். அன்றய தினம் கணனி தொழில்நுட்பதின் (Zoom) ஊடாக அறிவழகனின் முயற்சியால் அனைத்து பிள்ளைகளும் முதல் தடவையாக ஒன்றாக பங்கேற்று மகிழ்ந்தனர். இவரின் வாழ்கை காலத்தில் 95 வருடங்களை பூர்த்தி செய்து உதாரண புருஷராக திகழ்ந்தார் என்ற பெருமையுடன் இறைவனுக்கு நன்றி செலுத்தி அவரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்தித்து அவரின் இழப்பை ஏற்று ஆறுதல் அடைவோமாக.

இப்படியே ஐயா தன் வாழ்வில் தனக்காக அன்றி தன் மனைவி, பிள்ளைகள், ஏனைய உறவினர்கள், நண்பர்கள், எம்முடன் பழகும் அனைவருக்கும் செய்தவற்றை கூறவோ, எழுதவோ இயலாத காரியம். எனவே இத்துடன் நிறுத்தி எமது அன்புத் தெய்வம் தனது 95வது வயதை பூர்த்தி செய்து 13.5.2020 இல் பிறந்த நாள் கொண்டாடி ஜூன் மாதத்தில் 13.6.2020 இல் இறைவனடி சேர்ந்துள்ளார் ஐயாவை இருகரம் கூப்பி வாழ்த்தி வணங்கி அன்புக்குரிய ஐயா பற்றிய நினைவலைகளை நிறைவு செய்கிறேன்.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படுவர்"**

**திருமதி வேணுகா சண்முகரட்ணம்**
**கொக்குவில்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்களாகிய இருவரும் தமது வீட்டில் மகள் வேனுகாவுடைனும் மருமகன் சண்முகரட்ணமுடனும் பேத்தி மாதுனாவுடனும். –படம் 2002



அமரர் அவர்களது 90 ஆவது பிறந்ததினம் மகள் அம்பிகா வீட்டில் நடந்த போது....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐயா பற்றிய நினைவுப் பகிர்வு..........................

சிறுவயதில் இருந்தே நான் ஐயாவுடன் நெருங்கிப் பழகுவேன். அவர் சந்தை, சரவணைத்தோட்டம், சில நெருங்கிய உறவினர் வீடுகளுக்குப் போகையில் கூடுதலாக என்னையும் அழைத்துச் செல்வார். அப்படி அவருடன் செல்லும் வேளைகளில் நிறையப் புத்திமதிகள் அறிவுரைகள் கூறுவார். ஐயா ஒவ்வொரு ஆண்டும் தனது தந்தையாரும் எனது அப்பப்பாவுமான வைத்தியலிங்கம் அவர்களை நினைத்து ஆடி அமாவாசை விரதம் அனுஷ்டிக்கும் வேளை கீரிமலை சென்று தீர்த்தம் ஆடுவார். அதன் போது கூடுதலாக என்னையும் அழைத்துச் செல்வார். இப்படியாக அவருடன் தனித்தோ அன்றி ஏனைய சகோதர சகோதரிகளுடன் சேர்ந்தோ இலங்கையிலே நிறைய இடங்களுக்குச் சுற்றுலா சென்றது இன்னமும் நினைவை விட்டு அகலாது உள்ளது.

ஒருமுறை எங்களை பலாலியில் இருந்து ரட்மலானையூடாக விமானத்தில் கூட்டிச் சென்று கொழும்பு சுற்றுப் பயணம் செய்தார். யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் முன்னால் நாங்கள் வசித்த போது சகோதரர்கள் எல்லோரும் சேர்ந்து கஸ்தூரியார் வீதியால் நடந்து திரையரங்கில் படம் பார்க்கக் கூட கூட்டிச் சென்றது இன்னமும் ஞாபகத்தில் வருகின்றது. இப்படியாக ஐயா எங்களைச் சந்தோசப்படுத்தி வளர்த்தாலும் படிப்பு, பழக்கவழக்கம், பெரியவர்களை மதித்தல், கோயில் வழிபாடுகள் போன்ற விடயங்களில் கண்டிப்பான வழிநடத்தல்களை கடைப்பிடித்து வந்தார். இதனால் வீட்டில் யாவரும் ஒரு பயத்துடன் கூடிய மரியாதையை ஐயா மேல் வைத்திருந்தனர். அப்படியாக ஐயாவின் வழிநடத்தல்கள் இருந்தமையால் தான் நாங்கள் 10 பிள்ளைகளும் இன்று ஒரு நல்ல நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

ஐயா பல பாடசாலைகளில் படிப்பித்து ஓய்வெடுத்திருந்தாலும் அவர் வைத்தீஸ்வராக் கல்லூரியில் படிப்பிக்கும் போது அவரது தோற்றம் என்னை ஐயா பற்றி பெருமை கொள்ள வைத்தது. அக்காலகட்டங்களில் அவர் அழகாக வெள்ளை வேட்டி, வெள்ளை நஷனல் அணிந்து கம்பீரமாகச் சென்று வருவார். பார்ப்பதற்கு மிகுந்த அழகாகவே தெரிவார். பின் நாட்களில் அவர் நஷனல் அணிவதில்லை. அவர் தனது ஆசிரியத் தொழிலை மிக மகிழ்சியுடன் செய்து வந்தார். இருந்த போதும் அவர் தன்னை ஒரு விவசாயி எனத் தான் அறிமுகம் செய்ய விரும்பிக் கொள்வார். அவருக்கு விவசாயம் ஒரு தனிக்கலை அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயியாக தன்னை அறிமுகம் செய்ய விரும்பும் வேளைகளில் வள்ளுவரின்

**"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்**
**தொழுதுண்டு பின் செல்வார்"**

என்ற குறளையும் கோடிட்டுக் காட்டிக் கொள்வார்.

ஐயாவின் விவசாயப் பற்றிற்கு அவரின் சரவணையூர் அங்கிருந்த தோட்டங்கள் சிறு வயதில் இருந்தே விவசாயம் செய்து வந்த பழக்கம் என்பன காரணமாக இருந்தன. ஆனால் அவரின் ஆசிரியத் தொழிலுக்கு மேலாக அவரின் உழைப்பு விடாமுயற்சி எல்லாம் வெட்ட வெளியாகக் கிடந்த தலையாழிக் காணியின் மீதே இருந்தது எனலாம். அந்தக் காணியின் இன்றைய தோற்றம் ஐயாவின் கடந்த ஐந்து தசாப்த கால அயராத வியர்வை சிந்திய உழைப்பின் பிரதிபலிப்பு என்றால் மிகையாகாது. அவர் கூடுதலாக எல்லோரையும் ஏதோ விதத்தில் பிரயாசையாக இருக்க வலியுறுத்துவார். பிரயாசை என்ற பதம் ஐயாவிற்குச் சாலப் பொருந்தியது எனலாம். நேரத்தை வீண்விரயம் செய்வது என்பது அவரது அகராதியில் இல்லவே இல்லை. அப்படியே தான் எங்கள் அனைவரையும் வளர்த்து உள்ளார் என்பதில் எங்கள் அனைவருக்கும் பெருமையே!

ஐயா மகாபாரதம், கம்பராமாயணம் கதைகள் கூறுவதில் ஒரு தனிரகத்தைக் கொண்டு விளங்கினார். அவர் பகுதி பகுதியாகக் கூறிவிட்டு நிற்பாட்டு கையில் ஐயா, மீதியை அப்பவே சொல்ல வேண்டும் என்ற அவா எங்களிடம் எப்போதுமே தோன்றும். அவரிடம் பல விதமான ஆளுமைகள் நிறைந்தே இருந்தது. அப்படியே மற்றவர்களுக்கு (உறவினர், நண்பர்கள், அயலவர்கள்) உதவி தேவைப்படும் போது சற்றும் தயங்காமல் முன்னின்று உதவி செய்வார். அவர் அனைவரிடமும் வெளிப்படையாக திறந்த மனத்துடன் பழகும் சுபாவம் கொண்டிருந்தார். போக விட்டு புறம் சொல்வது, உள் ஒன்று வைத்து புறம் ஒன்று சொல்வது ஐயாவின் பழக்கமன்று. மேலும் வாழ்க்கையில் வேதனைகள், துன்பங்கள் வரும் போது அதனால் துவண்டு விடாது அவற்றை நேருக்கு நேர் துணிந்து முகங்கொடுத்து நிற்பதும் அவரின் இயல்புகளில் ஒன்றாகும். இவரிடம் மேலும் ஓர் உன்னத சிறப்பு இயல்பு உண்டு. அதனையும் குறிப்பிட்டுத் தான் ஆக வேண்டும். அவரிடம் தனது பிள்ளைகள் பற்றியோ அல்லது தன்னைச் சார்ந்த நண்பர்கள், உறவினர்கள் பற்றியோ வெளியாட்கள் ஒருவர் குறை பட்டுக்கொள்வாராயின் குறைபட்டுக் கொள்பவரை மறுதலித்துக் கதைத்து ஏசாக்குறையாக வழி அனுப்பிவைத்து விடுவார். அதன் பின் தான் அந்த விடயம் பற்றி சம்மந்தப்பட்ட பிள்ளைகளுடன் தீரவிசாரித்து குற்ற மெனில் பலத்த தண்டனையும் அறிவுரையும் கொடுப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி ஒரு பூரண திருப்தியான வாழ்வை வாழ்ந்த ஐயா தனது முதுமையினால் 95 வயதைக் கொண்டாடி விட்டு யூன் 13 இல் இறைபதம் அடைந்து விட்டார். அவர் இழப்பு எங்களைத் துன்பத்தில் ஆழ்த்தினாலும் அவர் எங்களிற்குக் காட்டிய வழிகாட்டுதல் எங்களை வாழ வைக்கும் என நம்புகின்றேன்.

எனது ஐயா அம்மாவை நாங்கள் வசிக்கும் கனடா நாட்டில் 1994 -2001 வரை வரவழைத்து தங்க வைத்ததில் எனக்கும் ஐயா அம்மாவிற்கும் நிறைவான மனத்திருப்த்தி கிடைத்தது. அப்படி ஒரு பாக்கியம் ஏற்ப்படுத்தித் தந்த இறைவனுக்கும் கனடா நாட்டிற்கும் இத் தருணத்தில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். அவர்களை அந்தக் காலகட்டத்திலாவது யுத்த சூழல் சூழாமல் இங்கே பாதுகாக்க முடிந்தது.

மேலும் இறுதியாக நான் 2019-2020 காலகட்டத்தில் 3 கிழமைக்கு மேலாக ஐயாவுடன் இலங்கையில் தங்கியிருந்ததும் எனக்குக் கிடைத்த பாக்கியம் ஆக கருதுகின்றேன். அத்துடன் முக்கியமாக ஐயா நோய் வாய்ப்பட்டு படுக்கை நிலைமைக்கு வந்த பின்பும், முன்பும் அவரை நல்ல வகையில் அன்பு காட்டி பராமரித்து வந்த மலர் அக்கா, சந்திரா அத்தான், மாதுளா, திரு, ஶ்ரீ, உமையாள் ராகுலன் மற்றும் நேரம் தவறாது அவருக்கு உறுதுணையாக நின்ற ராணி சசி மற்றும் உறவினர்கள் நண்பர்களுக்கும் சுகயீனம் அடைந்திருந்த போது சிகிச்சை செய்த மருத்துவர்களுக்கும் தாதிகள் யாவருக்கும் எங்கள் இதய பூர்வமான நன்றியை இங்கு பதிவிட்டுக் கொள்கின்றேன்.

ஐயா நீங்கள் அம்மாவிடம் மறுபடி சென்று விட்டீர்கள். உங்கள் சந்ததிக்காக இருவரும் பெரிய விருட்சத்தை உலகிற்கு அறிமுகம் செய்து விட்டே சென்றுள்ளீர்கள். உங்கள் இருவரினதும் ஆசீர்வாதங்கள் என்றும் எல்லோருக்கும் கிட்டும் எனத் திடமாக நம்புகின்றேன். உங்கள் ஆன்மா சந்தியடைய இறைவனை வேண்டுகின்றேன்.


**ஓம் சாந்தி சாந்தி சாந்தி**

**அன்பு மகன்**
**அருளழகன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நயக்கரா நீர்வீழ்ச்சி அருகில் இரவுக்காட்சி March 04th, 1995



அமரர் அவர்களது 2010 ஆண்டு கனடா வருகையின்
போது மகள் சசியின் வீட்டில் படமாக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரரின் 93 ஆவது பிறந்ததினத்தன்று அவரின் மதிப்புக்குரிய அக்கா திருமதி பாலசிங்கம் மகள் அருணா அவர்களுடன்.

குறிப்பு: திருமதி பாலசிங்கம் அவர்களிடமிருந்தே தலையாளிக்காணி பெற்றுக்கொள்ளப்பட்டது.



அமரர் அவர்களின் 95 ஆவது பிறந்ததினம் மகள் வேனுகா அவர்கள் வீட்டில் சிறப்பாக கொண்டாடிய போது மகள் அம்பிகாவும் மருமகன் ஸ்ரீ அவர்களும் பேத்தி உமையாளும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயா அன்புடன் உங்கள் நினைவாக.

என்னை அன்புடன் அரவணைத்தும் நல்ல பழக்க வழக்கங்களை சொல்லித்தந்தும், படிப்பித்தும் எதையும் தற்துனிவுடன் செய்யக்கூடியவனாகவும் வழி நடத்தி சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் மிக்கவனாகவும் நடக்க வழி காட்டினீர்கள். எச்சந்தர்ப்பத்திலும் மனம் தளராமலும் சங்கடங்களைக் கண்டு பயப்படாமலும் எதையும் சாமர்த்தியமாக சமாளிக்க கூடியனவாகவும் வழி நடத்தி ஆளாக்கிய உங்கள் நினைவுகள் ஆண்டுகள் பல ஆனாலும் என்னை விட்டு அகலாது.

நீங்களும் அம்மாவும் 1999 ஆம் ஆண்டு இலண்டன் வந்த போது எனது தொழில் நிறுவனத்தை உங்கள் ஆசீர்வாதத்துடன் திறந்து ஆரம்பித்து வைத்தீர்கள். இன்று வரை இந்த நிறுவனம் சிறப்புடன் இயங்கிக் கொண்டு இருக்கின்றது. எங்கள் குழந்தைச் செல்வங்களுக்கு பெயர் சூட்டி ஏடும் தொடக்கி வைத்து மனநிறைவு அடைந்தீர்கள் இது எமக்கு என்றும் மறக்கமுடியாத மகிழ்ச்சியான நிகழ்வுகளாகும்.

**ஐயா உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்**

**என்றும் உங்கள் நினைவுடன்**
**மகன் ஆனந்தன்**
**மருமகள் றஞ்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1999 இல் அமரர்கள் இருவரும் இலண்டன் சென்று மகன் ஆனந்தன் மனைவி றஞ்சி, பேரப்பிள்ளைகள் அருணி, சோயன் மற்றும் மகன் மணியைச் சந்தித்தபோது.



2018 பங்குனியில் மகன் ஆனந்தன் – றஞ்சி, அழகன் – வேதா தம்பதியினராக ஐயாவைச் சென்று பார்த்தபோது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயா உங்களின் செல்லப் பிள்ளையின் துயர் பகிர்வு

ஐயா மண்ணில் பிறப்பும் இறப்பும் நிச்சயம் என்பது தெரிந்தும் இறப்பு என்று வரும் போது யாவருக்கும் அதை ஏற்றுக்கொள்வது எந்த வயதாயினும் கடினம் தான்.

தலையாழியில் படிக்கும் காலத்தில் ஓய்வு நேரத்தில் உங்களுடன் கரும்பு, வாழைக்குலை, கீரை, மிளகாய் போன்றவற்றை சந்தைப்படுத்துவதில் என சிறிய உதவிகள் செய்தது ஞாபகம் வருகிறது. உங்களுடன் எப்பவும் பின்னால் திரிவேனாம் அதனால் தான் ஐயாவின் செல்லம் என்ற பெயர் வந்ததாம்.

நாட்டு பிரச்சனை காரணமாக 1994 கார்த்திகையில் கனடா வந்தோம். எனது திருமணத்தையும் Germany இல் சென்று நிகழ்த்தி மீண்டும் கனடா வந்து உங்களுடன் வாழக்கிடைத்தது. பின் பேரப்பிள்ளைகளும் உங்கள் அரவணைப்பில் வாழ்ந்து தமிழ் சமய அறிவும் அவர்களுக்கு கிடைத்ததையும் எண்ணி பெருமை அடைகின்றேன். மீண்டும் 2010 இல் கனடா வந்த போது உங்களை நான் காரில் பல இடங்களுக்கு கூட்டி சென்றதில் எனது விருப்பமும் நிறைவேறியது.

நீங்கள் தாய் நாடு சென்றபின், பல தடவைகள் குடும்பமாக வந்து உங்களை பார்த்து மகிழ்ந்த நாட்கள் மிகவும் இனிமையானவை. அத்துடன் 2015 ம் ஆண்டு உங்கள் பேத்தி அபிராமியின் பூப்புனித நீராட்டுவிழாவை உங்களுடன் வந்து கொண்டாடியது எனக்கு மிகவும் மகிழ்வாக இருக்கிறது. அத்துடன் இறுதியாக 2019 November இல் திடீர் என ஏற்பட்ட சுகவீனம் அறிந்து ஒரு மாத விடுமுறை எடுத்து அந்த காலம் முழுவதும் மலர் அக்கா வீட்டில் உங்களுடனேயே இருந்து உங்கள் கடமைகளை செய்தது மனதிற்கு மிக ஆறுதல் தருகிறது.

**உங்கள் ஆத்மா சாந்தி பெற வேண்டி நிற்கும்.**
**உங்கள் செல்லம்**
**சசிலேகா சேந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2001 இல் பேத்தி அஞ்சலியின் 3 ஆவது பிறந்தநாள் கனடாவில்.



2015 ஆம் ஆண்டு அபிராமியின் (பேத்தி) பூப்புனித நீராட்டு விழாவின் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2019 May ஐயாவுடன் இலங்கையில்



கனடாவில் 2001 ஆம் ஆண்டு தைப்பொங்கல் தினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயாவுக்கு மணியின் துயர் பகிர்வு

நேரம் எனும் காலக் கடிகாரத்தை கற்றுத் தந்த என் ஐயா!

நீங்கள் மானிடப்பிறவியில் இருந்து நீங்கிச் சென்று விட்டாலும் உங்கள் பிள்ளைகள் ஆகிய நாங்கள் பத்துப் பேரும் உங்கள் ஓர்மமான சலைக்காத உழைப்பையும், விடாமுயற்சியையும், அறிவுரைகளை எண்ணிப் பார்ப்பதனாலும், நாமும் சேர்ந்து கடைப்பிடிப்பதனாலும் தான் இன்று வரை எமது வாழ்க்கையில் சிறப்புக்களை அடைந்து கொண்டு இருக்கின்றோம் என்றால் அதுவே உண்மையானதும் மிகையற்றதும் ஆகும்.

அம்மா எங்களுக்கு நல்ல அறிவூட்டி பாடங்களைப் படிப்பித்தது போல நீங்கள் எங்களுக்கு வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய பல உன்னதமான செயற்கை பாடங்களை செயல் முறையாகவே கற்றுத் தந்து நேரம் எனும் காலக்கடிகாரத்தையும் தவறாது கடைப்பிடிக்க கற்றுத்தந்தீர்கள் ஐயா.

நன்றாக நினைவுள்ளது நாங்கள் சிறுவயதில் பாடசாலை முடிந்து வீட்டிற்கு வந்ததும் தோட்டத்திற்கு அழைத்துச்சென்று தோட்ட வேலைகளைப் பழக்கியதும் கூடவே பாடசாலைப் பாடங்களை கற்பித்ததும், நீங்களும் பல கடின வேலைகளை செய்வதும், எமது வயதை ஒட்டிய பலர் பக்கத்து வளவில் விளையாடிக்கொண்டு இருக்கும் போது நாங்கள் சேர்ந்து அவர்களுடன் விளையாட முடியவில்லை என்று எண்ணியதும், என் மனக் கண் முன்னே வந்து போனாலும் ஐயா நீங்கள் அன்று எங்களையும் உங்களைப் போன்று ஒரு கடின உழைப்பாளியாக்கியதும், எதிர்காலத்தையும் எமது கடமைகளையும், கற்றுத்தந்த பாடங்களையும், நேரம் என்னும் காலத்தின் அருமையும் புரிந்து உங்கள் நினைவுகளோடு வாழ்கின்றோம்.

Work is never ends until died என்ற கொரிய தேசத்து பழமொழி போன்று எனது ஐயாவும் வாழ்ந்து சென்றுள்ளார் என்பதை எண்ணி நான் பெருமை கொள்கின்றேன்.

**ஐயா உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டி நிற்கின்றேன்.**

**ஓம்சாந்தி சாந்தி சாந்தி**

**அன்பு மகன்.**
**மணியழகன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் அவர்களின் மகன் மணி மருமகள் பாமளா 2019 இல் இலங்கை சென்ற போது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் ஐயா ஓர் நல்லாசான்

அன்பால் நல்லறிவு பல தந்து
அரவணைப்பும் அதிகமாய் பல தந்து
கற்பித்தலில் சீடனாய் எனைக்கவர்ந்து
வழி நடத்திய ஓர் நல்லாசான்

அன்பிற்கு நாணல்புல் போன்ற குணம்தந்து
பண்புக்கு இலக்கணம் எனும் பாங்குதந்து
கோபத்திற்கு சீறும்பாம்பு போன்ற இயலபுதந்து
கடைசியில் இடிதாங்கும் இதயமும் தந்தீர்கள்

அளவு கடந்த முயற்சிகள் பல கொண்டு
ஆர்வமாய் தானம் தான் பல செய்து
இயல்பாகவே தீர்க்கதரிசனம் சொல்லும்
ஓர் இதமான சுகராகம் நீங்கள்

மாதா, பிதா, குருவை கடந்து இன்று
வாழ்வில் இருவரும் இழந்தநிலையில் நாம்
ஆனால் அவை அனைத்துமாய் நீங்கள்
தொடர்ந்தும் எம்மை அரவணைத்திருப்பீர்கள்

வாலிபத்தில் என்மீதான உச்சமான
உங்கள் கண்டிப்புக்களின் அர்த்தங்கள்
இன்றும் என் மனங்களில் என்பிள்ளைகளை
தண்டிக்கும் போது நான் உணர்கின்றேன்

உங்கள் அச்சமற்ற துடிதுடிப்பான நிலையும்
சவால்களை உடைத்தெறியும் நிலையும்
மற்றவர்களை களிப்பில் ஆழ்த்தும் நிலையும்
இன்று வெறும் நினைவுகளாக மட்டுமெஞ்சுகிறது
உங்கள் வழிகாட்டலில் இன்று
எங்கள் பாதைகள் நகர்கின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் அறிவும் பண்பும் இன்று
எங்களுக்குள்ளே ஓர்பாடமாய்கனக்கிறது

ஆயிரம் கவிகள் சொல்லும் ஓர்
அழகான அர்த்தங்கள் நீங்கள் ஐயா
விரைவாய் கடக்கின்ற என் நாட்களில்
ஆசீர்வாதமாய் உங்கள் நினைவுகள்
இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும்
என்னுள் சிதறிக் கிடக்கும் ஐயா

**உங்கள் ஆத்மா சாந்திக்காய் பிரார்த்திக்கும்**
**உங்கள் கடைக்குட்டி**
**மெய்யழகன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரரின் இளையமகன் அழகன் குடும்பமாக 2016இல் இலங்கை சென்று அன்னாரை மகள் வேனுகா வீட்டில் சந்தித்த போது.



அமரரின் இளைய புதல்வன் அழகன் குடும்பமாக 2016இல் இலங்கை சென்று அன்னாருடன் தங்கியபோது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அமரரின் இளைய மகன் அழகன் 2016 இல் இலங்கையில் தனது தாயாரின்
13 ஆவது சிரார்த்த தினத்தை அமரருடன் சேர்த்து கடைப்பிடித்த போது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் அவர்களைப் பின்பற்றி வீட்டுத்தோட்டம் செய்யும் கடைசி மகன் அழகனுடன் சகோதர சகோதரிகளும் மைத்துனர் மற்றும் மைத்துனியும் கனடாவில் யூலை 07,2020இல்



அமரர் அவர்களின் 90ஆவது பிறந்தநாளில் மகன் அறிவழகனும் மருமகள் கருணையும் மகள்களான வேணுகாவும் அம்பிகாவும் மருமக்களான சண்முகரட்ணமும் ஸ்ரீ அவர்களும். 13.05.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dear Appappa,

I never got the pleasure of getting to know you as well as I wish I had, but I do have a few memories of you from when I was younger that I shall forever cherish.

On the few visits that you made to England, you were able to spend some quality time with your grandchildren and I have some fond memories of you taking me to the park and teaching Tamil to me with Appamma. I was honoured to be able to see you one last time in July 2017. You were still remarkably handsome and looked debonair, considering your age at the time too!

I am aware that the life you lived was being committed to hard work and dedication to your family Today's tears water tomorrow's gardens" is a fitting quote for you as you were a conscientious and diligent man. I admire the fact that you worked tirelessly to provide for your family but that you ISO found your true passion which you meticulously placed your heart into your undying love for farming. You got your children to help you out on a regular basis and I appreciate that you wanted to engrain the values of work into them at a young age I am sure this has helped them to be immensely successful in the lives they lead today.

I want to thank you for providing me with a big, beautiful and loving extended family. The relationships I have grown to treasure and value with them has brought me great happiness in life In God's arm may you gently rest and I shall endeavour with all my might to embrace the love for life that you had, into my own too.


**"Todays tears water tomorrow's gardens"**

With Love,
Nayani



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் தனது பேத்தி நயனியுடன் தலையாளிக் காணியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## Dear Appappa,

When you came and saw me as a child you told me to pray and to this day, I have kept up that practice and evolving it. It is a huge part of my life. I remember the last time you came to London how happy everyone was around you.

I must say we will be surely missing a star in our life.

**Myllon Anpalagan**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

One of my fondest memories of Ammappa is when I was about 8 years old. It was a school day and there had been a massive snowstorm in Toronto overnight. There was so much snow outside that my parents had decided to not send my brothers and I to school that day while my brothers were busy jumping with joy, I was worried about my school attendance record Ammappa had been the one who walked us to school, so I went up to him and told him that i couldn't skip school. Ammappa explained how it wasn't safe to go outside and assured me that it was okay to miss a day of school. However, I was still persistent that I needed to go to school Ammappa was a retired school teacher so maybe it was because he understood a student's desire to learn, or maybe he wanted to make his eldest granddaughter happy, but he agreed walk me to school that day. We got bundled up for the cold weather (Ammappa wore his iconic grey winter jacket, of course) and headed outdoors I had never seen so much snow before. The snowbanks along the sidewalks were taller than I was. We probably walked about 100 meters through the thick snow before Ammappa decided it wasn't a good idea and that we should probably head back home I agreed. This memory serves as a reminder to me of how devoted Ammappa was to his family. Today, I can see this same devotion to family amongst his 10 children and 27 grandchildren. I am forever grateful to Ammappa and Ammamma for blessing me with this big beautiful family that's always there for me.

"Family is like branches on a tree. we all grow in different directions, but our roots remain as one."

Love,
Uma Paranthaman



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Ammappa to me is the epitome of courage and strength, when I think back to my childhood. there are so many memories of when he encouraged me to overcome my fears and wade into new waters - quite literally. He used to take myself and my siblings to swimming classes at the local high school, and as a child, I was terrified of swimming in the deep end of the pool. Dur. one class, I pulled myself out of the pool when the instructor asked all the students to swim o. to the deep end. I was terrified and wanted to quit. Ammappa, who was watching from the sidelines, came over and quite sternly told me that we were not going home until I swam to the deep end. As much as he was a stern fellow, there was a sense of love, belief, and comfort that he radiated - and that day was the last day I feared swimming in the deep end. As a younger adult, I was proud and excited that he was able to attend my High School Graduation where ! delivered my Valedictorian speech - again providing his support from the sidelines at the very same school where he took our little selves to swimming lessons. Despite his passing, he will always be in our hearts and memories. His teachings live on in each of our achievements, and his spirit lives on in every one of his family members

**With love.**
**Pranavan Paranthaman**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

My fondest memories of Ammappa are actually his phone calls when he was home in Sri Lank. while my siblings and I were in Canada. Because I was so young, I don't remember the details of any specific call, but I remember vividly the message that he would always convey without fail. After the ordinary "do well in school and become successful" formalities, which all grandparents tell you, he would always finish with his most important message, "Be and become a good person." I always remembered this, because I knew it was what he wanted o his grandchildren the most, above all else, and I hope that I can say that I have accomplishe his wish. Other than the phone calls, my memories of Ammappa are faint, but I do remember him walking my siblings and me to elementary school every day, even through thick Canadia. snow (which I sometimes threw at him, according to Amma) I'm so sorry Ammappa! To me y... were invincible. That's why I did it. I also remember spending lots of time under Ammamma Ammappa's care when Amma and Appa were at work, and I'm very thankful for that time I was Ammappa could have lived with us longer in Canada but with 27 grandchildren located all ove! the globe, I'm happy he was able to spend any time with us at all. Ammappa. I pray that you happy and at ease, and I will always remember what you told me over the phone.

**Love,**

**Partheban Paranthaman**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Growing up in Australia, we enjoyed learning about our Appa's family background through stories told by Appa and Amma, our long-distance relationships with our admirable cousins and the highly cherished family gatherings while travelling around the world. Our memories of Appappa are quite infrequent, though unforgettable. We hold immense gratitude for the fact that we had a few opportunities to have Appappa living and visiting to our family home for a short yet meaningful time while we were young. We remember Appappa for his stern yet compassionate demeanor, his passion for agriculture and his wealth of knowledge. We have no doubt that Appappa was an excellent teacher. Appappa was a hard worker and a loving human being. We share our blessings and cherish Appapa's teachings for our lives. We also wish to convey our sincere condolences to the members of the growing family tree that we are all connected to.

**Love**
**Thillipan, Shu-ki, Vithushan,**
**Ambika and Crisha**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Although the time spent with my grandfather Vaithiyalingam Perampalam felt short, my Grandfather has an everlasting effect on all of the family members that he had a chance to touch. He was a hard-working individual, who fathered 10 children aided by my grandmother, Packiyaletchumy Perampalam. He was a devoted husband, whom was inseparable to Grandma. He taught me how to ride my first bike, write my basic Tamil alphabets, and was always willing to teach us about the culture back home. He was a very family-oriented man who enjoyed the little things in life. I hope to one day become as frugal, and happy. May you rest in peace and be reunited with Grandma for eternal happiness. Rest peacefully; you fought valiantly for your families' sake, it's time for you to enjoy the rest of your days. Love you Appapa.

**Loving Grand Son,**
**Senthuran Arulalagan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I found this message a little difficult to write and I regret to say it was not because the passing of my grandfather was so sidden that it has caused such great distress. Our grandpa lived a long life, fathered 10 children that went on to father and mother another generation themselves (my cousins and I are 27 deep). His last few years have been plagued with health issues that have caused him to live through much pain. My most vivid memories of my grandpa are of these moments of his life as our family went to visit in 2017, although I know I have several younger family members who have only ever seen him in that state, my younger sister being one of them. It does suck that they did not get the chance to meet our grandpa when he was in finer health. My grandpa was the one who taught me how to ride a bike, and would take myself, my brother and cousins to the park. He was a caring, kind man that I never remembered to raise his voice. One conversation I do remember having with our grandpa was telling him he would live to be over 100. He'd laugh and say he didn't think he'd make it anywhere close to that. At 95 his physical body has returned to the earth from which it came but he will continue to live well beyond 100 in our memories and hearts. R.I.P Appapa

**Loving Grand son,**
**A. Athavan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதிர்வுகள்

இங்கு ஜனிக்கும் ஒவ்வொரு மனிதர்களும் தனித்தன்மை வாய்ந்தவர்கள், வெவ்வேறு கோணங்களில் அழகானவர்கள், ஆழமானவர்களும் கூட, இங்கு யார் விடைபெற்றுச் சென்ற வெற்றிடத்தையும் இன்னொருவரால் நிரப்பிவிட முடிவதில்லை , "You can never replace any one because every one is made up of such beautiful specific detail" என ஆங்கிலப்படம் ஒன்றில் வரும் உரையாடல் ஒன்று அண்மைக்காலமாக எனக்கு மிகவும் பிடித்துபோய் விட்டது.

அம்மப்பா எனச் சொல்லும்போது கண்முன் வரும் விம்பத்துக்கு வயது 70ஐ கொடுத்துக் கொள்ளலாம். அவ் விம்பத்தில் தெரியும் மனிதருக்கு அன்பு சொட்டிக் கொண்டிருக்கும் நேர்த்தியான முகம் இருக்கும். இக்கட்டுக்களை சுலபமான ஒரு பாணியில் பெரிதாக அலட்டிக் கொள்ளாது தீர்க்கும் வல்லமை இருக்கிறது. வேளாண்மை மீதும், இயற்கை மீதும் தீராதபற்று இருக்கிறது. இரசித்து இரசித்து வாழத்தெரிந்த மனிதரவர் மட்டுமன்றி மற்றவர்களையும் வாழ்வின் அழகியலை இரசிக்கத் தூண்டும் இரகசியமும் கைவரப் பெற்ற எனக்குத் தெரிந்த சில மனிதருள் அவரும் ஒருவர், மனத்துணிவு மட்டுமன்றி மிகுந்த உடல்வலிமையும் படைத்த, தமிழ்புலமை அதிகம் பெற்ற தமிழாசிரியர் இந்த மனிதர்.

இரண்டாயிரமாம் ஆண்டு அரியாலையில் சண்டை நடந்து கொண்டிருந்ததால் நாங்கள் அனைவரும் தனியாக இருக்காமல் தலையாழியில் அம்மப்பாவின் வீட்டில், பெரியம்மாவின் குடும்பத்துடன் இணைந்து இருந்த காலம் அது. அப்போது அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா நான்கு பேரும் எங்களுடன் இருந்தார்கள். அக்காலத்தில் நாங்கள் அனைவரும் ஒரு மணல் கும்பியில் இருந்து எடுத்த புகைப்படம் அண்மையில் கைக்குக் கிடைத்தது. அந்த புகைப்படத்தில் இருந்த உயிர்ப்பு, அக்காலத்தின் செழுமைகளை எல்லாம் நினைவுறுத்தியது. அங்கு அம்மப்பா செய்து வந்த அந்த பெரிய கரும்புத்தோட்டம், வாயிற்கரையில் நின்ற காய்கறித் தோட்டம், அவர் வளர்த்த இலட்சுமி, சரஸ்வதி என்ற இரு பசுக்கள், அவற்றிற்கு மாதுளா, தம்பி, நான் பெரியம்மாவுடன் இணைந்து நடத்திய மாட்டுப்பொங்கல், அனைவரும் இணைந்து ஆடும் கிரிக்கட்., ஒல்லித்தேங்காய்களைக் கட்டி தொட்டியில் அம்மப்பா பழக்கிய நீச்சல், மாலைப் பொழுதுகளில் வாழைக்குற்றிகளையும், மரக்கறிகளையும் அழகாக அரிந்து கஞ்சித்தண்ணீர் கலந்து அவர் தயார் செய்யும் ஆபோசனம். அம்மம்மாவுடன் இணைந்து மணல்பரப்பி சொல்லித்தந்த தமிழ் அரிச்சுவடி, தமிழும் சைவமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பதற்காக மாதுளாவையும் என்னையும் சேர்த்துவிட்ட வைரவர் கோயிலை அண்டி இருக்கும் அறநெறிப் பாடசாலை. அங்கு சொல்லித்தரும் திருக்குறளை மனனம் செய்வதற்காக எமது திண்டாட்டங்கள், சங்கீதா பாலர் பாடசாலை விநோதஉடைப் போட்டி, பின்நாட்களில் நாங்கள் மூவரும் பெரியம்மாவுடன் எதிரணியில் நின்று நடத்திய சமையல் போட்டியில் அவர் நடுவராக இருந்து எங்களை வெற்றியடையச் செய்த நினைவுகள் என அனைத்தும் மனதில் ஆழமாகப் பதிந்தவை.

இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டு ஒக்ரோபர் அம்மம்மா இறைவனடி சேர்ந்திருந்தார். அப்போது நாங்கள் ஆண்டு இரண்டு படித்துக் கொண்டிருந்தோம், அந்தியேட்டி வரையான முப்பத்தொரு நாட்களும் தலையாழியில் தங்கியிருந்தோம். அப்போதே நாங்கள் சைக்கிள் ஓடடக் கற்றுக்கொண்டோம், இரண்டு சைக்கிள்களில் எழுந்து நின்று ஓடியவாறு மாதுளாவும் நானும் அருகில் இருக்கும் மைதானத்திற்கு செல்வோம். அம்மப்பா எங்களுக்குப் பின்னால் நடந்து வருவார். நாங்கள் ஓடிக்களைக்கும் வரை சலிக்காமல் ஒரு மரத்தடியில் அமர்ந்திருப்பார். கரையில் இருக்கும் ஆலமரத்தின் விழுதுகளை வாயில் போட்டு மென்றவாறு இருப்பார். இருமுறை அவரிடம் கேட்ட ஞாபகம் இருக்கிறது. அப்போது அவர் 'ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி' எனக் கூறி அந்தச் சொல் அடையை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். சிறுவயதில் ஆலந்தடிகளையும், வேப்பம் குச்சிகளையும் கொண்டே பல்துலக்குவதாகவும் கூறியிருக்கிறார். இறுதிக்காலம் வரை அவரது பல்வரிசைகள் புகையிலை மெல்லும் பழக்கம் இருந்தும் கூட. பெரிதும் கரைந்து போகாமல் உறுதியாக இருந்ததற்கு அவர் சொன்னதுபோல் அதுவும் காரணமாக இருக்குமோ என்னவோ, அவற்றின் கச்சலைச் சகித்துக் கொள்வது எவ்வளவு கஷ்டம் என்பதை நானும் அவர் போல் முயற்சி செய்ததன் பின்னரே உணர்ந்திருக்கிறேன். பின்நாட்களில் பிஞ்சு விளாம்பழம், அதிமதுரம், பாலை, ஈச்சை போன்றவற்றின் சுவைகளையும் அறிமுகப்படுத்தியது அவர் தான். இயற்கை தருபவை எல்லாம் இனிப்புச் சுவையுடன் மட்டும் இருந்து விடுவதில்லை. சிலவற்றின் சுவைகளை அவற்றின் கசப்புப் புளிப்புகளைத் தாண்டிச் சென்று இரசித்தால் மட்டுமே அவை தித்திக்கும், அவருக்கு அந்த நுட்பம் மிகவும் பழக்கமானதொன்று.

அவரது எண்பதுகளின் ஆரம்பத்தில் எங்களின் வீட்டிலும், பெரியம்மா வீட்டிலும் மாறிமாறி இருந்து வந்தார். அப்போது ஞாபகமறதி சிறிது சிறிதாக அவரை ஆக்கிரமித்திருந்த நேரமது. நாங்கள் மூன்றுபேரும் இரண்டாம் நிலைக்கல்வி படித்துக் கொண்டிருந்தோம். அம்மப்பாவுடன் சேர்ந்து 304



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாடுவதை வாடிக்கையாக வைத்திருந்தோம். கூடுதலாக அம்மப்பாவும் நானும் பாட்டணசிப்பில் விளையாடி இருக்கிறோம், அவர் மறதி காரணமாகச் சில சமயம் பிழையாகக் கடதாசிகளை இறக்கி தோற்க நேர்ந்துவிடும். அப்போது எல்லாம் கோபத்தில் குறைசொல்லி இருக்கிறேன், பதிலுக்கு அவரும் கோபப்படமாட்டார். 'மன்னித்துவிடு, மறுமுறை ஒழுங்காக விளையாடுவேன்' என்று குழந்தைத் தனமான முகத்துடன் கூறுவார். வருடங்கள் பயணிக்க அவருக்குனர் ஞாபகமறதி அதிகமாகியது. முக்கியமான பலவற்றையே மறக்கத் தொடங்கினார். பெரியம்மாவின் வீட்டில் இருந்து எங்கள் வீட்டிற்கு வருவதை சில வேளைகளில் நான் வெளிநாட்டுக்கு வந்திருப்பதாக எண்ணிக் கொள்வார். அப்பா கேட்கும் கேள்விகளுக்கு தனது ஞாபகத்தில் இல்லை என்பதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் சாமர்த்தியமாகப் பதில்கூறுவதை நாங்கள் பார்த்து ரசித்திருக்கிறோம். எங்களின் வீட்டின் பின்வளவில் இருக்கும் வாழைக் கன்றுகளை அவற்றிற்கு தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருக்கும் அம்மாவை வேறு யாரோ என எண்ணிக்கொண்டு விலைக்குக் கேட்பார். தனது காணி தலையாழியில் இருப்பதாகவும், அங்கு வாழைகளை நடுகை செய்ய வேண்டும் எனவும் கூறுவார். அவரது தலையாழி வளவும், அங்கு தான் செய்த விவசாயமும் ஆழ்மனதில் ஆழமாகப் பதிந்திருந்தது. எதை மறந்த போதும், அது அவரால் மறக்கப்படவில்லை. ஒரு தனிமனித முயற்சியில் உருவாக்கப்பட்ட சோலையில், அம் மனிதருக்கு அவ்வளவு அன்பு இருப்பது ஆச்சரியத்திற்கு இடம் இல்லாத ஒன்றே என்று எனக்குத் தோன்றும். அங்கு கிடைக்கும் பொருட்களில் தனிச்சுவை இருக்கும் என அம்மா அடிக்கடி கூறுவார். அங்கிருந்து கொண்டுவரும் கறுத்த கொழும்பான், அம்பலவி மாம்பழம், பலாப்பழம், நாட்டுத்தோடை, நாவல், ஜம்பு, அரைநெல்லி என்பவற்றைச் சாப்பிட்டால் அது உண்மை எனத் தோன்றும்.

ஒருமுறை நானும் தம்பியும் தவணைப்பரீட்சைக்கு முதல்நாள் அவசர அவசரமாகத் தமிழ் படித்துக் கொண்டிருந்தோம். அப்போது ஒரு சந்தேகம் 'பிறர்' என்ற சொல்லுக்கு எதிர்ச்சொல் தெரிந்தாக வேண்டும். புத்தகத்தின் பக்கங்களை பலமுறை புரட்டியும் விடை கிடைக்கவில்லை . Google வசதி அப்போது மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றாகவே இருந்தது. நாங்கள் உரையாடுவதை கேட்டுவிட்டு அருகில் இருக்கும் கதிரையில் பத்திரிகை வாசித்து அரைவாசி தூங்கிப்போயிருந்த அம்மப்பாவிடம் இருந்து 'தமர்' எனப்பதில் கிடைத்தது. அது என்றும் மறக்க முடியாத ஒரு நினைவு. அனைத்தையும் மறந்திருந்த அந்த நேரத்திலும்கூட அவர் தமிழை மறந்திருக்கவில்லை . அவர் மிகவும் இலகுவாகப் புரியும் விதத்தில் தமிழ் கற்பிப்பார் என அம்மா கூறுவார். அவர் பேசும்போது பயன்படுத்தும் தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்களும், அவரது அழுத்தமான தமிழ் உச்சரிப்புக்களுமே அவரிற்கு தமிழ்மீது இருந்த ஈடுபாட்டை சொல்லிவிடும், அவர் முன்னை நாட்களில் எமக்கு எழுதித்தந்த பிறந்தநாள் வாழ்த்து மடல்களிலும், அம்மாவிற்கு எழுதியிருந்த கடிதங்களிலும் அவர் பாவித்திருக்கும் மொழிநடையில் இருக்கும் கம்பீரமும், நேர்மையும், கண்ணியத்தன்மையும், என்னை ஆழமாகக் கவர்ந்த விடயங்களுள் ஒன்று .

எனக்கு நினைவாற்றல் இருக்கும் மட்டும் இந்த தமிழ் ஆசான் பற்றிய இப்படியான அழகிய நெஞ்சு கனக்கும் நினைவுகளும் நீங்காமல் என்னுள் வாழ்ந்து கொண்டிருக்கும் என்பது உண்மை.

சமூகம் என்பது ஒரு நிழல் மரம். அது பல்லாயிரக்கணக்கான மனித இலைகளைத் தாங்கியது. இங்கு பூத்தல், காய்த்தல், கனிதல், தளிர்த்தல் போலவே உதிர்வுகளும் நிச்சயமானவை, தவிர்க்க முடியாதவை. உதிர்ந்த இலைகள் மண்ணடைந்து உரமாகி நிழல்மரம் மேலும் செழிக்கப் பங்காற்றும். சில உதிர் இலைகளின் பயணங்கள் உரமாகிப் போவதோடு மட்டும் முடிந்து விடுவதில்லை. நிழல் மரத்துக்கு அவை அதற்கும் மேலாகப் பங்காற்றுகின்றன.

**"அன்புடையர் என்பும் உரியர் பிறர்க்கு"**

**பேரப்பிள்ளைகள்**
**மாதுளா, உமையாள், ராகுலன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

You were the one grandparent I had growing up, but you made it feel like you were all needed. I know your Alzheimers prevented you from remembering too much like names and faces, but one of the most special moments I remember from my trip to Sri Lanka is when. you took my hand, held it close to your face and just smiled. It was like feeling all the love you had for Appamma, the ten kids you raised with her and their children with a single touch I'm sorry that I didn't get to live through all of the inspiring stories your sons and daughters tell me about you. Above all, I'm sorry that the last few moments you spent on earth, you were suffering. If I could have taken that pain for you, believe me I would have. Of course son is a way of describing how I feel, but the overpowering emotion I'm experiencing is gratiude. Thank you for raising my dad to be the business owner, husband, father, brother and the man he is today. Thank you for all the aunts and uncles I have and for all of my cousins was have been brought up like brothers and sisters to me. Thank you for my family and, for that blessing, I owe you so much because I don't know where I would be without them. I hope you know we all love you so much. Rest in Peace Appappa...until we meet again.

**Loving**
**Grand daughter,**
**Arulalagan Nilani**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

To Our Dearest Appappa,

We only had a few chances to meet, but we will always cherish our memories together and Appa's many stories about you. We remember you as such a passionate and determined man, who was extremely proud of his agricultural work. You were so excited to show us your crops when we visited you in Sri Lanka! Thank you for blessing us with a great father and such a loving extended family. We pray that you are reunited with Appamma and you both enjoy a peaceful and happy eternal life. We love you both so much and we hope that we can make you proud.

Lots of love,

Shoban, Aruni and Shalini


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dear, Ammappa

There were two periods in our life where you came to stay with us. Although we can't recall all the moments we had with you there are plenty that we still do, from teaching us life lessons, sharing personal stories from your past to keeping us out of trouble with Amma and Appa. Although these memories are faint the impact you had on us will be long lasting. You were a loving and caring person who we will always look up to. The things you have taught us growing up have definitely shaped the people we are today. We just wanted to say thank you Ammappa. Thank you for always being there for us and protecting us. Thank you for teaching us to understand the importance of our language, culture and traditions. But most importantly, thank you for providing us with a big family because we can't imagine it being any other way. So, thank you Ammappa for everything you have done.

Your loving grandchildren,

Anjale Senthan

Abirame Senthan

Vishakan Senthan



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Dear Appappa,**

Appappa has visited us many times but we can not remember all the moments we have cherished together. However, every time you saw us there was love in your eyes as you would always take great care of us. It was great to see Appappa 3 years ago to rekindle these old memories. Although he may not have remembered us we can recall the same look of love on his face. Just like Appamma, he loved spending time with us and all his grandkids. These memories may not be engraved in our brains but while watching old VHS tapes we could see Appappas love for all his grandkids. He would always carry us and play with us when we were babies. Looking at these old tapes and thinking back on our memories he has taught us the meaning of love. More importantly, he has given us a great big family to continue his legacy. To work hard, cherish every moment and never take our lives for granted. Thank you Appapa for all you have given, your will be greatly missed but the memories will last a lifetime..

**Your Loving grandchildren,**
**Janahan Meialagan**
**Anchala Meialagan**
**Laksman Meialagan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையோடு வாழ்வோம் சுகநலம் காண்போம்

2020 ல் உலக ஒழுங்கையே கொரோனா (covid-19) தலைகீழாக புரட்டிப் போட்டுள்ளது. வல்லரசு அமெரிக்காவும், செல்வந்த ஐரோப்பாவும் பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பறிகொடுத்துள்ளது, மட்டுமன்றி நோயை கட்டுப்படுத்த முடியாமல் உலகமே திணறுகின்றது. மருத்துவ உலகம் தனது உச்சகட்ட அர்பணிப்பையும் திறன்களையும் அரசுகளின் உதவியுடன் வெளிக்காட்டினாலும் இன்னும் நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்துவதிலோ, குணமாக்கலிலோ வியத்தகு முன்னேற்றங்களை காண்பிக்க முடியவில்லை.

இந்நேரம் நாம் இப் பூமிப்பந்தின் பகுத்தறிவுள்ள ஓர் உயிரினம் என்ற பார்வையில் வாழ்க்கையை இயற்கைக்கு மாறாக மாற்றியமைத்தமை தொடர்பாக மனிதகுலம் சிந்திக்க வேண்டிய தருணமிது.

இயற்கை எனும் அன்னை நாம் இயைந்து வாழ்ந்த போது பல அற்புதமான கனிகளைத்தந்து எம் வாழ்வை வசந்தமாக்கினாள். மனதிற்கும் நிறைவைத் தந்தாள் உடலிற்கு புத்துணர்வைத் தந்தாள். மனிதகுலம் ஆரோக்கியமாக ஏனைய உயிரினங்களுடன் சேர்ந்து வாழ்வை ஆனந்தமாக அனுபவித்து வந்தது.

ஆம் மீண்டும் அந்த இனிய வாழ்வினை சுவைக்க நாம் அனைவரும் எம் மூதாதையர்களின் வாழ்க்கை முறையினைச் சற்று பின்நோக்கிச் சிந்தித்து பார்ப்போம்,

உணவே மருந்து என்ற உயரிய கோட்பாட்டை உணவு பழக்க வழக்க, பழக்கத்திலேயே கடைப்பிடித்தவர்கள் தமிழர்கள். இன்று உணவு முழுவதும் பூச்சி கொல்லி மருந்து என்ற அவல நிலைக்கு தள்ளப்பட்டு புற்றுநோய்களாலும் ,சிறுநீரக நோய்களாலும், சலரோகம், உயர் குருதி அழுத்தம் (பிறசர்), இதய நோய்கள் போன்ற தொற்றா நோய்களாலும் (NCD), அதிகம் பீடிக்கப் படுபவர்களாக மாறி விட்டோம்.

இந்த நிலையை மாற்ற வேண்டும் என்றால் எம் மூதாதையரின் அற்புதமான இயற்கை விவசாயமுறைமைக்கும், அவர்கள் கைக்கொண்ட உணவுப்பழக்கமான அதிக காய்கறிகள், பழங்கள், மூலிகைகள் அடங்கிய உணவை தினமும் உள்ளெடுக்கும் பழக்கத்திற்கும் நாம் மீள திரும்ப வேண்டும்.

இயற்கை விவசாயம் என்பது வெறுமனே ஓர் தொழில் கிடையாது. அது ஒரு வாழ்க்கை முறை ஆகும். இது தனியே விவசாயிகளுடன் மட்டுப்படுத்தப்படாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் வாழ்வியல் இயக்கமாக அனைத்து குடும்பங்களிலும் கட்டி எழுப்பப்பட வேண்டும். அந்த ரீதியில் ஒவ்வொரு குடும்பமும் தங்கள் வசதியைப் பொறுத்து, வீட்டுத்தோட்டத்தை இயற்கை வழியில் அமைத்து அதனை தங்கள் ஆரோக்கியத்திற்குமான சுகவாழ்வுத் தோட்டமாக மாற்றி அமைத்துக் கொள்ளலாம். தொழில் முறையில் விவசாயம் செய்பவர்கள் இயற்கை முறையில் பூச்சி கொல்லிகள், களைகொல்லிகள், செயற்கை உரங்கள் அற்ற நிலையில் மரக்கறிகள், பழவகைகள், தானியங்களைச் செய்கை பண்ணும் போது, அவற்றை மக்களிற்கு விநியோகிக்கும் போது ஆத்ம திருப்தியைப் பெற்றுக்கொள்வதோடு சுகநலம் மிக்க சமுதாயத்தை கட்டி எழுப்புவதில் பெரும் பங்கை வகிக்க முடியும். மண்ணை வளப்படுத்த அமிர்த கரைசல், பஞ்ச கௌவியா, ஜீவாமிர்த கரைசல், கூட்டெரு, மண்புழு உரம், வேப்பம், இலுப்பம் புண்ணாக்குகள் போன்றவற்றை பயன்படுத்தி, அதிசயிக்கத் தக்க மாற்றத்தைக் காணலாம். ஒவ்வொரு விவசாயிடமும் மாடுகள் இருத்தல் இதற்குரிய ஓர் தேவைப்பட்டாகும்.

பூச்சிகளை விரட்ட ஐந்திலைக் கரைசல் (பிரம அஸ்திரம்), வேப்பம் கொட்டைக் கரைசல், உள்ளிப்பூண்டுக்கரைசல், இஞ்சிக்கரைசல், மூலிகைப் பூச்சி விரட்டி போன்ற இயற்கையான மருந்துகளைப் பயன்படுத்தலாம்.

பூத்தல், பூ உதிர்தலை தடுத்து விளைச்சலை அதிகரிக்க தேமோர் கரைசல், அரப்பு மோர் கரைசல் போன்றவற்றை பயன்படுத்தலாம்.

இவற்றினை விரிவாக அறிவதற்கு விவசாயத்திணைக்களம், இயற்கை விவசாயப் பண்ணைகளை நாடலாம். இல்லாவிட்டால் வீட்டில் இருந்தவாறு you tube ல் இவற்றினை செய்முறைகளோடு தமிழில் பார்த்து அனைவரும் பயனடையலாம்.

அதே நேரம் ஒவ்வொரு மனிதனும் 500g மரக்கறி, பழவகைகள் உட்கொள்வதுடன் 1/2 மணி நேர உடற்பயிற்சியை குறைந்தது 5 நாட்கள் ஆவது செயவதனூடாக தொற்றா நோய்களான சலரோகம், இதய நோய்கள், வருவதற்கான வாய்ப்பினை வெகுவாக குறைக்க முடியும் என சுகாதார திணைக்களத்தினுடைய ஆய்வு ரீதியான அறிவுறுத்தல் கூறுகின்றது.

ஒவ்வொருவரும் வீட்டிலோ, அலுவலகத்திலோ, பாடசாலையிலோ சுகவாழ்வுத் தோட்டம் ஒன்றினை நடைமுறைப்படுத்துவதனூடாக மேற்காணும் 1/2kg மரக்கறி, பழவகைகள் மற்றும் 1/2 மணி நேர உடற்பயிற்சி வாய்ப்பினை ஏற்படுத்திக் கொள்ளலாம். அது மட்டுமன்றி இனிய இயற்கைச் சூழலை எமது வசிப்பிடத்திலோ தொழில் இடத்திலோ பேணுவதனூடாக மனிதனை புத்துணர்வாக பேண முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓசோன்படை ஓட்டை காரணமாக பூமியை வந்தடையும் புற ஊதாக்கதிர்களை கம்பு சூழவுள்ள பசுமைத் தாவரங்கள் உறுஞ்சிக் கொள்வதனால் தோல்புற்று நோய் உள்ளிட்ட அபாயங்களும் தவிர்க்கப்படும்.

குப்பைகூளங்கள், சமையலறைக்கழிவுகளை உரிய முறையில் கழிவு முகாமைத்துவத்திற்கு உட்பட்டு கூட்டெருவாகவும் தேவையற்ற நீர்நிரம்பக்கூடிய பொருட்களில் சிறுசெடி கொடிகள் வளர்க்க பயன்படுத்தப்படும் பொறிமுறை உருவாக்கப்படுத்தலாலும் டெங்கு போன்ற நோய்கள் பரவும் அபாயம் குறைக்கப்படுகின்றது.

மூலிகைச் செடிகள் சேர்த்து வளர்க்கப்படும்போது உதாரணமாக கற்பூரவல்லி, தூதுவளை, துளசி போன்றன சுவாச நோய்களை கட்டுப்படுத்தும் மிகச்சிறந்த கைமருந்தாக உபயோகிக்கப்படலாம். அதேபோன்று வேப்பிலை, நொச்சி இலை, தேசித்தோல், ஆடாதோடை, ஊமத்தை இலை என்பவற்றினால் ஆவி ( வேது) பிடிக்கும் செயன்முறை சுவாசப் பிரச்சனைகளில் இருந்து நிவாரணம் அளிக்கின்றது.

மேற்காணும் பல செயன்முறைகளை தற்போதைய கொரோனா நோய்பரவும் காலத்தில் தமது நோயெதுப்பு ஆற்றலை அதிகரித்து எம்மை தற்காத்து கொள்ளவும் உதவும் என சுதேச சித்த மருத்துவ திணைக்களம் கூறுகின்றது. இத்துனை அற்புதமான சுகநலங்களை அள்ளி வழங்கக்கூடிய இயற்கையோடு வாழ்தலை ஒவ்வொருவரும் அன்றாட வாழ்வில் கடைப்பிடித்து எமது குழந்தைகளுக்கும் சொல்லிக்கொடுப்போமேயானால் இன்றைய அவலநிலையில் இருந்து விடுபட்டு இனிய உலகத்தை படைக்க முடியும்,

ஆம், எம் யாவேருக்கும் தாய் இயற்கையே என்பதால் அதை எந்நாளும் காக்க தனிநபர், குடும்பம், சமூகம் என அனைத்து மட்டங்களிலும் முயற்சிப்போம். மரங்களை முடிந்தளவு நடுவோம். இயற்கைக்கு ஊறு விளைவிக்கும் சகல செயற்பாடுகளையும் நிறுத்துவோம். பிளாஸ்டிக் உட்பட செயற்கைப் பொருட்களின் பாவனையை இயன்றவரை குறைப்போம். நீர்நிலைகளை பாதுகாப்பதோடு தரைகீழ் நீரை அதிகரிக்கும் பொறிமுறையை இல்லங்களிலும், கிராமிய மாவட்ட ரீதியிலும் முன்னெடுப்போம் இதன் விளைவாக தூய நீரைப் பருகி, தூய காற்றை சுவாசித்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக!

**மருத்துவர்**
**பரா. நந்தகுமார் பொதுச் செயலாளர்,**
**அகில இலங்கை சைவ மகா சபை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையும் பிதாவும்.

தமிழர் பண்பாடு, மிகச் சிறந்த பல வாழ்வியல் உண்மைகளைத் தன்னகத்தே கொண்ட சாலச் சிறந்த பண்பாடு ஆகும். விருந்தோம்புதல், ஈதல், செய்ந்நன்றி மறவாமை, பெரியோரை மதித்தல், மன்னுயிர் ஓம்புதல், ஒழுக்கமுடைமை ,சுற்றம் பேணுதல், அறநெறி போற்றுதல் போன்றவை எமது நாளாந்த வாழ்வுக்கு வழி காட்டும் பண்புகள் ஆகும்.

எமது மூத்தோர்கள் எமக்குச் சொல்லிச் சென்றவை அவர்களது பட்டறிவு என்னும் பாடசாலையில் அவர்கள் கற்றுக் கொண்ட மெய் அறிவு ஆகும். ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர்கள் படைத்த இலக்கியங்கள், சுட்டி நிற்கும் பழந் தமிழர் வாழ்வு, அன்பும், பண்பும், பாசமும், பற்றும், ஈகையும், கருணையும், கடமையுணர்வும் மொழியுணர்வும், இன உணர்வும் நிறைந்தவை ஆகும். சமூகத் தொண்டர்களாக நின்று தமக்கென வாழாது பிறருக்காக வாழ்ந்த பெரியவர்கள் பலர் தாமே நடமாடும் பல் கலைக்கழகமாகத் திகழ்ந்துள்ளார்கள். இன்றும் தமக்கென வாழாது பிறர்க்கென வாழும் சமுதாயத் தொண்டர்கள் வாழ்ந்து கொண்டு தான் இருக்கின்றார்கள்.

" மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்" என்ற முது சொல் எமது வாழ்வில் நாம் எவ்வாறு பெரியவர்களை மதித்து அவர்கள் சொற் கேட்டு நடந்தோம் என்பதையும், நடக்க வேண்டும் என்பதையும் வெளிப்படுத்துகின்றது.

" அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று குழந்தைகளுக்கு அறிவுரை கூறிய ஔவையார், குழந்தைகள் வளரும் போதே தாய் தந்தையரைத் தெய்வமாகப் போற்றி வணங்கும் பண்பு கொண்டவர்களாக வளர வேண்டும் என்பதை எடுத்துரைத்தார். பெற்றோர்கள் என்பவர்கள் எவ்வளவு உயர்ந்தவர்கள் என்பதை நாம் சொல்லாலும், செயலாலும் உணர்ந்து கொண்டாலும், தெரிந்து கொண்டாலும் அவர்களது உன்னதமான தன்மைகள் அனைத்தையும் புரிந்து கொள்கின்றோமா? தாய், கருணை காட்டும் தெய்வமெனில், தந்தை தன்னை உருக்கித் தனது பிள்ளைகளுக்கு ஒளி தரும் மெழுகு வர்த்தி அல்லவா. திருவள்ளுவர், மக்கட் பேறு என்னும் அதிகாரத்திலே, பெற்றோர், பிள்ளை உறவை ஆழமாகவும், அழகாகவும் கூறுகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து**

**முந்தி இருப்பச் செயல் ( குறள் எண் – 67)**

என்று தந்தையின் கடமையையும், மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை என்நோற்றான் கொல் எனும் சொல் ( குறள் எண் -70) என்று மகனின் கடமையையும் குறிப்பிடுகின்றார்.

ஒரு தந்தையானவர் தன்னுடைய மகனை அரும்பாடு பட்டுக் கற்பித்துக் கற்றோர் அவையிலே அவனை முதன்மை பெற்றவனாக இருக்கும் படி வளர்ப்பதே தான் பெற்றெடுத்த மகனுக்குத் தந்தை செய்யும் பெரிய உதவி என்று கூறும் வள்ளுவர், மகனது கடைமை பற்றிக் கூறும் போது, இவ்வாறு பெற்றெடுத்துப் பேணி, அன்பு காட்டிக் கல்வியறிவூட்டிப் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் வளரத்தெடுத்த தந்தைக்கு மகன் செய்ய வேண்டிய கைம்மாறு என்னவெனில், இவனது கல்வியறிவையும், நற் பண்புகளையும் கொண்ட மகனைப் பிள்ளையாகப் பெறுவதற்கு இந்தத் தந்தையானவர் என்ன தவம் செய்தாரோ என்று, பலரும் பாராட்டிக் கூறும் சொல் ஆகும் என்று குறிப்பிடுகின்றார்.

தந்தையின் வாழ்வில், தாயும், தாயின் வாழ்வில் தந்தையும் ஒரு சேர இணைந்து நின்று, உயிரும், மெய்யுமாகி அர்த்த நாரீஸ்வராய் வாழ்ந்த அன்பும் பண்பும் நிறைந்த வாழ்வின் கிடைத்தற்கரிய பெரும் பேறாய் பெற்றெடுத்த பிள்ளைகளே அவர்களின் கனியமுதங்கள் ஆவார்கள்.

இன்றைய வாழ்வியலின் வேகமானது, எமது வாழ்க்கை முறையை மாற்றி விட்டது. நாம் எல்லோரும் அஞ்சலோட்டப் போட்டியில் கலந்து கொண்டவர்களைப் போன்று, நான் முதலில், நீ முதலில் என்று ஓடிக் கொண்டிருக்கின்றோம். இயந்திரமயமான இந்த வாழ்வு, எதை எமக்கு அளித்திருக்கின்றது என்பதை விட, நாம் எவற்றை இழந்து நிற்கிறோம் என்பதைப் புரிய வைத்திருக்கின்றது.

கூட்டுக் குடும்பம் என்ற மிகப் பெரிய ஆலமர வாழ்வு வாழ்ந்த எமது பெற்றோர்கள், முதுமையடைந்து தனித்தும், தவித்தும், இருக்கும் போது நாமும் தவிக்கின்றோம். நாமும் துடிக்கின்றோம். ஆனால், அவர்களை அன்புகாட்டி, அரவணைத்து, ஆறுதல் கூறித் தேற்றமுடியாத படி வேலைச் சுமைகள் எம் முன்னே தலை தூக்கி நிற்கின்றன.. பெற்றவராய், நல்ஆசிரியராய், சுற்றமாய், நண்பராய், நல்ல வழி காட்டிய எமதன்புப் பெற்றோர்களின் இறுதிக் காலம் பல சுமைகளுடன் நகர்ந்து செல்கின்றது. பல மூதாளர்கள் படுகின்ற துயரம் கொஞ்சமல்ல. கொஞ்சமல்ல. இது விரும்பத்தக்கதொன்றல்ல. எனினும், இந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வு இந்தச் சூழலையே நிதர்சன வாழ்வாகக் காட்டி நிற்கின்றது. ஆனால், பெற்றோர்களின் பெறுமதியறிந்து பிள்ளைகள் நடப்பது தானே தமிழர் பண்பாடு கற்றுத் தந்திருக்கும் பாடம். எமது பிள்ளைகளுக்கு நாம் கற்றுக் கொடுக்கும் பாடமும் அது தான். கடமையைச் சரிவரச் செய்வோம். எமது பெற்றோர்களின் காரியம் யாவிலும் கை கொடுத்து நிற்போம். மூத்தோரைப் பேணுவோம். மூதாளரே எமது காப்பு என வாழுவோம்.

**இன்பமே சூழ்க**

**எல்லோரும் வாழ்க.**

**திருமதி, கலாநிதி குலமோகன்**

**ஆசிரியை . கனடா,**

பரம்பொருளை அடைய வேண்டுமாஉடம்பிலுள்ள எல்லா வாசல்களையும், செம்மையாக அடக்கி, மனதை உள்ளேயே நிலை நிறுத்தி, உயிரை அறிவோடு நன்றாக நிலைநாட்டி, தியானத்தைக் கைக்கொண்டு என்னையே நினைத்தவனாக எவன் தன்னை மறந்து விடுகிறானோ அவன் பரம்பொருளை அடைகிறான்.

**பகவத்கீதை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து விரதங்களும் அவற்றின் பலன்களும்

மனம் பொறி வழி போகாது நிற்றல் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம் , வாக்கு , காயம் என்ற மூன்றினாலும் கடவுளை விதிப்படி மெய்யன்போடு வழிபடுதல் விரதமாகும்.

- நாவலர் பெருமான் -

விரதங்கள் நம்மை ஒரு கட்டுப்பாடான வாழ்க்கை முறைக்கு உட்படுத்த ஏற்படுத்தப்பட்டது. ஆனால், எந்த விரதத்தை, எந்த தெய்வத்திற்காக, எதற்காக அனுஷ்டிக்க வேண்டும் என்று தெரியாமல் செய்தால் எந்த பலனும் ஏற்படாது. விரதங்களும் அவற்றின் பலன்களைப் பற்றியும் காணலாம்.

### சோமவார விரதம்

கார்த்திகை மாத திங்கள்கிழமைகளில் கடைப்பிடிக்கப்படும் சோமவார விரதம் சிவபெருமானைக் குறித்து அனுஷ்டிப்பதாகும். காலையில் உணவு எதையும் எடுத்துக்கொள்ளாமல், இரவு மட்டும் சாப்பிட வேண்டும். அப்படி முடியாதவர்கள் மட்டும் காலையிலும் சாப்பிடலாம். தகுந்த வாழ்க்கை துணை வேண்டுபவர்களும், திருமணமானவர்களுக்கு தகுந்த வாழ்க்கை கிடைக்கவும் இந்த விரதம் இருப்பர்.

### பிரதோஷம்

தேய்பிறை, வளர்பிறை திரயோதசி திதிகளில் பிரதோஷ விரதம் சிவபெருமான், நந்திதேவரின் அருள் வேண்டி இருப்பது சனிப் பிரதோஷம் முதலாக தொடங்கும் போது, சித்திரை, வைகாசி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய நான்கு மாதங்களில் ஏதாவது ஒன்றில் இருந்து இந்த விரதத்தை ஆரம்பிக்கலாம். வாழ்நாள் முழுவதும் அனுஷ்டிக்க வேண்டிய இந்த விரதத்தின் போது, பகலில் எதையும் சாப்பிடாமல், மாலை 4.30 மணிக்கு நீராடி, சிவாலயம் சென்று பிரதோஷ வழிபாடு முடிந்த பிறகு, சாப்பிட வேண்டும். இந்த விரதம் இருப்பதினால் கடன், வறுமை, நோய், அகால மரணம், பயம், ஆகியவை நீங்கும்.

### உத்தம மகா பிரதோஷம்

சிவபெருமான் விஷம் அருந்திய தினம் சனிக்கிழமையாகும். அந்தக் கிழமையில் வரும் பிரதோஷம் மிகவும் சிறப்பானதாகும். சித்திரை, வைகாசி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய மாதங்களின் வளர்பிறையில், சனிக்கிழமையில் திரயோதசி திதியன்று வரும் பிரதோஷம் உத்தம மகா பிரதோஷம் என்று சொல்லப்படுகிறது. இது மிகவும் சிறப்பும், கீர்த்தியும் பெற்ற தினமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சனி பிரதோஷம்

மகா சிவராத்திரி காலத்தில் மாசி மாதத்தில் சனிப்பிரதோஷம் வருவது மகா சனி பிரதோஷம்

### அமாவாசைபௌர்ணமி

எல்லா விரத தினங்களுமே முக்கியம் தான் என்றாலும், ஏன் குறிப்பாக அமாவாசையையும், பௌர்ணமியையும் முக்கியமான விரத நாட்களாக கொண்டாடுகிறோம். தந்தையை இழந்தவர்கள் நிச்சயமாக கடைபிடிக்க வேண்டிய விரத தினமாக அமாவாசை இருக்கிறது. தாயை இழந்தவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய விரதமாக பௌர்ணமி இருக்கிறது.

### ஆடிஅமாவாசை விரதம்

ஆடி அமாவாசையை பித்ருக்கள் தினமாகக் கொண்டாட வேண்டும். அன்றைய தினம் மறைந்த நம் முன்னோர்களுக்கு தர்ப்பணம் நிறைவேற்றினால், ஆறு மாதம் தர்ப்பணம் செய்த பலன் கிடைக்கும். சூரிய பகவான் ஆண்மை , ஆற்றல், வீரம் போன்றவற்றை தரும் ஆற்றல் படைத்தவர். மனதுக்கு அதிபதியான சந்திரன், மகிழ்ச்சி, தெளிந்த அறிவு, இன்பம், உற்சாகம் போன்றவற்றை தரவல்லவர். இத்தகைய பெருமைகளை எல்லாம் தருகின்ற சூரிய, சந்திரர்களை, தாய் தந்தையை இழந்தவர்கள் அமாவாசை தினங்களில் வழிபாடு செய்வது சிறப்பான ஒன்றாகும். தட்சிணாயன காலத்தில் வரும் முதல் அமாவாசை என்பதால், ஆடி அமாவாசை சிறப்பு வாய்ந்ததாக கருதப்படுகிறது.

### ஆடிச்செவ்வாய்

'ஆடி செவ்வாய் தேடிக்குளி' என்பார்கள். ஆடி மாதம் வரும் செவ்வாய்க்கிழமை தோறும் சுமங்கலிப் பெண்கள் மஞ்சள் பூசிக் குளிப்பதால், மாங்கல்ய பலம் கூடும் என்பதே இந்த பழமொழி கூறும் தத்துவம். அதேபோன்று ஆடி மாதச் செவ்வாய்க்கிழமைகளில் பெண்கள் பலரும், 'அவ்வையார் விரதம்' கடைப்பிடிப்பார்கள். கணவனின் ஆயுள் நீடிக்கவும், குழந்தை வரம் வேண்டியும், குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கவும், கன்னிப் பெண்களுக்கு விரைவில் திருமண வரம் கிடைக்கவும் இந்த விரத வழிபாட்டின் மூலம் பிரார்த்தித்துக் கொள்வார்கள். ஆடி வெள்ளிக்கிழமையன்று சுமங்கலிப் பெண்கள் கணவனின் ஆயுள் அதிகரிக்கவும், திருமணமாகாத பெண்கள் விரைவில் திருமணம் கைகூடி வரவும் விரதம் மேற்கொள்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புரட்டாசிசனி**

விரதம் புரட்டாசி சனிக்கிழமைகளில் விரதம் இருப்பதன் மூலம் சனி கிரகத்தின் ஆதிகத்தில் இருந்து தங்களைக் காத்துக் கொள்ள முடியும்.

**திருவெம்பாவை**

இந்த நோன்பு மார்கழி திங்களில் திருவாதிரைக்குப் பத்து நாட்களுக்கு முன் தொடங்கி திருவாதிரையன்று முடிவு பெறும். ஐந்து வயது முதல் பதினெட்டு வயது வரையுள்ள பெண் பிள்ளைகள் இந்த நோன்பிற்குரியவராவர். இவர்கள் துயிலெழுந்து வீடு வீடாகச் செல்வர். அனைத்து கன்னியரும் துயிலுணர்ந்த பின் ஒன்று சேர்ந்து நீர் நிலைக்குச் செல்வர். அம்மை அப்பர் புகழ்பாடிக் கொண்டே நீராடுவர். பிறகு இறைவனுடைய சக்தி எனவும், திருவடி எனவும் சாஸ்திரங்கள் கூறும் இறைவன் திருவருளைக் கெளரி என்று நாமமிட்டு வழிபடுவர்.

**சித்ரா பௌர்ணமி விரதம்**

சித்திரை மாதம் சித்திரை நட்சத்திரத்தில், சித்திரகுப்தருக்காக இருப்பது. காலையில் பிதுர் தர்ப்பணம் செய்து விட்டு, இரவில் மட்டும் சாப்பிட வேண்டும். இதனால் மறைந்த முன்னோர் பாவம் நீங்கி பிறப்பற்ற நிலையை எய்தலாம் .

**தை அமாவாசை விரதம்**

சிவபெருமானுக்காக இருக்கப்படும் தை அமாவாசையில், காலையில் சாப்பிடாமல் முன்னோருக்கு தர்ப்பணம் செய்வதால், முன்னோர்களுக்கு முக்தி கிடைப்பதுடன், குடும்பமும் அபிவிருத்தி அடையும்.

**கந்தசஷ்டி விரதம்**

ஐப்பசி மாதம் வளர்பிறை பிரதமை முதல் சஷ்டி வரை 6 நாட்கள் சேவற்கொடியோன் சுப்பிரமணியருக்காக இருக்கப்படும் விரதம். முதல் 5 நாட்கள் ஒருபொழுது மட்டும் சாப்பிட்டு, கடைசிநாள் முழுமையாக பட்டினி இருந்து, மாலை சூரசம்ஹாரம் முடிந்தபிறகு வாழைப்பழம், சிறிதளவு மிளகு சாப்பிட்ட பின், மாம்பழச்சாறு, பால், பானகம் இவற்றில் ஏதாவது ஒன்று அருந்தி விரதத்தை நிறைவு செய்யலாம்.

**மங்களவார விரதம்**

தை மாதம் முதல் செவ்வாயில் துவங்கி ஆயுள் முழுவதும் செவ்வாய் கிழமைகளில் பைரவர் மற்றும் வீரபத்திரருக்காக அனுஷ்டிக்கும் விரதம். பகலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பொழுது மட்டும் சாப்பிட்டு இருக்கும் இந்த விரதத்தால் பயணத்தின்போது பாதுகாப்பு, பயம் நீங்கும்

**தைப்பூச விரதம்**

தை மாத பூச நட்சத்திரத்தில் சிவபெருமானுக்காக இருக்கப்படும் விரதம், காலையில் மட்டும் சாப்பிடாமல் இருக்ககூடிய இந்த விரதத்தால், திருமண யோகம் கூடி வரும்.

**கேதார கௌரி விரதம்**

புரட்டாசி மாதம் வளர்பிறை அஷ்டமி முதல் தேய்பிறை சதுர்த்தசி வரை 21 நாட்கள் அல்லது தேய்பிறை பிரதமை முதல் சதுர்த்தசி வரை 14 நாட்கள் அல்லது தேய்பிறை அஷ்டமி முதல் சதுர்த்தசி வரையான 7 நாட்கள் தான் விரத்திற்குரிய நாட்கள். இதுவும் முடியாதவர்கள் தேய்பிறை சதுர்த்தசி நாள் மட்டும் விரதம் இருக்கலாம், ஆண்கள் 21 இழையால் ஆகிய காப்பை வலக்கையிலும், பெண்கள் இடக்கையிலும் கட்டிக் கொண்டு, கேதாரநாதருக்காக முதல் 20 நாள் ஒருபொழுது உணவு, கடைசிநாள் முழுவதும் உபவாசம் இருந்தால், தம்பதிகள் நீண்டநாள் வாழ்வர் என்பது நம்பிக்கை .

**கிருத்திகை விரதம்**

கார்த்திகை மாதம் கார்த்திகை நட்சத்திரம் தொடங்கி, ஒவ்வொரு மாதம் கார்த்திகை நட்சத்திரத்தில் சுப்பிரமணியருக்காக அனுஷ்டிப்பது. தொடர்ந்து 12 ஆண்டுகள் இவ்விரதத்தை அனுஷ்டிப்பதால், 16 வகையான செல்வத்தைப் பெறலாம்.

**நவராத்திரி விரதம்**

புரட்டாசி மாத வளர்பிறை பிரதமை முதல் நவமி திதி வரை மகாசக்தி பார்வதிதேவியை முதல் 8 நாள் பழ உணவு சாப்பிட்டு, 9ம் நாளான மகாநவமி அன்று முழுமையாக சாப்பிடாமல் விரதம் இருந்தால், கல்வி, செல்வம், ஆற்றல் ஆகியவற்றை அடையலாம்.

**விநாயகர்சதுர்த்தி**

ஆவணிமாதம் வரும் வளர்பிறை சதுர்த்தி திதியை விநாயகர் சதுர்த்தி என்று அழைக்கின்றோம். அத்தினம் விநாயகருக்கு அறுகம்புல் வைத்து வழங்கினால் எமக்கு எல்லா விதமான நன்மைகளும் கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்து வைத்தால் பிள்ளையார்' என்று சொல்வதற்கேற்ப வடிவமைக்கவும், வணங்கவும் எளிமையாக இருப்பவர் விநாயகப் பெருமான். எளிமையான மூர்த்தி என்றாலும், பெரும் கீர்த்தியைக் கொண்ட முழுமுதற்கடவுள் இவர். இவரை விலக்கிவிட்டு எந்த வழிபாட்டையும் மேற்கொள்ளவே முடியாது என்பதுதான் இவரின் சிறப்பம்சம். 'சங்கஷ்டம்' என்றால், கஷ்டங்கள் சேருதல் என்று பொருள். வாழ்வில் சேரும் சகல சங்கடங்களையும் நீக்கும் சதுர்த்தி விரதம் இன்று கடைப்பிடிக்கப்படவிருக்கிறது. பௌர்ணமியை அடுத்த நான்காம் நாள், சங்கடஹர சதுர்த்தி தினம். அன்றைக்கு மாலையும் இரவும் சேரும் நேரத்தில் விநாயகருக்கு வழிபாடு செய்யப்படுகிறது.

இந்த விரதங்கள் புண்ணியங்களை பெற்றுத்தருவதுடன் நமது உடல் மற்றும் மனதையும் மேம்படுத்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவக்கிரக தோஷம் நீங்க

**ஞாயிறு (சூரியபகவான்)**

சீலமாய் வாழச் சீரருள் புரியும்
ஞாலமெலாம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுந்தரா போற்றி
வீரியா போற்றி வினைகளைக் களைவாய்!

**திங்கள் (சந்திரபகவான்)**

எங்கள் குறைகளெல்லாம் தீர்க்கும்
திங்களே போற்றி திருவருள் புரிவாய்
சந்திரா போற்றி சற்குணா போற்றி
சங்கடம் தீர்ப்பாய் சந்திரா போற்றி

**செவ்வாய் (அங்காரக பகவான்)**

சிறப்புறு மணியே செவ்வாய் தேவே
குறைவில்லா தருள்வாய் குணமுடன் வாழ
மங்களச் செவ்வாய் மலரடி போற்றி
அங்காரகனே அவதிகள் நீக்கு!

**புதன் (புதபகவான்)**

இதமுற வாழ இன்னல்கள் நீக்கு
புதபகவானே பொன்னடி போற்றி
பதம் தந்தருள்வாய் பண்ணொலியானே
உதவியாய் அருளும் உத்தமா போற்றி வியாழன்

**(வியாழ பகவான்)**

குணமுள்ள வியாழ குருபகவானே
மணமுள்ள வாழ்வு மகிழ்வுடன் அருள்வாய்
பிரகஸ்பதி வியாழ குருபகவானே
கிரகதோஷம் இன்றி கடாட்சித் தருள்வாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெள்ளி (சுக்கிர பகவான் )**

சுக்கிரமூர்த்தி சுகமிக ஈவாய்
வக்கிரமின்றி வரமிகத் தருவாய்
வெள்ளி சுக்கிர வித்தக வேந்தே
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க்கருளே

**சனி (சனிபகவான்)**

சங்கடம் தீர்க்கும் சனி பகவானே
மங்களம் பொங்க மனம் வைத் தருவாய்
சச்சரவின்றி சனீஸ்வரத் தேவே
இச்சகம் வாழ இன்னருள் புரிவாய்

**இராகுபகவான்**

அரவு எனும் ராகு ஐயனே போற்றி
கரவா தருள்வாய் கஷ்டங்கள் நீக்கி
ஆக அருள்புரி அனைத்திலும் வெற்றி
ராகு கனியே ரம்மியா போற்றி

**கேது பகவான்**

கேது தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றி பாவம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்குகள் இன்றி
கேதுத் தேவே கேண்மையாய் ரட்சி

இந்த நவக்கிரக ஸ்தோத்திரம் சொல்லி ஒவ்வொரு கிரகத்திற்கும் ஒரு மலர் வீதம் ஒன்பது மலரை இடவும். சகல கஷ்டங்களும் நீங்கி நல்வாழ்வு வாழலாம்

**கர்ண மந்திரம்**

கர்ணனுக்கு மோட்சமளிக்கும் போது பகவான் எந்த மந்திரத்தை உபதேசித்தாரோ அதுவே கர்ண மந்திரம் எனப்படுகிறது. இப்போதும் இந்துக்கள் இறந்த பின்னர் செய்யும் ஈமச்சடங்குகளில் கர்ணமந்திரம் காதில் ஓதப்படுகிறது. அந்த ஆத்மா மோட்சம் பெறுவதற்காகத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயங்களுக்குச் செல்லும் போது கவனிக்க வேண்டியவை

1. ஆசாரத்துடன் செல்ல வேண்டும்.

2. புஷ்பம். பழம், வெற்றிலை, பாக்கு, கற்பூரம். ஒரு தீபத்துக்கு வேண்டிய அளவு பசுநெய், அல்லது நல்லெண்ணெய், ஊதுபத்தி ஆகியவை அல்லது எது முடியுமோ அதை எடுத்துச் செல்லவும்.

3. ஆலயத்தில் பலிபீடத்துக்கு முன் நமஸ்காரம் செய்ய வேண்டும்.

4. நமஸ்காரம் செய்யும் போது சந்நிதிகள் இல்லாத பக்கமாக கால்களை நீட்ட வேண்டும்.

5. திரை போட்டிருக்கும் போது நமஸ்காரம் செய்யக் கூடாது.

6. பிரதக்ஷிணங்கள் செய்யும்போது அங்குள்ள தெய்வ ஸ்தோத்திரங்களைச் சொல்ல வேண்டும்.

7. ஆலயத்துள் தெய்வ சம்பந்தமான ஸ்தோத்திரம் விஷயங்கள் மட்டும் பேசவும்.

8. ஆலயத்துக்குள் மனிதர்கள் ஒருவரை ஒருவர் நமஸ்காரம் செய்யக்கூடாது.

9. ஆலயத்தில் வீண் பேச்சுக்கள் பேசக்கூடாது. (ஊர் வம்பெல்லாம் கோயிலுக்கு வெளியே வைத்துக் கொள்ளலாம்)

10. காலணிகள் உபயோகிக்க கூடாது. எச்சில் துப்புவது அசுத்தம் செய்வது, சத்தம் போட்டு உரக்கப் பேசுவது இதெல்லாம் கூடாது.

11. சந்நிதிகளை மறைக்காமல் ஓரமாக நின்று மற 'ஓரமாக நின்று மற்றவர்களும் தரிசனம் செய்யும்படி இடம் விட்டு நின்று தரிசனம் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜென்மம் நிறைந்தது சென்றவர் வாழ்க

ஜென்மம் நிறைந்தது
சென்றவர் வாழ்க

சிந்தை கலங்கிட
வந்தவர் வாழ்க

நீரில் மிதந்திடும்
கண்களும் காய்க

நிம்மதி நிம்மதி
இவ்விடம் சூழ்க!

ஜனனமும் பூமியில்
புதியது இல்லை

மரணத்தைப் போலொரு
பழையதும் இல்லை

இரண்டும் இல்லாவிடில்
இயற்கையும் இல்லை

இயற்கையின் ஆணைதான்
ஞானத்தின் எல்லை

பாசம் உலாவிய
கண்களும் எங்கே?

பாய்ந்துத் துழாவிய
கைகளும் எங்கே?

தேசம் அளாவிய
கால்களும் எங்கே?

தீ உண்டதென்றது
சாம்பலும் எங்கே

கண்ணில் தெரிந்தது
காற்றுடன் போக

மண்ணில் பிறந்தது
மண்ணுடன் சேர்க

எலும்பு சதை கொண்ட
உருவங்கள் போக

எச்சங்களால் அந்த
இன்னுயிர் வாழ்க

பிறப்பு இல்லாமலே
நாளொன்றும் இல்லை

இறப்பு இல்லாமலும்
நாளொன்றும் இல்லை

நேசத்தினால் வரும்
நினைவுகள் தொல்லை

மறதியைப் போல்
ஒரு மாமருந்தில்லை

கடல் தொடும் ஆறுகள்
கலங்குவதில்லை

தரை தொடும் தாரைகள்
அழுவதும் இல்லை

நதி மழை போன்றதே
விதியென்று கண்டும்

மதி கொண்ட மானுடர்
மயங்குவதென்ன !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணத்தினால் சில
கோபங்கள் தீரும்

மரணத்தினால் சில
சாபங்கள் தீரும்

வேதம் சொல்லாததை
மரணங்கள் கூறும்

விதை ஒன்று வீழ்ந்திடில்
செடிவந்து சேரும்

பூமிக்கு நாமொரு
யாத்திரை வந்தோம்

யாத்திரை தீருமுன்
நித்திரை கொண்டோம்

நித்திரை போவது
நியதி என்றாலும்

யாத்திரை என்பது
தொடர்கதையாகும்

தென்றலின் பூங்கரம்
தீண்டிடும் போதும்

சூரியக் கீற்றொளித்
தோன்றிடும் போதும்

மழலையின் தேன்மொழி
செவியுறும் போதும்

மாண்டவர் எம்முடன்
வாழ்ந்திடக் கூடும்

மாண்டவர் சுவாசங்கள்
காற்றுடன் சேர்க !

தூயவர்க் கண்ணொளி
சூரியன் சேர்க !

பூதங்கள் ஐந்திலும்
பொன்னுடல் சேர்க!

போனவர் புண்ணியம்
எம்முடன் சேர்க !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நன்றி நவில்கின்றோம்.

அணைந்தும் அணையாத சோதியாய் அன்பு பண்பு பாசத்துடன் சிறந்து வாழ்ந்து எமக்கு உயிர் கொடுத்த அன்புத் தெய்வமும் எங்கள் அன்பு மாமாவும் அன்புப்பாட்டனும் ஆகிய, இன்று அரும் பெரும்சோதியாகிய சிவனுடன் சங்கமித்த எமது ஐயாவின் வாழ்நாளில் பல சந்தர்ப்பங்களிலும் பற் பல உதவிகள் வழங்கிய அன்பானவர்கள் அனைவருக்கும் அவர் நோயுற்ற வேளையில் சிகிச்சையளித்த யாழ் போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்களான திருநாவுக்கரசு குமணன், கௌரி செல்வரட்ணம் மற்றும் தாதிகள் ஏனைய உத்தியோகஸ்தர்கள் அனைவருக்கும் முதற்கண் நன்றிகள். எமது ஐயா சுகவீனம் உற்றுப் படுக்கையில் இருந்த காலத்தில் எமக்குப் பெரிதும் உதவியாக இருந்து பொறுமையாகப் பராமரித்த தங்கராணி மகேந்திரனுக்கும் ரஜிதா மகேந்திரனுக்கும் மற்றும் அவ்வப்போது பராமரிப்புப் பணிகளைச் செய்து உதவியவர்களுக்கும் நன்றிகள் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் ஐயாவின் அமரத்துவ செய்தியறிந்து இன்று முழு உலகையே COVID - 19 இடர் அச்சுறுத்தும் நேரத்திலும் வைத்தியசாலைக்கும் எமது இல்லத்திற்கும் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் இறுதி நிகழ்வைச் சிறப்பாக நடத்த உதவிய அத்தனை அன்பு உள்ளங்களுக்கும் இறுதி நிகழ்வில் நேரில் பங்குபற்றி அன்னாரது ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்தித்தவர்களுக்கும் நினைவுரைகளை நிகழ்த்திய அன்புள்ளங்களுக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும் மலர்வளையம் சாத்தியும், மலர்மாலை அணிவித்து சிறப்பித்தவர்களுக்கும் இறுதிக்கிரியைகளையும் அந்தியேட்டிக் கிரியைகளையும் சிறப்புற நடத்திய குருமார்களுக்கும் பண்ணிசையாளர்களுக்கும் கொக்குவில் மயானத்தவர்களுக்கும், ஆறுதல் கூறி உணவு அளித்தவர்களுக்கும், தொலைபேசியூடாகவும், சமூக ஊடகங்கள் ஊடாகவும் தங்கள் உணர்வுகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசிரியரர்களாகவும் காதலர்களாகவும் 1954 ஆம் ஆண்டுக்கு முன்னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இனியதோ**

செல்லப்பா + சீதேவிப்பிள்ளை

**வைத்தியலிங்கம்**
+
**அன்னபூரணி**
+
**பார்வதிப்பிள்ளை**

பரநிருபசிங்கம்
(இளையப்பர்)
+
வள்ளியம்மை
(தங்கமுத்து)

சீனியாசகம்

நல்லதம்பி
(இராசா)
+
சரஸ்வதிஅம்மா

கண்மணி
+
அப்புத்

✹ **பேரம்பலம்**

✹ குமாரசிங்கம்

✹ குலசேகரம்
+
✹ செல்லம்மா

✹ இராசசேகரம்
(பொன்னுத்துரை)
+
பூபதி

✹ கனகரத்தினம்

கேதாரநாத
+
சுந்தராம்பா

அன்பழகன்
+
தமிழரசி

செல்வன்
மயிலோன்
நயனி

சந்திரிகா
+
பரந்தாமன்

உமா
பிரணவன்
பார்த்தீபன்

அறிவழகள்
+
கருணைஈஸ்வரிஅம்பிகை

திலீபன்+சூகி
விதுசன்+அம்பிகா
சிறிஷா

வேணுகா
+
சண்முகரத்தினம்

✹ அருணண்
மாதுளா

அருளழகன்
+
சாந்தநாயகி

ஆதவன்
செந்தூரன்
நிலாணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...ரியதோர் பரம்பரை

சிதம்பரப்பிள்ளை + சிவக்கொழுந்து

- ✹ தெய்வேந்திரம்பிள்ளை
- ✹ பராசக்தி
- ✹ **பாக்கியலட்சுமி**

கண்மணிப்பிள்ளை + அப்புத்துரை

திரநாவுக்கரசு + நாகம்மா

...கதாரநாதன் + ...ந்தராம்பாள்

நடேஸ்வரி + சிவஞானசேகரம்

...ன் + ...யகி → ...ன், ...ரன், ...ரி

அம்பிகா + ஸ்ரீஸ்கந்தராஜா → உமையாள், ராகுலன்

மதியழகன் + பிறேமகுமாரி → சோபன், அருணி, சாளினி

சசிலேகா + சேந்தன் → அஞ்சலி, அபிராமி, விசாகன்


மணியழகன் + பாமளா → சுயந்தன், ஜதுஷா, கிரிஷாந்

மெய்யழகன் + வேதநாயகி → ஜனகன், அஞ்சலா, லக்ஸ்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✹ அமரர்களைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org